# ஆய்வுக் குரல்

## "Covid - 19 தொற்றும் இலங்கை முஸ்லிம்களும்"



குரல் 03


STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

# ஆய்வுக் குரல்

**ஆசிரியர் :**

சஞ்சிகைக்குழு
சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்.

**பதிப்புரிமை:**

சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்.
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப் பீடம்,
இலங்கை தென்கிழக்குப்
பல்கலைக்கழகம்.

**வெளியீடு:**

ஆய்வுக்குரல் வெளியீட்டுக் குழு,
சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்.

**கணினி வடிவமைப்பு:**

ஸுமைய்யா சித்தீக்

அகீப் நஸுர்

**பக்கங்கள்:**

90

**ISSN NO : 2630 7855**

**பெரும்பொருளாளர்:**

கலாநிதி எஸ். எம். எம். மஸாஹிர்

பீடாதிபதி,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு
மொழிப்பீடம்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

**ஆலோசனைக்குழு:**

எம். சி. எஸ். சாதிபா
எம். வை. எம். சுஹீறா
எப். எச். ஏ. ஷிப்லி
எம். ரீ. ஹபீபுள்ளாஹ்

சிரேஷ்ட விரிவுரையாளர்கள்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு
மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.



ஆய்வுக்குரல் சஞ்சிகையின் ஆக்கங்களை
அனுமதியில்லாமல் மீள்பதிவு செய்தல்,
பிரதிபண்ணல் மற்றும் மொழிப் பெயர்ப்பு
செய்தல் தண்டனைக்குரியக் குற்றமாகும்.
(சஞ்சிகைக் குழு)



**குரல் 03**

**2020**

# STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES - 2020
# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## COMMITTEE MEMBERS

PRESIDENT - P.M.A. ALEESHAN
VICE PRESIDENT - FATHIMA FAARAH LIYAS
SECRETARY – A.M. MOHAMED MASHOOD
ASS. SECRETARY - M.A.C.A. FAZLAN
TREASURER - H.M. FAAIS
EDITOR – M.S. FATHIMA SUMAIYA

SECRETARY OF RESEARCH – A.N. FASILA BEGAM
SECRETARY OF PUBLICATION – A. SIROSI ASANA
SECRETARY OF TRANSLATION – M.H. SUHAILA
SECRETARY OF INNOVATION – A.J. RUZAITH
SECRETARY OF COMMON – B. FATHIMA SUMAIYA
SECRETARY OF HISTORY GROUP - B.HASANA
MEMBER – M. FATHIMA NUSEEDHA
MEMBER – A. MOHAMED IJAS

## EDITORIAL BOARD

**EDITOR IN CHIEF:**
A. SIROSI ASANA

M.S.F. SUMAIYA
M.A.F. ILMA
M.R.F. NUHA
M.L. F. FAARAH
H. F. BADHUSHA
J. NOORUL SHIFA
I.F. ILMA
H. M. FASLAN
AKEEF NASOOR

# உள்ளடக்கம் – Contents


## டாக்டர். கமால் அப்துல் நாஸருடனான ஓர் நேர்காணல் 08

## Covid - 19 தொற்றுக் கால மாணவர்களின் கல்வி 13

கல்வியை நிலைகுலையச் செய்துள்ள நச்சுயிரி கொரோனா ........ 13

**Covid - 19** இனால் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் எதிர்கொண்ட சவால்கள் : வெளிமலை மன்/ பதியுத்தீன் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையை மையமாகக் கொண்ட ஓர் சமூகவியல் ஆய்வு ........ 19

கொரோனா பரவலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் ........ 28

**Covid - 19** தொற்றும், நிகழ்நிலைக் கல்வியினால் முஸ்லிம் மாணவர்கள் எதிர் நோக்கிய சவால்களும்: ஓர் பொது ஆய்வு ........ 30

**Covid - 19** தொற்று காலத்தில் கொழும்பு பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட தொழில்நுட்ப ரீதியிலான தாக்கங்களின் மதிப்பீடு ........ 34

## Covid - 19 தொற்றுக்குள்ளான ஜனாஸாக்கள் எரிப்பு விவகாரம் 39

கொரோனாவும் இலங்கையில் ஜனாஸா எரிப்பும் - நல்லடக்கமும், எது சாத்தியம்? ........ 39

**Covid - 19** னும் இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸா விவகாரங்களும் ஓர் கண்ணோட்டம் ........ 45

எரிக்கப்பட்ட முஸ்லிம் ஜனாஸாக்களும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகமும்: ஓர் உளவியல் ஆய்வு ........ 58

**Covid - 19** தொற்றுக்குள்ளான இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுதல் தொடர்பான சர்வதேச கண்ணோட்டம் ........ 62

## Covid - 19 உம் சமய ரீதியிலான தாக்கங்களும் 68

**Covid - 19** தொற்றும் இலங்கை முஸ்லிம்களும் (சமய ரீதியான தாக்கங்கள்) ........ 68

கொரோனா தொற்றும் சமயவழிபாடுகள் மீதான தடைகளும்: ஓர் சமூகவியல் ஆய்வு ........ 71

## Covid - 19 உம் உளவியல் தாக்கங்களும் 75

**Covid - 19** வைரஸ் தொற்று அபாயமும் உளவியல் ரீதியான நெருக்கடி மேலாண்மையும் ........ 75

**Covid - 19** தொற்றினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள உளவியல் தாக்கங்கள் பற்றிய மதிப்பீட்டாய்வு ........ 79

## Covid - 19 கால சூழலில் முஸ்லிம்களின் அடிப்படை உரிமை மீறல்கள் 84

**Covid - 19** அசாதாரண சூழலில் இலங்கை முஸ்லிம்களின் அடிப்படை உரிமை மீறல்: ஓர் பகுப்பாய்வு ........ 84

# வாழ்த்துரை



**பேராசிரியர். எம்.எம்.எம். நாஜிம்**
**உபவேந்தர்,**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**
**ஒலுவில்.**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் மாணவர்களால் செயற்படுத்தப்படுகின்ற சமூகவியல் ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் வருடாந்தம் வெளியிடுகின்ற "ஆய்வுக் குரல்" சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கை பல் இன, மொழி, மத, கலாசாரங்களைப் பின்பற்றும் மக்களைக் கொண்ட ஓர் அழகிய தேசமாகும். அவ்வப்போது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் தொடர்பில் வேறுபட்ட அபிப்பிராயங்கள் எழுந்தபோதிலும் இன்று ஒரு சுதந்திர தேசமாக இலங்கை இருந்து வருகின்றது. இத்தேசத்தின் வளர்ச்சிக்கு பல்கலைக்கழகங்களும் அவற்றின் பன்முக சமூக அமைப்புக்களும் வழங்கிவரும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பின்புலத்தில் இலங்கையின் பன்முகத் தன்மையினை சிறந்த முறையில் பிரதிபலிக்கும் ஒரு நிறுவனமாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அமைந்திருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நாடளாவிய ரீதியில் பல இனங்களையும் சேர்ந்த மாணவர்கள் இங்கு உயர் கல்வியினைத் தொடர்கின்றனர். இம்மாணவர்கள் மத்தியில் நிலவும் ஐக்கியமும் ஒருமைப்பாடும் இப்பல்கலைக்கழகத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது. ஓர் உயர் கல்வி நிறுவனம் என்ற வகையில் தேசத்தின் வளர்ச்சிக்கு பல்வேறுபட்ட பங்களிப்புக்களை நல்க வேண்டிய பொறுப்பு இப்பல்கலைக்கழகத்திற்கும் உண்டு. இதற்காக இப்பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர்களும் விரிவுரையாளர்களும் அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டியுள்ளது. குறிப்பாக, பரந்துபட்ட பல்கலைக்கழக சமூக அமைப்பினுள் மாணவர்களின் வகிபாகம் அளப்பரியதாகும்.

பல்கலைக்கழக மாணவர்கள் என்பவர்கள் வெறுமனே வகுப்பறைக் கல்வியுடன் மட்டும் தம்மை சுருக்கிக் கொண்டவர்களாக இருக்க முடியாது. அவர்கள் வகுப்பறைக்கு வெளியே சென்று சிந்திந்து, செயலாற்ற வேண்டியவர்கள். இதன் காரணமாகவே உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களிலெல்லாம் மாணவர்கள் அமைப்பு ரீதியாக ஒன்றிணைவதற்கும் செயற்படுவதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்களின் புத்தாக்கத் திறன் வளர்வது மட்டுமல்லாது மாணவர்களின் சமூகப் பங்களிப்பும் அதிகரிக்கின்றது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினைப் பொறுத்தமட்டில், இங்கும் பல நோக்கங்களை கருத்திற் கொண்டு பல்வேறு மாணவர் அமைப்புக்கள் செயற்படுவது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வமைப்புக்களுள், எமது பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தினை மையமாகக் கொண்டு இயங்கிவரும் சமூகவியல் ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் குறிப்பிடத்தக்கது. அண்மைய நாட்களில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் இம்மன்றம், மாணவர்களின் ஆய்வுத் திறனை வளர்ப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை நல்கியிருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது.

ஆய்வு முறையியல் தொடர்பான அமர்வுகளை நடாத்துதல், முக்கியமான கருப்பொருள்களின் கீழ் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், நூல்களையும் சஞ்சிகைகளையும் வெளியீடு செய்தல், மாணவர்களின் ஆற்றல்களை வளர்ப்பதற்குக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல், கட்டுரைப் போட்டி, வினாவிடைப் போட்டி போன்ற போட்டி நிகழ்ச்சிகளை நடாத்துதல் என இம்மாணவர் ஆய்வு மன்றத்தின் பன்முகப்பட்ட செயற்பாடுகள் மெச்சத்தக்க வகையில் அமைந்துள்ளன.

இந்தவகையில் "Covid – 19 தொற்றும் இலங்கை முஸ்லிம்களும்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வரும் 2020ஆம் ஆண்டுக்கான இந்த ஆய்வுக் குரல் வெளிவருவதற்குத் துணை நின்ற அனைவரையும் பாராட்டுவதோடு, சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் எதிர்காலத்திலும் பல்வேறு பணிகளை ஆற்றி மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியான அமைப்பாக அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

# வாழ்த்துரை



கலாநிதி. எஸ்.எம்.எம். மஸாஹிர்
பெரும்பொருளாளர் - சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம்,
பீடாதிபதி - இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையவனுமாகிய அல்லாஹ்தஆலாவின் பெயரால் ஆரம்பம் செய்கின்றேன். ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர் அடிச்சுவடைப் பின்பற்றியோர் அனைவர் மீதும் உண்டாவதாக. தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அமைப்பான "சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம்" ஆய்வுகளுக்குக் களமமைப்பதற்காக "ஆய்வுக் குரல்" என்ற மகுடத்தில் வெளியிடும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்கலைக்கழக மாணவர்கள் சமூக அக்கறையும் சீர்திருத்த எண்ணமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அதற்கு தத்தமது திறமைகளையும் ஆற்றல்களையும் அவர்கள் பயன்படுத்த வேண்டும். எழுத்தாற்றல் இருப்போர் அவ்வாற்றலை சமூக மேம்பாட்டுக்காக உபயோகிக்கலாம். கவிதை புனையும் திறமை கொண்டோர் அத்திறமையை சமூக சீர்திருத்தத்திற்காகவும் ஒழுக்க விழுமியங்களை பரப்புவதற்காகவும் பிரயோகிக்கலாம். ஆய்வுத் திறமையும் அதில் தேர்ச்சியும் உள்ளவர்கள் அத்திறனை சமூக ஆய்வுகளில் ஈடுபடுத்தி, சமூக மாற்றத்திற்குத் துணையாக அமையலாம். அறபு எழுத்தணி போன்ற அழகியற் கலைகளில் ஈடுபாடு கொண்டோர் அதனையும் சிறப்பான முறையில் பயன்படுத்தலாம். இவ்வாறான ஆக்க முயற்சிகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்காக சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் பல்வேறு ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தில் வினைத்திறனாக செயற்பட்டு வருகின்ற சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் மாணவர்களின் ஆய்வுத் திறனையும் எழுத்தாற்றலையும் வளர்க்கும் நோக்கில் வருடாந்தம் "ஆய்வுக் குரல்" என்ற சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றது. சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றத்தின் இவ்வாய்வுச் சஞ்சிகை பல ஆழமான ஆய்வுகளைத் தாங்கி, தொடர்தேர்ச்சியாக வெளிவருவதற்கு எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தித்து, இக்காத்திரமான முயற்சிக்கு பங்களித்த அனைவருக்கும் நன்மையை ஈட்டித் தரும் செயற்பாடாக இது மாற வேண்டும் எனவும் ஆசிக்கின்றேன்.

# வாழ்த்துரை




**பி.எம்.ஏ. அலிஸான்**
**தலைவர்,**
சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம்,
இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஒரு சமூகத்தின் எழுச்சி அதன் அறிவு முதிர்ச்சியிலேயே தங்கியுள்ளது. அம்முதிர்ச்சியை ஏற்படுத்துவதில் பல்துறை சார் ஆய்வுகள் மிக முக்கியமானவையாகும். ஒரு சமூகத்தைப் பிரதிபலிக்கும் தனி நபர்களின் ஆய்வியல், நிறுவன மயப்படுத்தப்பட்ட கூட்டு முயற்சியினூடாகவே வெளிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறான இலக்கை மையப்படுத்தியே எமது மாணவர் ஆய்வு மன்றமும் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. எமது பல்கலைக்கழக மாணவர்களின் திறமைகளை இனங்கண்டு அவற்றுக்கான களத்தை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக தாம் சார்ந்திருக்கும் நலனையும் அறிவுத் தரத்தையும் அதிகரிப்பதே இம்முயற்சியின் குறிக்கோளாகும்.

இதனடிப்படையில் சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் ஆரம்பிக்கப்பட்டு ஆறாவது வருடத்தில் கால் பதிக்கும் நிலையில் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. அவையனைத்தும் மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுக் கலாச்சாரத்தை பாரிய அளவில் வளர்ச்சியடையச் செய்துள்ளன.

எமது அடைவுகளில் மாணவர் ஆய்வு மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் சர்வதேச மற்றும் உள்நாட்டுக் கருத்தரங்குகளில் ஆய்வுகளை சமர்ப்பித்துள்ளதோடு ஆய்வுச் சஞ்சிகைகளிலும் ஆக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேலும், இவ்வருடம் (2020 ஆம் ஆண்டு) மாணவர்களைக் கருத்திற் கொண்டு ஆய்வைத் தூண்டுவதற்காக கிட்டத்தட்ட பத்திற்கும் மேற்பட்ட ஆய்வுக் கருத்தரங்குகள் பிரபல வளவாளர்களைக் கொண்டு zoom வழியாக நடாத்தப்பட்டதோடு வளவாளர்களுடன் ஆய்வு சம்பந்தப்பட்ட கலந்துரையாடல் நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இன்னும், மாணவர்களின் எழுத்துக் கலையை வளர்ப்பதற்காக சாளரம் சுவர்ச் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டன. மேலும், மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் விதமாக கட்டுரை, வினா- விடை, கவிதை போன்ற போட்டி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. மேலும் இம்மன்றத்தால், ஆய்வுக் குரல் சஞ்சிகையை மூன்றாவது தடவையாக தரமான ஆக்கங்களைக் கொண்டு வெளியிட்டிருக்கிறோம்.

# பிரதம ஆசிரியருரை



**ஏ. சிரோஸி அஸானா**
**செயலாளர்,**
**வெளியீட்டுக்குழு**
**சமூக ஆய்வுகளுக்கான**
**மாணவர் ஆய்வு மன்றம்,**
**இஸ்லாமிய கற்கைகள் மற்றும்**
**அறபு மொழிப் பீடம்,**
**இலங்கை தென்கிழக்குப்**
**பல்கலைக்கழகம்.**

அனைவருக்கும் வெளியீட்டுக் குழு சார்பாக நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். முன்னைய எந்த நூற்றாண்டிலும் இல்லாதவாறு இந்தப் புதிய நூற்றாண்டில் அறிவுத் தொகுதி பெரியளவில் விரிவு பெற்று வருகின்றது. வரலாற்று ரீதியாக மனித குலத்தின் மேம்பாட்டிற்கு அறிவு மற்றும் ஆய்வு எப்போதும் உந்து சக்தியாக இருந்துள்ளது. இந்நிலையில் மாணவர் சமூகம் புதிய அறிவின் உருவாக்கப் பின்புலங்களை உள்வாங்குதல் தேடுதல் அறிவைப் பரவலாக்குதல் போன்ற பணிகளில் ஈடுபட வேண்டியுள்ளது. இதற்கான ஆற்றலும் திறனும் மாணவர் சமூகத்திற்கு அவசியமாகும். எனவே ஆய்வு ஆராய்ச்சியில் மாணவர் ஈடுபட வேண்டும்.

இன்றைய 21ஆம் நூற்றாண்டில் அறிவின் முதிர்ச்சியும் ஆய்வின் தேவையும் இன்றியமையாத ஒன்றாகும். எனவே அறிவுச் சமூகத்தின் எதிர்ப்பானது ஒவ்வொருவரும் தேட வேண்டும், ஆய்வாளர்களாக வேண்டும் என்பதாகும். எனவே இதற்கான களத்தை இன்று எமக்கு மாணவர் ஆய்வு மன்றம் வழங்குகின்றது. “ஆய்வுக் குரல்” எனும் இச்சஞ்சிகையானது தரமான ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாக காணப்படுகின்றது .

சிறந்ததொரு கல்வியாளரின் பண்பாக ஆய்வு காணப்படுகிறது. எனவே அறிவுச் சமூகமானது ஆய்வுச்சமூகமாக மிளிர வேண்டும். அதற்கான வாயில்களை இச்சஞ்சிகை உங்கள் கரங்களில் திறந்து தந்துள்ளது. எனவே இச்சஞ்சிகையினூடாக ஆய்வுப்புரட்சிகள் மேற்கொள்ள வேண்டும். புதுமைகள் பல படைக்க வேண்டும். அதற்காகவே மாணவர் ஆய்வு மன்றத்தின் குவியமாக இருந்த “ஆய்வுக் குரல்” தற்போது தன்னை நேரடியாக உருமாற்றி புது அவதாரம் எடுத்துள்ளது.

ஆம்! இனி அது தவழட்டும் உங்கள் கரங்களில்!!!

# டாக்டர். கமால் அப்துல் நாஸருடனான

## ஓர் நேர்காணல்



1. தங்களைப் பற்றிய ஒரு அறிமுகத்தை வழங்க முடியுமா?

எனது பெயர் கமால் அப்துல் நாசர். எனது பிறப்பிடம் அக்குறணை. நான் அக்குறணை அஸ்ஹர் கல்லூரியில் G.C.E. உயர் தரத்தை முடித்து விட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் MBBS கற்கையை முடித்தேன். அதனைத் தொடர்ந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் M.D. General Medicine ஐ பூர்த்தி செய்து விட்டு இங்கிலாந்தில் 2 வருட காலம் பயிற்சி பெற்றேன். பின்பு சிறிது காலம் அங்கேயே Warwick Medical School இல் விரிவுரையாளராக பணி புரிந்தேன். பின்பு எட்டு வருட காலம் இலங்கையில் Consultant Physician ஆக இருந்தேன். தற்போது இங்கிலாந்தில் Sherwood Forest Hospital இல் Consultant Physician ஆகவும் Endocinogist ஆகவும் பணிபுரிந்து கொண்டிருக்கிறேன். எனது முக்கியமான Specialist interest நீரிழிவு நோய், தைராய்டு, எழும்புகள் சம்பந்தமான நோய், ஒஸ்டியோ புரோசீஸ் , Vitamin D குறைப்பாடு, கல்சியம் சார்ந்த பிரச்சனைகள் என்பனவாகும். சென்ற ஆண்டு முழுவதுதே கூடுதலான நேரத்தை Covid-19 சம்பந்தமான நோயாளிகளுடன் கழித்துக் கொண்டிருந்தேன். இதனால் Covid -19 பற்றிய அனுபவத்தையும் அறிவையும் என்னால் பெற முடிந்தது.

2. உலகை அச்சுறுத்தும் கெரோனா வைரஸ் பரவல் தொடர்பாக தங்களின் கருத்து என்ன?

தற்போது covid- 19 தொற்று உலக நாடுகளில் பெரும்பாலான நாடுகளில் பரவியிருக்கின்றது. அதில் முக்கியமாக ஆசியா கண்டத்தைச் சேர்ந்த நாடுகளில் தற்போது வேகமாக பரவி வருகின்றது. இந்தியாவில் நடந்த நிலைமை எங்களுக்கு தெளிவாக தெரியும். இந்தியாவில் ஆரம்ப கட்டத்தில் மிகவும் கடுமையாக பரவாத நிலையில் இருந்தாலும் 2 வது அலையில் மிக மோசமான நிலையில் பரவி பெருமளவு மரணங்களையும் அவலங்களையும் ஏற்படுத்தியது. அதேபோன்று இலங்கையிலும் இந்த வைரஸின் தாக்கம் 1வது அலை, 2 வது அலை காலத்தில் அவ்வளவு பெரிதாக இருக்கவில்லை. இதற்குக் காரணம் அந்த வைரஸ். அது சீனாவில் ஏற்பட்ட ஒரு சாதாரண covid- 19 வைரஸாக இருந்தது. எனினும், மூன்றாவது அலை ஏற்படும் போது அது அந்த Variant என்று சொல்லக்கூடிய மாற்ற மடைந்த UK variant காரணமாக இலங்கையில் பரவியது. அதன் காரணமாக தற்போது இந்த நோயின் பரவல் வேகம் அதிகரித்திருப்பதையும் அதே போன்று மரணங்களின் விகிதாசாரம் கூடியிருப்பதையும் அவதானிக்ககூடியதாக இருக்கின்றது. அத்துடன் இலங்கையிலும் அந்த Indian variant என்று சொல்லக்கூடிய அந்த Delta variant ஓரளவு கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றது. இந்த Delta variant பரவல் மிக மிக வேகமாக இருக்கும். ஆனால் இதில் முக்கியமாக கருத்தில்கொள்ள வேண்டிய விடயம் 2 டோஸ் வக்சீன்கள் (2 Dose Vaccines) எடுத்தவர்களுக்கு இந்த Indian variant தாக்கம் குறைவாக இருக்கும். Indian variant அப்படி இந்த வக்சீன்கள் எடுத்தவர்களுக்கு ஏற்பட்டாலும் கூட அந்த நோயின் காரணமாக அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டிய அளவுக்கு அல்லது மரணம் ஏற்படக்கூடிய அளவுக்கு அது செல்வதில்லை என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே நாங்கள் முக்கியமாக இலங்கையைப் பொறுத்தவரையில் ஏனைய தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் கூட Vaccine ஐ அவசரமாக பெற்றுக்கொள்வதில் தான் நாங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

3. கொரோனா வைரஸ் பற்றியதோர் தெளிவினை வழங்க முடியுமா?

இது ஒரு RNA வைரஸ் ஆகும். வைரஸ் என்று சொல்வது ஒரு முழுக் கலம் அல்ல. மனித உடம்பு அல்லது பறவை அல்லது ஏதாவதொரு மிருகத்தை எடுத்துக்கொண்டால் அதில் பல மில்லியன் கணக்கான கலங்கள் காணப்படுகின்றன. பற்றீரியாவில் ஒரு கலமே காணப்படும். அதற்கு ஒரு கருவும் அதனை சுற்றி மற்றைய அமைப்புகளும் என ஒரு கலத்திற்கு ஒரு கட்டமைப்பு காணப்படும். ஆனால் வைரசுக்கு அவ்வாறான கட்டமைப்பு கிடையாது. வைரஸ் என்பது ஒரு Genetic Material, அதாவது ஒரு RNA/DNA காணப்படும். அதைச் சுற்றி சிறியதொரு கட்டமைப்பு மாத்திரமே காணப்படும். அது ஒரு முழுமையான கலம் அல்ல. அது தானாக உயிர் வாழக்கூடிய உயிரினமும் அல்ல. அதனால் ஒரு உயிர் வாழ் அங்கிக்கு வெளியில் தனது இனத்தை பெருக்கிக் கொள்ளவும் முடியாது. அது உயிர்வாழ் அங்கி ஒன்றின் கலமொன்றிற்குள் சென்று அதன் தொழில்நுட்பத்தை பாவித்துத்தான் இனப் பெருக்கமடைய வேண்டும். இந்த கொரோனா வைரஸ் ஒரு RNA வைரஸ். இந்த RNA வைரஸ்கள் பெருக்கமடையும் போது அதன் Genetic கட்டமைப்பு சில சில மாற்றங்களுக்கு உட்படும். அப்படி மாற்றத்திற்கு உட்பட்ட கொரோனா வைரஸ் தான் இந்த Covid-19 ஐ உருவாக்கக்கூடிய SARS-CoV-2 என்று சொல்லக்கூடிய வைரஸ். உண்மையில் இந்த கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது சுமார் 70 வருடங்களுக்கு முன்னர் ஆகும். ஆனால் இடையிடையே இது போன்ற வேறுபட்ட வைரஸ்கள் உருவாகி மனிதனுக்கு நோயை உருவாக்கிக் கொண்டிருந்தன. இது போன்ற ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான வைரஸ்கள் மிருகங்கள், பறவைகளில் இருக்கலாம். இது பற்றி எங்களுக்கு தெரியாது.

அது பற்றி நாங்கள் ஆராய்ந்து கொண்டும் இருப்பதில்லை. கொரோனா வைரஸின் வேறுபட்ட வைரஸ்கள் முதன் முதலில் 2003 ஆம் ஆண்டு ஸாஸ் நோயை உண்டாக்கும் போது கண்டுபிடிக்கப்பட்டது. பின் மத்திய கிழக்கு நாடுகளில் 2012ஆம் ஆண்டு ஒட்டகத்திலிருந்து MERS என்ற வைரஸ் உருவானது. அதன் பின்னர் 2019 ஆம் ஆண்டு Covid – 19 ஐ உருவாக்கக் கூடிய SARS-CoV-2 என்று சொல்லக் கூடிய இந்த வைரஸ் உருவானது. இந்த வைரஸ் சீனாவில் உள்ள வூஹானில் Live Market, அதாவது உயிருள்ள மிருகங்களை உணவிற்கு விற்பனை செய்யும் இடத்திலிருந்து தான் மனிதனுக்குத் தொற்றியதாகக் கருதப்படுகின்றது. அண்மையில் சென்ற WHO வின் நிபுணர்கள் குழுவும் கடுமையான ஆராய்ச்சிக்குப் பின்னர் இது யாரும் ஒரு ஆய்வு கூடத்தில் தயாரித்து வெளியிட்டது அல்ல. மிருகங்களில் இருந்துதான் வந்தது என்று ஆதாரங்கள் இருக்கின்றன என்பதை வெளியிட்டனர். அடுத்ததாக இன்னும் சிலர் இது 5G தொழிநுட்பம் காரணமாக ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். ஆனால் அது முற்றிலும் பொய்யான ஒரு விடயம். தெளிவாக ஆராய்கையில் இவ்வாறு ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை எனத் தெளிவாக விளங்குகின்றது. இதில் நாம் அவதானிக்கலாம் 5G தொழிநுட்பமே இல்லாத இடங்களிலும் இந்த வைரஸ் பரவுவதை அவதானிக்கலாம். உதாரணமாக இத்தாலியை எடுத்துக்கொண்டால் அங்கு 5G தொழில்நுட்பம் சரியாக அமுலுக்கு வரவே இல்லை. அதேபோல் இங்கிலாந்தில் கூட 5G தொழில்நுட்பம் இப்போது தான் ஆரம்பிக்கப்படுகின்றதே தவிர 5G சரியான முறையில் பாவிக்கப்படும் நிலை அங்கு கிடையாது. இன்னும் சிலர் இது சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளை அழிக்கச் செய்த தொழில்நுட்பமாக இருக்கலாம் என்று எண்ணுகின்றனர். அதனை எங்களுக்கு 100% இல்லை என்று கூற முடியாது.

அதேபோல் ஹொங்கொங்கிலிருந்து 2003 ஆம் ஆண்டு வந்த ஸாஸ், 2012 ஆம் ஆண்டு சவுதியில் ஏற்பட்ட மேஸ் இவற்றையும் ஒப்பிட்டு பார்க்கும் போது இவ்வாறான இன்னொரு வடிவம் உருவாவது சாத்தியமற்ற விடயமன்று. இந்த வைரஸ் உண்மையில் சுவாசத்தொகுதியை பாதித்து, சுவாச தொகுதியில் கடுமையான ஒரு நியுமோனியாவை ஏற்படுத்துகின்றது. அத்தோடு ஏனைய உறுப்புக்களையும் கடுமையாக பாதிக்கின்றது. இங்கிலாந்தில் நாங்கள் ஒரு பெருந் தொகையான நோயாளிகளை பார்த்து இருக்கிறோம். சுமார் ஒரு வருடத்திற்கு மேல் இந்த நோயில் அனுபவம் பெற்று விட்டோம். அதிலிருந்து விளங்குவது Covid தொற்றுக்குள்ளாகும் நோயாளிகளில் இரத்த கட்டிகள் உருவாவது மிக அதிகமாக இருக்கின்றது. அதனால் நுரையீரலில், இதயத்தில், மூளையில் இரத்த கட்டிகள் மிக இலகுவாக ஏற்பட்டு பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதேபோன்று பல்வேறு அங்கங்கள் உதாரணமாக ஈரல், இதயம், சிறுநீரகம் போன்ற பல அங்கங்களையும் பாதிக்கக் கூடியதாய் இருக்கிறது. அத்தோடு இந்நோய் ஏற்பட்டு குணமடைந்தவர்களில் கூட சுமார் 10% ஆனவர்களில் Long Covid Syndrome எனக்கூடிய நீண்டகால பாதிப்புக்கள் பல காணப்படுகின்றன. பல நோயாளிகளை தற்போது நாங்கள் பார்த்துக்கொண்டு வருகிறோம். சிலருக்கு ஞாபக மறதி, தொடர்ச்சியான உடம்பு வலி, வேலை செய்ய முடியாத தன்மை, தசைகளில் பலமில்லாத தன்மை, மறதி, நுரையீரல் சரியாக இயங்காத தன்மை, இதயத்தில் சில பிரச்சனைகள் அதேபோல் இன்னும் சிலருக்கு Dementia என்று சொல்லக்கூடிய மறதி ஏற்படக்கூடிய தன்மை நீண்ட கால நோயாக ஏற்படக் கூடிய தன்மை கூட காணப்படுகின்றது. இவ்வாறு இன்னும் எத்தனையோ விடயங்களை காலம் செல்லச் செல்ல காணக்கூடியதாக இருக்கலாம். அவ்வாறு பலவிதமான சிக்கல்களையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இது முக்கியமாக பெண்களிலே கூடுதலாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதேபோல் Covid-19 நோயில் பாதிக்கப்பட்டு, மரணிப்பவர்கள் கூடுதலாக 70 அல்லது 80 வயதுக்கு மேற்பட்டவர்கள் அல்லது நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் உடல்பருமன் கூடியவர்களாக இருப்பதை நாங்கள் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. ஆனால் இந்த நீண்ட கால பாதிப்பு (Long Covid Syndrome) இளம் வயதினரைப் பாதிக்கின்றது. எனவே நாங்கள் Covid நோய் பற்றி கவனமாக இருக்க வேண்டும்.

இந்த கொவிட் நோய்க்கு மருந்தே இல்லை என்ற அபிப்பிராயம் பலரிடம் இருக்கிறது. அப்படிச் சொல்வது கடினம். ஏனெனில் இந்த கொவிட் தொற்றை ஏற்படுத்தும் இந்த வைரஸைக் கொல்வதற்கு மருந்து கிடையாது. ஆனால் இந்த வைரஸினால் ஏற்படும் மிகக் கடுமையாக நுரையீரலை பாதிக்கக்கூடிய சிக்கல்கள் போன்றவற்றிற்கு மருந்துகள் இருக்கின்றன. உதாரணமாக Dexamethasone என்று சொல்லக்கூடிய மருந்து ஒட்சிசன் குறைபாடு ஏற்படுகின்றவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. அவ்வாறு கொடுக்கும் போது அவர்களது நுரையீரல் கடுமையாக பாதிக்கப்படுவதைத் தடுக்கக்கூடியதாக இருக்கின்றது. அதேபோன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின்படி Dexamethasone உடன் சேர்த்து ஏனைய Rheumatoid Arthritis போன்ற நோய்களுக்குப் பாவிக்கக்கூடிய மிக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட சில மருந்துகள் பரீட்சிக்கப்பட்ட போது அவையும் சேர்த்து வழங்கப்படும் போது அந்த நோயாளிகள் ICU இற்குக் கொண்டு செல்லப்பட வேண்டிய தேவை மிகக் குறைவாகக் காணப்படுவதையும் மரணங்கள் குறைவாக இருப்பதையும் அவதானிக்கலாம். அதேபோன்று Covid இற்கான பல்வேறு விதமான மருந்துகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தோடு பல்வேறு ஆராய்ச்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. தற்போது வெக்ஸின் (Vaccine) மிக வெற்றிகரமான முறையில் சுமார் 5 இற்கும் மேற்பட்ட வெக்ஸின்கள் பாவனைக்கு வந்து விட்டன. தற்போது இங்கிலாந்தில் சுமார் 45 மில்லியன் மக்களுக்கு வெக்ஸின் கொடுக்கப்பட்டு விட்டது. இதில் பாரிய பக்க விளைவுகள் எதுவும் தெரியவில்லை. வெக்ஸின் கொடுக்கப்பட்ட நாடுகளில் மரண விகிதம் குறைந்து வருகின்றது. நாட்டின் விகிதாசார அடிப்படையில் பார்த்தால் இங்கிலாந்தை விட மிகக் கூடுதலான அளவைக் கொண்ட நாடுகளான ஐக்கிய அரபு இராச்சியம், இஸ்ரேல் போன்ற நாடுகளில் முதலாவது டோஸ் வெக்ஸின் கொடுக்கப்பட்டு 3 கிழமைகளில் மரண விகிதம் மிகமிகக் குறைந்து கொண்டு வருகின்றது. தற்போது சமூக வலைத்தளங்களில் மிகக் கடுமையான அளவில் பிழையான செய்திகள் பரப்பப்பட்டுக் கொண்டு வருகின்றன. அதில் இறுதியாக கண்ட ஒரு செய்தி தான் இங்கிலாந்தில் வெக்ஸின் கொடுக்கப்பட்டதன் மூலம் 256 பேர் மரணித்து விட்டனர் என்பதாகும். இது உண்மையில் போலியான தகவல். இவ்வாறு பிழையான தகவல்களை பரப்புவதன் மூலம் முழு சமூகத்திற்கும் துரோகம் இழைக்கின்றோம். ஏனெனில் பிழையான ஒன்றைக் கொடுத்து மக்களை வெக்ஸின் அடிக்காமலிருக்கச் செய்வதன் மூலம், சில பகுதிகளில் இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்குச் செல்லலாம். எனவே நாம் சமூகப் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

## 4. கொரோனா வைரஸ் பரவலுக்கான மிகப் பிரதான காரணிகளை அடையாளப்படுத்த முடியுமா?

இந்தக் கொரோனா தொற்று எமது சுவாசத் தொகுதியுடன் தொடர்புபட்ட பகுதிகளிலிருந்து வரக்கூடிய சுரப்புகளிலிருந்து தான் முக்கியமாகப் பரவுகிறது. உதாரணமாக மூக்கிலிருந்து மற்றும் வாயிலிருந்து வரக்கூடிய சுரப்புகளைக் குறிப்பிடலாம். மூக்கினை அல்லது வாயினைத் தொட்டால் அதிலிருந்து எமது கையில் படக்கூடிய சுரப்புக்களில் பெருமளவு வைரஸ்கள் காணப்படும். அந்தக் கையினால் வேறொரு பகுதியைத் தொட்டால் அங்கு வைரஸ் காணப்படும். அதனை இன்னொருவர் தொட்டால் அதிலிருந்து அந்த வைரஸ் அந்நபருக்குள் செல்லும். இவ்வாறு தான் வைரஸ் பரவுகின்றது. அடுத்ததாக ஒருவர் இருமும் போது அல்லது தும்மும் போது ஒரு நெருக்கமான 2 மீற்றர் அளவு உள்ள தூரத்தில் இருந்தால் அடுத்த நபருக்கு அந்த வைரஸ் நேரடியாகச் செல்லலாம். அதேபோன்று இது காற்றினால் பரவுமா? என்று கேட்டால் அதன் பதில் இல்லை என்பதாகும். அதாவது ஒரு திறந்த வெளியில் நாம் இருமும் போது  வைரஸை உள்ளடக்கிய அந்த சளித் துணிக்கைகள் ஒருவருக்கு வாயினுள், மூக்கினுள் அல்லது கண்ணினுள் மிக நேரடியாகச் சென்றாலே தவிர வைரஸ் பரவமாட்டாது. உண்மையில் காற்றினால் பரவும் என்பதன் அர்த்தம் என்னவென்றால் ஒருவர் இருமும் போது அவருடைய சுவாசத் துணிக்கைகள் அல்லது எச்சில் துணிக்கைகள் அல்லது சளித் துணிக்கைகள் ஒரு மேற்பரப்பில் விழுந்து அது காய்ந்த பின்னர் மீண்டும் அது காற்றில் பரவி மீண்டும் இன்னொரு மனிதனுக்கு செல்ல முடியும் என்றால் அது காற்றினால் பரவக்கூடியது என்று சொல்லலாம். ஆனால் இங்கு அது காற்றினால் பரவக்கூடியது அல்ல. ஆனால் மூடப்பட்ட இடங்கள் உதாரணமாக மூடப்பட்ட வீட்டினுள் அல்லது ஒரு கடையினுள் உள்ள சூழ்நிலை போன்ற காற்றோட்டம் இல்லாத மூடிய அறைகள், ஸ்தாபனங்கள் அல்லது A/C பாவிக்கக் கூடிய இடங்களில் ஒருவர் இருமினால் அல்லது தும்மினால் அந்தத் துணிக்கைகள் கொஞ்சம் கூடுதலான நேரத்திற்கு அந்தக் காற்றுச் சூழலில் இருக்கலாம். அவ்வாறு ஒரு சிலருக்கு அந்த வைரஸ் மூக்கினுள் அல்லது வாயினுள் நுழையும்.

எனவேதான் நாங்கள் அந்த சந்தர்ப்பங்களில் முகக் கவசம் அணிந்து கொள்ள வேண்டும் என்று சொல்கின்றோம். ஏனெனில் முகக்கவசம் அணிவதன் மூலம் இங்கு நாங்கள் எதிர்பார்ப்பது என்னவென்றால் ஒருவருடைய வாயிலிருந்து பேசும் போது அல்லது தும்மும் போது அல்லது இருமும்போது துணிக்கைகள் வெளிப்பட்டாலும் அது காற்றில் பரவி இன்னொருவருக்கு நேரடியாக செல்லக்கூடாது என்பதற்காகும். அதே நேரம் அந்த முகக்கவசத்தை அணிந்து கொண்டிருப்பவர்களுக்கு இன்னொருவரிடம் இருந்து துணிக்கைகள் வந்து சேரக்கூடிய சாத்தியக்கூறு குறைகின்றது. ஆனால் 100% இல்லாமலாக்கப்படமாட்டாது. எனவே முகக்கவசம் அணிவதற்கான முக்கிய காரணம் எம்மிடமிருந்து ஏனையோருக்கு நோய் பரவக்கூடாது என்பதாகும். இங்கு பரவல் என்பது இருமல், தும்மல், பேச்சின் போது வெளிவரும் துணிக்கைகள் நேரடியாக ஒருவரை சென்றடைதல் அல்லது மேற்பரப்பில் இருந்து இன்னொருவருக்கு சென்றடைதல் போன்றவற்றின் மூலம் இந்நோய் பரவுகிறது. இதைத் தவிர நேரடியாக இன்னொருவருக்கு பரவக்கூடிய ஏனைய சாத்தியக்கூறுகள் மிகக்குறைவு. ஆனால் வைரஸ் உடம்பில் இருக்கக்கூடிய ஒருவரின் இரத்தம் இன்னொருவரின் இரத்தத்தில் நேரடியாகக் கலந்தால் சிலவேளை அவருக்கு அந்த நோய் செல்லலாம். ஆனால் இதற்கான சாத்தியக்கூறுகள் மிகமிகக் குறைவு. எனவே இதில் நேரடியாக இருமல், தும்மல் மற்றும் இன்னொரு மேற்பரப்பினைத் தொடுதல் என்பன முக்கிய காரணிகளாக அமைகின்றன. அதனால் நாம் இவ்விடயங்களில் தான் கவனமாக இருக்க வேண்டும். இதில் முக்கியமான விடயம் மிக நெரிசலான இடங்களுக்கு செல்லாமல் இருப்பது, மக்கள் கூடுதலாக ஒன்று சேராமல் இருப்பது, வெளியே செல்லும் போது முகக்கவசம் அணிவது, கையுறை அணிவது, கைகளை கழுவி சுத்தம் செய்து கொள்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இந்த கொரோனா வைரஸ் பரவலை தடுத்துக்கொள்ளலாம்.

## 5. கொரோனா வைரஸ் சமூகப் பரவல் ஆகிவிட்ட இந்நிலையில் நாம் தற்போதும் எதிர் காலத்திலும் பேணிக்கொள்ள வேண்டிய விடயங்களைக் கூற முடியுமா?

ஒரு சமூகத்தில் சுமார் 70% ஆனவர்களாவது வெக்சினை எடுத்துக்கொண்ட பின்னர் நோய் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டால் கட்டுப்பாடுகளைத் தளர்த்தலாம். அது வரையில் நாம் எல்லோரும் வெக்சின் எடுத்தவர்களும் எடுக்காதவர்களும் ஒரு கட்டுப்பாட்டில் கொஞ்சம் வாழ வேண்டிய நிலையில் உள்ளது. அதில் மிக மிக முக்கியமானது நாம் தேவையின்றி ஒன்று சேரக்கூடாது. முக்கியமாக திருமணங்கள், வைபவங்கள், விழாக்கள், விருந்துபசாரங்கள், போன்றவற்றை முடிந்தவரை தவிர்த்துக் கொள்வது சிறந்தது. அடுத்ததாக எங்களது சமுதாயத்தைப் பொறுத்த வரையில் நாம் சமூகப் பிராணிகள். சமூகத்தோடு ஒன்றிவாழ்பவர்கள். ஏனையோரை அடிக்கடி சந்தித்து ஸலாம் கொடுப்பது, முஸாபஹா செய்வது, சஹன்களில் சேர்ந்து சாப்பிடுவது போன்ற விடயங்களினை கூடுதலாகச் செய்யும் ஒரு சமூகம். எனவே இவ்வாறான விடயங்களை குறுகிய காலம் தவிர்ந்து கொள்வது சிறந்தது. நாம் ஒரு நாளில் கூடுதலாக, பாவிக்கும் ஒன்று சேரும் இடமே பள்ளிவாசல். அதிலும் நாம் முடிந்தளவு நெருக்கடியை குறைப்பது, சமூக இடைவெளி பேணுவது  தொழுகை விரிப்பு எடுத்துச் செல்லுதல், எப்போதும் முகக்கவசம் அணிந்து செல்லுதல் போன்ற விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி எமது ஊர்களில் நாங்கள் இந்த நோய் பரவுவதை தடுக்க வேண்டுமென்றால் மிக முக்கியமாக செய்யவேண்டியது இன்னொரு வீட்டுக்குச் செல்வதை சிறிது காலம் தவிர்த்து கொள்ள வேண்டும். மிக அத்தியாவசியத் தேவையன்றி ஏனைய வீடுகளுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அத்தோடு திருமண விருந்தோம்பல், விழாக்களை குடும்பத்தோடு மாத்திரம் சுருக்கிக் கொள்வது. முடியுமென்றால் சற்றுப் பிற்போடுவதும் சிறந்தது. அத்தோடு தேவையான பொது இடங்களில் முகக்கவசம் அணிவது  மற்றும் கைகளை அடிக்கடி சவர்க்காரம் அல்லது Senitizer இட்டோ  சுத்தம் செய்து கொள்ளுதல் வேண்டும். இதில் நாம் இன்னுமொரு விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். எமக்கு அடிக்கடி ஏற்படும் ஏனைய வைரஸ் தொற்றுக்கள் கூட இந்த முறையில் தான் தவிர்க்கப்படும். எனவே இந்நோய் இல்லாமலாகினாலும் கூட நாங்கள் கைகளை சுத்தம் செய்வது, வைத்தியசாலை போன்ற இடங்களுக்கு அல்லது நோயாளிகள் இருக்கும் இடங்களுக்கு என்று வந்தால் நன்றாக கைகளை கழுவி சுத்தம் செய்வது முடியுமென்றால் குளித்தல் போன்ற சில விடயங்களை இனிமேலும் சில நோய்கள் பரப்புவதை

தடுப்பதற்கான வழிமுறையாக அமைத்து கொள்ளலாம். உதாரணமாக எயிட்ஸ் (HIV) நோய் ஏற்பட முன்னர் நாம் வைத்தியசாலைகளில் வேலை செய்யும் போது ஒருவரது இரத்தத்துடன் பழகுவது அதாவது ஒருவரது இரத்தம் பரிசோதனைக்காக குத்தியெடுக்க வேண்டிய நிலையில் நாங்கள் கையுறை பாவிப்பது கிடையாது. ஆனால் தற்போது நாங்கள் எல்லா விதமான வேலைகளுக்கும் ஒரு கையுறையை பாவித்துத்துக்கொண்டு செய்யும் நடைமுறைக்குப் பழகிவிட்டோம். எனவே அவ்வாறு கைகளை சுத்தம் செய்வதை ஒரு பழக்கமாகக் கொள்வது சிறந்தது. இப்போது மாத்திரமல்ல ஒரு நீண்ட காலப் பழக்கமாகக் கூட எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அடிப்படை விடயம் என்னவென்றால் இந்நோய் கட்டுப்பாட்டினுள் வரும் வரைக்கும் குறுகிய காலத்திற்கு தேவை இன்றி ஒன்று சேராமல் இருப்பது, அனாவசியமாக அடுத்தவர் வீட்டுக்குச் செல்லாமல் இருப்பது, கைகளை சுத்தம் செய்வது மற்றும் முகக் கவசம் அணிவது போன்றவற்றை நடைமுறையாக வைத்துக் கொள்வது சிறந்தது. மரண வீடுகள் நோய் பரவும் முக்கிய இடமாக இருக்கின்றன.எனவே தற்காலத்தில் மரண வீடுகளை தவிர்ப்பதே சிறந்தது.

## 6. கொரோனா பற்றிய மன அழுத்தத்தில் இருந்து விடுபட தாங்கள் முன்வைக்கும் ஆலோசனைகள் எவை?

Covid-19 வைரசினால் பல்வேறு விதமான பாதிப்புக்கள் இருக்கின்றன. முதலாவதாக மருத்துவ சம்பந்தமான பாதிப்புக்கள். அடுத்து பொருளாதாரப் பாதிப்பு. மருத்துவப் பாதிப்பை விடவும் பொருளாதார ரீதியான பாதிப்பு மிகமிகக் கடுமையானதாகக் காணப்படுகின்றது என்றே எனக்குப் புலப்படுகின்றது. அடுத்து மன அழுத்தத்தினால் ஏற்படக் கூடிய பாதிப்பு. இந்த மன அழுத்த ரீதியான பாதிப்பு ஒவ்வோரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாகக் காணப்படுகின்றது. வளர்ச்சி அடைந்த நாடுகளை எடுத்தால் அவர்கள் இதில் மிகமிகக் கவனமாக இருக்கின்றார்கள். அதாவது ஒரு நபருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டால் மிக நன்றாக நடத்துகின்றார்கள். சமூகத்தில் உள்ள அவர்களது உறவினர்களோ, அயலவர்களோ மிக உதவி செய்யக்கூடியவர்களாகவே இருக்கின்றார்கள். யாரும் அவர்களை பிழையானவர்களாகப் பார்ப்பதோ, பிழையான நோய் ஏற்பட்டவராக பார்ப்பதோ கிடையாது. ஆனால், இலங்கையை பொறுத்த வரையில் மிக வித்தியாசமான முறையில் அணுகப்படுகிறது. இதில் நோயாளிகள் அல்லது பாதிக்கப்பட்டவரகள் மிகக் கடுமையாக அணுகப்படுகின்றார்கள். அவர்கள் குற்றவாளிகளை போல் நடத்தப்படுகின்றனர். அவர்கள் அழைத்து செல்லப்படும் முறை அவர்களது வீடுகளுக்கு வந்து ஒரு குற்றவாளியை அழைத்து செல்வதைப்போல் எடுத்து செல்லும் முறை, சமூகத்தில் இருந்து அவர்களை பிரித்துக் காட்டப்படும் முறை, குடும்பத்தில் இருந்து பிரிக்கும் முறை, சில வேளை குடும்பத்தில் பெண்களும் ஆண்களும் பிரிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்படும் தன்மை இவ்வாறு பல்வேறு விதமான பிரச்சினைகள் இருப்பதனால் அது மக்களுக்கு பாரிய மன அழுத்தத்தை கொடுக்கின்றது. அதே போன்று மிக முக்கியமாக முஸ்லிம் சமூகத்தில் மரணித்த உடல்கள் எரிக்கப்பட்டதனால் ஏற்பட்ட அந்த மன அழுத்தம் மிகமிகக் கடுமையானதாக இருக்கின்றது. அந்த பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மாத்திரமன்றி ஏனைய குடும்பங்கள் கூட இதனால் பாதிக்கப்படுகின்றன. அதே போன்று நோயின் பொதுவான தாக்கம் காரணமாக மக்களிடம் மன அழுத்தம் கூடுதலாகக் காணப்படுகின்றது. எனவே, இந்த விடயத்தில் பொது மக்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் அடுத்தவர்களுக்கு உதவி செய்யக்கூடியவர்களாகவும் அடுத்தவர் பாதிக்கப்பட்டால் எங்களால் எந்த முறையில் உதவ முடியுமோ அவற்றை எல்லாம் செய்யக் கூடியவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும். அது மாத்திரமல்ல முக்கியமாக மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு இருப்பர். எனவே, அந்த வகையில் ஊரிலுள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து உதவ முன்வர வேண்டும்.

அடுத்து துறை சார்ந்தவர்கள், வைத்தியர்கள், தாதிமார்கள், உளவியலாளர்கள் ஏனைய படித்த மக்கள் அத்தோடு மதம் சார்பான தலைவர்கள், உலமாக்கள் இப்படி எல்லோருமே மக்களுக்கு உதவுதல், அவர்களுக்கான பிரச்சினைகளைக் கேட்டு அறிதல், ஆறுதல் அளித்தல் போன்ற விடயங்களில் ஈடுபட வேண்டும். அவர்களிடம் நேரடியாக சென்று தொடர்பு கொள்ளாவிட்டாலும் ஏதோ ஒரு வகையில் தொலைபேசியினூடாகவேனும் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும். இப்படி உதவி செய்வதன் மூலம் மன அழுத்தத்தைக் குறைக்கலாம். சமூக ஊடகங்கள் முக்கியமாக WhatsApp, FB போன்றவை பிழையான செய்திகளை தாங்கிக் கொண்டு வருகின்றன. அவற்றை பரப்பிக் கொண்டிருப்பதாலும் இந்த மன அழுத்தம் அதிகரிக்கின்றது. எனவே அவற்றைத் தவிர்க்க வேண்டும். தேவை இல்லாமல் கூடுதலான நேரத்தை சமூக வலைத்தளங்களில் செலவழிப்பதைத் தவிர்த்தல் மூலம் எமது மன அழுத்தத்தைக் குறைத்துக் கொள்ளலாம். முக்கியமாக நாம் WhatsApp, FB இல் ஒரு விடயத்தைக் கண்டால், அதைப் பகிர நினைத்தால் முதலாவது யோசிக்க வேண்டும். இதைப் பகிர்வதனால் எனக்கு என்ன நலன் கிடைக்கும்? மற்றவர்களுக்கு என்ன பயன் கிடைக்கும்? எந்தவித பயனும் இல்லாவிட்டால் அதனை நாம் பகிரக் கூடாது. ஒரு தகவல் உண்மையாகவும் இருக்கலாம் பொய்யாகவும் இருக்கலாம். அப்படி உண்மையாக இருந்தாலும் அதைப் பகிர்வதன் மூலம் நான் மற்றும் பிறர் என்ன பலன் அடைவர் என்று சிந்தித்து எதையும் செய்ய வேண்டும். இவ்வாறு தேவையற்ற பதிவுகளைக் குறைப்பதன் மூலமும் மன அழுத்தத்தைக் குறைக்கலாம்.

## 7. குறைந்தளவு நிலப்பரப்புக் கொண்ட இலங்கையில் **Covid-19** பரவலைத் தடுப்பதற்கான வழிகளைக் கூற முடியுமா?

தற்போது நாம் இலங்கையை பார்க்கின்ற போது இலங்கையில் Covid தொற்று பரவலாக காணப்படுகின்றது. ஏனெனில் இலங்கையில் Covid தொற்றுக்குள்ளானவர்கள் நடத்தப்படும் முறை, ஏற்படுத்தப்பட்டுள்ள பயம் காரணமாகவும் நோய் அறிகுறிகளான காய்ச்சலோ, தொண்டை வலியோ, இருமலோ இருந்தாலும் யாரும் வெளியில் சென்று PCR பரிசோதனையை செய்துகொள்ளப் பயப்படுகின்றனர். எனவே நோய் தொற்றாளர்கள் பெரும் தொகையாகக் கணப்படுகின்றனர். நாங்கள் ஏற்கனவே இந்த தடுப்பு முறைகளைப் பார்த்தோம். அதாவது தேவையில்லாமல் சன நெருக்கடியான இடங்களுக்கு செல்லாதிருத்தல், பொதுப்பயணத் துறைகளைப் பாவிப்பதைக் குறைத்துக் கொள்ளல், வெளியே செல்வதைக் குறைத்துக் கொள்ளல், ஏனைய வீடுகளுக்கு செல்வதைக் குறைத்துக் கொள்ளுதல், வைபவங்கள், விருந்துகளை தவிர்ந்து கொள்ளுதல், எங்கு செல்வதென்றாலும்

முகக்கவசம் அணிந்திருத்தல், வெளியிடங்களுக்கு சென்று வந்தால் அடிக்கடி கைகளை சுத்தம் செய்தல் போன்றன அடிப்படை. முக்கியமாக இலங்கையைப் பொறுத்தமட்டில் நாங்கள் தேவையில்லாத பீதியினை இல்லாமலாக்க முடியுமென்றால் நோய் அறிகுறி உள்ளவர்கள் முன்வந்து PCR பரிசோதனை செய்து கொள்வர். அவ்வாறு பரிசோதனை செய்து கொள்வதன் முக்கியம் என்னவெனில், அவ்வாறு நோய் இருந்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டால் அவர்களிடமிருந்து நோய் பரவுதலைத் தடுக்க முடியும். இலங்கையை பொறுத்தமட்டில் அது தான் மிகமிக முக்கியமானது. அடுத்ததாக இலங்கையில் மிகமிகக் கடினமான ஒன்று தான் நெரிசல் கூடிய வீட்டுக் கட்டமைப்புகள். இது முக்கியமாக கொழும்பு போன்ற நகரங்களில் மிகப் பெரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அவற்றுக்குத் தீர்வு காண்பதென்பது மிகக் கடினமான ஒரு விடயம். ஏனெனில் இங்கு சனநெருக்கடி கூடிய இடங்களில் இந்த சுவாசத் தொற்று நோய்கள் கூடுதலாக ஏற்படும். நீண்ட காலத் தீர்வென்றால் அந்த மக்களுக்கு சரியான முறையில் ஒரு காற்றோட்டமுள்ள இடங்களில் சரியான இடைவெளிகளுடன் வீடுகளை அமைத்துக் கொடுப்பதே சிறந்தது. இன்னும் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய இப்படியான பிரச்சினைகளுக்கு இது தீர்வாக அமையும். அதைத் தவிர முஸ்லிம் வீடுகளைப் பொறுத்தமட்டில் இன்னுமொரு பிரச்சினை இருக்கின்றது. அதாவது முஸ்லிம்கள் பொதுவாக கூட்டுக் குடும்பங்களாகவே வாழ்கின்றனர். இவ்வாறு வீட்டில் காணப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது இந்நோயின் பரவலும் அதிகரிக்கின்றது. அதே போன்று நாங்கள் வீட்டில் தொழுகைக்காகப் பாவிக்கும் முஸல்லாக்கள் எல்லோரும் ஒன்றையே பாவிக்கின்றோம். தொழுகையில் ஸுஜூதில் இருந்த நிலையில் நாங்கள் ஓதும் போது எமது வாயில் உள்ள எச்சில் துணிக்கைகள் மிக இலகுவாக முஸல்லாவைச் சென்றடையும். பொதுவான பார்வையில் பார்க்கும் போது அது ஒரு சாதாரண விடயம். ஆனால் வைரஸை வைத்துப் பார்த்தால் அது வெற்றுக்கண்ணுக்குப் புலப்படாத ஒரு சிறிய துணிக்கை. எனவே அது மிக இலகுவாகத் தொற்றிவிடும். அந்த வைரஸ் கிருமி இன்னொருவருக்கு தொற்றும் சாத்தியம் அதிகம். எனவே நாங்கள் முஸல்லாக்கள் பாவிக்கும் போது தனித்தனி முஸல்லாக்கள் பாவிப்பது சிறந்தது. அப்படி பாவிக்க முடியாமல் இருந்தால் ஸுஜூத் செய்யும் இடத்தில் கைக்குட்டை அல்லது டிசு போன்றவற்றை வைத்து ஸுஜூத் செய்துவிட்டு தொழுகை முடிந்ததும் அதை எடுத்து விடலாம். ஒவ்வொருவரும் அவ்வாறான கட்டமைப்பைப் பேணலாம். ஆனால் அடிப்படை விடயங்களான சன நெரிசலைக் குறைத்தல், தேவையற்ற வைபவங்களைத் தவிர்த்தல், பொதுப் போக்குவரத்தை குறைத்தல், அடிக்கடி கைகளைக் கழுவுதல், சுத்தம் செய்தல், மாஸ்க் அணிதல் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

8. கொரோனா பற்றியும் எதிர் கால வாழ்வொழுங்கு பற்றியும் தாங்கள் வாசகர்களுக்கும், பொதுமக்களுக்கும் கூற விரும்பும் அறிவுரைகள் என்ன?

குறிப்பாக கொரோனா வைரஸ் மிக இலகுவாக மாற்றமடையக் கூடிய வைரஸ். தொடர்ச்சியாக மாற்றமடைந்துக் கொண்டே செல்கின்றது. தற்போது மிகத் தீவிரமான பாதிப்பை உண்டாக்கக் கூடிய சுமார் 6 மாற்றமடைந்த வைரஸ்கள் காணப்படுகின்றன. மிக முக்கியமானவை தான் Indian variant (Delta), Peruvian variant (Lambda), UK Variant மற்றையவை South African Variant, Brazil Variant என்பவை மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு விதமாக மாற்றமடைந்த வைரஸ்கள் தொடர்ச்சியாக உண்டாகலாம். ஆனால் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள வெக்சின்களும் அந்தந்த மாற்றங்கள் ஏற்படக்கூடியவைரஸ்களுக்கு எதிராக தொழிற்படக்கூடியவையாகத்தான் இருக்கின்றன. எனவே, முடிந்தளவு அவசரமாக நாங்கள் வெக்சினை எடுத்துக்கொள்வது சிறந்தது. இந்த வெக்சினைப் பற்றி பல்வேறு விதமாக பொய்யான வதந்திகள் பரப்பப்படுகின்றன. அதில் முக்கியமாக இது ஹலால் இல்லை. இதில் பன்றிக் கொழுப்பு இருக்கின்றது. இதில் கருச்சிதைவடைந்த பதார்த்தங்கள் இருக்கின்றன என்றும் பல்வேறு போலித் தகவல்கள் பரப்பப்படுகின்றன. இவை ஹலால் என்று பல்வேறு அரபு நாடுகள் பத்வாக்கள் கொடுத்து இருக்கின்றன. எனவே நாங்கள் வெக்சின்களை எடுத்துக் கொள்வதன் மூலம் நோயை அவசரமாக கட்டுப்படுத்திக் கொண்டால் அந்நோய்க் கிருமி இன்னும் இன்னும் மாற்றமடைந்து செல்வதை தவிர்த்துக் கொள்ள முடியும். ஆனால் எல்லாவற்றிலும் முக்கியமாக நாங்கள் இன்னுமொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நாங்கள் முஸ்லிம்கள் என்ற வகையில் இது அல்லாஹ்வின் சோதனை என்பதை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். இன்று முஸ்லிம்கள் இஸ்லாமிய பண்புகளுடன் ஏனைய சமூகத்துடன் பழகும் போது எங்களது இஸ்லாமிய பண்புகளை சரியான முறையில் வெளிக்காட்டாமல் இருப்பது எமக்கு இந்நோய் மாத்திரமின்றி பல்வேறு விதமான பிரச்சினைகளையும் தருகின்றது. எனவே, நாங்கள் எங்களை ஒரு சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். நாங்கள் எங்கு பிழை விடுகின்றோம். எங்கு இஸ்லாமிய வழிமுறைகளில் இருந்து விலகி நடந்து கொள்கின்றோம் என்பதை கவனத்திற் கொண்டு அவற்றை மாற்றிக் கொள்ள வேண்டும். நான் நினைக்கின்றேன் இதனை இறைவனது தண்டனையாகக் கொள்ளாது சோதனையென்றே எடுத்துக் கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பத்தை மீள்பரிசோதனை செய்து இஸ்லாமிய விழுமியங்களுக்குள் நுழைவதற்குரிய காரணியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அத்தோடு ஏற்கனவே சொன்னது போன்று சில நீண்டகால சுகாதார நடவடிக்கைகளைப் பழகிக் கொள்ளலாம். உதாரணமாக நோயாளியைப் பார்க்கச் சென்றவுடன் மிக நெருக்கமாக இல்லாது பார்த்து வரல், வெளியே சென்று வந்தால் கைகளை சுத்தம் செய்தல், ஒரு வைத்தியசாலைக்கு சென்று வந்தால் கைகளை சுத்தம் செய்தல், குளித்துக் கொள்ளல் இவ்வாறு பல புதிய விடயங்களை எமது நீண்ட கால பழக்கவழக்கமாக்கிக் கொள்ளலாம். இவ்வாறான பல விடயங்களை கருத்திற் கொள்ள வேண்டும். மிக முக்கியமாக இந்த கொரோனா காலத்தில் நாம் கற்றுக் கொண்ட விடயம் தான் போலியான தகவல்கள் பரப்பப்படுகின்றமை. தேவையற்ற பதிவுகள், செய்திகள் சமூக ஊடகங்களினூடாக பரப்பப்படுகின்றன. அதில் எவை மக்களுக்கு நலனை ஏற்படுத்துகின்றன என்று பார்க்க வேண்டும். இவ்வாறான போலிகள் மனிதனை அழிவிற்கு இட்டுச் செல்கின்றன. அத்தோடு ஒரு முக்கிய விடயத்தையும் கொரோனாவினூடாக கற்றுக் கொண்டோம். அதாவது சிறிய சிறிய நோய்கள் எல்லாவற்றுக்கும் மருந்தெடுக்க

வைத்தியரிடம் செல்ல வேண்டியதில்லை. உதாரணமாக சிறிய தடிமன், வயிற்றோட்டம், சிறிய வயிற்றுவலி, சிறிய தலைவலி என்பன ஒரு சில நாட்களில் தானாக குணமடைந்துவிடக் கூடியவை. இதற்கு வீட்டிலே வைத்தியம் செய்து கொள்ள முடியுமானதாக உள்ளது. இன்னொரு விடயம் மாரடைப்பு, பக்கவாதம், உயர்குருதி அமுக்கம், நியுமோனியா, நீரிழிவு நோய் போன்ற நாள்பட்ட நோய்களுக்கு கட்டாயம் வைத்தியம் செய்ய வேண்டும். மாறாக சிறிய சிறிய வியாதிகளுக்கு எல்லாம் வைத்தியம் செய்யத் தேவையில்லை என்பதை உணர்ந்துள்ளோம். எனவே, அவற்றை எம் எதிர்காலத்தில் எடுத்து நடக்க வேண்டியது மிக முக்கியமானதாகும்.

## COVID - 19 தொற்றுக் கால மாணவர்களின் கல்வி

# கல்வியை நிலைகுலையச் செய்துள்ள நச்சுயிரி கொரோனா


Mohamed Hilmy Suhaila
Third Year
Department Of Islamic Studies
Faculty Of Islamic Studies And Arabic Language




சமீப காலத்தில் உலகையே தன்வசத்தில் வைத்துக்கொண்டிருக்கும் கொடிய நோய் என்று எல்லோராலும் பேசப்படும் கொரோனாவானது, அது தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை அதன் பிடியை சற்றும் தளர்த்தாமல் பெறுமதியான மனிதனின் உயிருடன் விளையாடி வருகின்றது. சிறியவர், பெரியவர் என்று பாராது தன் குணத்தை சிறிதும் மாற்றாது ஒரே வகையான தாக்கத்தை காட்டி வருகின்றது. கொரோனா வைரஸ் என்பது பெருந்தொற்றுநோய் என்று அழைக்கப்படுகிறது. தொற்று நோய் என்ற சொல் கிரேக்க "பாண்டெமோஸ்" என்பதிலிருந்து வந்தது. 2019 நோவல் கொரோனா வைரஸ் (2019-nCoV) அல்லது சுவாச நோய்க்குறி கொரோனா வைரஸ் 2 (SARS-CoV-2) தோற்றம் கொண்டது. இந்த வைரஸ் 2019 டிசம்பரில் சீனாவின் ஹுபே மாகாணத்தின் வூஹானில் முதன் முதலில் கண்டறியப்பட்டது. வௌவால்கள் மூலம் மனிதர்களுக்கு பரவியதாக முதல் கட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உலக சுகாதார (WHO), அமைப்பின் கருத்துப்படி "கொரோனா வைரஸ் நோய் கடந்த இருபது ஆண்டுகளில் பொது சுகாதாரத்திற்கு ஒரு தீவிரமான பிரச்சினை. அதிவேகமாக உலக அளவில் பரவியுள்ளது" எனக் குறிப்பிட்டது. ஆரம்பத்தில், புதிய வைரஸ் 2019-nCoV என அழைக்கப்பட்டது. பின்னர், வைரஸ்கள் வகை பிரித்தல் தொடர்பான சர்வதேச குழுவின் (ஐ.சி.டி.வி) நிபுணர்கள் இது SARS-CoV-2 வைரஸ் என்று கூறியது. உலக சுகாதார அமைப்பு கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி கோவிட்-19 பெருந்தொற்று நோயாக அறிவித்தது.

ஆரம்பத்தில் சீனாவை மட்டும் பாதித்த கொரோனா எனும் கொடிய நோய் இப்போது உலக நாடுகளையும் பாதித்துள்ளது. இதன் விளைவாக ஏராளமான உயிர் பலி நிகழ்ந்து வருவதையும் அவதானிக்கலாம். இந்நோயின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. உலக அளவில் கொரோனா வைரஸ் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு என்பது அளவிட முடியாத ஒன்று. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை உட்பட பல்வேறு பாதிப்புகளில் சிக்கி பல நாடுகளும் திணறி வருகின்றன. பாதிப்படைந்த முக்கியமான விடயங்களில் மாணவர்களுக்கான கல்வியும் ஒன்று. இந்த நிலையில் ஐ.நா சபையானது, கொரோனா வைரஸ் பாதிப்பால் கல்வித்துறை மிகப் பெரிய பாதிப்பு அடைந்துள்ளதாகவும் சுமார் 160 க்கும் மேற்பட்ட நாடுகளில் கல்வி நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ள தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உலகளவில், கொரோனா பரவலுக்கு முன்னரே, 25 கோடி குழந்தைகள் பள்ளியை விட்டு வெளியேறி வந்தனர். கொரொனா எனும் நச்சு உயிரியின் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைப் பற்றி பேசுவதே இக்கட்டுரை ஆகும். கல்வி என்பது இவ்வுலகில் பெரிதும் மதிக்கப்படும் ஒன்று. "கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம்" என்பது நெல்சன் மண்டேலாவின் வாக்கு. ஒரு மரத்திற்கு எப்படி அதன் வேர்கள் முக்கியமோ அது போல மனிதனுக்குக் கல்வி இன்றியமையாதது. இன்றைய காலத்தில் கல்வி அத்தியவசிய தேவையாக மாறிவிட்டது.

கல்வியை கற்பதனால் மனிதன் உயர்ந்த இடத்தினை அடைகின்றான். "ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்" என்பது முது மொழி. இவற்றை எல்லாம் நோக்கும் போது கல்வியை எவ்வாறேனும் பெற வேண்டும் என்ற நிலைப்பாடு உருவாகிறது. அன்டோனியோ குட்டரெஸ், "கொரோனாவும் கல்வியும்" என்ற ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது: ஒருவரின் முன்னேற்றத்திற்கும், எதிர்கால சமுதாய வளர்ச்சிக்கும் கல்வி அவசியம். கல்வி பல்வேறு வாய்ப்புகளை வழங்கி சமூகத்தில் ஏற்றத் தாழ்வை குறைக்க உதவுகிறது. அத்துடன் நிலையான வளர்ச்சிக்கும் வழி காட்டுகிறது. இந்நிலையில் கொரொனாவால் இதுவரை இல்லாத அளவில் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. கொரோனா பரவலை தடுக்க 160 நாடுகளில் பள்ளிகள் மூடப்பட்டன. இதனால், 100 கோடிக்கும் அதிகமான மாணவ, மாணவியரின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதோடு, இது ஒட்டுமொத்த மாணவர் சமுதாயத்தில் 67% தாண்டியதாகும். வரலாற்றில் கொரோனா வைரஸ் நெருக்கடியானது கல்விக்கு மிகப்பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உலகளவில் குறைந்தது 40 மில்லியன் குழந்தைகள் தங்களது குழந்தைப் பருவக் கல்வியை இழந்துள்ளனர். இது ஒரு தலைமுறையின் பேரழிவு. இதனால், ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கும். வைரஸ் பாதிப்பு ஏற்படுவதற்கு முன்பே உலகம் கற்றல் தொடர்பான நெருக்கடியை எதிர்கொண்டது. அதுமட்டுமல்லாமல், வளரும் நாடுகளில் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு வெளியேறும் மாணவர்களில் கால் பகுதியினர் மட்டுமே அடிப்படைத் திறன்களுடன் உள்ளனர் என்றார்.

யுனெஸ்கோ மற்றும் அதன் நட்பு அமைப்புகள் வெளியிட்டுள்ள தகவலின்படி, உலகளவில் ஆரம்பநிலை கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை படிக்கும் மாணவர்களில் கூடுதலாக சுமார் 23.8 மில்லியன் மாணவர்கள் கொரோனா வைரஸ் தொடர்பான பொருளாதார நெருக்கடி காரணமாகத் தங்களது கல்வியைத் தொடர வாய்ப்பில்லை எனத் தெரிவிக்கின்றனர். கொரோனா தொடர்பாக மூடப்பட்ட பிறகு சுமார் 100 நாடுகளில் பள்ளிகளை மீண்டும் திறப்பதற்கான திகதிகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றும் ஐ.நா பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். உலகளாவிய சமூகக்கட்டமைப்பில் பாடசாலைகள் மூலமே அத்தியவசிய விடயங்கள் கற்பிக்கப்படுகின்றன. பாடசாலைகள் மூடப்படுகையில் விடயங்களை அறிந்து அறிவுப்பூர்வமாக வளரும் வாய்ப்பை பிள்ளைகள் இழக்கிறார்கள். பிள்ளைகளைப் பொறுத்தவரையில் ஒருவரையொருவர் தொடர்பு கொண்டு சமூக செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய கேந்திர நிலையமாக பாடசாலைகள் காணப்படுகின்றன. யுனெஸ்கோவின் கல்வி உதவி இயக்குநர் ஸ்டெஃபானிய ஜியானினி (Stefania Giannini) பேசுகையில், "நீண்டகாலம் பள்ளிகள் மூடப்பட்டிருப்பது மிகப்பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தும். குறிப்பாக, ஏழ்மையான குழந்தைகளிடம் இது அதிக பாதிப்புகளை உருவாக்கும். பள்ளிகள் என்பது கற்றுக் கொடுப்பதற்கான தளம் மட்டுமல்ல. சமூக அளவிலான பாதுகாப்பை அளிப்பதற்கான இடமும்கூட. கொரோனா வைரஸ் நெருக்கடி என்பது டிஜிட்டல், சமூகம் மற்றும் பாலின அளவிலான ஏற்றத்தாழ்வுகளை அதிகரித்துள்ளது. பெண்கள், அகதிகள், மாற்றுத்திறனாளிகள், புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் கிராமப்புற மாணவர்கள் என அனைவரும் தங்களது கல்வியைத் தொடர குறைந்த அளவிலான வாய்ப்புகளையே எதிர்கொள்கின்றனர்" என்றார். உலகளாவிய அமைப்புகள் குழந்தைகளின் கல்வி தொடர்பாக Save Our Future என்ற பிரச்சாரத்தை தொடங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸின் கோரப்பிடியினால் பாதிக்கப்பட்டுள்ள கல்வித்துறையை மீட்டெடுப்பது தொடர்பில் உலக அளவில் பல செயற்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் கல்வி சார்ந்து எடுக்க வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் குறித்து ஆன்டோனியோ கட்டர்ஸ் பேசும்போது, "கொரோனா வைரஸ் பரவல் உள்ளூர் அளவில் கட்டுப்பாட்டுக்குள் வந்ததும் மாணவர்களைப் பள்ளிகளுக்கு பாதுகாப்பாக வரவழைப்பது தொடர்பான நடவடிக்கைகளை முதன்மையாக எடுக்க வேண்டும். கல்விக்கான நிதியுதவிகளை அதிகரிப்பதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். சிறுபான்மையினர், புலம் பெயர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் உட்பட கல்வியை பாதியில் விடக்கூடிய வாய்ப்புள்ளவர்களைக் கவனிக்க வேண்டும்" என்று தெரிவித்தார். கொரோனா தொடர்பான இந்த நெருக்கடி டிஜிட்டல் தொடர்பான கற்றல் மற்றும் உட்கட்டமைப்பு உட்பட கல்வி முறையை மாற்றியமைக்கவும் அனைவருக்கும் சமமான மற்றும் தரமான கல்வியை வழங்கும் அமைப்பை உருவாக்கவும் வாய்ப்பை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். இதற்கான முதலீடுகளை செய்யவும் அழைப்பு விடுத்துள்ளார். உலகில் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான திட்டங்களை வரையறுக்கும் தருணத்தில் உள்ளோம். அரசாங்கங்கள் இப்போது எடுக்கும் முடிவுகள் பல மில்லியன் கணக்கான மாணவர்களின் வாழ்க்கை மற்றும் நாடுகளின் வளர்ச்சி வாய்ப்புகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்" என்று தெரிவித்தார்.

டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட கல்வி முறையை உலக நாடுகள் அறிமுகப்படுத்தி வருகின்றன. இது கல்விப் போதனையில் புரட்சிகரமான மாற்றம். தகவல் தொழில்நுட்பம் கோலோச்சும் உலகில் தேடி ஆராய்ந்து கற்கும் வசதிகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தக்கூடிய மாற்றம் எனவும் கூறமுடியும். கல்வித்துறையில் online தொழில்நுட்பம் தவிர்க்க முடியாத வகையில் ஊடுருவுகிறது. வளர்ச்சி கண்ட நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமெரிக்காவில் மாநிலத்திற்கு மாநிலம் டிஜிட்டல் தொழில்நுட்ப வசதிகள் மாறுபட்டதால் சில மாநிலங்கள் பாடசாலைகளை மூடிவிட்டு மௌனமாக இருந்தநேரத்தில் வேறு சில மாநிலங்கள் online முறையில் கற்பித்தலைத் தொடர்ந்தன. இதனைக் கற்றுக்கொள்ள பெற்றோருக்கும் உதவி செய்யும் பொறிமுறை உருவாக்கப்பட்டது. online முறையில் கல்வி கற்பதற்கு wifi முதலான தொழில்நுட்ப வசதிகள் அவசியம். wifi இல்லாத இடங்களில் அவற்றை ஏற்படுத்திக் கொடுக்க பெரும் நிறுவனங்கள் முன்வந்தன. சில இடங்களில் பாடசாலை பேரூந்து வண்டிகள் wifi வசதிகளைத் தரும் வாகனங்களாக (wifi on wheels) மாற்றப்பட்டன. தேசிய மட்டத்திலும் மாநில மட்டத்திலும் ப்ரோட்பேன் (broadband) வசதிகளை அதிகரிக்கும் திட்டம் அமுலாக்கப்பட்டது. அந்தவகையில் இலங்கை மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சும் பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. கொரோனாவால் வீட்டில் பாதுகாப்பாக இருக்கும் மாணவர்கள் நேரலையில் கல்வி கற்க கல்வியமைச்சினால் முயற்சிகள் எடுத்து வரப்படுகின்றது. இதன் மூலம் அனைத்து மாணவர்களும் தமக்கு தேவையான கல்வியை இணைய வசதிகள் மூலம் பெறுகின்றனர். இதனைத் தவிர 6,7,8,9,10 ஆகிய தரங்களில் கல்வி பயில்பவர்களுக்கும் வசந்தம், படகு, மற்றும் நனச தொலைக்காட்சி மூலமும் வித்தியாதானம் செய்யப்பட்டு வருகின்றது. இதே போன்று கல்வியமைச்சினால் 'தக்சலாவ' என்ற செயற்திட்டத்தின்கீழ் e-thaksalawa தரம் 1 தொடக்கம் 12 மற்றும் 13 வரையான வகுப்புக்களுக்கு கற்றல் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன.

சில இடங்களில் online exam நடைபெறுவதையும் அறியமுடிகின்றது. இதனைத்தொடர்ந்து புலனம் (whatsapp) மூலம் பல குழுக்களை உருவாக்கி அதில் பலவிதமான கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அலகு ரீதியான செயலட்டைகள், பரீட்சை வினாத்தாள்கள் போன்றவை இதனூடாக வழங்கப்பட்டு கற்றல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் இணைய வசதி இல்லாத மாணவர்களுக்கு அச்சிடப்பட்ட செயலட்டைகளும் மற்றும் மாதிரி வினாத்தாள்களும் இவற்றுக்கான விடைகளும் பாடசாலைகளுக்கூடாக வழங்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. உயர் கல்வி மற்றும் தொழிநுட்ப அமைச்சு பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் கல்வி பயிலும் 60 இலட்ச மாணவர்கள் பயனுள்ள வகையில் டிஜிட்டல் கல்விமுறையை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை ஆய்வு செய்தபோது இதனை மாணவர்கள் மிகவும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே பொதுவாக நோக்கினால் கொரோனாவின் கொடிய தாக்கத்தின் சூழ்நிலையிலும் ஏதோவொரு வகையில் மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கல்வியமைச்சினால் நடைமுறைகள் எடுக்கப்படுகின்றது. இவ்வகையான கற்றல் முறைகள் எல்லா மாணவர்களையும் சென்றடைந்து எல்லோரும் பயனடைய வேண்டும் என்பதே அனைவரினதும் அவாவாகும்.

கடந்த சில மாதங்களாகவே கல்விமுறையில் புகுந்துள்ள இணையவழி கற்பித்தல்-கற்றல் நிலையான கல்வியாக மாறி வருகிறது. கல்லூரிகளில் நேரடி வகுப்பு தவிர, இணையவழி பாடத் திட்டங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இணையவழிக் கல்வி என்பது மின்னணுவியல் கருவிகளையும் (Electronic Devices) தகவல் தொழில்நுட்பங்களையும் (Informative Technologies) பயன்படுத்திக் கல்வியைக் கற்றுக்கொடுப்பதும் கற்றுக்கொள்வதும் ஆகும். தொலைதூரக் கல்வியின் இன்னுமொரு பரிமாணமமே இணையவழிக் கல்வி. இணையவழி பாடத்திட்டங்களையும் பயிற்சிகளையும் விரைவாகவும் எளிதாகவும் ஆசிரியர்களால் மாணவர்களிடம் சேர்க்க முடியும். பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, பாடத்திட்டங்களை மாணவர்களின் மனதில் நன்றாகப் பதியவைக்க இணையம் வழிவகுக்கிறது. அதுமட்டுமல்ல வாய்வழி மனப்பாடம் செய்வது தவிர மற்ற ஊடகங்களைப் பயன்படுத்தியும் பாடங்களை மனதில் பதியவைத்துக் கொள்ளலாம். அதாவது இன்று மின் வடிவாகக் கிடைக்கும் படங்கள் - Images, ஒலிக் கோப்புகள் - Audio, காணொளிகள் Video, அசைவுப் படங்கள் - Animation, விளையாட்டுகள் - Games போன்ற பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, கல்வி முறையைச் செழுமைப்படுத்தும் ஒரு கருவியாக இணையவழிக் கல்வி செயல்படுகிறது. 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஒரு கோடி மாணவர்கள் இணையவழிக் கல்வி பெறுவார்கள் என்று ஓர் ஆய்வு தெரிவிக்கின்றது.

கொரோனா நச்சு உயிரியால் பாதிக்கப்பட்டுள்ள கல்வி நடவடிக்கையை மீட்டெடுக்க சிறந்த வழியாக இணையவழிக் கல்வி காணப்பட்டாலும் அதிலும் சாதக, பாதகங்கள் காணப்படுகின்றன. சாதகங்களை நோக்கும்போது, தற்போது இணையவழிக் கற்பித்தல் முறை பரவலாகி வருகிறது. இக்கற்பித்தல் முறை வெறும் வகுப்பறைக் கற்பித்தல் போல் ஆசிரியரிடமிருந்து மாணவர் கற்கும் ஒருவழிப் பாதையாக மட்டும் இல்லாமல் பல்வழிப் பாதை கொண்ட முழுநிறைவு கொண்ட கற்பித்தல் முறையாகவும் விளங்குகின்றது. இக்கற்பித்தல் முறையில் பாட வல்லுநர்களால் வடிவமைக்கப்படும் பாடங்கள் பல்லூடக வசதிகளுடன் கற்பவருக்குத் தரப்படுகின்றன. தேவையான இடங்களில் பேச்சுரைகள் - Audio, அசைவுப்படக் காட்சிகள் - Grafics, புகைப்படங்கள் - Photos, செயல்முறை விளக்கங்கள் - Demo Video, பின்னணி இசையுடன் பாடல்களைக் கேட்டல், முறையான இராகத்தில் பாடல்களைக் கேட்டல், பாடத்திற்குத் தேவைப்படும் பாடம் அல்லாத மற்ற பயில்வுத் துணைக்கருவிகள் முதலானவற்றைக் கொண்ட பல்வழிக் கற்பித்தல் முறைகளைத் தருவதாக இணையவழிக் கல்விமுறை விளங்குகிறது. எடுத்துக்காட்டாகப் பார்வை நூல்கள், மூலநூல்கள், பயிற்சிக்கூடச் செய்முறைகள் - Laboratory Practical, பாடத்தோடு தொடர்புடைய பிற இணையதளங்கள் ஆகியவற்றைப் பெறவும் இக்கற்பித்தல்முறை உதவி செய்கிறது. இக்கற்பித்தல் முறையில் ஓர் ஆசிரியர், ஒரு மாணவர் என்ற கற்றல் நிலை பின்பற்றப்படுகிறது. இதன்மூலம் மாணவரின் கவனம் சிதறாமல் தடுக்கப்படுகிறது. மேலும் தேவையான நேரத்தில் பாடங்களைப் படித்துக்கொள்ளலாம். இரவு, பகல் என்ற நேர எல்லை இல்லை. இக்கற்பித்தல் முறையில் திரும்பத் திரும்பப் கற்ற பாடங்களையே பார்வையிடலாம். கற்பிப்பவருக்குச் சலிப்பு வரும் என்ற நிலை இதில் இல்லை. யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் இந்த digital கல்வி முறையை பயில முடியும். உதாரணமாக. வெளிநாடுகளுக்கு சென்று படிக்க வேண்டும் என்ற நிலை மாறி தற்போது அவரவர் இருக்கும் இடத்தில் இருந்து பல வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் Online வகுப்புகள், பயிற்சிகளினை பங்கு பெற முடியும். மற்றும் பள்ளி பாடங்களுடன் இணைந்து பலருக்கும் விருப்பமான பல்வேறு துறைகளினை பற்றி கற்றுக்கொள்வதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. இணையதள வகுப்புகள் ஒருசில செயல்முறைகளினை எளிமையாக்குகிறது. அதாவது ஒரு மாணவர் பள்ளி சென்று படிக்க வேண்டும் என்று எடுத்துக்கொண்டால் அவருக்கு ஆகும் நேரம், பொருள், செலவை விட online வகுப்புகளுக்கு செலவிடும் நேரம், பொருள் செலவு குறைவாகவே உள்ளது.

இணையவழிக் கல்வியின் பாதகங்களைப் நோக்கும்போது, முதலாவதாக மாணவர் சார்ந்த சவால்களை நோக்குகின்றபோது மாணவர்களுக்கிடையே காணப்படும் வசதிவாய்ப்புக்கள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் இடையே வேறுபடுகின்றன. பெரும்பாலான மாணவர்களின் பெற்றோர் பொருளாதாரநிலையில் பின்தங்கியவர்களாக அன்றாடக் கூலி வேலைகளை மேற்கொள்பவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களிடம் சாதாரண தொலைபேசி ஒன்று இருப்பது கூட அரிதாகவே காணப்படுகிறது. இந்நிலையில் அவர்கள் வட்ஸ்அப், வைபர் குழுக்களிலும், நிகழ்நிலை வகுப்புகளிலும் கற்றலில் ஈடுபடுவது எவ்வாறு சாத்தியமானது என்பது முதலாவது வினாவாகும். இதேவேளை நடுத்தரக் குடும்பங்களில் பிறந்த மாணவர்களிடம் ஓரளவு தொழில்நுட்ப வசதியுள்ள தொலைபேசி காணப்பட்டாலும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான தொலைபேசிக் கட்டணங்களை செலுத்தும் வசதியுடன் பெரும்பாலான குடும்பங்கள் காணப்படுவதில்லை. ஓரளவு வசதியுள்ள மாணவர்கள் இதனைப் பயன்படுத்திக் கற்கின்றனர் என்பதனை

அவதானிக்க கூடியதாகவுள்ளது. அதே சமயம் வசதியுள்ள மாணவர்கள் உள்ள குடும்பங்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் உள்ள போது ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்நுட்ப வசதியுள்ள தொலைபேசிகள் தேவை இதுவும் ஒரு பாதகமான விடயம் ஆகும். இது எவ்வாறு இருப்பினும் இலங்கையில் இணைய வேகம் நகர கிராமப் புறங்களுக்கு இடையில் வேறுபாடுகளைக் கொண்டமைந்துள்ளது. சில தொலைத்தொடர்பு நிறுவனங்களின் இணைப்புக்கள் இலங்கையில் எல்லாப் பிரதேசங்களுக்கும் இன்றும் வழங்கப்படவில்லை என்பதுவும் ஒரு சவாலான விடயம் ஆகும். இதேவேளை இடர்காலச் சூழலில் மாணவர்கள் தமது குடும்பத் தொழில்களில் ஈடுபடுகின்றமையால் கற்றல் கற்பித்தல் மேலும் ஒரு சவாலாகவே காணப்படுகிறது. இவர்களை இணையவழிக்கல்வியின்பால் திருப்புதல் சவாலான விடயமாகவே காணப்படுகின்றது. இனிவரும் காலங்களில் பாடசாலை இடைவிலகலும் அதிகரிக்க கூடிய சூழல் உருவாகியுள்ளது.

ஆசிரியர் மாணவர் இருவரிடையே நடக்கும் நேரடிக் கருத்துப் பரிமாற்றம் இணையவழிக் கல்வி முறையில் கிடைப்பதில்லை. மாணவர்கள் தங்களுக்குள் செய்துகொள்ளும் நேரடிக் கருத்துப் பரிமாற்றமும் இணையம்வழி சரியாகக் கிடைப்பதில்லை. அதனால் ஒரு பாடத்திட்டத்தின் செயலாற்றக் குறிக்கோள் - Performance Goal என்ன என்பதை மனத்தில் கொண்டு இணையவழிக் கல்வி தேவையா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியும். ஒரு சில நேரங்களில் நேரடிக் கல்வியும் இணையவழிக் கல்வி முறையும் கலந்த கல்வி முறையும். Blended Learning பயன்பாட்டில் இருக்கிறது. இதேவேளை இணையவழிக்கற்றலை மேற்கொள்கின்ற மாணவர்கள் கூடுதலாக தொலைபேசியூடாகவே கற்கின்றனர். தொலைபேசியின் திரை சிறியதாக இருப்பதால் தொடர்சியாக அதனை அவதானிப்பதன் மூலம் கண், காது போன்ற உறுப்புக்களில் கோளாறு ஏற்படலாம் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். பிள்ளைகள் இணைய வழியாக கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கையில் கணினித் திரையின் முன்னால் அமர்ந்திருக்கும் கால எல்லை பற்றி கவனத்தில் கொள்வது அவசியம் என கொழும்பு கண் வைத்தியசாலையின் விசேட நிபுணரான மானெல் பஸ்க்குவெல தெரிவித்துள்ளார். மேலும் கணணி திரைகளின் மூலம் கற்பிக்கப்படுகிற போது ஒரு குறிப்பிட்ட பகுதியினை மாத்திரமே மாணவர்கள் பார்த்துக்கொள்வார்கள். தொடர்ச்சியாக கணனித் திரையை பார்க்கும் போது மூளைச் சோர்வு நிலை ஏற்படுகின்றது. இதனால் அவர்களது கிரகிக்கின்ற தன்மை குறையலாம். சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு, செல்போன் மூலம் பாடம் நடத்துவதினால், செல்போனிலுள்ளக் கதிரியக்கங்கள், குழந்தைகளின் மிகவும் இலகுவான மண்டை ஓடுகள் மூலம் அவர்களின் மூளையை கடுமையாகத் தாக்கும். அதோடு ஸ்மார்ட் போனின் மிகவும் அருகில் இருந்து பாடங்களைப் படிப்பதினாலும் காதில் ஹெட்போன் வைத்துப் பாடங்களைக் கேட்பதினால் பல மாதங்கள் செல்லும் போது கண், காது ஆகியன மிகவும் கடுமையாகப் பாதிக்கும் என மூளை நரம்பியல் மருத்துவர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதேபோல் உளவியல் ரீதியாக அதிக நேரம், கணினி மற்றும் கைபேசி பயன்படுத்துவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி திறன் பாதிக்கும் அபாயம் உள்ளது. இதன் மூலம் அவர்களுக்கு கவனச்சிதறல், தூக்கமின்மை, படைப்பாற்றல் குறைவு, கற்பனைத்திறன் குறைவு மற்றும் பதட்டம், பயம், மனஅழுத்தம் போன்ற பாதிப்புகள் ஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது. மாணவர்களின் கவனிக்கும் திறன் மற்றும் கற்றல் திறன் போன்றவற்றில் இந்த இணையதள கல்வி பாதிப்புகளையும், மாற்றங்களையும் ஏற்படுத்துகிறது. அதாவது மாணவர்களுக்கு Active Listening என்பது குறைந்து Passive Listening என்ற நிலைக்கு செல்கின்றனர். இது அவர்கள் கற்றல் திறனுக்கு தடையாக உள்ளது. மாணவர்கள் பெரிய திரைகளையுடைய கணனிகளில் கற்கும் வாய்ப்பு குறைவாகவே காணப்படுகின்றது. இது ஒரு சவாலான விடயமாகும் அத்துடன் மாணவர்கள் இணையத்துக்கு அடிமையாகக் கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது. மாணவர்கள் தொடர்ச்சியாக இணைய இணைப்பை பயன்படுத்துவதன் ஊடாக தேவையற்ற இணையத்தளங்களுக்கு நுழையக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இதனை தடுப்பதற்கான வழிமுறைகள் உள்ள போதும் பெற்றோருக்கு இவை தொடர்பான தொழில்நுட்ப அறிவு குறைவாகவே இருப்பது இணையம் மூலமான கற்றலில் ஒரு சவாலான விடயம் ஆகம்.

இதேவேளை இன்று ஆரம்ப இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கும் இணையம் மூலமான பரீட்சைகள் நடைபெறுவது அவர்களின் மனநிலையப் பாதிக்கின்ற விடயம் ஆகும். தொடர்ச்சியாகக் கற்றலில் ஈடுபடாமையினால் பாடத்தை மறந்து விடுவார்கள். எனவேதான் இணையவழிப் பரீட்சை என்கிறார்கள். கல்வி என்பது மனப்பாடக் கல்வியாக இருப்பதனையே இது குறிக்கின்றது. ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு சூழுலுடன் இணைந்த கற்றலே முக்கியமானது. உண்மைப் பொருட்கள் மற்றும் நேரடி அனுபவங்கள் ஊடாக கற்றல் அனுபவங்களை வழங்குகின்ற போதே ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு எண்ணக்கரு விருத்தி ஏற்படும். இங்கு குழந்தைகளுக்கு கல்வி இயற்கையின் ஊடாகவே வழங்கப்பட வேண்டும் என்கின்ற இயற்கைவாதியான ஷரூசோவின் கருத்தும் நோக்கத்தக்கது. இணையவழிக்கல்வி அனைத்து மாணவருக்கும் சமனான வாய்ப்பைத் தராது. பாகுபாடு உடையது. வசதியுடையவர் வாய்ப்பை பயன்படுத்தி முன்னேறவும் வசதி குறைந்தவர்கள் பின்தங்கி நிற்கவும் வழிவகுக்கும். முதலில் வசதியுள்ள வசதிகுறைந்த அனைத்து மாணவர்களுக்கும் சமனான கற்றல் சூழலை உருவாக்க வேண்டும். கன்னங்கராவால் அறிமுகப்படுத்தப்பட்ட அனைவருக்கும் சமத்துவமான இலவசக்கல்வி என்ற எண்ணக்கருவையே இணையக் கல்வி ஆட்டங்காண வைத்துவிடும்.

இன்றைய உலகில் சமத்துவத்தை விட ஒப்புரவுக்கு உயர்ந்த இடம் வழங்கப்படுகின்றது. வசதி வாய்ப்பு குறைந்தவர்களுக்கு மேலதிக வசதிகளை வழங்கி கல்வியினூடாக வசதி வாய்ப்பு உடையவர்களாக மாற்றுதல் வேண்டும். பின் நவீனத்துவ கல்விச்சிந்தனையாளர் இவான் இலிச் கூறுவது போல சமத்துவம் என்பது வசதியுடைவர்களை வசதியுடையவர்களாகவும் வசதியற்றவர்களை வசதியற்றவர்களாகவும் வைத்திருக்கவே பயன்படும். இதேயே இணையவழிக் கல்வியும் மேற்கொள்கின்றது.

அடுத்ததாக ஆசிரியர் சார்ந்த சவால்களை நோக்குகின்ற போது இன்றைய ஆசிரியர்கள் பலர் நவீன தொழில்நுட்பம் சார்ந்த அறிவு குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இது இணையவழிக் கல்வியின் ஒரு சவாலாக காணப்படுகின்றது. ஆசிரியர் நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தாவிடின் காலத்தால் பின்தங்கியிருப்பின் அது அந்த மாணவர் சமுகத்துக்கு தான் நஷ்டம். எனவே ஆசிரியர் தன்னை சார்ந்த துறைகளை அறிந்து இருப்பதும் எப்போதும் புதுமைகளை உள்வாங்கத் தயாராக இருப்பதும் அவசியமானதாகும். ஆசிரியர் பயன்படுத்தும் கற்பித்தல் முறையும் இணையவழிக் கல்வியில் ஒரு சவாலே. இன்று இணையக்கல்வி மூலம் நடாத்தப்படும் அநேக பாடங்கள் விரிவுரை முறையிலேயே நடைபெறுகின்றன.

பின் நவீனத்துவ கல்விச்சிந்தனையாளர் போலே பிறைறி கூறுவது போல் ஆசிரியர்களுக்கு விபரிப்பு நோயுள்ளது என்றே தோன்றுகின்றது. ஒவ்வொரு மாணவர்களும் வேறு வேறானவர்கள் அவர்களின் தனித்தன்மையினை கருத்தில் கொண்டே கற்றல் கற்பித்தல் திட்டமிடப்பட வேண்டும். ஆனால் இன்றைய இணையவழிக் கல்வியில் அனைத்து மாணவர்களுக்கும் ஒரே முறையிலேயே கற்பித்தல் நடைபெறுவதனையே அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான கற்றல் கற்பித்தலின் விளைவுகள் சந்தேகத்துக்குரியதே. கற்றல் வகுப்பறையில் நடைபெறுவதில்லை. சகபாடிகள், சூழல்கள் மூலமாகவே கூடுதலான கற்றல் இயற்கையில் நடைபெறுவதாக இவான் இலிச் கூறுகிறார். இன்று அந்த வாய்ப்பு இல்லாமல் சமூக ரீதியில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் பிள்ளைகள் உள்ளனர். சக மாணவர்களுடன் விளையாடுவது, எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வது, சவால்களை கூட்டாகப் பகிர்ந்து கொள்வது, ஆசிரியருடன் பேசுவது முதலான சமூகத் தொடர்பாடல்கள் கற்றலின் ஆதாரத்தேவை. அந்தத் தேவையை சரிவர நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் மாணவர் சமுதாயம் காணப்பட்டது. "கற்றல், கற்பித்தல் செயல்பாடு என்பது இரண்டு இதயங்களுக்கு இடையே நடக்கும் ஓர் இணைப்பு பாலமாகும்" என்பது கல்வியாளர்களின் கருத்து. ஆனால், இந்த ஆன்லைன் கற்பித்தலினால் எந்த இதயங்களும் இணைக்கப்படுவதில்லை. மாறாக இதயங்களைப் பிரித்துப் போடுகின்றன.

பீகார், சட்டீஸ்கர், ஒரிசா, ஜார்கண்ட் மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களில் நடத்தப்பட்ட ஆய்வு அரசுப் பள்ளிகளில் படிக்கக் கூடிய கிராமப்புற மாணவர்களில் 80% மாணவர்களுக்கு ஊரடங்கு காலத்தில் கல்வி கிடைக்கவில்லை எனக் கூறுகிறது. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இணையவழியில் வகுப்புகள் நடக்காததாலும் அவர்களின் குடும்ப வறுமை காரணமாகவும் கணிசமான அளவு மாணவர்கள் வேலைக்கு செல்வதாக 'தி வயர்' பத்திரிகை கூறுகிறது.

ஒரிசா மாநில பள்ளிக் கல்வி அமைச்சரோ, அம்மாநிலத்திலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 33.33% மாணவர்கள் மட்டுமே இணையவழியில் கல்வி பெறுவதாகவும் மீதமுள்ள 66.67% மாணவர்கள் ஊரடங்கு காலகட்டத்தில் கல்வி கிடைக்கவே இல்லை என்றும் கூறுகிறார். உயர்கல்வியின் நிலையோ இன்னும் கேலிக்கூத்தானது. அரசு உயர்கல்வி நிறுவனங்களில் இணையவழி கல்விக்கான எவ்வித கட்டமைப்பு வசதிகளும் இல்லை. இவற்றில் மாணவர்களின் வருகைப் பதிவே 40% க்கும் குறைவுதான். கொவிட் - 19 உருவாக்கியுள்ள தாக்கம், அனைத்துத் துறைகளிலும் ஆய்வுப் பொருளாக மாறியுள்ளதைப் பார்க்க முடிகிறது. இதன் ஒரு பகுதியாக குழந்தைகளும், பெரியவர்களும் எவ்வாறு அதிநவீன தொலைத்தொடர்பு சாதனங்களைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது என்பது குறித்தும், அது ஏற்படுத்திவரும் மனநல பாதிப்புகள் குறித்தும் 'நிம்ஹான்ஸ்' (பெங்களூர் மனநல அறிவியல் ஆராய்ச்சி மையம்) போன்றவை ஆராயத் தொடங்கியுள்ளன. 45 நாடுகளில் உள்ள முக்கியமான பல்கலைக்கழகங்களில் நடத்தப்பட்ட ஆய்வில், உயர்கல்விக்கான இணைய வழி வகுப்புகள் ஒரு போதும் வழக்கமான வகுப்புகளுக்கு இணையாகாது எனத் தெரியவந்துள்ளது. பொருத்தமான கற்பிக்கும் முறை கடைப்பிடிக்கப்படும்போதுதான் கற்றல் அனுபவம் மேம்படும்.

இந்த ஆட்கொல்லி நோய் ஒரு கசப்பான உண்மை மீது வெளிச்சம் பாய்ச்சியிருக்கிறது. இதுவரை நாம் அறிந்த கல்வி என்பது இனிமேலும் அவ்வாறே இருக்கப்போவதில்லை. பாடசாலை என்ற கோட்பாடு பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உலகம் இருக்கிறது. இந்தச் சவால் முழு உலகிற்குமானது. இது மனித குலத்தின் எதிர்கால முன்னேற்றத்தைத் தீர்மானிக்கக்கூடியது என்பதால் சுகாதார நெருக்கடிகளுக்கு ஐக்கிய நாடுகளின் உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) என்ற பொறிமுறையின் ஊடாக தீர்வு காண விழைவதைப் போல இதற்கும் உலகளாவிய பொறிமுறை அவசியம். சகல நாடுகளின் ஒருமைப்பாடு இல்லாமல் சவாலை எதிர்கொள்ள முடியாது. கல்வி சிறந்த எதிர்காலத்திற்கான நம்பிக்கைக்கு அடித்தளம் இடுகிறது. இதனை உணர்ந்து கொண்டு தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது ஐக்கிய நாடுகள் முதலான சர்வதேச அமைப்புக்களினதும் ,அவற்றிற்கு துணை புரிவது உலகநாடுகளினதும் தவிர்க்க முடியாத பொறுப்பாகும்.

உசாத்துணைகள் :-


1. ராம் சங்கர்,(2020), "கொரொனா நெருக்கடியால் 1 பில்லியன் மாணவர்கள் பாதிப்பு-ஐ. நா தகவல்", Retrieved from www.vikatan.com /2020/08/04on 05/11/2021.

2. கஜந்தினி,நீ.(2020), "கொரொனாவும் தற்போதைய சிறார்களின் கல்வி நிலையும்", Retrieved from www.globaltamilnews.net /2020/06/10on 05/11/2021.

3. முகமது ஹுசைன்,(2020), "கோவிட் காலத்தில் கல்வியை மீட்டெடுப்பது எப்படி?", Retrieved from www.hindutamil.in /2020/09/08on 05/11/2021.

4. முகமது ஹுசைன்,(2020), "கொரொனாவும் கல்வியும்: விடுமுறையைப் பயனுள்ளதாக்கும்

5. இணையவழிக்கல்வி", Retrieved from www.hindutamil.in /2020/03/24on 05/11/2021.

6. தேவஹி,இ.(2020), "கொரொனா வைரஸ் :முழுமையான பார்வை", Retrieved from www.hindutamil.in /2020/04/02on 07/11/2021.

7. முத்துமணி, ந.(2020), "செயற்கை நுண்ணறிவு __ மாற்றம் கல்விமுறையில்", Retrieved from https://www.dinamani.com /2020/12/15on 09/01/2021.

8. கருணாநிதி,ம.(2020), "கொரொனா காலச்சூழலில் மாறிவரும் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்", Retrieved from www.keetru.com /2020/05/21 on 09/11/2021.

9. "உலக மாணவர்களின் கல்வியில் கொரொனா ஏற்படுத்திய அதிர்ச்சி",(2020), Retrieved from www.thinakaran.lk 2020/05/13 on 05/01/2021.

10. "இணையத்தள கல்வியில் மாணவர்கள் கூடுதலான ஆர்வம்"(2020), retrieved from https://tamilnews.lk /2020/05/12 on 05/01/2021.

11. "ஒரு நச்சுயிரி கல்வித்துறையில் ஏற்படுத்திய தாக்கங்கள்"(2020), retrieved from https://www.virakesari.lk /2020/06/21 on 07/01/2021.

12. "இணையவழிக்கல்வி முறைகள்", Retrieved from HTTPS:// www.srmist.edu.in.on 09/01/2021.

13. "இணையவழிக்கல்வி_கணினித்திரை முன்னால் அமர்ந்திருக்கும் கால எல்லை பற்றி கவனம்", Retrieved from https://tamilnews.lk /2021/01/04 on 11/01/2021.

14. "இணையவழி வகுப்புகளில் சிறிய கைபேசிகளை பாவிப்பதன் மூலம் கண் பாதிக்கப்படலாம்", retrieved from https://athavannews.com /2020/12/20 on11/01/2021.

15. செல்வராஜ்,(2020), "இதயங்களை இணைக்காத இணையவழிக்கல்வி", retrieved from https://tamil-indiaexpress.com /2020/06/20 on 11/01/2021.

16. "இணையவழிக்கல்வியின் சாதகம் மற்றும் பாதகங்கள்",(2020), Retrieved from aramhospital.com/2020/08/31 on11/01/2021.

17. இராமச்சந்திரன் நிர்மலன், "இலங்கையின் இணையவழிக் கல்வியிலுள்ள சவால்கள்", Retrieved from thinamkural.lk/on 11/01/2021.

18. ரங்கராஜன், டீ. கே.(2020), "இணையவழிக்கல்வி முறையும் சவால்களும்", retrieved from https://m-dinamani-com 2020/05/12on 11/01/2021.

19. பன்னிருகை,இரா.(2020), "மாணவர்களின் இப்போதைய தேவை இணையவழி கல்வி", Retrieved from https://m.dinamalar.com 2020/05/19 on 11/01/2021.



M.F.Famees
Research Assistance,
Medical Research Institute.

J.S. Fathima Sajla
M.A in Sociology (Reading),
Department of Sociology,
University of Colombo.

# கொவிட் 19 இனால் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் எதிர்கொண்ட சவால்கள்:

## வெளிமலை மன்/பதியுத்தீன் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையை மையமாகக் கொண்ட ஓர் சமூகவியல் ஆய்வு

**1.ஆய்வுப்பின்புலம்**

உலகளாவிய ரீதியில் Covid - 19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக பாரிய தாக்கத்திற்குபட்டுள்ளதுடன், 2020 ஆம் ஆண்டு ஜனவரி 30 உலக சுகாதார அமையமானது பொது சுகாதார அவசரநிலையை அறிவித்ததுடன், (WHO, 2020) இன்றுடன் ஒரு வருடமாகின்றது. இதன் விளைவாக அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் சமூக, பொருளாதார, கலாச்சார, கல்வி உட்பட பல்வேறு துறைகளிலும் சவால்களுக்கு முகம்கொடுக்கின்றன. உலகலாவிய ரீதியில் 108,872,575 பேர் பாதிக்கப்பட்டதுடன், (Worldometer;2021.02.13) இலங்கையின் 72,825 நோயாளிகள் உறுதிப்படுத்தப்பட்டதுடன், 6,637 சிகிச்சைபெறுவதுடன், 796 புதியநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர் (SLRCOVID-19; 2021,02,13).

தேசிய, சர்வதேச மட்டத்தில் அரசியல், பொருளாதார, கல்வி, சமூகப் பண்பாட்டுச் சூழலில் இதன் தாக்கம் கனதியானது. பெருந்தொற்றின் நோயியல் நிலைக்கு அப்பால் அதன் இயங்கு விசையால் அதிகம் பாதிப்புற்ற துறைகளில் கல்வித்துறையும் பிரதான ஒன்றாகும் (சேந்தன்,வே: 2021). உலகளாவிய ரீதியிலே பெரும்பாலான அரசாங்கங்கள் கொவிட்-19 இனால் தற்காலிகமாக பாடசாலைகளை மூடினால் ( WHO; 2020). திடீரென கல்வித்துறைசார்ந்த நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதுடன், தொடர்புடைய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் பாதிப்புக்குட்பட்டனர். கடந்த வருட ஆரம்ப காலப்பகுதியில் மட்டும் மூன்று மாத காலம் (மார்ச் தொடக்கம் ஜுன்) வரையான நான்கு மாதங்கள் சுமார் 480 மணித்தியாலங்கள் கற்பித்தல் இல்லாமல்போனது (இராசேந்திரம்,நா,2020).

இலங்கையின் புத்தளம், கொச்சிகடை, நீர்கொழும்பு போன்ற இடங்களில் முதன்முதலாக (18.03.2020) ஊடரங்கு காலவரையறையின்றி அமுல்படுத்தப்பட்டதுடன், பின்னர் 18.3.2020 இல் தொடர்ச்சியாக 10 நாள்கள் 19 மாவட்டங்களில் ஊடரங்கு அமுலாக்கம் செய்யப்பட்டதுடன், இன்றுவரைக்கும் வெவ்வேறு பிரதேசங்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்கிற்குட்படுத்தப்படகின்றது. மட்டுமன்றி இலங்கையில் கொவிட் 19இனால் கற்பதில் மாணவர்கள் சவால்களிளை எதிர்கொண்டதுடன், குறிப்பாக நகர பகுதியைச் சேர்ந்தவர்களை விட கிராமியப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அதிகளவிலான சவால்களை எதிர்கொண்டனர். இவ் ஆய்வானது மேற்குறிப்பிட்ட கற்றல் சவால்கள் தீவிரமாகக் காணப்படும் 1990ஆம் போரின் காரணமாக பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 30 வருடங்களின் பின்னரான சமாதான சூழலில் மீள்குடியேறிய முசலி பிரதேச செயலகத்திற்குப்பட்ட வெளிமலை மன்/ பதியுத்தீன் முஸ்லிம் பாடசாலையை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

**2. ஆய்வுப் பிரச்சினை**

எந்தவொரு பிரச்சினை மக்களால் அதிகமாக பிரச்சினையாக நோக்கப்படுகின்ற சந்தர்ப்பத்திலும் அப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிவகைகளை தேடும் சந்தர்ப்பத்திலும் தான் அது ஆய்வுப் பிரச்சினையாக மாறுகின்றது.இதனடிப்படையில் இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாகாணமாக வடமாகாணம் காணப்படுவதுடன், போரினால் இடம்பெயர்ந்த பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் மீள்குடியேறும் செயற்பாடுகள் இன்று வரை பரவலாக மேற்கொண்டு வருகின்றன (வட மாகாண புள்ளிவிபர பதிவேடு, 2018). அந்த அடிப்படையில் போர் ஓய்ந்ததன் பின்னரான சூழலில் மீள்குடியேற்றப்பட்ட மக்களிற்கான சமூகப் பொருளாதார, கல்வி உட்பட வசதிகள் சார்ந்த வெவ்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அந்த வகையில் 2014ஆம் ஆண்டு முசலி பிரதேச செயலகத்திற்குப்பட்ட வெளிமலை கிராமத்தில் மீள்குடியேறிய மக்களின் கல்வித் தேவையின் பொருட்டு உருவாக்கப்பட்ட பாடசாலையே மன்/ பதியுத்தீன் முஸ்லிம் பாடசாலையாகும்.

அந்தவகையில் மீள்குடியேற்றபட்ட கிராமிய சூழலில் உருவாக்கப்பட்ட குறித்த பாடசாலை கல்விச்சவால்களுக் ஊரடங்கு காலப்பகுதிகளில் கல்வியைத் தொடர்வதில் இலங்கைச் சூழலில் குறுக்கிடான கற்றல், மோசமான ஊட்டச்சத்து, வீட்டுச் சூழலுடனான கல்வி தொலைக்கல்வியில் பெற்றோர் தயாரின்மை, தொலைக்கல்விக்கான உருவாக்கம், முகாமைசெய்தல் மற்றும் அதனை வலுவூட்டல் சார்ந்த சவால்கள், சிறுவர் பராமரிப்பு இடையூறுகள், அதிக பொருளாதாரச் செலவு, சுகாதார பராமரிப்பு திட்டமிடப்படாத அமைப்புநிலை. பாடசாலை மற்றும் அதனை மீள திறப்பதில் உள்ள அழுத்த நிலை, இடைவிலகல் அதிகரிப்பு, அதிகரித்த வன்முறை மற்றும் சுரண்டல், சமூக தனிமை, கணிப்பீடு மற்றும் கற்றல் உத்திகளில் கையாளுவதில் உள்ள சவால்களை எதிர்கொள்கின்றனர்(Lucas, G.N., 2020).

குறிப்பாக கொவிட் 19இன் காரணமாக இணையவெளி கற்பித்தல் நுட்பமானது கிராமியப் பகுதி மாணவர்களுக்கு பாரிய சவால்களிற்குட்டதாக மாறியுள்ளது. தொழில்நுட்ப அறிவின்மை, கீழ்மட்ட பொருளாதார மற்றும் வறுமை, கற்றலுக்கான பொற்றோரின் ஒத்துழைப்பு இன்மை, கற்றலுக்குரிய சாதனங்கள் ஆசிரியர்கள். மாணவர்கள் மற்றும் பாடசாலையில் இன்மை, கற்பதற்கான பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல் வசதியின்மை, வலையமைப்பு சார்ந்தபிரச்சினைகள், கற்றலில் இடர்படுவோரை இணைக்க முடியாமை, ஒரே வீட்டில் ஒரு கையடக்க தொலைபேசியை பாவிக்கும் வேறுபட்ட வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் உள்ளமை, ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் உள்ள வீட்டில் எழும் முதன்மைப்படுத்தல் பிரச்சினைகள் ,கற்றலுக்கு உகந்த வீட்டுச்சூழல் இல்லாமை என்பன பல்வேறுபட்ட சவால்களை கோவிட் 19 கால கற்றலின் போது சவால்களுக்கு முகம்கொடுத்தனர் (நேர்காணல்). ஆகவே கோவிட் 19இன் காலத்தில் கற்றலில் எதிர்கொண்ட சவால்கள் ஆய்வுப் பிரச்சினையாகும்.

ஆகவே ஆய்வானது மேற்குறிப்பிட்ட கற்றல் சவால்கள் தீவிரமாகக் காணப்படும் 1990ஆம் போரின் காரணமாக பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 30 வருடங்களின் பின்னரான சமாதான சூழலில் மீள்குடியேறிய முசலி பிரதேச செயலகத்திற்குபட்ட வெளிமலை மன்/ பதியுத்தீன் முஸ்லிம் பாடசாலையை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

### 2.1 ஆய்வு நோக்கம் :

வெளிமலை மன்/ பதியுத்தீன் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையை சேர்ந்த மாணவர்கள் கொவிட் 19இனால் கல்வி செயற்பாடுகளின் மாணவர்கள் எதிர்கொண்ட தடைகளையும், அதற்கான காரணிகளையும் கண்டறிவதுடன், அதற்கான தீர்வுகளையும் முன்வைத்தல்.

### 2.2 ஆய்வு வினாக்கள் :

கொவிட் 19இனால் கற்பதில் மாணவர்கள் எதிர்கொண்ட சவால்கள்- வெளிமலை மன்/ பதியுத்தீன் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையை மையமாகக் கொண்ட ஓர் சமூகவியல் ஆய்வு எனும் ஆய்விற்கு பின்வருவன ஆய்வு வினாக்களாக அமைந்தன.

1. கொவிட்- 19இனால் கல்விசெயற்பாடுகளின் மாணவர்கள் எவ்வாறான தடைகளை எதிர்கொண்டார்கள்?
2. கொவிட் -19இனால் மாணவர்களின் கல்விசெயற்பாடுகளின் தடைகளுக்கான காரணிகள் என்ன?
3. கொவிட்-19இனால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளினால் ஏற்பட்ட தடைகளை நீக்குவதற்காக எம்மாதிரியான தீர்வுகளை முன்னெடுக்கலாம்? என்பனவாகும்.

## 3. ஆய்வு முறையியல்

### 3.1 தரவு சேகரிப்பு நுட்பங்கள்

இந்த ஆய்வு தொடர்பான தரவுப் பகுப்பாய்வுக்குத் தேவையான தரவுகள் முதலாம் நிலை தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டன. முதன்மை தரவுகளாக மாணவர்களிடம் வினாக்கொத்து மூலமும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் நேர்காணல் போன்ற நுட்பங்கள் கையாளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளாக தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள், இரண்டாம் நிலைத்தரவுகளாக் தொடர்பான நூல்கள், பாடசாலைப் பதிவேடு கையேடுகள், புள்ளிவிபரக் கையேடு, பத்திரிகைகள் என்பவற்றிலிருந்து தகவல்கள் திரப்பட்டப்பட்டன.

### 3.2 மாதிரியெடுப்பு

ஆய்வுத்தளமான மன்/ பதியுத்தீன் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையை மொத்த மாணவர் தொகையில் இருந்து அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அங்கத்தவர் தெரிவானது அடுக்கமைப்பட்ட எழுமாறான மாதிரி எடுப்பு முறையில் நடைபெற்றது. எளிய புள்ளிவிபரமுறை மூலமும் தரவுகள், பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் அட்டவணைகளாகவும், வரைபடங்களாகவும் பெறப்பட்டு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.1 மாதிரியும், மாதிரியின் பருமன்

| தரம் | சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கை | ஆண் | பெண் | மொத்தம் | மாதிரியெடுப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | 01 | 17 | 13 | 30 | பாடசாலைக்கு சேரவில்லை |
| 02 | 02 | 09 | 10 | 19 | 5 |
| 03 | 03 | 12 | 09 | 17 | 5 |
| 04 | 04 | 08 | 06 | 21 | 5 |
| 05 | 05 | 06 | 10 | 12 | 5 |
| 06 | 06 | 07 | 07 | 17 | 5 |
| 07 | 07 | 07 | 06 | 14 | 5 |
| 08 | 08 | 08 | 07 | 14 | 5 |
| 09 | 09 | 07 | 07 | 14 | 5 |
| மொத்தம் | 09 | 81 | 77 | 158 | 40 |

(மூலம் - பாடசாலைப்பதிவேடு, – 2021)

### 3.3. தரவுகளும் பகுப்பாய்வு முறைகளும்

இவ் ஆய்வானது அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான இணைந்த கலப்புமுறை தரவுகளை உள்ளடக்கி உள்ளது. ஆய்வு தொடர்பான தரவு திரட்டப்பட்ட விபரம் தரவுகன் பகுப்பாய்வு செய்யப்பட்ட முறை மற்றும் பெறப்பட்ட விதம் தரவுகளை அடிப்படையாக கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்ட முறை மற்றும் பெறப்பட்ட ஆய்வுக் காலத்திற்குள் சேகரிக்கப்பட்ட அனைத்து தரவுகளும் தொகுத்து பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன. இம்முன்வைத்தலானது கொவிட்- 19இனால் கல்வி செயற்பாடுகளின் மாணவர்கள் எதிர்கொண்ட தடைகளையும், அதற்கான காரணிகளையும் விவரண முறை மற்றும் தர்க்கப்பகுப்பாய்வு என்பவற்றினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது பண்புசார்,அளவுசார் நுட்பங்களைப் பயன்படுத்தி தரவுப்பகுப்பாய்வானது புள்ளிவிபரவியல், விபரணம், வரைபு போன்றவற்றின் மூலம் தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. ஆய்வின் பெறுபெறும் கலந்துரையாடலும்

ஆய்வானது கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டோரின் குடும்பத்தில் கற்பவர்களின் எண்ணிக்கை (Students Members) அவசியமானது. ஏனெனின் அதிக மாணவர்கள் கொண்ட குடும்பத்திற்கு அதிக கற்றல் வளங்கள் தேவைப்படுவதுடன், குறைந்த தொகையுடையோருக்கு குறைவாத் தேவைப்படும்.

### 4.1.குடும்பத்தில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கைப் பகுப்பாய்வு வரைபு




(மூலம்- களஆய்வு, வினாக்கொத்து – 2021)

### 4.2: குடும்பத்தில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பானது

இக்குறிப்பிட்ட வரைபின்படி 20% குடும்பங்களில் ஒரு மாணவர் பாடசாலையில் கல்விகற்பதுடன், 27.5% குடும்பங்களில் இரண்டு மாணவர்கள் பாடசாலையில் கற்கின்றனர். மேலும் 37.5% குடும்பங்களில் 3 மாணவர்கள் பாடசாலையில் கற்கின்றனர். மேலும் 15% குடும்பங்களில் 4 மாணவர்கள் மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் பாடசாலையில் கற்கின்றனர். ஆகவே தரவுகளின் பகுப்பாய்வுக்கேற்ப அரைவாசிக்கு மேற்பட்ட குடும்பங்களில் மூன்று மாணவர்கள் பாடசாலையில் கற்கின்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களுக்கான கல்விச் செலவு அதிகமாகவும் காணப்படுகின்றமையும் நேர்காணலுக்குப்பட்டவர்கள் கருத்துரைத்ததுடன் இத் அளவுசார் தரவிற்கு வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார் தரவுகளும் காணப்படுகின்றன. "வீட்டில் அதிகமான பிள்ளைகள் பாடசாலை கற்பதாலும், ஒரு தொலைபேசியே இருப்பதனாலும் அதைத் தந்தைமாரே தொழிலுக்கு கொண்டு கொரோனோ கால கற்றல் சவலாக இருந்தது" (மூலம் : நேர்காணல் ஆசிரியர்).

### 5.3.பால்நிலை பகுப்பாய்வு அட்டவணை: 5.2 பால்நிலை அடிப்படையில் பகுப்பாய்வு

| பால்நிலை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| ஆண் | 24 | 60% |
| பெண் | 16 | 40% |
| மொத்தம் | 40 | **100.0%** |

(மூலம்- களஆய்வு, வினாக்கொத்து – 2021)

ஆய்வுக்கு பதிலளித்தவர்களில் பால்நிலை அடிப்படையிலான வேறுபாட்டை மேற்படி அட்டவணைக் காட்டுகிறது. அந்த அடிப்படையில் 60% ஆண்களிடமிருந்தும் மேலும் அதே போல் 40% பெண்களிடமிருந்தும் தரவுகள் பெறப்பட்டன.

### 5.4. தந்தையர்களின் வாழ்வாதார நிலை தொடர்பான பகுப்பாய்வு

பொருளாதாரம் தொடர்பாக பகுப்பாய்வில் குறித்த மக்களின் குடித்தொகையினுடைய பிரதான செயற்பாடு மிக அவசியமானது. அந்த வகையில் மிகக் குறைந்த வருமானம், மந்தகரமான பொருளாதார நிலை தொழிலின் மீது அதிக நேரத்தினை செலவிடல் போட்டி நிலை போன்றன கல்வி ரிதியான நிலையில் செல்வாக்குச் செலுத்துகின்ற பொருளாதாரக் காரணிகளில் முக்கியமானதாக இருக்கின்றது. குறிப்பாக கொரோனோ கால தொழில்நிலையை ஆராய்தலின் மூலம் கொரோனோ கால பொருளாதார நிலையை மதிப்பிடமுடியும் என்றவகையில் ஆய்வானது தந்தையர்களின் வாழ்வாதார நிலையை மதிப்பிடுகின்றது.

அட்டவணை 5.3: தந்தையர்களின் வாழ்வாதார நிலை தொடர்பானது

| தந்தையர்களின் தொழில்நிலை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| கூலி | 15 | 37.5% |
| வணிகம் | 1 | 2.5% |
| அரச தொழில் | 11 | 27.5% |
| மீன்பிடி | 5 | 12.5% |
| சுயதொழில் | 8 | 20% |
| மொத்தம் | 40 | 100% |
| (மூலம்- களஆய்வு, வினாக்கொத்து – 2021) | | |

அட்டவணையை நோக்குகின்றபோது மாணவர்களின் தந்தையர்களது பிரதான வாழ்வாதாரச் செயற்பாடாக கூலித்தொழில் உள்ளதினை நோக்கமுடியுமாக உள்ளது. அந்த அடிப்படையில் 37.5% வாழ்வாதாரமாகக் கூலித் தொழில் உள்ளதுடன், கூலித் தொழிலிலும் ஈடுபடுகின்றனர். மேலும் தொடர்ந்து 2.5% வணிகத்தினையும் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். 27.5% அரச தொழிலினை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். 12.5%, மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். மேலும் 20%, மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். அந்தவகையில் ஆகவே அதிகமான கற்கும் மாணவர்களது தற்தையர்களது பொருளாதார நிலையானது பருவ காலமானதாகவும் மேலும் குறைந்த வருமானத்தினை கொண்டதாகவும் காணப்படுகின்றது கொரோனா காலத்தில் வறுமை நிலையைக் கொண்டதாக இருந்தது. இவ் அளவுசார் தரவிற்கு வலுச்சேர்க்கும் வகையில் கீழ்வரும் பண்புசார் தரவுகள் காணப்படுகின்றன. “பொருளாதார வசதி மிகக் குறைவாகவே உள்ளது. அன்றாடம் ஒரு கிலோ அரிசி வாங்கமுடியாத வழியற்ற நிலையிலே உள்ள பெற்றோர்கள் எப்படி இன்ரெனட் காட்டினை வாங்குவார்கள்?’’(நேர்காணல் தகவல் தொழிநுட்பபாட ஆசிரியர்).

‘‘கொரோனா காலத்திலேயே வறுமையுடன் கூடிய ஒரு சூழ்நிலை காணப்பட்டது. குடும்பத் தேவையை நிவர்த்தி செய்ய முடியாத நிலையிலேயே காணப்பட்டது் சாப்பிடக் கூட முடியாத நிலையில்தான் இருந்தது இந்த சூழலில் பிள்ளைகளுக்கான உணவு பற்றிய அக்கறை மாத்திரமே இருந்தது. உணவுக்குப் பின்னர் தான் கல்வி முக்கியம்’’. (நேர்காணல்: 4ஆம் தர மாணவனின் தந்தை).

### 5.2. தாய்மாரின் வாழ்வாதார நிலை தொடர்பான பகுப்பாய்வு

அட்டவணை 5.2 : தாய்மாரின வாழ்வாதார நிலை தொடர்பானது

| தாய்மாரின் தொழில்நிலை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| வீட்டுவேலை | 37 | 92.5% |
| அரச தொழில் | 2 | 5% |
| சுயதொழில் | 1 | 2.5% |
| மொத்தம் | 40 | 100% |
| (மூலம்- களஆய்வு, வினாக்கொத்து – 2021 | | |

தாய்மார்களின் வாழ்வாதார நிலையானது மாணவர்களது கல்விச் செயற்பாடுகளில் ஆதரவினைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாகும். மேற்படி அட்டவணையை நோக்குகின்றபோது மாணவர்களின் தாய்மார்களது பிரதான வாழ்வாதாரச் செயற்பாடாக வீட்டுவேலை உள்ளதினை நோக்கமுடியுமாக உள்ளது. அந்த அடிப்படையில் 92.5%, வீட்டுவேலை தொழிலாக உள்ளதுடன், அவர்கள் தங்கள் வீட்டுவேலை முன்னெடுக்கின்றமையானது வருமானத்திற்கான வழியாக இல்லாதிருப்பதுடன், தந்தைமார்களின் தொழிலினைமையமாகக் கொண்டே குடும்பத்தின் பொருளாதாரம், கல்வி உட்பட இதர செலவுகள் தங்கி நிற்பதினை அட்டவணைக் குறிப்பிட்டு நிற்கின்றது. மேலும் 5% அரசதொழிலினை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். 2.5%, சுயதொழிலினை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

### 5.3. கல்வியைத் தொடர்வதற்கான இலத்திரனியல் தொலைபேசி வசதி தொடர்பானது

வரைபு 5.1 கல்வியைத் தொடர்வதற்கான இலத்திரனியல் தொலைபேசி வசதி தொடர்பானது




(மூலம்- களஆய்வு, வினாக்கொத்து – 2021)

வீட்டில் கல்வியைத் தொடர்வதற்கான இலத்திரனியல் தொலைபேசி வசதி தொடர்பான பதிலளிப்பில் 13% வீதமானவர்கள் ஆமென பதிலளித்ததுடன், 87% இல்லையென பதிலளித்தனர். அதிகமான மாணவர்களின் பதிலளிப்பின்படி கொரோனாக் காலத்தில் கல்வியைத் தொடர்வதற்கான இலத்திரனியல் தொலைபேசி வசதியின்மை பாரிய சவாலாக இருந்துள்ளது. பாடசாலை மற்றும் வீட்டில் கொரோனா இடர்கால கல்வியை முன்னெடுப்பதில் சவாலாக தொலைபேசி உட்பட தேவையான சாதனங்களின்மை பிரச்சினையாக காணப்படுகின்றது. இவ்அளவுசார் தரவிற்கு வலுச்சேரக்கும் வகையில் கீழ்வரும் பண்புசார் தரவுகள் காணப்படுகின்றன.

### 5.3.1.கற்றலுக்குரிய சாதனங்களின்மை

- பாடசாலையில் சாதனங்கள் இன்மை பற்றிய கருத்துரைகளாவன: "ஸ்மாட் கிலாஸ் ரூம் மற்றும் கணனி வகுப்புகள் வசதிகள் இங்கு இல்லை. அதிகமான பெற்றோர்களிடம் சாதாரண தொலைபேசியே உள்ளது. என்னிடம் கூட சாதாரண தொலைபேசியே உள்ளது. இங்கு வசதி குறைந்த சூழலிலேயே கல்வியை கற்க வேண்டியிருக்கிறது. ஒரு சில பெற்றோர்கள் தமது தொலைபேசியை பிள்ளைகளுக்கும் கொடுப்பதுண்டு. ஆனாலும் கூட அதிகமான பெற்றோர்கள் தொலைபேசியை பிள்ளைகளுக்கு கொடுப்பதில்லை.'' (நேர்காணல்).
-

''மன்னார் மாவட்டத்தின் கஷ்டப் பிரதேச பாடசாலையாக இது உள்ளது. இங்கு கொரோனாக் காலத்தில் கற்றல் செயற்பாடுகள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டது. காரணம் இது மீள்குடியேறிய கிராமம் கிராமிய குடியேறியப் பகுதியாகும். இப்பாடசாலையில் நவீன கற்றலுக்குரிய சாதனங்களின்மை மிக முக்கியமான குறைபாடாகும். இலத்திரனியல் கல்வியூடாக 100% மாணவர்கள் கற்பார்கள் என குறிப்பிட முடியாது 2% மாணவர்களே இணைய வழிக் கற்றலில் பிரயோசனமடையக் கூடியவர்களாக உள்ளனர். ஏனைய மாணவர்களுக்கு zoom ஊடாக இணையவழி கற்றல் சாத்தியமில்லை.'' நேர்காணல் தகவல்தொழிநுட்பபாட ஆசிரியர்).

- வீட்டில் சாதனங்கள் இன்மை பற்றிய கருத்துரைகளாவன: ''ஒரு தொலைபேசியே இல்லாதநிலையிலும் இருந்தாலும் பல வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களும் வெவ்வேறு தொலைபேசி தேவைப்படுவதால் யாருக்குமே கொடுக்கமுடியாத நிலை உள்ளது'' (மூலம்: நேர்காணல்).

சில குடும்பங்களில் தொலைபேசி காணப்பட்டாலும் கூட அதிகமாக தன்னுடன் வாப்பாமார்கள் தொழிலுக்கு கொண்டு செல்கின்றனர். ஒரு முறையும் அதனால் இருக்கின்ற இந்த தொலைபேசி சாதனத்தின் ஊடாக கற்கின்ற குறைபாடு காணப்படுகின்றது. (மூலம்: நேர்காணல்:).

### 5.4.உங்கள் வீட்டில் மென்பொருள் zoom மற்றும் கற்றல் செயலிகள் மூலமாக கற்பதற்கான வசதி பற்றியது.

வரைபு 5.3. Zoom மற்றும் ஏனைய செயளிகளினால் கற்றல் பற்றியது

.




( மூ லகமள் ஆ
வ ின ா க ் ெ—க2

இலங்கையைப் பொறுத்தவரை மாணவ சமுதாயத்திற்கு பாரிய சவாலாகவே இணையக்கல்வி பார்க்கப்படுகின்றது. இதுவரை காலமும் இலங்கை மாணவர்கள் இக்கல்வி முறை தொடர்பான அறிவையோ,தேவைப்பாட்டையோ கொண்டிருக்கவில்லை. திடிரென அறிமுகம் செய்யப்பட்ட இக்கல்வி முறையால் அதனை எவ்வாறு பெற்றுக்கொள்வது, கலந்து கொள்வது, தொழில்நுட்ப சாதனங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் இன்றுவரை மாணவர்கள் பல சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்துவருகின்றனர்.(யுமிதராஜ்.ஏ,2020). அந்தவகையில் கொரோனா காலத்தில் இணையவழியான zoom மற்றும் இதர ஏனைய கற்றல் செயலிகள் மூலமாகக் கற்பதற்கான சூழலின்மை மற்றும் வசதியின்மை எதிர்கொண்டதை வரைபு 5.2 குறிப்பிட்டு நிற்கின்றது. வீட்டில் கல்வியைத் தொடர்வதற்கான மென்பொருள் zoom மற்றும் கற்றல் செயலிகள் மூலமாக கற்பதற்கான சூழல் தொடர்பான பதிலளிப்பில் 8% வீதமானவர்கள் ஆமென பதிலளித்ததுடன், 92 % இல்லையென பதிலளித்தனர். அதிகமானவர்களின் பதிலளிப்பின்படி கொரோனாக் காலத்தில் கல்வியைத் தொடர்வதற்கான மென்பொருள் zoom மற்றும் கற்றல் செயலிகள் மூலமாக கற்பதற்கான சூழல் இன்மையானது பாரிய சவாலாக இருந்துள்ளது. இவ் அளவுசார் தரவிற்கு வலுச்சேர்க்கும் வகையில் கீழ்வரும் பண்புசார் தரவுகள் காணப்படுகின்றன.

- **zoom** மென்பொருள் பற்றி அறியாமை பற்றி: ''*zoom* என்றால் என்னவென்று அவர்களுக்கும் தெரியாது, அவர்களின் பெற்றோருக்கும் தெரியாது. ஸ்மார்ட்போன்களை பாவிப்பதற்கான பொருளாதார நிலையில்லை. நோர்மல் போனைப் பாவிக்கின்ற பெற்றோாரின் பிள்ளைகளே இங்குள்ளனர். அனைவரும் கொரோனா காலத்திலே கற்பதற்கான இலத்திரனியல் மூலமாக கற்பதற்கான வாய்ப்பு இல்லை'' (நேர்காணல் கணிதப்பாட ஆசிரியர்)

- தொழில்நுட்ப அறிவீன்மை: "புதிய கல்வி முறையாகும். தொழில்நுட்ப ரீதியான ஒரு பயன்படுத்த வேண்டிய நிலையாக இருப்பதால் பிள்ளைகளுக்கு இது பற்றி தெரியாது. பெற்றோருக்கும் இது சம்பந்தமான பாவனை மற்றும் தொடர்புடைய அறிவும் மிகக் குறைவு"(மூலம்: நேர்காணல ஆசிரியை தரம் நான்கு).

- "இங்குள்ள பிள்ளைகளுக்கும், அவர்களுடைய பெற்றோர்களுக்கும் தொழிட்நுட்ப அறிவே பொருளாதார வசதி மிகக் குறைவாகவே உள்ளது. அன்றாடம் ஒரு கிலோ அரிசி வாங்கமுடியாத வழியற்ற நிலையிலே உள்ள பெற்றோர்கள் எப்படி இன்ரெனட் காட்டினை வாங்குவார்கள்?" (நேர்காணல் தகவல்தொழிநுட்பபாட ஆசிரியர்).

- குறித்த பாடசாலையின் ஆரம்பப் பிரிவிற்கு இக்கல்வி முறை சாத்தியமின்மை பற்றி: "ஆரம்ப வகுப்பு பிரிவுகளை பொறுத்தவரையிலே இணையவழி கற்றலுக்கான வாய்ப்பு இல்லை. பாரிய சிக்கல்கள் உள்ளது. நேரடி ஆசிரியர் மாணவர் தொடர்பும் இல்லாதமையினால் சிக்கல் உள்ளது. தொழில்நுட்ப அறிவு குறைவாக காணப்படுகிறது" (மூலம்: நேர்காணல்).

- மாணவர்கள் தயார்நிலையின்மை : "ஆனாலும் தொழில்நுட்ப வசதிகள் இல்லை. பிரதேச மாணவர்கள் இணைய வழி மூலமாக கற்பதற்கான முழுமையான தயார் நிலையை கொண்டிருக்கவில்லை" (மூலம்:ஆரம்பப்பிரிவு ஆசிரியை,நேர்காணல்).

- மாணவர்களை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் நேர சிக்கல் : "*zoom* கற்பதில் குடும்பத்தில் உள்ளவர்களில் யாரை முன்னுரிமைப்படுத்துவது என்பதில் சிக்கல் உள்ளது"(நேர்காணல் தகவல்தொழிநுட்பபாட ஆசிரியர்).

- புரிந்துகொள்வதில் சிரமத்தன்மை உள்ளமை மற்றும் நேரடி கவனித்தல் இன்மை : "ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு இணையவழிக் கற்கையால் முழுமையாக இப்பாடசாலைக்கு சாத்தியமில்லை மாணவர்ள் புரிந்து கொள்தில் சிரமம்உள்ளது நேரடி கவனித்தல் தேவை zoom இது சாத்தியமில்லை கிராமபுற பாடசாலை என்பது நேரடியாக சென்று மாலைநேர மற்றும் சுழற்சி முறையில் கற்பித்தோம்" "(மூலம்: நேர்காணல ஆசிரியை தரம் இரண்டு).

### 5.5.ஆன்லைன் வகுப்புகளுக்கு இணைய அணுகல் வசதி தொடர்பானது




(மூலம்- களஆய்வு, வினாக்கொத்து – 2021)

ஆன்லைன் வகுப்புகளுக்கு இணைய அணுகல் வசதி தொடர்பான பதிலளிப்பில் 90% வீதமானவர்கள் இல்லையென பதிலளித்ததுடன், 10% ஆமெயென பதிலளித்தனர். ஆமென பதிலத்தவர்களில் 5% தொலைபேசி மூலமான வகுப்புகளுக்கு இணைய அணுகல் வசதியைக் கொண்டிருந்ததுடன், 5% கணிணி மூலமான வகுப்புகளுக்கு இணைய அணுகல் வசதியைக் கொண்டிருந்தனர். இவ் அளவுசார் தரவிற்கு வலுச்சேரக்கும் வகையில் கீழ்வரும் பண்புசார் தரவுகள் காணப்படுகின்றன.

இணையக் கற்றலுக்கான பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல் வசதியின்மை: இணையவழி பாவனைகளில் சம்பந்தமான பிரச்சனை உள்ளது. சிலசமயங்களில் இங்கு தொலைபேசிக்கான சிம் அட்டைகளைப் பெறமுடியாது குறிப்பாக ஊடரங்கு காலத்தில் இப்பிரச்சினை இருந்தது" (மூலம்: நேர்காணல்).

வலையமைப்பு சார்ந்தபிரச்சினைகள் :"தொலைபேசி எல்லாத்துக்கும் ஓரளவிக்கும் கவரோச் இருக்கு ஆனாலும் கற்றல் செயற்பாடுகளுக்கு எந்தளவிற்கு உதவுமென எதிர்பாக்கமுடியாது" (மூலம்:நேர்காணல் ஆசிரியர்).

### 5.6. கொரோனா காலத்தில் கற்றல் செயற்பாடுகளில் தொடர்வதில் சவால்களை எதிர் கொண்டமை தொடர்பானது




வரைபு 5.5. (மூலம்- களஆய்வு, வினாக்கொத்து 2021)

கொரோனா காலத்தில் கல்வியைத் தொடர்வதில் சவால்களை எதிர் கொண்டமை தொடர்பில் பதிலத்தவர்களில் 70% வீதமானவர்கள் ஆமென பதிலளித்ததுடன், 30% இல்லையென பதிலளித்தனர். அதிகமானவர்களின் பதிலளிப்பின்படி கொரோனாக் காலத்தில் கல்வியைத் தொடர்வதில் சவால்களினை எதிர்கொண்டதாகக் குறிப்பிட்டனர். இவ் அளவுசார் தரவிற்கு வலுச்சேரக்கும் வகையில் கீழ்வரும் பண்புசார் தரவுகள் காணப்படுகின்றன.

• தந்தையின் தொழிலுக்கு உதவிசெய்ய வேண்டி இருந்தமை : ஊரடங்கு காலத்தில் எனது தந்தையின் தொழிலுக்கு துணையாகச் செல்ல வேண்டி இருந்தது" (மூலம்:நேர்காணல மாணவன் தரம் 08). கொரோனாக் காலத்தில் மாடுகளைக் கட்டும் வேலையிலே நான் ஈடுபட்டேன். (மூலம்: நேர்காணல மாணவன் தரம் 07).

• ஆசிரியர்களின் நேரடி வழிகாடலின்மை : "பாடசாலைச் சூழலினைப் போன்றும் ஏதும் சந்தேகம் என்றால் கேட்க முடியாமல் இருந்தது"(மூலம்:நேர்காணல் மாணவி தரம் 04).

• வசதிகள் போதியளவு இன்மை : "வீட்டில் எப்போதும் போலவே படிக்கரத்துக்கான வசதி குறைவு" (மூலம்: நேர்காணல மாணவன்).

• கற்பதற்கான சூழலின்மை : "பாடசாலை போல வீட்டு படிப்பதற்கான சூழல் இல்லை"(மூலம்:நேர்காணல மாணவன்).

• பெற்றொரின் ஆதரவின்மை : "என்ட கொப்பி புத்தகத்த வாப்பா உம்மா பார்க்கிறதே இல்லை" (மூலம்: நேர்காணல மாணவி).

மேற்குறிப்பிட்ட தரவுகளிற்குமைய தந்தையின் தொழிலுக்கு உதவிசெய்ய வேண்டி இருந்தமை,ஆசியர்களின் நேரடி வழிகாட்டலீன்மை,வசதிகள் போதியளவு இன்மை, கற்பதற்கான சூழலீன்மை,பெற்றொரின் ஆதரவின்மை போன்ற பல்வேறு சவால்களினை மாணவர்கள் கொரோனா காலத்தில் எதிர்கொண்டனர்.

**5.7.கோவிட் 19 காலப்பகுதியில் கற்றலில் செயற்பாடுகள் திருப்திதன்மை தொடர்பானது**

கோவிட் 19இன் கால கற்றல் சவால்களை மாணவர்களது கோவிட் 19இன் கால மற்றும் அதற்கு பின்னரான காலப்பகுதியை மையமாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. ஆகவே ஆய்வானது கற்றல் செயற்பாடுகள் தொடர்பிலான அவர்களது திருப்தி மட்டம் தொடர்பில் ஒப்பீட்டு ஆராய்கிறது.

**அட்டவணை 5.3.கோவிட் 19 காலப்பகுதியில் கற்றலில் செயற்பாடுகள் திருப்தி தன்மை**

| திருப்திமட்டம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| பூரண அதிருப்தி | 10 | 25.6% |
| திருப்தியின்மை | 0 | 0% |
| நடுநிலை | 12 | 30.8% |
| திருப்தி | 10 | 25.6% |
| பூரண திருப்தி | 7 | 17.9% |
| **மொத்தம்** | **40** | **100.0%** |

(மூலம் -களஆய்வு, வினாக்கொத்து,2021)

ஆய்வின் பொருட்டு தெரிவுசெய்யப்பட்ட 40 அடுக்கமைப்பட்ட மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் கோவிட் 19 காலப்பகுதியில் கற்றலில் செயற்பாடுகள் திருப்தி தன்மை பற்றிய மனோநிலையில் 25.6%. பூரண அதிருப்தியையும் 30.8% நடுநிலையையும் 25.6% வீதமானவர்களும் திருப்தியையும் 17.9% பூரண திருப்தியையும் கொண்டுள்ளனர். கொரோனாக் காலப்பகுதியில் பெற்றோரிடம் கற்க முடிந்தமை, கல்வி சார் நிகழ்ச்சிகளைப் பார்த்தல், உறவினர்கள் மூலம் கற்றமை போன்றவர்கள் நடுநிலை மற்றும் பூரணதிருப்பதியை வெளிப்படுத்தினர். மேலும் ஆசிரியர் மூலமாக் கற்கமுடியாமை, ஆசியர்களின் நேரடி வழிகாட்டலின்மை, வசதிகள் போதியளவு இன்மை, கற்பதற்கான சூழலின்மை, பெற்றோரின் ஆதரவின்மை, கற்றலிற்கான சாதனங்கள் இல்லாதவர்கள் அதிருப்தி மற்றும் பூரண அதிருப்தியை வெளிக்கொணர்ந்தனர்.

**5.8 புதிய ஆண்டுக்காக பாடசாலை திறக்கப்பட்டதன் பின்னரான கற்றலில் செயற்பாடுகளினை திருப்தி தன்மை தொடர்பானது**

ஆய்வின் பொருட்டு தெரிவுசெய்யப்பட்ட கோவிட் - 19 பின்னரான காலப்பகுதியில் கற்றலில் செயற்பாடுகள் உங்கள் திருப்தி தன்மை தொடர்பான மனோநிலையில் 30.8% வெளிப்படுத்துவதுடன் 30.8% நடுநிலையையும் 25.6% வீதமாவர்களும் திருப்தியையும், 17.9% பூரண திருப்தியையும் கொண்டுள்ளனர்.

**அட்டவணை 5.4. புதிய ஆண்டுக்காக பாடசாலை திறக்கப்பட்டதன் பின்னரான கற்றலில் செயற்பாடுகள் திருப்தி தன்மை**

| திப்திமட்டம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| திருப்தியின்மை | 10 | 25.6% |
| நடுநிலை | 12 | 30.8% |
| திருப்தி | 10 | 25.6% |
| பூரண திருப்தி | 7 | 17.9% |
| **மொத்தம்** | **40** | **100.0%** |

(மூலம் -களஆய்வு, வினாக்கொத்து,2021)

கோவிட்-19 இன் பின்னரான காலப்பகுதியில் கற்றலில் செயற்பாடுகளினை முன்னெடுப்பதற்கான பாடசாலை திறக்கப்பட்டமை ஆசிரியர் மூலமாக் கற்கமுடிந்தமை, ஆசியர்களின் நேரடி வழிகாட்டல், வகுப்பேற்றம் போன்றன மாணவர்களின் தெரிவு மனோநிலையில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

## முடிவுரை

கோவிட் - 19 இன் காலப்பகுதியில் கல்வி ரீதியான சவால்களை மையமாகக் கொண்ட பெறுபேறுகளுக்கும், கலந்துரையாடலிற்கும் ஏற்ப ஒரு குடும்பத்தில் மூன்று மாணவர்கள் என்ற அடிப்படையில் 37.5% வீதமானவர்கள் பாடசாலையில் கற்கின்றனர். பால்நிலை அடிப்படையிலான ஆண்மாணவர்கள் அதிகமான பாடசாலையில் 60% வீதமானவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் அதிகமான மாணவர்களின் தந்தையர்களின் வாழ்வாதாரமானது குறைந்த வருமானம், நிலையான தொழிலின்மை, உள்ளமையானது கல்வி சார்ந்த சவால்களில் செல்வாக்குச் செலுத்தும் பொருளாதாரக் காரணியாக உள்ளது. மேலும் 37.5% வீதமானவர்கள் கூலித்தொழிலில் ஈடுபடுகின்றனர். மேலும் தாய்மார்களின் வாழ்வாதார நிலைகளில் படி 92.5% வீட்டு வேலையை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளதுடன், இதன் காரணமாக பெரும்பாலான குடும்பங்களின் தந்தைமாரின் உழைப்பில் தங்கியிருப்பதுடன், கல்வி சார்ந்து தாயின் நிதிப்பங்களிப்பு இன்மையையும் வெளிக்கொணர்கின்றது. மேலும் குடும்பங்களின் பொருளாதார நிலையானது கீழ்நிலையாகவும். வறுமைக் கோட்டின் கீழ் உள்ளமையானது ஏனைய காலங்களினை விட கொரோனாக் காலத்தில் கல்வியில் அதிக செல்வாக்குச் செலுத்தியுள்ளமையினை ஆய்வின் முடிவுகள் வெளிக்கொணர்கின்றன. மேலும் கொவிட19இன் இடர்காலத்தில் புதிய கல்வி முறையின் காரணமாக இணைய வழிக்கல்வியை முன்னெடுப்பதில் பல சவால்களுக்கு முகம்கொடுத்தனர். இணையவழிக் கற்கையை முன்னெடுப்பதற்காக தேவையான இலத்திரனியல் தொலைபேசி 87% வீதமானவர்கள் இல்லாமல் இருந்தனர். இலத்திரனியல் கல்வியை முன்னெடுப்பதற்கான பாடசாலையில் இலத்திரனியல் வகுப்பு இன்மை, ஒளி எறிகை (projector) கருவி இன்மை, ஆசிரியர்களில் இலத்திரனியல் வழி கற்பிப்பதற்கான சாதனங்களின்மை, மாணவர்களிடம் மற்றும் அவர்களின் பெற்றோரிடமும் இலத்திரனியல் கற்பதற்கான் சாதனங்களின்மை போன்ற சவால்களை எதிர்கொண்டனர்.

மேலும் கொவிட்-19இன் காலப்பகுதியில் zoom மற்றும் ஏனைய கற்றல் செயலிகளின் மூலமாகக் கற்பதற்கான வசதிகள் மிகக் குறைந்தளவிலான 8% மாணவர்களுக்கே கற்றுள்ளனர். zoom மற்றும் ஏனைய கற்றல் செயலிகளின் மூலமாகக் கற்பதற்கான தொழிநுட்ப அறிவு சார்ந்த பிரச்சினை, zoom மென்பொருள் பற்றி அறியாமை, தொலைபேசி முன்னுருமைப்படுத்தலில் பிரச்சினை, ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இது சாத்தியமின்மை, மாணவர்கள் தயார்நிலையின்மை, மாணவர்களை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் நேர சிக்கல் புரிந்துகொள்வதில் சிரமத்தன்மை உள்ளமை மற்றும் நேரடி கவனித்தல் இன்மை போன்றன சவால்களுக்கு முகம்கொடுக்கின்றனர். மேலும் ஆன்லைன் வகுப்புகளுக்கு இணைய அணுகல் வசதி தொடர்பான பதிலளிப்பில் 90% வீதமானவர்கள் இல்லையென பதிலளித்தனர். மேலும் இணைய அணுகுதலுக்கான பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல் வசதியீன்மை, வலையமைப்பு சார்ந்த பிரச்சினைகள் போன்றவற்றிக்கும் முகம் கொடுத்ததாகக் குறிப்பிட்டனர். கொரோனா காலத்தில் கல்வியைத் தொடர்வதில் சவால்களை எதிர்கொண்டதாகக் பதிலத்தவர்களில் 70% வீதமானவர்கள் குறிப்பிட்டனர். மேலும் தந்தையின் தொழிலுக்கு உதவிசெய்ய வேண்டி இருந்தமை, ஆசியர்களின் நேரடி வழிகாட்டலின்மை, கற்பதற்கான வசதிகள் போதியளவு இன்மை, கற்பதற்கான சூழலின்மை, பெற்றொரின் ஆதரவின்மை போன்ற பல்வேறு சவால்களினை மாணவர்கள் கொரோனா காலத்தில் எதிர்கொண்டனர். மேலும் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் கோவிட் 19இன் காலப்பகுதியில் கற்றலில் செயற்பாடுகள் திருப்தி தன்மை பற்றிய மனோநிலையில் அதிகமானவர்கள் 30.8% நடுநிலையையான திருப்தியையும் கொண்டுள்ளனர். மேலும் கோவிட் - 19 பின்னரான காலப்பகுதியில் கற்றலில் செயற்பாடுகள் திருப்தி தன்மை தொடர்பான மனோநிலையில் 30.8% நடுநிலையையான திருப்தியையும் வெளிப்படுத்தினர். மாணவர்களின் திருப்தி மட்ட மனோநிலையில் கொரோனாக் காலப்பகுதியை விட பின்னரான காலப்பகுதியில் முன்னெற்றகரமான மனோநிலையைக் கொண்டுள்ளமையை ஆய்வின் முடிவுகள் வெளிக்கொணர்கின்றன. ஆய்வானது பின்வரும் செயற்திட்டங்களினை முன்னெடுக்கப்படுமிடத்து கொவிட் - 19இனால் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் எதிர்கொண்ட சவால்கள் வெளிமலை மன்/ பதியுத்தீன் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையை மீட்டெடுக்கலாம் என்றவகையில் முன்மொழிகின்றது. ஆவையாவன :

- சுய தொழில் வாய்ப்பு, நிலையான வாழ்வாதாரத்திட்டங்கள், விஷேட கடன் உதவித்திட்டங்களை முன்னெடுத்தல், பெண்கள் சார்ந்த தொழில்களை ஏற்படுத்துதல் போன்றன திட்டங்களின் பெற்றொரினைக் கல்விக்காக முதலிடுகள் பற்றி சிந்திப்பதற்கான சூழலினை வழிவகைகளினை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- மாணவர்களுக்கு கற்றலுக்கு அத்தியவசியமான கற்றல் உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவியை மேற் கொள்ளுதல்.
- போருக்கு பின்னரான மீள்குடியேற்றப்பட்ட சூழலில் உள்ள பாடசாலை என்பதனால் நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதார மேம்பாட்டு வழிமுறைகளினைக் கட்டியெழுப்புதல். இதனூடாக கல்வி சார்ந்த பொருளாதார தடைகளை நீக்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக வேண்டி புலமை பரிசில் திட்டங்கள், நிதி உதவித்திட்டங்கள்,விஷேட கடன் உதவித்திட்டங்களை முன்னெடுத்தல்.
- பெற்றோருக்கான விஷேட கருத்தரங்குகள் மற்றும் உரையாடல்கள் மூலமாக மாணவர் கல்வி மீது கவனத்தினை ஏற்படுத்தல்.
- இடர், கொரோனோ போன்ற சூழ்நிலைகளிலும் சூழ்நிலைகளிலும் மற்றும் ஏனைய சூழ்நிலைகளிலும் கல்விக் கிடைப்பிகைச் தொடர்ச்சியாக கிடைப்பதினை உறுதிசெய்யும் பொருட்டு இலத்திரனியல் வகுப்பறை (E-Class Room) ஒன்றை இப்பாடசாலையில் நிறுவுதல்.
- இப்பாடசாலையில் கற்பிக்கப்படும் தகவல் தொடர்பாடல் பாடத்தின் போது இலத்திரனியல் கல்வி சார்ந்த அறிவை மாணவர்களுக்கு வழங்குதல்.

▪ பாடசாலையில் காணப்படும் கணணி கூடம் சார்ந்த குறைபாட்டை நிறுவுதல் மூலமாக நிவர்த்தி செய்தல்.
▪ இலத்திரனியல் கற்றல் மற்றும் கற்பித்தலுக்குத் தேவையான தொலையெறி கருவி மற்றும் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் மற்றும் வளங்களை வழங்குதல்.
▪ கிராமிய சூழலில் மாணவர்களின் எதிர்கால கற்றலை உறுதி செய்யும் பொருட்டு சிறந்த வலையமைப்பு சேவையை வழங்குதல் வேண்டும்.
▪ மானிய அடிப்படையிலான கற்றல் மென்பொருட்கள், மின்நூலை( E-Book) அடிப்படையாக கொண்ட தொலைபேசிகளை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்குதல் வேண்டும்.
▪ கற்றலுக்கு பொருத்தமான வீட்டுச் சூழல் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதுடன், கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் வேண்டும்.
▪ வீட:டுக்கு அண்மையில் உள்ள ஒரே வகுப்பிப்பினைச் சேர்ந்த மாணவர்களை ஒருங்கிணைந்து ஒன்றாக கற்றல் செயற்பாடுகளை நேரடியாக மற்றும் இலத்திரனியல் நுட்பங்களுடன் மேற்கொள்வதற்கான ஒரு ஒருங்கிணைந்த கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் இதனூடாகக் இலத்திரனியல் கற்றல் சாதனங்களின் குறைப்பட்டை நிவர்த்தி செய்யலாம்.
▪ இலவச இணையப் பொதி சேவையை கற்றல் மென்செயலிக்கு வழங்குதல் மற்றும் கல்வி நோக்கம் கருதி மாத்திரம் குறைந்த செலவிலான இணைய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
▪ இணையவழி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகனை முன்னெடுப்பதற்காக தனியான மென்பொருள்களை உருவாக்கி அதனூடாக இலகுபடுத்தப்பட்ட கற்றலல்- கற்பித்தினை முன்னெடுத்தல்.
▪ Zoom உட்பட ஏனைய கற்றல் செயலிகளின் பாவனை தொடர்பான அறிவவூட்டல் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்குகளை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என வழங்குதல்.
▪ மாணவர்களுக்கு மின்னூலையும் சேர்த்து பாடநூல்களுடன் இணைத்து வழங்குதல்.

போன்றன பரிந்துரைகளினை ஆய்வானது முன்மொழிகின்றது.

உசாத்துணைகள்


• Lucas, G.N., 2020. COVID-19 pandemic and school education. *Sri Lanka Journal of Child Health*, 49(3), pp.207–209. DOI: http://doi.org/10.4038/sljch.v49i3.9135

• UNESCO: COVID-19. Education: From disruption to recovery. Available from: https://en.unesco.org/covid19/educationres ponse (Accessed on 10 July 2020

• Worldometers.(2021). COVID-19 CORONAVIRUS PANDEMICFebruary 13, 2021 from https://www.worldometers.info/coronavirus/

• Official website for srilanka's Respone to COVID-19 February. 13,2021 from https://covid19.gov.lk/

• இராசநாயகம்.ஜெ.ளு(2016),கல்வித் தத்துவம்.குமரன் பதிப்பகம் ,கொழும்பு.

• பமீஸ்.பௌ,(2018), யாழ் முஸ்லிம்களின் கல்வி நிலையில் சமூகப் பொருளாதார காரணிகளின் செல்வாக்கு : ஒரு சமூகவியல் ஆய்வு 5th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka. [online] available http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3442

• யுமிதராஜ்,ஏ.(2021), இணையவழிக் கல்வி பலருக்கு எட்டாக்கனி, from http://www.teachmore.lk/2020/12/blog-post_36.html

• வேலும்மயில்,சே,(2021),கொவிட்-19 பின்னரான கல்விப்புலத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் நெருக்கடிகளும்,ஆசிரியம், இதழ் 88-90( தை-மாசி), பக்கம் 62-65

• பூஜா.பெ,(2021), இணையவழி வகுப்புக்கள்,பள்ளி வகுப்பறைகளுக்கு மாற்றமாக முடியுமா? ,ஆசிரியம், இதழ் 88-90( தை-மாசி), பக்கம் 68-71

• நாகேந்திரம்,இ. (2021). கொரோனா தொற்றும் இணையழிக் கற்பித்தலும், From http://www.teachmore.lk/2020/10/covid-19.html



# கொரோனா பரவலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும்

Faslul Farisa Asadh
Second year
South Eastern University Of Sri Lanka

**ஆய்வுச் சுருக்கம்**

கொரோனா பரவல் காரணமாக பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. இணையவழிக் கற்றல் மூலம் இடம்பெற்ற போதும் அதன் மூலம் கிடைத்த பெறுபேறுகள் திருப்தியானதா? என்பது கேள்விக்குறியாகும். இவ்வாறான நிலையில் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படாத விதத்தில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பபடுவது காலத்தின் தேவையாகும்.

**ஆய்வின் நோக்கம்**

தற்போது நாட்டில் கொரோனா பரவல் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது என்பது சமூக ஆய்வாளர்களின் கருத்தாகும். எனவே இவ்வாறான சூழ்நிலையில் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக சமூக ஆய்வாளர்களை ஊக்குவித்தல் மற்றும் பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதற்கான வழிவகைகளை இனங்காண்பதுமே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

குறித்த கால சூழ்நிலைக்கேற்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது அவசியமானது. அந்தவகையில் தற்போதைய கால கட்டத்தில் எதிர்கொண்டுள்ள முக்கிய பிரச்சினையாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளமை இனங்காணப்பட்பட்டுள்ளது. எனவே மாணவர்களின் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படச் செய்யும் விதத்திலான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது காலத்தின் தேவையாகும்.

**ஆய்வு முறை**

மேற்படி ஆய்வுக்கான தரவுகள் வாராந்தப் பத்திரிகை, இணையம் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகள் மூலம் பெறப்பட்டதுடன் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் மறைமுகமாக வினவப்பட்ட கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்கள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

கொரோனா வைரஸ் பரவலானது இன்று மனித வாழ்க்கையை ஒரு நிற்கதிற்குள்ளாக்கியது. 2019ம் ஆண்டு சீனாவின் வூஹான் மாகாணத்திலிருந்து கிளம்பி தற்போது முழு உலகையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நுண்ணுயிர்க்கொல்லியே கொரோனா வைரஸ் ஆகும். இதன் தாக்கம் வல்லரசு நாடுகளையும் விட்டு வைக்கவில்லை. உலக அளவில் கொரோனா வைரஸானது வேகமாக பரவி வருவதனால், உலக சுகாதார அமைப்பானது (WHO) Covid- 19ஐ சர்வதேச தொற்று நோயாக வர்ணித்துள்ளது. இக்கொரோனா வைரஸின் தாக்கமானது அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு, விஞ்ஞானம், தொழிநுட்பவியல் கல்வி போன்ற அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பினரையும் இதனுடைய கோரப்பிடிக்குள் சிக்கியுள்ளனர். கொரோனா தொற்றுக்கு உள்ளாகியோர் மட்டுமன்றி கொரோனா தொற்றுக்கு உள்ளாகாதோரும் இதன் வலைக்குள் சிக்கியுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக கல்வித் துறையானது பாரியளவு மாற்றம் கண்டுள்ளது. கல்வியானது மாணவர்களின் அறிவு, பண்பாடு மற்றும் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய மூலதனமாகும். கல்வியே மனிதனை முழு மனிதனாக மாற்றமடையச் செய்கின்றது. சமூகத்தின் தாழ்வுச் சிக்கலை மழுங்கடிக்கச் செய்து அனைவரையும் சம அந்தஸ்தில் நோக்க வைப்பதற்கு கல்வியே துணை புரிகிறது. தற்போதைய சூழ்நிலையில் மாணவர்களுக்கு அவசியமான கல்வியை வழங்க முடியாத நிலையில் உள்ளமை கவலைக்குரிய விடயமாகும். கல்வியை முறையாக வழங்குவதிலும் அதனை பெற்றுக்கொள்வதிலும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதைய கல்விக் கொள்கையில் புதுத் திருப்பம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக 150 கோடிக்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக யுனெஸ்கோ அமைப்பு தெரிவித்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் Zoom, தொலைக்காட்சி Google, WhatsApp போன்ற மின்னியல் தொடர்புகள் வழியே கல்விச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. எனினும் இணையத்தள வசதியை அனைத்து மாணவர்களாலும் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. அத்தோடு நேரடியாக கற்றல் செயற்பாடுகள் மூலம் பெறக்கூடிய வினைத்திறன் போன்ற தேர்ச்சி மட்டத்தை இணைவழிக் கல்வி மூலம் பெற முடியாத நிலை காணப்படுகின்றது.

கடந்த வருடம் (2020) பாடசாலையில் நேரடிக் கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறும் வாய்ப்புக் கிட்டவில்லை. இவ்வாறான சவால்களிலிருந்து சிறிதளவேனும் மீட்டெடுத்து அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், நேத்ரா தொலைக்காட்சி சேவை என்பவற்றினூடாக (க.பொ.த) உயர் தரம், சாதாரண தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் ஈடுபடும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் குருகெதர எனும் பெயரில் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் முழுமையான வெற்றியைப் பெற்றுக் கொள்வதென்பது அசாத்தியமாகும். குழு நிலைக் கற்றலை மேற்கொள்வதற்கான வாய்ப்பு இணையவழிக் கற்றலில் கிட்டுவதில்லை. அத்தோடு தகவல் தொழில்நுட்பம், விவசாயம், மனையியல் போன்ற பாடவிதானச் செயற்பாடுகளை பயிற்சிகள் மற்றும் அனுபவங்கள் மூலம் கற்றுக் கொடுப்பதே சிறந்த பெறுபேற்றை பெற்றுத் தருகின்றது. மாணவர்களின் செயற்பாடுகளிலும் மனப்பாங்கிலும் விருத்தியை ஏற்படச் செய்வதற்கான சுற்றுலாக்கள் களப்பயணம் மேற்கொள்வதும் தற்போதைய சூழ்நிலையில் இடம் பெறுவதென்பது அசாத்தியமான விடயங்களாகும். மாணவர்களின் ஆற்றல்களை வளப்படுத்துவதற்கான கருத்தரங்குகள் பேச்சுப் போட்டி, விவாதம், மொழியியல் மற்றும் கணிதவியல் சார் போட்டி நிகழ்ச்சிகளை திறம்பட நடாத்துவதற்கான சூழ்நிலையும் காணப்படுவதில்லை. இவ்வாறான நிலைமைகளால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைந்துள்ளது.

இணையவழிக் கற்றல் முறைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு டிஜிட்டல் உபகரணம் அவசியமாகும். எனினும் மின்தடை, தொடர்பை ஏற்படுத்துவதில் சிரமம் போன்ற காரணங்களினால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், அதிபர்களுக்கிடையே முறையான தொடர்பை ஏற்படுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது. அத்தோடு சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் இச் சாதனங்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமம் காணப்படுகின்றது. சில மாணவர்கள் மடிக்கணினி வசதியை பெற்றிருப்பர். சிலர் தொலைபேசி வழியே தொடர்பை ஏற்படுத்துகின்றனர். இவ்விரு சாராரும் ஒரே விதமான விளைவுகளை பெற்றுக் கொள்வர் என்பது சாத்தியமற்ற விடயமாகும். அத்தோடு ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருக்கின்ற பட்சத்தில் கணினி, மடிக்கணினி, தொலைபேசி போன்ற வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது சிரமமான விடயமாகும். அத்தோடு நகர்ப்புற மாணவர்களிடம் காணப்படும் இணையத்தள வசதியானது கிராமப்புற மாணவர்களிடமும் காணப்படும் என எதிர்பார்க்க முடியாது.

கொரோனா வைரஸ் காரணமாக கடந்த ஒரு வருடக்கல்வி வாழ்க்கையிலிருந்து பூரண தேர்ச்சி மட்டத்தை அடையாத நிலையில் மாணவ சமூகம் புதிய ஆண்டுக்குள் காலடி எடுத்து வைத்துள்ளது. முன்பிள்ளைப் பருவ மாணவர்கள் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய மாணவர்கள் வகுப்பேற்றம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த வருடம் பல சவால்களுக்கு மத்தியில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு முகங்கொடுத்த மாணவர்களுள் 200 இற்கு 200 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்த மாணவர்களும் இருக்கத்தான் செய்தனர். இவ்வெற்றிக்குப் பின்னால் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் அர்ப்பணிப்பு, தியாக உணர்வு காணப்படுகின்றது. க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மாணவர்கள் பாடத்திட்டத்தை எவ்வாறு கற்பது என்று தட்டுத்தடுமாறி கொண்டிருக்கின்றனர். அத்தோடு ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயற்பாடுகளை எவ்வாறு பூர்த்தி செய்வது? என்று திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையிலே பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டுள்ளன. இக் கட்டத்தில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பற்றி மீளாய்வு செய்வது அவசியமாகும்.

குறித்த வகுப்பிற்கான பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது வகுப்பேற்றம் செய்யப்படும்பட்சத்தில் உரிய கற்றல் பெறுபேற்றை பெற முடியாத நிலை ஏற்படுகின்றது. எனவே வகுப்பேற்றம் செய்ய முன்னர் குறித்த வகுப்பின் பாடத்திட்டங்களை முழுமையாக பூர்த்தி செய்வது சிறந்ததாகும். ஏனெனில் கீழ்வகுப்புப் பாடத்திட்டத்திற்கும் மேல் வகுப்புப் பாடத்திட்டத்திற்குமிடையே தொடர்புகள் காணப்படுகின்றன. அடிப்படை அறிவு அற்ற நிலையில் வகுப்பேற்றம் செய்வதானது கற்றலில் பின்னடைவை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகமாகும். எனவே பாடத்திட்டங்களை பூர்த்தி செய்வது தொடர்பாக புதிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இதற்காக நேர வரையறைகளை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். பாடச் சுமைகளை மாணவர்கள் மீது சுமத்துவதனால் மன அழுத்தத்திற்கும் உட்படும் நிலை ஏற்படுகின்றது. எனவே இவை தொடர்பாக கருத்திற் கொண்டு செயற்படுவது சாலச் சிறந்தது. அத்தோடு பாடசாலையில் மாணவர்கள் ஒன்று கூடுவதானது கொரோனா பரவலுக்கு காரணமாக அமைகின்றது. எனவே மாணவர் எண்ணிக்கையில் வரையறைகளை பேணி வகுப்பறைகளை மீள ஒழுங்கமைக்க வேண்டும். சுழற்சி முறையில் மாணவர்களை வரவழைப்பதன் மூலம் அதிக மாணவர்கள் ஒன்று கூடுவதனை கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

பாடசாலைகள் மீளக் திறக்கப்பட்ட போதும் கொரோனா பரவல் பற்றிய அச்சம், பதற்றம், பீதி நிலை மாணவர் மற்றும் பெற்றோர் மத்தியில் காணப்படத்தான் செய்கின்றது. இவ்வாறான அழுத்தங்களிலிருந்து மீட்டெடுப்பதற்கு உளப்பாங்கு விருத்திச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடச் செய்ய வேண்டும். அத்தோடு அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களை கொரோனாப் பீதியிலிருந்து மீட்டெடுத்து தொடர்ச்சியாக பாடசாலைக்கு சமுகளிக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். கொரோனா பரவல் காரணமாக மாணவர்களின் கல்வியில் ஏற்பட்டுள்ள பின்னடைவு சீரமைக்கப்பட்டு அதற்கேற்ப திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படுவது காலத்தின் தேவையாகும். நாளைய தலைவர்களாய் மிளிரப்போகும் மாணவர்களின் கல்வி நிலை குறித்து மீள்பரிசீலனை செய்யப்பட்டு சிறந்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கல்வியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் போன்றோர் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அரசாங்கம் இது குறித்து கூடுதல் கவனம் செலுத்தி கல்வியில் புதுத் திருப்பங்களை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் ஒட்டுமொத்த சமூகத்தையும் வீழ்ச்சியிலிருந்து பாதுகாக்க முடியும். நாளைய சமூகத்தை ஆளுமைமிக்கவர்களாக மாற்றுவதற்கான செயற்பாடுகளில் சமூகத்தின் அனைத்து தரப்பினரும் கரிசனை செலுத்தி எதிர்கால சமூகத்தை கட்டியெழுப்ப முனைப்புடன் செயற்படுவோமாக.

**உசாத்துணைகள்:**


1. முஹமட் மாஹிர்.ஏ.ஆர். (௨௦௨ க.௦க. க எ) "கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் பாடசாலைக் கல்வி" தினகரன் வார மஞ்சரி, லேக் ஹவுஸ், கொழும்பு.
2. வஹாப்.எம்.எச். (௨௦க ந), "ஆளுமைமிக்க மாணவன் ஆரோக்கியமான கற்றலை நோக்கி" இஸ்லாஹிய்யா வெளியீட்டு மையம், மாதம்பை, இலங்கை.
3. w.w.w unicef.org
4. w.w.w.iqcentre edu.net



# Covid - 19 தொற்றும், நிகழ்நிலைக் கல்வியினால் முஸ்லிம் மாணவர்கள் எதிர் நோக்கிய சவால்களும் : ஓர் பொது ஆய்வு.

**M.A.F. Ashfa, P.M.A. Aleeshan**
**Department of Islamic Studies, South Eastern University Of Sri Lanka**

**ஆய்வு அறிமுகம்.**

Covid - 19 ஆனது இது சீனாவில் கண்டறியப்பட்ட ஒரு தொற்று நோயாகும். சீனாவின் யூகான் நகரத்தில் இது ஏற்படுத்திய கொடிய தாக்கத்திற்குப் பின்பு தான் இந்த பெயர் வைக்கப்பட்டது. 31 திசம்பர் 2019 அன்று, உலக சுகாதார அமைப்பால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இது உலகவாழ் மக்களின் ஆரோக்கியத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை 210 க்கும் அதிகமான நாடுகளுக்கு பரவியுள்ளது. இன்றுவரை 11 இலட்சத்துக்கும் அதிகமானோர் பலியானதுடன் தொடர்ந்தும் உயிர் இழப்புக்கள், பாதிப்புக்கள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. (நாகேந்திரன்,2020)

உலக அளவில் கொரோனா வைரஸ் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு என்பது அளவிட முடியாத ஒன்று. பொருளாதாரம் வீழ்ச்சி, வேலையின்மை உட்பட பல்வேறு பாதிப்புகளில் சிக்கி பல நாடுகளும் திணறி வருகின்றன. பாதிப்படைந்த முக்கியமான விஷயங்களில் மாணவர்களுக்கான கல்வியும் ஒன்று. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு அறிவிக்கப்பட்டதில் இருந்து பல நாடுகளிலும் கல்வி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. ஆன்லைன் வழியாகச் சில கல்வி நிலையங்கள் கற்பிக்கத் தொடங்கினாலும் பெரும்பான்மையான மாணவர்களால் அதில் பங்குபெற முடியாத நிலையே உள்ளது. இந்த நிலையில் ஐ.நா சபையானது, கொரோனா வைரஸ் பாதிப்பால் கல்வித்துறை மிகப்பெரிய பாதிப்பு அடைந்துள்ளதாகவும் சுமார் 160-க்கும் மேற்பட்ட நாடுகளில் கல்வி நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ள தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் ஆன்டோனியோ கட்டர்ஸ் கல்வி தொடர்பாக பேசுகையில், வரலாற்றில் கொரோனா வைரஸ் நெருக்கடியானது கல்விக்கு மிகப்பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. 160-க்கும் அதிகமான நாடுகளில் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. சுமார் 1 பில்லியனுக்கும் அதிகமான மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர். உலகளவில் குறைந்தது 40 மில்லியன் குழந்தைகள் தங்களது குழந்தைப் பருவக் கல்வியை இழந்துள்ளனர். இது ஒரு தலைமுறையின் பேரழிவு. இதனால், ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கும். வைரஸ் பாதிப்பு ஏற்படுவதற்கு முன்பே, உலகம் கற்றல் தொடர்பான நெருக்கடியை எதிர்கொண்டது. சுமார் 250 மில்லியன் குழந்தைகள் பள்ளியை விட்டு வெளியேறியுள்ளனர். அதுமட்டுமல்லாமல், வளரும் நாடுகளில் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு வெளியேறும் மாணவர்களில் கால் பகுதியினர் மட்டுமே அடிப்படைத் திறன்களுடன் உள்ளனர்" என்றார்.

UNESCO மற்றும் அதன் நட்பு அமைப்புகள் வெளியிட்டுள்ள தகவலின்படி, உலகளவில் ஆரம்பநிலை கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை படிக்கும் மாணவர்களில் கூடுதலாக சுமார் 23.8 மில்லியன் மாணவர்கள் கொரோனா வைரஸ் தொடர்பான பொருளாதார நெருக்கடி காரணமாகத் தங்களது கல்வியைத் தொடர வாய்ப்பில்லை எனத் தெரிவிக்கின்றனர். (ராம் சங்கர்,2020)

இலங்கையிலும் 2020ஆம் ஆண்டில் கொரோனா தொற்று நோய் பரவலின் காரணமாக பிரகடனம் செய்யப்பட்ட ஊரடங்கு உத்தரவு சகல பாடசாலைகளையும் மூடச்செய்தது. சமூக இடைவெளி பெரிதும் வலியுறுத்தப்பட்டது. இதனால் பாடசாலைகள் திறப்பதில் பல தடைகள் காணப்பட்டன. இக்காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் இடர்காலத்திற்கு பொருத்தமான கல்வி முறையாக இணையவழிக்கற்றல (Online learning) மற்றும் தொலைக்கல்வி என்பவற்றை ஐக்கியநாடுகளின் கல்வி விஞ்ஞான கலாசார அமைப்பு (UNESCO) முன்மொழிந்திருந்தது. இது எமது நாட்டிலும் இணையவழி கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலும் வழிவகுத்தது. அந்தவகையில் Viber, WhatsApp groups, Zoom, Google meet, Microsoft team செயலிகள் ஊடாக

**ஆய்வுப் பிரச்சினை.**

கொரோனா தொற்று நோய் பரவலின் காரணமாக பிரகடனம் செய்யப்பட்ட ஊரடங்கு உத்தரவு சகல பாடசாலைகளையும் மூடச்செய்தது. சமூக இடைவெளி பெரிதும் வலியுறுத்தப்பட்டது. இதனால் பாடசாலைகள் திறப்பதில் பல தடைகள் காணப்பட்டன. இக்காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் இடர் காலத்திற்குப் பொருத்தமான கல்வி முறையாக நிகழ்நிலைக்கல்வி (Online learning) காணப்படுகிறது. இதன் மூலம் கல்வி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடையாவிட்டாலும் இக்கற்கை முறை மூலம் பல பாதகவிளைவுகள் காணப்படுகிறன. அதனடிப்படையில் எவ்வாறான பாதகங்களும் அவற்றினூடாக மாணவர்கள் மத்தியில் ஏற்படும் தாக்கங்களும் கணப்படுகின்றன என்பதே ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வு நோக்கம்.**

கொரோனா தொற்று காரணமாக கல்வி ரீதியாகவும் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டு கல்வி நடவடிக்கைகள் தடைபட்டன. எனவே கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்காக நிகழ்நிலை கல்வி முறை ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் அதன் மூலம் சாதகங்கள் இருப்பினும் அதிகளவில் பாதகங்களும் சவால்களும் உள்ளன. எனவே நிகழ்நிலைக்கல்வியினால் முஸ்லிம் மாணவர்கள் எதிர்நோக்கிய சவால்களை அடையாளப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்.**

இவ்வாய்வானது விபரிப்பு ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பண்புசார் ஆய்வாக அமைகின்றது. இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகள் (primary data) மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் (Secondarydata) மூலம் தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் முதலாம் நிலை தரவுகள் கலந்துரையாடல் மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகள் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையப்பக்கங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டன.

**ஆய்வு கலந்துரையாடல் மற்றும் தரவுப்பகுப்பாய்வு.**

01. பொருளாதார வசதியின்மை.

மாணவர்களுக்கிடையே காணப்படும் வசதிவாய்ப்புக்கள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் இடையே வேறுபடுகின்றன. அதிலும் கொரோனா வைரஸ் தொற்றுநோய் காலப்பகுதியில் இலங்கை முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால் அரச தொழிலற்ற சில வியாபாரிகள், கூலி தொழிலாளர்கள் எந்தவித வருமானமும் அற்ற நிலையில் வீட்டிலே முடங்கி கிடந்ததனால். எனவே மாணவர்களின் பெற்றோர் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்களாக காணப்படுகின்றனர். அவர்களிடம் சாதாரண தொலைபேசி ஒன்று இருப்பது கூட அரிதாகவே காணப்படுகிறது. இந் நிலையில் அவர்கள் வட்ஸ்அப், வைபர் குழுக்களிலும், நிகழ்நிலை வகுப்புகளிலும் கற்றலில் ஈடுபடுவது எவ்வாறு சாத்தியமானது? என்பது முதலாவது வினாவாகும். இதேவேளை நடுத்தரக் குடும்பங்களில் பிறந்த மாணவர்களிடம் ஓரளவு தொழில்நுட்ப வசதியுள்ள தொலைபேசி காணப்பட்டாலும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான தொலைபேசிக் கட்டணங்களைச் செலுத்தும் வசதியுடன் பெரும்பாலான குடும்பங்கள் காணப்படுவதில்லை. ஓரளவு வசதியுள்ள மாணவர்கள் இதனைப் பயன்படுத்திக் கற்கின்றனர் என்பதனை அவதானிக்க கூடியதாகவுள்ளது.(இராமசந்திரன்,2020). அதே சமயம் வசதியுள்ள மாணவர்கள் உள்ள குடும்பங்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் உள்ள போது ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்நுட்பவசதியுள்ள தொலைபேசிகள் தேவை. இதுவும் ஒரு பாதகமான விளைவு ஆகும்.
அதேபோல வசதி குறைந்த மாணவர்கள் நிகழ்நிலைக் கற்கைக்காக இணையப் பாவனைக்குரிய கட்டணங்களை செலுத்தவும் முடியாதுள்ளனர், இம் மாணவர்கள் பொதுவாக இணையப்பாவனைக்கு Data card அல்லது Wifi போன்றவற்றினூடாக இவ் வசதியினைப் பெற அவர்களது போதியளவான வருமானமின்மை ஒரு பெருந்தடையாகும், 99 ரூபாய்க்கு ஒரு Data Card வாங்கினால் அது ஒரு கிழமைக்குக் கூட பாவனைக்கு போதுமானதாக இல்லை, உடனே முடிவடைவதால் வேறொரு Data Card வாங்க பண வசதியும் இல்லாமையினால் சில நேரங்களில் பாடங்களைத் தொடர முடியாத நிலை ஏற்படுகின்றன.

02. நோய்கள் ஏற்படல்:

**மாணவர்கள் உடல், உள ரீதியிலான நோய்களுக்கு ஆளாதல்.**

இந்த Digital கல்வி முறை என்பது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் சில பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. அதாவது அதிக நேரம் கணினி மற்றும் கைபேசி திரைகளை பார்த்துக்கொண்டே இருப்பதால் கண் குறைபாடுகளும், ஒரே இடத்தில அதிக நேரம் அமர்ந்து இருப்பதால் குறைந்த உடல் செயல்பாடுகள் காணப்படுகிறது. அதேபோல் உளவியல் ரீதியாக அதிக நேரம், கணினி மற்றும் கைபேசி பயன்படுத்துவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி திறன் பாதிக்கும் அபாயம் உள்ளது. இதன் மூலம் அவர்களுக்கு கவனச்சிதறல், தூக்கமின்மை, படைப்பாற்றல் குறைவு, கற்பனைத்திறன் குறைவு மற்றும் பதட்டம், பயம், மனஅழுத்தம் போன்ற பாதிப்புகள் ஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது. (ARAM HOSPITAL,2020)

**மாணவர்களின் கற்றல் மற்றும் கவனிக்கும் திறன் குன்றுதல்.**

மாணவர்களின் கவனிக்கும் திறன் மற்றும் கற்றல் திறன் போன்றவற்றில் இந்த இணையதள கல்வி பாதிப்புகளையும், மாற்றங்களையும் ஏற்படுத்துகிறது. அதாவது மாணவர்களுக்கு Active Listening என்பது குறைந்து Passive Listening

என்ற நிலைக்கு செல்கின்றனர். இது அவர்கள் கற்றல் திறனுக்கு தடையாக உள்ளது. வெகு நாட்களாக சமூக பங்களிப்பு இல்லாமல் ஒரே அறையில் அமர்ந்திருப்பது நண்பர்கள், ஆசிரியர்கள் ஒருவரை ஒருவர் நேரடியாக சந்தித்து பேசுவதற்கான வாய்ப்பு இல்லாததால் தனிமை உணர்வு, எரிச்சல் உணர்வு, சுய உந்துதல் நாளடைவில் குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளது. (ARAM HOSPITAL, 2020)

**நிகழ்நிலைக் கல்வி தொடர்பான பயம்**

பள்ளி, கல்வி, தேர்வு மீது பயம், பதட்டம் உள்ள மாணவர்களுக்கு இந்த புதிய கல்வி முறையானது அவர்களின் அச்சத்தை அதிகரிக்கிறது. இதனால் இவர்களுடைய படிப்பின் மீதுள்ள ஆர்வம் குறைதல், தன்னம்பிக்கையின்மை, போன்றவை பாதிக்கப்படுகிறது.(ARAM Hospita,2020) அதாவது, இன்று ஆரம்ப இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கும் இணையம் மூலமான பரீட்சைகள் நடைபெறுவது அவர்களுக்கு பயத்துடன் கூடிய உளத்தாக்கத்தை ஏற்படுத்துகிறதுவதுடன் மனநிலையைப் பாதிக்கின்ற விடயம் ஆகும். தொடர்ச்சியாகக் கற்றலில், ஈடுபடாமையினால் பாடத்தை மறந்து விடுவார்கள். எனவேதான் இணையவழிப் பரீட்சை என்கிறார்கள். கல்வி என்பது மனப்பாடக் கல்வியாக இருப்பதனையே இது குறிக்கின்றது. ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு சூழலுடன் இணைந்த கற்றலே முக்கியமானது. உண்மைப் பொருட்கள் மற்றும் நேரடி அனுபவங்கள் ஊடாக கற்றல் அனுபவங்களை வழங்குகின்ற போதே ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு எண்ணக்கரு விருத்தி ஏற்படும். இங்கு குழந்தைகளுக்கு கல்வி இயற்கையின் ஊடாகவே வழங்கப்பட வேண்டும் என்கின்ற இயற்கைவாதியான ரூசோவின் கருத்தும் நோக்கத்தக்கது.(இராமசந்திரன்,2020).

### 03. போதியளவான Coverage இன்மை.

இலங்கையில் 7 இணைய சேவை வழங்குனர்கள; (ISP) இருந்தபோதிலும் இணைய அணுகுமுறையின் வீச்செல்லை மாறுபட்டதாகவே காணப்படுகின்றது. நகர்ப்புறங்களில் இணையவேகம் அதிகமாகவும், கிராமப் புறங்களில் இணைய வேகம் குறைவாகவும் உள்ளன. புவியியல் ரீதியாக பிரதேசத்திற்கு பிரதேசம் இது மாறுபட்டு காணப்படுவதால் பெரும்பாலும் கிராமப் புறங்களில் வசிக்கும் மாணவர்கள் தங்களுடைய நிகழ்நிலைக் கல்வியினைத் தொடர்வதற்கும், விரைவான இணையத்தை அணுகுவதற்கும் பெருந் தடையாக உள்ளது. சில தொலைத் தொடர்பு நிறுவனங்களின் இணைப்புக்கள் இலங்கையின் எல்லாப் பாகங்களுக்கும் இன்னும் வழங்கப்படவில்லை என்பது ஒரு சவாலான விடயமாகும;. (T.KIsnakanth, 2020)

### 04. இடவசதி குறைவு.

இலங்கையில் பொதுவாக கல்வி கற்கும் மாணவர்களில் பெறும் பகுதியினர் நடுத்தர மற்றும் ஏழ்மைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். இந்தவகையில் நிகழ்நிலைக் கல்வியினை மேற்கொள்ளும் போது அவர்களுக்கென்ற ஒரு தனியான அறை காணப்பட மாட்டாது, அதேவேளை ஒரு வீட்டில் இரண்டும் அல்லது மூன்று மாணவர்கள் இருந்தால் அவர்கள் ஒரே நேரத்தில் இக் கற்றல் முறையினைத் தொடர்வது ஒரு சவாலுக்குரிய விடயமாகும். (குடும்பமாக வாழும் போது உறவினர்கள போடும் சப்தங்கள் இவ்வாறு கற்பதற்கு பெரும் இடையூறாகும், ஏதோ தனியாக பேசுகிறாய் என்ற குடும்ப உறுப்பினர்களின் பேச்சு, சரியாக விரிவுரைகளை செவிமடுக்க முடியாமை, மற்றைய மாணவர்கள் Mic off செய்யாததால் ஏற்படும் சிரமம்). போன்றனவாகும்.

### 05. சமூகத்திறன்கள் குறைவடைந்துள்ளமை.

பள்ளிகளுக்கு சென்று கல்வி கற்கும்போது தான் மாணவர்களுக்கு சுயஒழுக்கம், நேர நிர்வாகம், சமூகத்திறன் போன்றவை கிடைக்கும் என்பது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் வாதமாக உள்ளது. இந்த கருத்தையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது முக்கியமான ஒன்றுதான். ஏனெனில் பள்ளிக்கு சென்று கல்வி கற்கும்போது உடன் படிக்கும் மாணவர்களின் நட்புறவு போன்றவை அவர்களின் சமூகத்திறனை வளர்க்க உதவுகின்றது. (ARAM Hospital, 2020).

மாணவர்களும் ஆசிரியர்களும் வகுப்பறைகளில் சந்தித்துப்பேசி கலந்துரையாடி விவாதித்து சண்டை பிடித்து சமாதானம் செய்து தொடர்பாடுவதே மிகச்சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடாக அமைய முடியும். ஒரு இயந்திரத்தின் முன்னால் உட்கார்ந்தோ அல்லது நின்றோ அதைப்பார்த்துக் கற்பிப்பது ஒரு நல்ல கற்பித்தல் முறைமை அல்ல. அது உடல் உளக் களைப்பை வரவழைக்கும் இயந்திரத்தனமான ஒரு செயற்பாடாகவே அமையும். மரபுரீதியான பல்கலைக்கழகக் கல்வியின் நோக்கம் இயந்திர மனிதர்களை உருவாக்குவதன்று. சமூகப் பிரக்ஞையுள்ள உயர்சிந்தனை கொண்ட பயன்மிகு பிரஜைகளை உருவாக்குவதாகும். அதற்கு நேரடியான சமூக ஊடாட்டமும் பங்குபற்றலும் மிகவும் அவசியமாகும். ஒன்லைன் கற்பித்தலில் அதற்கு வாய்ப்பேயில்லை.

### 06. முழுமையாக பாடம் தொடர்பான சந்தேகங்கள் தீர்க்கப்படுவதில்லை.

இணையவழி கல்வி என்பது அனைத்து மாணவர்களுக்கு புரியும் வகையில் உள்ளதா?, அவர்களின் சந்தேகங்கள் தீர்க்கப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. இதேபள்ளி வகுப்பு என்றால் மாணவர்களின் புரிதலுக்குஏற்ற வகையில் ஆசிரியர்கள் பாடங்களினை திரும்ப நடத்துவதற்கும், சந்தேகங்களினை ஆசிரியர் மற்றும் உடன் படிக்கும் நண்பர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுவதற்கு நல்ல வாய்ப்பினை வழங்குகிறது.

### 07. இணையத்தினை தவறான வழிகளில் ஒரு சிலர் பயன்படுத்தலாம்.

மாணவர்கள் தொடர்ச்சியாக இணைய இணைப்பை அதிக நேரம் பயன்படுத்துவதாலும் சில சமயம் சிறுவர்கள், பதின் பருவ மாணவர்கள் தவறான வழிகளில் பயன்படுத்துவதற்கும், தேவையற்ற இணையத்தளங்களுக்கு நுழையக் கூடிய

வாய்ப்புக்கள் உள்ளன. இணையதளத்திற்கு அடிமையாக்குவதற்கும் இது ஒரு காரணமாக உள்ளது. (ARAM Hospital,2020) மேலும் இணையத்தள அதிகப்பாவனையால் தம்முடைய கற்கைகளில் கவனம் செலுத்தாது செல்லலாம். இதனை தடுப்பதற்கான வழிமுறைகள் உள்ள போதும் பெற்றோருக்கு இவை தொடர்பான தொழில்நுட்ப அறிவு குறைவாகவே இருப்பது இணையம் மூலமான கற்றலில் ஒரு சவாலான விடயம் ஆகும்.(இராமசந்திரன்,2020)

08. தொழிநுட்பப் பற்றாக்குறை.

நிகழ்நிலைக் கல்வியை தொடர்வதற்கு ஏற்ற சாதனங்களான திறன்பேசி (SMART PHONE), கணணி (Computer), மடிக் கணினி (Laptop) போன்றன இன்னொரு தடையாக உள்ளது. சில மாணவர்களிடம் இவ்வாறான தொழிநுட்ப சாதனங்கள் காணப்பட்டாலும் அதில் நிகழ்நிலைக் கல்விமுறையினை மேற்கொள்வற்க வசதி வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. இவ்வாறான சாதனங்களில் போதியளவான (Storage) இன்மை, Battery Charge நிக்காமல் விரைவாக Smart phone, laptop போன்றன off ஆகுதல், அதிக நேர இணையப் பாவனையால் Battery சூடாகுதல், போதியளவான Coverage இன்மையினால; Phone,Comouter, Laptop போன்றன Load ஆகுதல். நிகழ்நிலைக் கற்றலின் போது இடைநடுவில் மின் துண்டிக்கப்பட்டால் விலகவேண்டி ஏற்படுதல் போன்ற இவ்வாறான பிரச்சினைகளால் மாணவர்கள் இடையூறுகளற்ற நிகழ்நிலைக் கல்விமுறையினைத் தொடர்வதென்பது சாத்தியப்பாடு குறைவானதொன்றாகும்.

**முடிவுரை.**

இலங்கையில் Covid - 19 தொற்றுக்களின் பரவலினால் இக்காலப்பகுயில் அனைத்துத் துறைகளும் முடங்கிக் கிடக்கின்றன. இவ்வேளையிலே கவ்வித்துறையை சீரமைக்க வேண்டி இலங்கை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாற்றீடாக இப்புதிய நிகழ்நிலைக் கவ்விமுறை காணப்படுகின்றது. பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான இந் நவீன கல்விமுறையானது வினைத்திறனான ஒன்றாக காணப்பட்டாலும் இதனால் மாணவர்கள் சில இடையூறுகளுக்கும், பாதிப்புக்களுக்கும் ஆளாகியுள்ளனர். இவ்வாறானதொரு தாக்கங்களுக்கான மாற்றீட்டு வழிமுறைகள், குறைகள் என்பன நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இதனை நிவர்த்தி செய்யும் வழிகளாக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்பன விரைவாகத் திறக்கப்பட்டு சுகாதார விதிமுறைகளுக்கமைய மாணவர்களை உள்வாங்கி பாடங்கள், விரிவுரைகள் என்பன நடத்தப்பட்டால் மாணவர்களின் நேரடி கற்றல் அனுபவங்கள் மற்றும் திறன்கள் சீரமையும், நல்ல புத்தகங்களை வாசிப்பதற்கு மாணவர்களை பெற்றோர்கள் பழக்கப்படுத்த வேண்டும், சுய கற்றலுக்கான வசதி வாய்ப்புக்கள், தொழிநுட்ப வசதிகள் மற்றும் வேறுபாடற்ற இணைய அணுகல் முறைகள் என்பன இலங்கை அரசாங்கத்தால் செய்து கொடுக்கப்படல் வேண்டும், வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாரபட்சமின்றி கல்வி கற்பதற்கு ஊரில் உள்ள பணம் படைத்தவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இணைந்து வசதிகளை, வாய்ப்புகளை செய்து கொடுத்தல். இக்கல்வி முறையானது புதியதொரு பரிணாமம் என்பதால் இதுபற்றி தெளிவுகளை விரிவுரையாளர்களும், ஆசிரியர்களும் அம்மாணவர்களுக்கு விளக்கப்படுத்தல் வேண்டும். விரைவுகள், பாடங்கள் என்பன கலந்துரையாடலாக அமைந்தால் மாணவர்கள் சந்தேகங்களை அந்நேரத்திலேயே கேட்டுக்கொள்ளவும், ஆர்வத்துடன் விரிவுரைகளில் கலந்து கொள்ளவும் காரணமாக அமையும், அதுபோல நடக்கும் பாடங்களை காணொளி வடிவிலும் தயாரித்து குறித்த மாணவர்களுக்கு வழங்கினால் நிகழ்நிலை வகுப்புக்களில் கலந்து கொள்ளாத மாணவர்களும் அதனைப் பெற்று கற்பதற்கு இலகுவாக அமையும். எனவே இவ்வாறானதொரு அசாதாரண சூழ்நிலையினால் எடுக்கப்பட்ட மாற்றீட்டுக் கல்விமுறையான நிகழ்நிலைக் கல்வி முறையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பிரச்சினைகள், இடையூறுகள் என்பன் சரிசெய்யப்பட வேண்டுமென்பது அவசியானதொரு கட்டாயத் தேவையாகும்.

**உசாத்துணைகள்:**

01. இராமச்சந்திரன் நிர்மலன். (2020). இலங்கையில் இணையக்கல்வியிலுள்ள சவால்கள். Accessed on: 21.08.2020. Retrieved from: http://thinakkural.lk/article/58828

02. ARAM HOSPITAL. (2020). இணையவழிக் கவ்வியின் சாதகம் மற்றும் பாதகங்கள். Accessed on: 31.08.2020. Retrieved from: http://aramhospital.com/news

03. T.Kisnakanth. (2020). மாணவர்கள் எதிர்நோக்கும் தொழிநுட்ப சவால்கள். Accessed on: May.2020. Retrieved from: https://www.teachmore.lk/2020/05/blog-post_51.html?m=1.

04. கௌத்தம் சம்பத். (2020). கொரோனா வைரஸ். Accessed on: 20.08.2020 Retrieved from: https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AF%8A%E0%AE%B0%E0%AF%8B%E0

05. கணேசமூர்த்தி.எம். (2020). கொரோனா காலத்து ஒன்லைன் கல்வி அரைவேக்காட்டுத்தனமா? அத்தியவசியமா?. Accessed on: 21.08.2020.Retrieved from: http://www.vaaramanjari.lk/2020/06/14




Farwin.S.J.F. Rewathy. K
[1]Department of Geography, University of Colombo


# Covid-19 தொற்று காலத்தில் கொழும்பு பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட தொழில்நுட்ப ரீதியிலான தாக்கங்களின் மதிப்பீடு

# Assessment of Technological Impact among Muslim Students at Colombo University during Covid-19 period

## 1. முன்னுரை

தொழில்நுட்பம் என்பது அறிவியல் முறைகளையும் பொறியியல் கருவிகளையும் பயன்படுத்தி நுணுக்கமான வேலைகள் மூலம் திட்டங்களையும் வரையீடுகளையும் செயல்படுத்துவது ஆகும். அத்துடன் தொழில்நுட்பம் என்பது பரந்த முறையில் "ஒரு மனித நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வழிமுறையாக" வரையறுக்கப்படுகிறது (Brian, 2009). அதாவது விஞ்ஞான அறிவு முறைகளைக் கொண்டு புதிய பிரயோகங்களின் ஊடாக வேலைகளை நுட்பமாக மேற்கொள்வதற்கான ஒரு செயற்திறனாக கருதப்படுகின்றது. அதன்படி அறிவு, திறன்கள், அனுபவம் மற்றும் நுட்பங்களின் தொகுப்பான இதன் மூலம், மனிதர்கள் தமது தேவைகள் மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்யும் நோக்குடனான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உருவாக்குவதற்காக நமது சூழலை மாற்றி பயன்படுத்துகின்றனர். இவ்வாறான தொழில்நுட்ப வளர்ச்சி மாற்றமானது இன்றைய சமூக பண்பாடுகளையும் மாற்றுகின்றது. இதன்படி தொழில்நுட்பம் கலாச்சாரத்தை உருவாக்கும் அல்லது மாற்றும் ஒரு செயலாக பார்க்கப்படுகின்றது (Albert, 2006). இத் தொழில்நுட்பங்களின் பிரயோகமானது ஆரம்பத்திலிருந்தே சமூகத்தில் வளர்ச்சியடைந்து வந்தாலும் கூட இந்த Covid-19 தொற்று காலப்பகுதியில் சமூகத்திடையே அதன் பாவனையானது விரைவாக பரவலடைந்து பல்வேறு தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளதை காண முடிகிறது. தாக்கங்கள் என்பது மக்களுக்கு அல்லது புவிக்கு ஒரு நேர்மறை அல்லது எதிர்மறையான விளைவுகளின் மாற்றமாகும்.

அந்த வகையில், தொழில்சார் ரீதியிலும் வணிகம் சார் ரீதியிலும் கல்விசார் ரீதியிலும் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியானது இக்காலப்பகுதியில் துரிதம் அடைந்துள்ளது என்பதை நாம் பார்க்க முடியும். மக்கள் தமது தேவைகளை பாதுகாப்பான முறையில் வீட்டில் இருந்தவாரே தொடர்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு தொழில்நுட்ப பிரயோகங்களை பயன்படுத்துகின்றனர். அந்த வகையில், எல்லா நடவடிக்கைகளும் பாரம்பரிய முறையில் இருந்து தொழில்நுட்ப மாற்றங்களுடன் கூடியதாக இலத்திரனியல் வடிவமைக்கப்பட்டதாக மாற்றமடைந்திருக்கின்றன. அவ்வாறு மாற்றமடைந்த ஒரு துறையாக கல்வியற் துறை காணப்படுகின்றது. அதற்கினங்க கற்றல் நடவடிக்கைகளானது அதன் தொடர்ச்சி தன்மையைப் பேணும் வகையில் பாரம்பரிய கற்றல் கற்பித்தல் முறையில் இருந்து விலகி சில தொழில்நுட்ப பிரயோகங்களுடன் கூடியதன கற்றல் கற்பித்தல் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியிருக்கின்றன. இதற்காக E-learning எனப்படும் கணணி வழி கற்றல் முறைகள் மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. மாணவர்கள் அதன் மூலம் கல்வியை தொடர்ச்சியாக பேணுதல் உரிய காலத்தில் கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்தல் கற்றல் செயற்பாடுகளுடனான தொழில்நுட்ப ரீதியான நுண்ணறிவை வளர்ச்சியடைய செய்துகொள்ளல் போன்ற கல்வி சார் ரீதியான பல நன்மைகளை பெற்றுக் கொண்டாலும் கூட நேர்மறையான பல விளைவுகளையும் சந்தித்திருக்கின்றனர். ஆகவே இந்த Covid-19 காலப் பகுதியானது தொழில்நுட்ப ரீதியான மாற்றங்களை மாணவர்கள் மத்தியில் புகுத்தியது என்பது மட்டுமல்லாமல் கணணி வழி கல்வி எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் அடையாளப்படுத்துவதாக இவ்வாய்வு காணப்படுகிறது. ஆகவே தொழில்நுட்ப பிரயோகங்களுடன் அதிகளவு தொடர்பினை கொண்டு காணப்பட்ட ஒரு பிரிவினராக இந்த Covid-19 காலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் காணப்படுகின்றனர். ஆகவே அவர்களுக்கு மத்தியில் அதிகமாக பயன்படுத்தப்பட்ட இந்த தொழில்நுட்பத்தினால் எவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டன என்பதை மதிப்பீடு செய்யும் வகையிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 02. ஆய்வுப் பிரச்சினை

உலகெங்கிலும் பரவிய Covid-19 தொற்றானது இலங்கையிலும் பரவியதை அடுத்து இவற்றிலிருந்து உயிர்களை பாதுகாக்கும் பொருட்டு நாட்டில் சில சட்ட ரீதியான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டன. இதன் விளைவாக நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் முடப்பட்டு பல மாதங்களாக கற்றல் செயற்பாடுகளை தொடர்வதிலும் இடைநிறுத்தங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாக மாணவர்கள் உளவியல் மற்றும் சுகாதார ரீதியலாக பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஏப்ரல் மாதம் முதல் உலகம் முழுவதும் 1,500,000,000 க்கும் மேற்பட்ட ஆரம்ப நிலை முதல் மூன்றாம் நிலை வரை பள்ளிக்கு வர முடியாத மாணவர்கள் காணப்பட்டனர் என குறிப்பிடப்பட்டுள்ளது (UNESCO, 2020).

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் கல்வி செயற்பாடுகளை தொடர்வதற்கு கல்வியியல் நிறுவனங்கள் விரைவாக நிலைமைக்கு ஏற்ப மாற வேண்டி ஏற்ப்பட்டது. இதற்கான தீர்வின் பொருட்டு இந்த நெருக்கடி காலத்தில் தொலைதூர கல்விக்கு ஆதரவாக தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. அதனால் கல்வி நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்தும் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள இயலுமாக காணப்பட்டது. இருப்பினும் இக்கணணி மூலமான கற்கை முறையானது மாணவர்கள் மத்தியில் தொழில்நுட்ப ரீதியான சவால்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட கற்றல் தளங்கள் மற்றும் ஆன்லைன் கற்றல் முறைகள் ஒரு தனிநபரின் தனியுரிமை விடயங்களிலும் மாணவர்களுடைய வாழ்க்கையிலும் பாதிப்புகளை எழுப்பியுள்ளது. குறிப்பாக இணையத்தள அணுகல்கள் இல்லாத காரணத்தால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளையும் அதனைத் தொடர்ந்து தொடர் சங்கிலியாக ஏற்படும் உளவியல் ரீதியான பிரச்சினைகள், தற்கொலைகள் போன்றவையும் இதில் குறிப்பிட முடியும் எனவே குறித்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக எடுக்கப்பட்ட தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றங்கள் தொழில்நுட்ப ரீதியான தாக்கங்களையும் மாணவர்களிடையே ஏற்படுத்தி உள்ளன என்பதே இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். குறிப்பாக தொழில்நுட்பங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக கல்வியியற் செயற்பாடுகளானது மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது பாதிப்புக்களை எவ்வாறு கண்டாறாய்வது?, இத் தாக்கங்களின் பிரதான காரணம் என்ன? சாதகமான பாதிப்புக்கள் என்ன?, பாதகமான விளைவுகள் என்ன? போன்ற வினாக்களுக்கு விடை காணும் முகமாகவே இக்கற்கை முன்னெடுக்கப்பட்டது.

## 03. ஆய்வின் நோக்கம்

**பிரதான நோக்கம்**

- Covid-19 தொற்று காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப ரீதியிலான கல்வியியற் செயற்பாடுகள் ஏற்படுத்திய தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.

**துணை நோக்கங்கள்**

- Covid-19 காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப ரீதியான கல்வி வழிமுறைகள் இணங்காணுதல்.
- நவீன தொழில்நுட்ப கல்வி வழிமுறைகள் மூலம் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட சாதக, பாதகமான தாக்கங்களை அடையாளம் காணுதல்.
- இலங்கையின் நடைமுறைக் கல்வி முறைகளுடன் இத்தொற்று காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்ப கல்வி முறையினை ஒப்பிட்டு நோக்குதல்.

## 04. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது ஆய்வு சார் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு, நோக்கங்களை அடைவதற்கு பிரதானமாக பண்பு சார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருப்பினும், அளவு சார் தரவுகளில் எளிய பகுப்பாய்வு முறைகளை கொண்டமைந்திருக்கிறது. பண்பு சார் தரவுகள் விவரண பகுப்பாய்வு முறைக்கு உட்படுத்தப்பட்டு பொருத்தமான தகவல்கள் பெறப்பட்டுள்ளன.




படம் 1. தரவு சேகரிப்பு முறை

| எழுப்பப்பட்ட வினாக்கள் | பதில்கள் | வீதம் 100% |
|---|---|---|
| Covid-19 தொற்றுக் காலப்பகுதிக்கு முன்னாள் தொழில்நுட்பங்களுடன் கூடிய கற்றல-கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளீர்களா? | ஆம் | 26.7% |
| | இல்லை | **73.3%** |
| Online மூலமாக தொழில்நுட்ப பிரயோகங்களை பயன்படுத்தி கல்விசார் செயற்பாடுகளை அணுகுவதற்கான இலவச வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டனவா? | ஆம் | 46.7% |
| | இல்லை | **53.3%** |
| இந்நவீன முறையிலான கல்வி செயற்பாட்டினால் உமது தொழிநுட்ப அறிவு வளர்ந்துள்ளதா? | ஆம் | **86.7%** |
| | இல்லை | 13.3% |
| தொழிநுட்ப பிரயோகங்களுடன் கூடிய online கற்றல் செயற்பாடுகள் அணுகுவதற்கு இலகுவான செயன்முறையா? | ஆம் | 16.7% |
| | இல்லை | 83.3% |

முதலாம் நிலை தரவு சேகரிப்பு முறையினூடாகவே ஆய்விற்கு தேவையான முக்கிய தரவுகள் திரட்டப்பட்டன. அந்த வகையில், எளிய எழுமாற்று முறையில் 25 முஸ்லிம் மாணவர்கள் கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீடத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்தினூடாக தரவுகள் பெறப்பட்டன.

| கற்கை வருடம் | மொத்த முஸ்லிம் மாணவர் தொகை | வீதம் | வினாக்கொத்து எண்ணிக்கை |
|---|---|---|---|
| முதலாம் வருடம் | 46 | 44.23% | 11 |
| இரண்டாம் வருடம் | 38 | 36.5% | 09 |
| மூன்றாம் வருடம் | 15 | 14.4% | 04 |
| நான்காம் வருடம் | 05 | 4.8% | 01 |
| மொத்தம் | 124 | 100% | 25 |

அட்டவணை 1. வினாக்கொத்து கணக்கெடுப்பிற்கு தெரிவு செய்த மாதிரியெடுப்பு முறை

அத்துடன், தொற்று காரணமாக இலத்திரனியல் வழிமுறையினைப் பின்பற்றி Google Form வடிவில் வினாக்கொத்துக்கள் மின்னஞ்சல், குறுந்தகவல், Whatsapp, Viber பொன்ற நவீன தொலைத்தொடர்பு மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக அனுப்பி தரவுகள் பெறப்பட்டன. அதே போல, நேர்காணல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 05 விரிவுரையாளர்களிடம் தரவு திரட்டும் பணியானது தொலைபேசியினூடாக இடம்பெற்றது. இதன்போது வடிவமைக்கப்படாத நேர்காணல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறையில் வெளியிடப்பட்ட ஆய்வுகள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

திரட்டப்பட்ட தரவுகள் யாவும் Excel மூலமாக அட்டவணைப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. மேலும் எண் ரீதியிலான தரவுகள் இடை, இடையம், ஆகாரம் போன்ற எளிய அளவுசார் பகுப்பாய்வு முறைகளைக் கொண்டு தகவல்களாக்கப்பட்டுள்ளன.

## 05. ஆய்வின் பிரதான அம்சங்கள்

இவ்வாய்வானது தற்காலத்தின் பிரதான பேசும்பொருளாக காணப்படும் உயிரியல் ஆபத்து நிலையான Covid-19 தொற்றின் காரணமாக நடைமுறையில் காணப்படும் கல்வியியல் முறையினை சார்ந்ததாகும். தொழிநுட்ப ரீதியிலான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் எவ்வாறு முஸ்லிம் மாணவர்கள் வலுப்பெற்று காணப்படுகின்றன என்பதனை அறியும் நோக்குடன் திரட்டப்பட்ட வினாக்கொத்துக்களின் தரவுப் பகுப்பாய்வு கொடுக்கப்படுகிறது.

## 5.1 தொழில்நுட்ப ரீதியான கல்வி வழிமுறைகளை இணங்காணுதல்

அட்டவணை 2. வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் மாணவர்களிடையே அனுப்பப்பட்டு பெறப்பட்ட வினாக்கொத்து தரவுகளுக்கு அமைவாக அதிகமான மாணவர்கள் தொழில்நுட்ப ரீதியிலான கற்றல் செயற்பாடுகளில் இக் covid-19 தொற்று காலத்திற்கு முன்னால் ஈடுபடவில்லை என்பது அறியக் கிடைக்கின்றது. அதேவேளை தொழில்நுட்பங்களுடன் கூடிய நவீன கல்விமுறையினால் அதிகமான மாணவர்கள் தொழில்நுட்ப ரீதியிலான அறிவு வளர்ச்சியினைப் பெற்றுக் கொண்டதாக அறியக்கிடைக்கின்றது. அதேபோல இவ் online மூலமான தொழில்நுட்ப பிரயோகங்களுடனான கற்றல் செயற்பாடுகள் மாணவர்களுக்கு அணுகுவதற்கு கடினமான ஒரு செயன்முறையாக காணப்பட்டாலும் கூட இதன் மூலம் மாணவர்கள் அதிகமாக தமது தொழில்நுட்ப ரீதியிலான அறிவை வளர்த்துள்ளமை விளங்குகிறது.

## 5.2 நவீன தொழில்நுட்ப கல்வி வழிமுறைகள் மூலமான தாக்கங்கள்

| எழுப்பப்பட்ட வினாக்கள் | உடன்படுகிறேன் (%) | உடன்படவில்லை (%) |
|---|---|---|
| இணையக் கல்வியானது பாதுகாப்பான கல்வி செயன்முறைக்கு வழிவகுத்துள்ளது | **76.7%** | 23.3% |
| கல்வி ரீதியிலான தொழிநுட்ப அறிவை வளர்த்தது | **93.3%** | 6.7% |
| கற்றல்-கற்பித்தல் தரத்தினை மேம்படுத்தியுள்ளது | 63.3% | 36.7% |
| பரந்துபட்ட கற்றல் தளத்தினை உருவாக்கியுள்ளது | 73.3% | 26.7% |
| மாணவர்களுக்கு நெகிழ்ச்சியான கற்றல் செயன்முறைக்கு வழிவகுத்துள்ளது | 73.3% | 26.7% |

அட்டவணை 3. வினாக்கொத்தின் மூலம் கிடைக்கப்பட்ட சாதகமான தாக்கங்கள்

Covid-19 தொற்று காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப ரீதியான கல்வியானது மாணவர்களிடையே சாதகமான ஒரு நிலையையும் தோற்றுவித்துள்ளது, அந்த வகையில் மாணவர்கள் அவர்களது தொழில்நுட்ப ரீதியான அறிவு வளர்ச்சி அடைந்துள்ளது என்று கூறுகின்றனர். அதற்கான காரணங்களை தெளிவுபடுத்தும் வகையில்கீழ்வரும் காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

- வலைத்தளங்களில் கற்றலுக்கான தேடல்களை ஊக்கப்படுத்தி உள்ளது.
- தொழில்நுட்பங்கள் தொடர்பான அறிமுகம் மற்றும் அறிவு என்பன வளர்ச்சியடைந்துள்ளது
- E learning தொடர்பான ஒரு பூரண அறிவு கிடைக்கப்பெற்றுள்ளது
- தொழிநுட்பப் பிரயோகங்களை கையாளக்கூடிய திறன்கள் வளர்ச்சியடைந்துள்ளது
- ஒப்பீட்டளவில் இத்தொற்று காலத்துக்கு முன்பை விட தொழிநுட்ப பிரயோகங்களுடனான ஒரு இணக்க நிலை இக் கற்றல் செயன்முறை மூலம் அதிகமாக்கப்பட்டுள்ளது





படம் 2. இணைய வழி மூலம் கற்றல் சாத்தியப்பாடுகள்

நடைமுறைக் கல்வியானது விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தவும், கற்றற் செயற்பாடுகளை மேம்படுத்தவும் உதவும். அந்த வகையில், இணைய வழி கல்வியானது விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்குமிடையே காணப்படும் இடைவினை குறைவாக காணப்படுவதனால் கற்றல் செயற்பாடுகள் சிக்கலானதாக காணப்படுகிறது.

### 06. முடிவுரை

Covid-19 தொற்று காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப ரீதியிலான கல்வியியற் செயற்பாடுகளின் மதிப்பீட்டின் போது மாணவர்கள் மத்தியில் சாதகமான மற்றும் பாதகமான தாக்கங்களை ஏற்பட்டிருக்கின்றமை அறியக்கிடைக்கின்றது. தொழிநுட்ப ரீதியிலான அறிவு வளர்ந்துள்ளதாகவும், இதுவரை பாவிக்காத அநேகமான மென்பொருட்கள் மற்றும் வலைகளை இயக்குவதற்கு சந்தரப்பம் கிடைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Covid-19 காலத்தில் பல்வேறு கல்வி முறைகள் வித்தியாசமான தொழிநுட்ப பிரயோகங்களின் ஊடாக அணுகப்பட்டுள்ளன. அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப ரீதியான கல்வி வழிமுறைகளை பின்பற்றுவதில் பல்வேறு சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விரிவுரையாளர்களுடனான நேர்காணலின் போது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், மாணவர்கள் இணையவழி கற்கையில் அதிகமான ஈடுபாட்டினை காட்டுவதில்லை என்பது அநேகமானோரின் கருத்தாக காணப்படுகிறது. நவீன தொழில் நுட்ப கல்வி வழிமுறைகள் மூலம் மாணவர்களுக்கு உடலியல் ரீதியிலான உபாதைகளும் மன உளைச்சலும் அதிகரித்துள்ளமை அறியப்பட்டுள்ளது.

இலங்கையின் நடைமுறைக் கல்வி முறைகளுடன் இத்தொற்று காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்ப கல்வி முறையினை ஒப்பிட்டு நோக்கும் போது, பாரிய வேறுபாடுகள் எதுவும் மாணவர்களால் உணரப்படவில்லை. மாறாக, வகுப்பறையில் கற்கும் ஆர்வம் குன்றியிருக்கின்றமை மாணவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலைமைக்கேற்ப மாற்றப்பட்ட தொழில்நுட்பங்களுடன் கூடிய கல்விசார் செயற்பாடுகள் அநேகமான சாதக, பாதக விளைவுகளை கொண்டிருப்பதோடு, மாணவர்கள் அதிகளவில் தொழிநுட்ப திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு காரணமாக அமைந்திருக்கின்றது. இனிவரும் காலங்களிலும், நடைமுறைக் கல்வி செயற்பாடுகள் செயற்படுத்தப்படும் போது, கலவண் முறையில் இணையக் கல்வியும் மாணவர்களுக்கு புகட்டப்படுமாயின் மாணவர்கள் மத்தியில் தொழிநுட்ப திறன் மென்மேலும் வளர்வதற்கு வாய்ப்பாக அமையும்.

### உசாத்துணைகள்

Anna Dabrowski. (2020). "Teaching over technology: Educational priorities during Covid-19". ACER Discover. Accessed on 23rd January 2020. Retrieved from https://www.acer.org/gb/discover/article/teaching-over-technology-educational-priorities-during-covid-19

Albert Borgmann. (2006). Technology as a culture force: Alena and Griffin. The Canadian journal of sociology. University of Toronto Press. Vol 31, Nov 3, Summer 2006. Pp.351-360. Arthur, W. Brian. (2009). The nature of Technology. New York: Free press. P.28. ISBN 978-1-4165-4405-0

Cathy Li. (2020). "The Covid-19 pandemic has changed education forever: This is how". World economic forum. Accessed on 26th January 2020.Retrived from https://www.weforum.org/agenda/2020/04/coronavirus-education-global-covid19-online-digital-learning/

Denis berry (2020).”Technology impacts of covid-19” Accessed on 23rd January 2020.Retrived from https://advisory.kpmg.us/articles/2020/covid-19-technology-impact-remote-working.html

Global Education Monitoring Report (UNESCO). (2020). Accessed on 20th January 2020. Retrieved from https://en.unesco.org/gem-report/taxonomy/term/237.

Susan Grajek, & Christopher Brooks, D. (2020). “How technology can support student success during Covid 19”.Educause.Accesed on 27th January 2020.

Hayashi, R., Marito, G., Angelica, M., & Hewagamage, K., P. (2020).”Online learning in Sri Lanka's higher education institutions during the Covid-19 pandemic. DB Briefs. Accessed on 24th January 2020.Retrived from. www.abd.org

Luna Janssen. (2020). How Covid-19 exposed challenges for technology in education. G.stic. Accessed on 27th January 2020. Retrieved from https://www.gstic.org/inspiration/how-covid-19-has-exposed-the-challenges-for-technology-in-education/

Tears, M., Juha, S., Hanna, T., & Mark, C. (2020).“Post – Covid-19 education and education technology 'solutionism': A sellers' market.Reasearchgate. Accessed on 26th January 2020. Retrieved from. https://www.researchgate.net/publication/342898450_Post Covid19_Education_and_Education_Technology'Solutionism'_a_Seller's_Market/link/5fc49d24299bf104cf94f261/download

# கொரோனாவும் இலங்கையில் ஜனாஸா எரிப்பும் - நல்லடக்கமும், எது சாத்தியம்?



**AL. Musahira , MNF. Zilfa**
Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka

**ஆய்வுச் சுருக்கம்**

கொரோனா நோய்க் காரணமாக இறந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் நாளுக்கு நாள் இலங்கையில் எரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டு கவலைக்கிடமான நிலையில் முஸ்லிம் சமூகம் காணப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே "கொரோனாவும் இலங்கையில் ஜனாஸா எரிப்பும் - நல்லடக்கமும், எது சாத்தியம்?" என்ற தலைப்பில் இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது. இவ் ஆய்வில் ஜனாஸாக்கான கடமைகள், நல்லடக்கம் செய்வதற்கான காரணங்கள் என பல்வேறுபட்ட விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்கள் ஏன் அடக்கம் செய்யப்பட வேண்டும்?, மார்க்கத்தில் இதன் முக்கியத்துவம் என்ன?, அறிவியல் ரீதியான கருத்துக்கள் என பல விடயங்கள் இவ் ஆய்வில் உட்படுத்தப்பட்டுள்ளன.

இவ் ஆய்வானது முற்றுமுழுதாக இரண்டாம் நிலை தரவுகளை மையமாகக் கொண்டமைந்த ஓர் ஆய்வாகும். சஞ்சிகை, பத்திரிகை, புத்தகம் மற்றும் இணையம் ஆகியவற்றைப் பயன்படுத்தி தகவல்கள் பெறப்பட்டன. ஆய்வுப்பிரதேசமாக இலங்கை தேசமே வரையறுக்கப்பட்டுள்ளது. முழு இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினையாகவே இது காணப்படுகின்றமையால் முழு இலங்கையையும் மையமாகக் கொண்டே இவ் ஆய்வு அமைகின்றது.

**கலைச் சொற்கள்**

கொரோனா, ஜனாஸா எரிப்பு, ஜனாஸா நல்லடக்கம், சாத்தியம்

**1.2 மனிதர்களின் இறந்த உடல்களை ஆரம்ப காலங்களில் என்ன செய்தார்கள்.**

உலகில் தோன்றிய முதல் மனிதர் ஆதம் (அலை) வஸ்ஸலாம் அவர்களின் இரு புதல்வர்களில் ஒருவர் மற்றவரைக் கொலை செய்த போது அந்த சடலத்தை என்ன செய்ய வேண்டும் என அறியாது இருந்த சந்தர்ப்பத்தில் சடலத்தை புதைக்க வேண்டும் என்ற முதல் பாடத்தை காகத்தின் மூலம் இறைவன் மனித சமூதாயத்திற்கு கற்றுக் கொடுத்தான். அன்று முதல் இன்று வரை இறந்து போன முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் வழக்கம் தான் காலா காலமாக வரலாற்று நெடுகிலும் இருந்து வந்துள்ளது. எகிப்திய கால கட்டங்களில் கூட இறந்த உடல்களை பெட்டிகளில் வைத்து மம்மிக்களாக வைத்தார்கள். இறக்கும் முன்போ அல்லது இறந்த பின்போ தண்டிப்பதற்காகத்தான் தீயிலிட்டு எரித்தார்கள். மேலும் இறந்த பின்னர் அந்த உடலை விட்டும் பிரியும் ஆன்மா மீண்டும் அந்த உடலினுள் நுழைய நெருங்குவதாகவும் உடலை எரித்தால் தான் அந்த ஆன்மா முழுமையாக சென்று விடுவதாகவும் சில மதம் சார்ந்த நம்பிக்கைகள் தோன்றிய பிற்பாடுதான் இறந்த உடல்களை தகனம் செய்யும் வழக்கம் உருவாகியது.

ஜனாஸாக்களை புதைப்பது என்பது முஸ்லிம்களுக்கு மட்டும் உரித்தான ஒன்றல்ல மாறாக ஐரோப்பியர்கள் அமெரிக்கர்கள் முஸ்லிம் அல்லாத அரேபியர்கள் ரஷ்யர்கள் அனைவரும் புதைப்பதையே வழக்கமாக வைத்துள்ளனர். யூத கிறிஸ்தவ மதங்களிலும் எரிப்பதை விட புதைப்பதே பின்பற்றப்படுகின்றது. பண்டைய தமிழ் சமூகத்திலும் புதைக்கும் வழிமுறைதான் இருந்து வந்துள்ளது. இந்து மதத்தில் எரிப்பதும் புதைப்பதும் நடைமுறையில் உள்ளது. மதத் தலைவர்கள் இறக்கும் போது எரிக்காமல் புதைத்து சமாதி கட்டி வழிப்படுவது இந்து மத பழக்கமாகும். சிறு குழந்தைகளை ஒரு போதும் எரிக்கும் பழக்கம் எங்கும் எந்த மதத்திலும் இருந்ததில்லை புதைக்கவே செய்தார்கள்.

உலகத்திற்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட முஹம்மது நபி (ஸல்) அவர்கள் சாதாரன மனிதன் இறந்து விட்டால் அவரை குளிப்பாட்டி கபனிட்டு தொழுகை நடாத்தி நல்ல முறையில் அடக்கம் செய்ய வேண்டும் என வழிகாட்டியுள்ளார்கள்.

இஸ்லாத்தில் ஒரு மனிதனுக்கு ஓர் அடக்கஸ்தளம் கிடைப்பது என்பது அவனுக்குரிய கௌரவமாகும். இது பற்றி அல்குர்ஆனில் 'மனிதனை ஓர் இந்திரியத் துளியிலிருந்து படைத்து அவனுக்குரிய அனைத்தையும் இறைவன் நிர்னயித்தான். பின்னர் அவனுக்கு பாதையை இலகுபடுத்தி கொடுத்தான். அதன் பின்னர் அவனை மரணிக்கச் செய்து

அவனுக்கு ஒரு மண்ணறையை ஆக்கிக் கொடுத்தான்' (80:19-21)

முஸ்லிம்களின் சமய விதியின் படி ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் எந்த உயிரினத்தையோ அல்லது இறந்த உடலையோ எரிக்கக் கூடாது. அவை அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பது இஸ்லாமியர்களின் கோட்பாடாகும். ஆகவே முஸ்லிம்களின் மத நம்பிக்கைக்கு மதிப்பளித்து இலங்கை அரசு ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். கட்டாய தகனம் செய்வது மத உரிமை மீறலாகவும் காணப்படுகின்றது.

### 1.3 நபி(ஸல்) அவர்கள் ஜனாஸாக்களை கண்ணியப்படுத்தினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "நாங்கள் ஜனாஸாவை கண்டும் அதனுடன் நடந்து செல்லப் போவதில்லை என்றால் அவர் அதைக் கடந்து செல்லும் வரை அல்லது அது அவரை கடந்து செல்லும் வரை அல்லது அது அவருக்கு முன்னால் பூமியில் வைக்கப்படும் வரை எழுந்து நிற்கட்டும்" (ஆதாரம் புகாரி – 1308)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "ஜனாஸாவை கண்டால் எழுந்து நில்லுங்கள். அதை பின்தொடர்ந்து செல்பவர் அது பூமியில் வைக்கப்படும் வரை உட்கார வேண்டாம்." (ஆதாரம் புகாரி – 1309)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "ஒரு பிரேதம் எங்களை கடந்து சென்ற போது உடனே நபி (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள் அவர்களுடன் நாங்களும் எழுந்து நின்றோம். நாங்கள் தூதரே, இது யூதப் பெண்ணின் பிரேதம் என்றோம் அதற்கு நபி (ஸல்) அவர்கள் மரணம் என்பது திடுக்கிடச் செய்யும் ஒரு விஷயமாகும். எனவே பிரேதத்தை கன்டால் எழுந்து நில்லுங்கள் என்று சொன்னார்கள்" (ஆதாரம் முஸ்லிம் - 1749)

### 1.4 இஸ்லாமிய அறிஞர்களின் கருத்து

இஸ்லாமிய அறிஞர்கள் பொதுவாக ஜனாஸாக்கள் கண்ணியப்படுத்தப்பட வேண்டும் எனவும், ஜனாஸாவுக்குரிய நான்கு கடமைகளில் அடக்கம் செய்வதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. அவை சமூகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது. இக் கடமையை நிறைவேற்றப்படாத சந்தர்ப்பத்தில் சமூகம் பாவத்திற்குள்ளாகும்.

இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடும் போது, எச்சந்தர்ப்பத்திலும் முஸ்லிமான முஸ்லிமல்லாத ஒருவருடைய ஜனாஸாக்களை தகனம் செய்வது ஆகுமானதல்ல. நெருப்பினால் ஓர் உயிரை அழிக்கும் அதிகாரம் எவருக்கும் வழங்கப்படவில்லை என்ற வாதத்தினை முன்வைக்கின்றனர். அவர்களின் கருத்துக்கு ஆதாரமாக பல விடயங்களை முன்வைக்கின்றனர். உயிரோடு இருப்பவர்களை போன்று ஜனாஸா என்பதும் கண்ணியப்படுத்தப்பட வேண்டியது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "இறந்தவரின் எலும்பை உடைப்பது, உயிரோடு உள்ளவரின் எலும்பை உடைப்பதற்கு சமமானது" (இப்னுமாஜா). இதிலிருந்து, அறிஞர்கள் தகனம் செய்வது முடியாது என்ற கருத்தை கூறுகின்றனர்.

இரண்டாவது ஆதாரமாக, நபி (ஸல்) அவர்கள் "கப்ருகளின் மீது அமராதீர்கள்" என்று தடுத்து வந்த ஹதீஸை குறிப்பிடுகின்றனர். கப்ர்களின் மீது அமர்வது கூட ஜனாஸாவுக்கு செய்யும் அகௌரவம் என்பதனாலேயே நபிகளார் அதனை தடுத்திருக்கின்றார்கள். ஆகவே, ஜனாஸாக்களில் அமர்வதை தடுத்திருக்கும் போது ஜனஸாக்களை எரிப்பது எவ்வாறு ஆகுமாக்க முடியும்? என்று வினா எழுப்புகின்றனர்.

## அறிமுகம்

கொரோனா எனப்படும் கோவிட்-19 தொற்றானது இன்று உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் பரவி, பல்லாயிரக்கணக்கான மக்களை உயிர்க்காவுக்கொண்டுள்ளது. இதனடிப்படையில் நமது நாடான இலங்கையிலும் கோவிட்-19 நோய்த்தொற்றானது பாரிய சவாலாக மாறியுள்ளதுடன் தொற்றுக்குள்ளாகும் மக்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதோடு ஏற்படும் மரணங்களின் அளவும் கூடிச்செல்கின்றது.
கோவிட்-19 இனால் இறந்த உடல்களை வலுக்கட்டாயமாக தகனம் செய்யும் செயற்பாடு இலங்கையில் இடம்பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இறந்த உடல்களை அடக்கம் செய்வதால் ஏதேனும் பாதகம் உண்டா? அல்லது எதிர்கால சந்ததியினர் இதனால் சவால்களை முகங்கொடுக்க வேண்டி வருமா? என்ற கேள்வியை நோக்கினால் அறிவியல் ரீதியில் ஆதாரமான எந்த தகவலும் இன்மையும் அறியப்பட்ட விடயமாகும். கோவிட்-19 இன் முதலாவது மரணம் பதியப்பட்ட போது தகனம் மற்றும் அடக்கம் இரண்டிற்கும் அனுமதிக்கப்பட்டது. எனினும், இரண்டாவது மரணம் முஸ்லிம் ஒருவராக பதியபப்ட்ட போது சுகாதார அமைச்சின் EPID/400/2019 N-COV ஆம் இலக்க சுற்று நிறுபத்தின் பிரகாரம் தகனம் செய்யப்பட்டுது. இதுவே முதல் தகனமாக பதிவாகியது.
190 றக்கு மேற்பட்ட நாடுகளில் தமது மத நம்பிக்கைகளுக்கேற்ப தகனம் மற்றும் புதைக்க அனுமதியளித்துள்ள நிலையில் இலங்கையில் இறந்த உடல்களை எரிக்கும் முயற்சியை இன்று வரை கைவிடாமல் நிறைவேற்றி வருகின்றுது. "தொற்று நோயால் இறக்கும் ஒருவரை எரிப்புது பொதுவான ஓர் கட்டுக்கதையாகும். ஆனால் அது உண்மையான விடயமில்லை" என்ற தகவலை உலக சுகாதார அமைப்பு பகிரங்கமாக வெளியிட்ட போதும் இலங்கை அரசாங்கம் இதனை கண்டுக்கொள்ளாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

## ஆய்வின் நோக்கம்

- ஜனாஸா நல்லடக்கம் தொடர்பான இஸ்லாமிய நிலைப்பாட்டை கண்டறிதல்.
- ஜனாஸா தகனம் தொடர்பான மார்க்க நிலைப்பாட்டைக் கண்டறிதல்.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கை தேசத்தில் இன நல்லினக்கத்துடன் தமது மார்க்க விழுமியங்களை மேற்கொண்டு வந்த இஸ்லாமிய மக்கள் கடந்த வருடத்திலிருந்து தமது இறுதி உரிமைக்காய் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். கோவிட்-19 தொற்றால் இறந்தவர்களின் உடல்களை 190 றக்கு மேற்பட்ட நாடுகள் அடக்கம் செய்யும் போது ஏன் இலங்கைத் தேசத்தில் மாத்திரம் இதற்கு மாற்றமாகக் காணப்படுகின்றது. இதனை மையமாகக் கொண்டு அது காலத்தின் தேவையைக் கருதி இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வு முறையியல்**

பண்பு ரீதியான முறையிலான இவ் ஆய்வு இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இணையம் போன்றவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகள் இரண்டாம் நிலைத்தரவுகளாகும்.

**ஆய்வின் மையம்**

**1.1 மனிதன் மண்ணினால் படைக்கப்பட்டுள்ளான்.**

இறைவன் மண்ணைக் கொண்டுதான் மனிதனை படைத்திருக்கின்றான். அல்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். 'நிச்சயமாக நாம் மனிதரை களி மண்ணிலிருந்துள்ள சத்தினால் படைத்தோம்' (23:12) இன்று இந்த நவீன அறிவியல் வளர்ச்சியின் மூலம் மனித உடல் கூறுகளை ஆராய்ச்சி செய்த போது இப்பூமியில் நிலப்பரப்பில் காணப்படும் பல்வேறு மூலக்கூறுகள் சத்துக்கள் மனித உடலிலும் காணப்படுவதாக அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

மேலும் அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது 'நான் மண்ணிலிருந்து மனிதன் எனும் படைப்பினத்தை படைக்க உள்ளேன் என்று உங்கள் இறைவன் வானத்துாதரிகளிடம் கூறியதை நினைவு கூறுங்கள் அப்படைப்பை அவன் செவ்வைப்படுத்தி அதில் தன்னுடைய சூரு ஊதிய போது அவர்கள் அனைவரும் நெடுஞ்சான் கிடையாக ஸஜதாவில் விழுந்தனர்.' (38: 71:72)

'பிசுபிசுவென்று ஒட்டும் காய்ந்த களிமண் ஓட்டிலிருந்து மனிதனை நாம் படைத்தோம்' (15:26)

மனிதனின் தோற்றப் பாதையின் படித்தரம் பற்றி அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

1- மண்: 'ஆதத்தை இறைவன் மண்ணிலிருந்து படைத்தான்' (3:59)
2- களிமண் : 'களிமண்ணிலிருந்து மனிதனை அவன் படைக்க தொடங்கினான்.' (32:7)
3- பிசுபிசுப்பான களிமண்: 'நாம் அவர்களை பிசுபிசுப்பான களி மண்ணைக் கொண்டு படைத்தோம்' (37:11)
4- பேதகமடைந்த களி மண்: 'பேதகமடைந்த களிமண் சேற்றிலிருந்து மனிதனை நாம் படைத்தோம்' (15:26)
5- காய்ந்த ஓடு போன்ற களிமண்: 'ஓடு போன்ற தட்டினால் ஓசை வரக்கூடிய பேதகமடைந்த களி மண் சேற்றிலிருந்து நாம் படைத்தோம்.'(55:14)

சராசரியாக ஒரு உயிரினம் 95 சதவீதம் கார்பன், ஒக்ஸிஜன், நைட்றஜன் பொஸ்பரஸ், சல்பர் இரும்பு ஆகிய மூலக்கூறுகளை பொற்றுள்ளன. இவையல்லாத மேலும் 26 வகையான வெவ்வேறுமூலக்கூறுகளையும் பெற்றிருக்கின்றன. இதனைத்தான் இறைவன் களிமண்ணிலிருந்துள்ள சத்தினால் என்று அல்குர்ஆனில் குறிப்பிடுகின்றான். இதிலிருந்து நாம் தொளிவுபடுவது மனிதனை இறைவன் மண்ணினால் படைத்தான் என்பதாகும்.

“நிச்சயமாக நாம் ஆதமுடைய சந்ததியினை கண்ணியப்படுத்தினோம் இன்னும், கடலிலும், கரையிலும் அவர்களை சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவுப் பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப்படுத்தினோம்.” (17:70)

எகிப்தின் அங்காப் அமைச்சின் பிரதான பொருப்பாளரான கலாநிதி சௌக்கி அப்துல் லதீப் அவர்கள் ஜனாஸாக்களை எரிப்பதை முற்றாக மறுத்துள்ளார்கள். நெருப்பினால் தண்டிக்கும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தமானதாகும். எனவே அதனை மனிதர்களாகிய நாங்கள் கையில் எடுத்துக்கொள்ள முடியாது என்று குறிப்பிடும் அதேவேளை நவீன அறிவியல் விஞ்ஞானம் மரணித்தவர்களின் சடலங்களிலிருந்து நோய்த் தொற்றுக்கள் பரவுவதை விட்டும் தடுக்கின்ற விடயங்களை ஆய்வு ரீதியாக கண்டுபிடிக்க வேண்டும் என்று வாதிடுகிறார். நோயுற்றிருக்கும் நிலையில் அவர்களோடு வைத்தியர்கள் நெருங்கிப்பழக முடியுமாக இருந்தால் மிக ஆழமான குழியில் புதைக்கும் போது எவ்வாறு நோய்த் தொற்றுக்கள் ஏற்பட முடியும் என்று தர்க்க ரீதியாக தனது கருத்தை நிருவினார்.

**1.5 கொவிட்-19 காரணமாக உயிரிழந்தவர்களை அடக்கம் செய்ய முடியும் என்பதற்கான சான்றுகள்.**

**1.5.1 ஸ்ரீ லங்கா மருத்துவ சங்கம்**

தற்போதுள்ள விஞ்ஞான தரவுகளின் அடிப்படையில் கொவிட்- 19 காரணமாக மரணிப்பவர்களை அடக்கம் செய்ய முடியும் என பரிந்துரை செய்துள்ளது. ஒரு உயிருள்ள உடலிலேயே வைரஸ் பெருக முடியுமென்றும் உயிரற்ற உடலில் குறிப்பிடுமளவு நீண்ட காலத்திற்கு வைரஸ்கள் உயிர் வாழ முடியாது என்று குறிப்பிட்டுள்ளது.

**1.5.2 ஸ்ரீ லங்கா பிரஜா மருத்துவர்கள் கல்லூரி**

கொவிட் 19 காரணமாக பாதிக்கப்பட்டவர்களை அடக்கம் செய்ய அனுமதிப்பதை ஆதரிக்கும் வகையில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது. கொவிட் 19 இன் பரவலை அதிகரிக்கும் என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் இல்லை என்று கூறியுள்ளனர். மேலும் ஒவ்வொரு குடிமக்களையும் அவரவர் மற்றும் அவரின் குடும்பத்தின் விருப்பத்தின் படி தகனம் செய்யவோ அல்லது அடக்கம் செய்யவோ அனுமதிக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

**1.5.3 பேராசிரியர் மலிக் பீரிஸ்**

உலக பிரசித்தி பெற்ற நோய் நிர்னய மற்றும் வைரஸ் நிபுனர் ஒருவரான தற்போது கொங்கொங் பல்கலைக்கழகத்தில் வைரஸ் பிரிவின் தலைவராக பணியாற்றும் இலங்கை பேராசிரியர் மலிக் பீரிஸ் அவர்களும் அடக்கம் காரணமாக கொவிட் 19 வைரஸ் பரவுவதன் சாத்தியப்பாடு மிக மிகக் குறைவு என்றும் உக்கிப் போகாத பொருளால் சுற்றி அடக்கம் செய்வது அதிகம் பாதுகாப்பானது எனவும் அவர் சிபாரிசு செய்துள்ளார்.

**1.5.4 சிரேஷ்ட பேராசிரியர் ஜெனிபர் பெரேரா தலைமையிலான குழுவின் பரிந்துரை**

இதன் பிரகாரம் பாதிக்கப்பட்ட நபர் இறந்தவுடன் அந்த உடலில் வைலஸ்கள் பெருக்கம் அடையாது என்றும் ஒரு நபரின் மரணத்துடன் அந்த உடலிலுள்ள உயிரனுக்களும் இறந்து விடும் என்பதால் அவ்வுடலில் மீதமுள்ள வைரஸ்களும் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் இறந்து போய்விடும் எனவும் மேற்படி நிபுனர்கள் குழுவில் பரிந்துறை செய்யப்பட்டுள்ளது.

**1.5.5 டாக்டர் நிஹல் அபேசிங்ஹ**

வைரஸ் நிபுனர் மற்றும் முன்னால் அரச தொற்று நோய்ப்பிரிவின் தலைவர் டாக்டர் நிஹல் அபேசிங்ஹ அவர்களும் கொவிட் 19 காரணமாக மரணிப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதிக்கலாம் என்றும் ஒரு அடக்கஸ்தளத்தின் நில நீரிலிருந்து கிருமிகள் வெளியாகி சுகாதார அச்சுறுத்தல் ஏற்படும் என்ற கேள்விக்கே இடமில்லை எனவும் கூறியுள்ளார்.

**1.5.6 அமெரிக்க சுகாதார மற்றும் மானிட சேவைகள் திணைக்களத்தின் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நிலையம்**

அமெரிக்காவிலுள்ள இவ்வமைப்பு கொவிட் 19 காரணமாக மரணிப்பவர்களை அடக்கம் செய்வதால் நோய் பரவும் அபாயம் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளது. எனவே மரணித்தவரின் குடும்பத்தினர் இறுதிக்கிரிகை தொடர்பான விருப்பங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று அவ்வமைப்பு கூறியுள்ளது.

இவை தவிர இவ்விவகாரம் தொடர்பாக சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிபுனர் குழுவும் அடக்கம் மற்றும் தகனம் ஆகிய இரண்டையும் மேற்கொள்ளலாம் எனவும் பரிந்துரைத்துள்ளது. அடக்கம் செய்யப் பட்ட பின்னர் நீர் மாசுபடுவதன் மூலம் வைரஸ் பரவுகிறது என்பது நிரூபிக்க எந்த விஞ்ஞான பூர்வமான ஆதாரமும் இல்லை என்று அக்குழு தெரிவித்துள்ளது.

**1.6 மரணித்த உடல்களை அடக்கம் செய்வதால் இடநெருக்கடிகள் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளனவா?**

மனித வரலாற்றில் இறப்பும் பிறப்பும் தொடர்ந்து நடந்து கொண்டு இருந்தாலும் சில கால கட்டங்களில் பிறப்பை விட இறப்புத்தான் அதிகமாக நிகழ்ந்துள்ள சந்தர்ப்பங்களும் உள்ளன. உதாரணமாக போர்கள், விபத்துக்கள், சுனாமி, சூறாவளி, வெள்ளம், நிலநடுக்கம் போன்ற இயற்கை போரழிவுகள் போன்றவற்றில் பிறப்பை விட இறப்பு மிகைத்து விடக்கூடியதாக காணப்படுகின்றது. உலகம் தோன்றியது முதல் இன்று வரை இறந்த சடலங்களை அடக்கம் செய்ய இடமில்லை என்ற இடநெருக்கடி எந்த நாட்டிலும் இருந்ததாக தெரியவில்லை வரலாற்றில் நடந்த பல யுத்தங்களில் லட்சக் கணக்கான மக்கள் இறந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர்களது உடல்களை புதைத்தார்களே தவிர எரிக்கவில்லை பூமியில் மொத்த நிலப்பரப்பில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலப்பரப்பு சிறிய பகுதியாகும். ஏனைய நிலப்பரப்பு வெறுமையாக உள்ளது.

உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் மரணம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. மனிதனை தவிர அனைத்து உயிரினங்னளும் மரணித்து மண்ணோடு மண்ணாக மக்கிப் போகின்றன. ஆறறிவுள்ள மனிதன் மட்டும் இறந்த பின்னர் அவனது உடலை முறையாக புதைத்தோ அல்லது எரித்தோ அடக்கம் செய்கின்றான்.

மேலும் "வனங்களிலும் நீர் நிலைகளிலும் வாழும் உயிரினங்கள் இறந்த பின்னர் மண்ணோடு மண்ணாக கலந்து மறைந்து போகின்றன. இது வரையான கால கட்டங்களில் எவ்விதமான இட நெருக்கடிகளோ நோய்த் தொற்றுக்களோ சூழல் மாசடைவுகளோ நடந்ததாக வரலாறுகளில் காண முடியாது.

புதைப்பதால் இட நெருக்கடிகள் ஏற்படுவதற்கு காரணம் அந்த இடத்தில் சமாதிகளும் கல்லரைகளும் கட்டுவதனால் தான் இதன் விளைவால் சமாதி கட்டிய இடத்தை பயன்படுத்த முடியாமல் உள்ளது. பிற்காலத்தில் வணக்கஸ்தளமாகவும் மாறுகின்ற சூழ்நிலை உருவாகின்றது. இதனால் தான் இஸ்லாம் மார்க்கம் இறந்தவர்களை அடக்கம் செய்த பின் அந்த இடத்தை அடையாலப்படுத்தும் விதமாக சமாதி கட்டுவதை தடை செய்திருக்கின்றது. எனவே இந்த இடநெருக்கடி பிரச்சினை அங்கு ஏற்படாது.

இஸ்லாம் மார்க்கம் இறந்தவர்களின் அடக்கஸ்தளத்தை வெறும் மண்ணறையாகவே அமைக்க ஏவியுள்ளது. இறந்தவர்களின் அடக்கஸ்தளங்களில் சமாதி கட்டுவதையோ அல்லது அலங்கரிப்பதையோ விரும்பவில்லை. இரண்டு சான்களுக்கு மேல் மண்ணறையை உயர்த்துவதை கூட நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் இஸ்லாம் இறந்தவர்களுக்கு சமாதி கட்டுவதை தடுப்பதால் மார்க்கத்தின் அடிப்படையில் முஸ்லிம்களை சரியான முறைப்படி அடக்கம் செய்வதால் அடக்கஸ்தல மயானத்தில் இட நெருக்கடிகள் ஏற்படுவதற்கு எவ்விதமான சந்தர்ப்பமும் இல்லவே இல்லை.

**1.7 பொருளாதார ரீதியாக நோக்கினால் மரணித்த உடல்களை அடக்கம் செய்வது சிறந்தது.**

கொவிட் -19 காரணமாக மரணித்தவர்களின் உடலை தகனம் செய்வதற்கான செலவு மிக அதிகமாக

காணப்படுகின்றது. என்றாலும் புதைப்பதற்கான செலவு மிக மிகக் குறைவாக உள்ளது. இறந்தவர்களின் உடலை நன்றாக தகனம் செய்வதற்கு 1600 – 2000 டிகிரி பராண் ஹீட் வெப்பம் தேவைப்படும். இதற்கான இலத்திரனியல் கருவிகளின் விலையும் அதிகமாக காணப்படுகின்றது. மேலும் அதற்கான மின் கட்டனச் செலவும் செய்ய வேண்டி உள்ளது. சடலங்களை எரிவூட்டுவதற்கான மின்சாரம் நகர்புரங்களில் மட்டுமே தடையின்றி கிடைக்கும் என்பதாலும் குறைந்த அளவிலான மின் மயானங்களே காணப்படுபின்றன. இதற்கான கட்டணச் செலவுகளும் போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகள் அதிகமாக காணப்படுகின்றது.

ஆரம்ப காலங்களில் இறந்தவர்களின் சடலத்தை எரிப்பதற்கு மரக்கட்டைகள் பயன்படுத்தப்பட்டன அதற்கான செலவு அதிகமாக காணப்பட்டது. இதன் மூலம் வெளியாகும் புகை மற்றும் மாசுகலால் சூழல் மாசடைகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழல் கண்கானிப்பு அமைப்பின் அறிக்கையின் படி சடலங்கள் எரியூட்டப்படுவதால் கொடிய விஷத்தன்மையுள்ள நைட்ரஜன் ஒட்சைட்டு கார்பன் மோனாக்சைடு ஆகியவை வெளியேறுகின்றன என்று குறிப்பிட்டுள்ளது. இவை அமில மழைக்கும் காரணமாக அமைகின்றது
சாதாரணமாக தற்போது இலங்கையில் ஒரு சடலத்தை எரிப்பதற்கு 50000 ரூபா முதல் 80000 ரூபா வரை செலவாகின்றது. இதே சடலத்தை இஸ்லாமிய முறைப்படி நல்லடக்கம் செய்வதற்கு கிட்டத் தட்ட 10000 ரூபா முதல் 15000 ரூபா வரையான செலவில் ஜனாஸாவின் அனைத்து கடமைகளையும் சரிவர நிறைவேற்ற முடியும். ஆகவே ஜனாஸா விடயத்தில் எரிப்பதை விட அடக்கம் செய்வதற்கான செலவு மிக மிகக் குறைவாகவே உள்ளது.

**1.8 மரணித்த உடல்களில் இருந்து வைரஸ் பரவும் சாத்தியமா?**

கொரோனா தெற்று ஆரம்பத்தில் உலக அறிஞர்களிடம் இது பற்றிய அறிவு இருக்கவில்லை மாறாக பிற்பட்ட காலங்களில் அறிஞர்கள் தொடர்ந்து ஆய்வுகளையும் ஆராய்ச்சிகளையும் செய்து கொரோனா பற்றிய அறிய பல தகவல்களையும் தரவுகளையும் சேகரித்துள்ளார்கள். ஏனைய வைரஸ் கிருமிகள் போன்றே கொவிட் 19 தொற்று கிருமியும் இறந்த கலத்திலிருந் பரவ வாய்ப்பில்லை என்பதை சரியான விஞ்ஞான முடிவுகளுடன் உறுதிப்படுத்தியதன் பின்பு உலக சுகாதார ஸ்தாபனம் கொரோனாவால் பீடிக்கப்பட்ட ஒருவர் இறந்தால் உரிய வழிகாட்டலுடன் அந்த சடலத்தை புதைக்கவும் முடியும் எரிக்கவும் முடியும் என்ற தீர்மானத்தை வழங்கியுள்ளது. அதன்படி கிட்டத்தட்ட 194 உலக நாடுகள் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள சடலங்ளை புதைத்தும் எரித்தும் வருகின்றனர்.

ஒருவர் இறந்து கூடியது 72 மணி நேரங்கள் வரை இறந்த உடலில் ஏற்கனவே இருந்த கிருமிகள் வைரஸ்கள் இருக்கும். அதன் பின்னர் பக்றீரியாவைத் தவிர ஏனையவை முற்றாக அழிந்து போகும். எனவே தற்போதைய அசாதாரன நிலமையில் இறந்த உடல்களை அடக்கம் செய்ய முடியும் என்பதாக தொற்று நோய்கள் சம்பந்தமான துறையில் கலாநிதி பட்டம் பெற்றிருக்கும் பேராசிரியர் நிஹால் அபேஸிங்ஹ குறிப்பிடுகின்றார். அதே போன்று பேராசிரியரும் நோய்க் குணங்களை ஆய்வு செய்யும் வல்லுனருமான மலிக் பீரிஸ் குறிப்பிடுவதாவது “ வைரஸ் கிருமிகள் உயிருள்ள கலங்களில் தான் வாழும் அதிலிருந்து தான் பரவும் கலங்கள் இறந்தால் பக்றீரியாவை தவிற ஏனைய வைரஸ் கிருமிகளால் உயிர் வாழ முடியாது இறந்து போகும். அத்தோடு இறந்ற சடலத்தின் மீது கிருமிகளை அழிக்கும் பல்வேறு இரசாயனங்களை தெளித்து அதனை கனமான பொலீத்தின் உரையினால் பொதி செய்து அதன் மீது மீண்டும் இரசாயனங்களை தெளித்து நிலத்தில் நான்கு அடிக்கு கீழ் தோண்டி புதைத்த பின்னரும் நோய் கிருமிகள் பரவும் என்பது எந்த வித விஞ்ஞான முறையுமில்லாத வாதமாகும் என்கிறார்.இவ்வாறான கருத்துக்களிலிருந்து உயிரற்ற கலங்களில் வைரஸ்கள் உயிர் வாழ்வது சாத்தியப்பாடுகள் இல்லை என்பதாகும்.

**1.9 நல்லடக்கம் செய்வது என்பது கடமையும் மத உரிமையமாகும்.**

ஒருவர் இறந்ததும் வாசனை திறவியங்கள் கலந்த நீரினால் குளிப்பாட்டி கபனிட்டு தொழுகை நடாத்தி அடக்கம் செய்ய வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் இது முஸ்லிம்கள் மீதான கடமை ஆகும். இறந்த ஒருவருக்கு செய்ய வேண்டிய இறுதி மரியாதை மார்க்க கடமை என்ற வகையில் தான் நல்லடக்கம் செய்ய வேண்டும். புதைப்பதால் விபரீதம் இருக்கிறது என்பது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப் பட்டிருந்தால் முஸ்லிம்கள் ஜனாஸா எரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்க மாட்டார்கள். ஆனால் உலக நாடுகள் எல்லாம் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இறந்து போன சடலங்களை புதைக்கும் போது இலங்கையில் மாத்திரம் எரிக்க வேண்டும் என்று செல்வது ஏற்றுக் கொள்ள முடியாது. கிட்டத்தட்ட 192 உலக நாடுகள் அடக்கம் செய்ய அனுமதிக்கும் போது குறிப்பாக இலங்கையில் தற்போதுள்ள சூழ்நிலையில் அடக்கம் செய்ய முடியாது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது
மனிதர்களின் உணர்வுகளையும் மத உரிமைகளையும் மதித்து பல்லின மக்கள் வழ்கின்ற இலங்கை நாட்டில் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் முன்வர வேண்டும் என்பது எமது வேண்டுதலாகும்.

மனிதர்களின் உணர்வுகளையும் மத உரிமைகளையும் மதித்து பல்லின மக்கள் வழ்கின்ற இலங்கை நாட்டில் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் முன்வர வேண்டும் என்பது எமது வேண்டுதலாகும்.

**முடிவுரை**

2019 ஆம் ஆண்டிலிருந்து உலகையே தன் கையில் வைத்து பெரும் பாதிப்பை ஏற்படுத்திய கோவிட்-19 எனும் கொரோனா தொற்று இலங்கை தேசத்தையும் தன் கீழ் வைத்துள்ளது. இதனால் உலகில் பல ஆயிரம் மக்கள் இறந்துள்ளனர். இலங்கையிலும் கொரோனா பெரும் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றது. மேலும், இலங்கையில் கட்டாய தகன முறையே அமுலிலுள்ள சட்டமாகக் காணப்படுகின்றது. இஸ்லாமிய சட்டத்தின் பிரகாரம் ஜனாஸா அடக்கம் செய்யப்படுவதையே வலியுறுத்துகின்றது. எனவே, ஜனாஸா அடக்கம் செய்யப்படுவதை வலியுறுத்தியும் ஜனாஸா அடக்கம் செய்வதால் பாதிப்புக்கள் ஏற்படாது என்பதை அறிவியல் விஞ்ஞான ரீதியான ஆதாரங்களைக் குறிப்பிட்டும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் ஓர் சமூகத்தின் இறுதி உரிமையை வேண்டப்படுவதாக இவ் ஆய்வு அமைகின்றது.

**உசாத்துணை :**

1- முஹம்மத் பகீஹீத்தீன். (2020, November 01). நெருப்பில் எரித்தாலும் ஈமான் கருப்பதில்லை.
www.jaffnamuslim.com

2- புதைத்தல் எரித்தல் : ஒரு அறிவியல் பார்வை. (2006, jul 30).
www.islamkalvi.com

3- முபீன்,யூ.எல்.எம். (2021, January 08). ஜனாஸா எரிப்பு ஒரு கருவியாக பயன்படுத்தும் அவலம்.
www.ibctamil.com

4- உலக தோற்றமும் மனிதப்படைப்பும். (2012, jul 30).
disaikaati.wordpress.com

5- அஷ்ஷெய்க் ஷிஹான் ஜவாத். (2020, nov 28). கொவிட் 19 மரணங்கள் : ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய முஸ்லிம் சமூகம் அனுமதி கோருவது நியாயமானதா? .
admin.thinakkural.lk

6- முஹம்மட், எ. (2019, feb 22). ஜனாஸாவை கண்ணியப் படுத்துதல்.
jumuaamedai.wordpress.com

7- நுஸ்ரி, எம்.எல்.எம். (2020,mar 04). உன்னால் முடியும் முஸ்லிம் ஜனாஸாவை தகனம் செய்வது தொடர்பான மார்க்கத் தீர்ப்புக்கள் தொடர்பான தொகுப்பு.
b-m.facebook.com

8- கொவிட் உடல்களை அடக்கம் செய்யலாம் சுகாதார அமைச்சு நியமித்த பேராசிரியர் ஜெனிபர் பெரேரா தலைமையிலான நிபுணர் குழு பரிந்துரைப்பு. (2021, janu 02). puthithu.com

9- ஆலிப் அலி, எஸ்.எம்.என். (2020, December 30). இறந்த பின்பும் உடல் வேதனையை உணர்கின்றது – விஞ்ஞானிகள் தெரிவிப்பு எரிப்பதா? புதைப்பதா?.
tamil.newsnow.ik

10- கொவிட் 19 காரணமாக மரணிப்பவர்களை அடக்கம் செய்வது தொடர்பாக ஜனாதிபதி பிரதமர் சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம். (2021,janu 06). www.acju.ik

மனிதர்களின் உணர்வுகளையும் மத உரிமைகளையும் மதித்து பல்லின மக்கள் வழ்கின்ற இலங்கை நாட்டில் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் முன்வர வேண்டும் என்பது எமது வேண்டுதலாகும்.

# Covid-19 னும் இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸா விவகாரங்களும் ஓர் கண்ணோட்டம்



**N.S.Jafeer (J.Noorul Sifa) , M.S.F. Sumaiya**
Department of Islamic Studies,
Faculty of Islamic Studies & Arabic Language,
South Eastern university of Sri Lanka.

**L.F. Hilma Assistant Lecturer,**
Department of Islamic Studies,
Faculty of Islamic Studies & Arabic Language,
South Eastern university of Sri Lanka.

**அறிமுகம்**

அண்மைக் காலமாக இலங்கையில் அரங்கேறி வரும் சிறுபான்மை மக்களுக்கான உரிமை மீறல்களில் ஓர் வடிவமாகவே இன்று கொவிட் 19 எனும் நோய் மாறியுள்ளது. இந்நோயினால் பாதிக்கப்பட்டு இறந்த உடல்களை அடக்கம் செய்வதற்கான அனுமதியை உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கியுள்ளதுடன் பல உறுதிப்படுத்தப்பட்ட விஞ்ஞான ஆய்வுகளும் அடக்கம் செய்வது தொடர்பில் தெளிவான முடிவுகளை முன்வைத்தும் உள்ளது. எனினும் இலங்கை அரசாங்கம் அவற்றையெல்லாம் புறக்கணித்து ஆணைக்குழுக்களை நியமித்துள்ளதாகவும் அவர்களது பரிந்துரைகளை எதிர்பார்த்து நிற்பதாகவும் கூறி முஸ்லிம் மக்களை ஏமாற்றி வரும் செயற்பாடானது கொவிட் 19 தொற்று என்ற பெயரில் முஸ்லிம்களுக்கு இலங்கை அரசு இழைத்து வரும் அநீதியாகவே நோக்கப்படுகிறது. எனவே இத் தலைப்பானது கொவிட் 19 இனால் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸா ரீதியான விவகாரங்களை ஆய்வு செய்து அடக்கம் செய்தல் தொடர்பாக விஞ்ஞான ரீதியான சில முடிவுகளையும் வழிகாட்டல்களையும் தெளிவுபடுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

**தகனம்:**

'தகனம்' என்ற இந்த வார்த்தை இலங்கை வரலாற்றில் பன்னெடுங்காலமாக நடைமுறையில் இருந்து வருகின்ற வார்த்தையாக இருந்த போதிலும் உலக நாடுகளைப் பொறுத்த வரையிலும் சரி, இலங்கையைப் பொறுத்த வரையிலும் சரி பரவலாக பேசப்படுகின்ற ஒரு வார்த்தையாகக் காணப்படுகின்றது. உண்மையில் தகனம் என்ற வார்த்தைக்கு கருத்து பெற முயற்சிப்போமாயின் தகனம் செய்வது (Cremation) என்பது, இறந்த உடல்களை பூமியில் குழி தோன்டிப் புதைப்பதற்கு பதிலாக, நெருப்பினால் பொசுக்கி சாம்பலாக்குவதை குறிக்கின்றது. நவீன காலத்தில் இதற்காக உருவாக்கப்பட்டுள்ள, தகனம் செய்யக்கூடிய சூளைகளில் (Surface) இச் செயற்பாடு, மிக இலகுவாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தகனம் செய்யப்பட்டபின் தகனம் செய்யப்பட்ட உடலிலிருந்து சாதாரணமாக 2.4 கி.கிராம் (5.3 இறாத்தல்) நிறையுடைய சாம்பல் துகள்கள் சேகரிக்கப்படுகின்றன. இவை உண்மையில் தகனம் செய்யப்பட்ட உடலின் சாம்பல் துகள்கள் அல்ல. உண்மையில் இவை சுட்டு எரிக்கப்படாத எரிக்க முடியாத உடம்பின் முள்ளுப் பகுதியிலிருந்து சேகரிக்கப்படுபவைகளாகும். இவை பொதுவாக பவுடரில் கலந்து வருகின்றன. இவ்வாறு சேகரிக்கப்படும் சாம்பல் துகள்கள் இறந்தவரின் உறவினர்களால் ஒரு ஞாபகார்த்த இடத்தில் வைக்கப்படும். இதனையே தகனம் செய்தல் எனக் குறிப்பிடப்படுகின்றது. (*www.jaffnamuslim.com,2020*).

**அடக்கம் செய்தல்**

அதாவது மரணித்த உடலை குறிப்பிட்ட சட்டதிட்டங்களோடு தமது மத அனுஷ்டானப்படி தரையில் குழி தோண்டிப் புதைப்பதையே அடக்கம் செய்தல் எனக் குறிப்பிடுகின்றனர். (முஸ்லிம் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்படுதல், 2021). அடக்கம் செய்தல் பற்றி ஒவ்வொரு மதங்கள் ரீதியான கருத்துக்களை நோக்குகையில், பௌத்த மதம் தகனம் செய்தல் மற்றும் அடக்கம் செய்தல் ஆகிய இரு முறைகளையும் ஆதரிக்கிறது. எனினும் பெரும்பாலான பௌத்த மக்கள் தமது உடலை தகனம் செய்து அதன் சாம்பலை இறுதியில் வீடுகளில் வைப்பதை ஒரு நம்பிக்கையாக கொண்டவர்கள் (திரிபீடகம்).

இன்னும் கிறிஸ்தவ மதத்தைப் பொறுத்தவரையில் மரணித்த உடலை அடக்கம் செய்வதையே வலியுறுத்துவதோடு மரணித்த உடலை தகனம் செய்வதை வெறுக்கிறது (பைபிள்).

அதேபோல இந்துமதமும் தகனம் மற்றும் அடக்கம் செய்தல் ஆகிய இரண்டு விடயங்களையும் பின்பற்றுவதற்கு வலியுறுத்தி உள்ளதோடு தகனம் செய்யப்பட்டால் அந்த சாம்பலை நீரில் மூழ்கி கலக்க செய்வதன் மூலம் குறித்த ஆன்மா சாந்தி பெறும் என்ற நம்பிக்கையை வலியுறுத்துகிறது (பகவத் கீதை).

இஸ்லாம் மதம் மரணித்த உடலை அடக்கம் செய்வதையே வலியுறுத்துகிறது. ஏனெனில் இஸ்லாம் மதத்தின் அடிப்படையில் அவர்களின் மரணத்திற்குப் பின்னர் உள்ள ஒரு உலகை அவர்கள் நேசிப்பவர்களாக இருக்கின்றனர். இஸ்லாமிய கலாச்சாரப்படி மற்றும் இஸ்லாமிய மத வழிகாட்டுதலின் படியும் மரணித்த ஒரு உடலை தகனம் செய்வது தடுக்கப்பட்டது. ஏனெனில் இஸ்லாமிய வழிகாட்டலின் படி ஒரு உடலை எரிப்பதற்கு உரிய அதிகாரம் இன்னொரு மனிதனுக்கு கிடையாது. ஒரு உடலை எரிப்பதற்காக அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரியது. ஆகவே தகனம் செய்வதை இஸ்லாம் மதம் மிகக்கடுமையாக தடுக்கிறது (அல்குர்ஆன்).

**முஸ்லிம் ஜனாஸாக்களை எரிக்க வேண்டுமென்ற செய்திகள்**

- உயிரிழந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்தல் தொடர்பான தீர்மானம் அதற்காக நியமித்த குழுவின் சிபாரிசுகளுக்கு ஏற்பவே மேற்கொள்ளப்படுவதாக சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது. இதுவரை காலமும் கொவிட்-19 ஆல் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்யும் நடைமுறையே அமுலானது. இது உலகளாவிய ரீதியில் ஆராய்ந்து மேற்கொள்ளப்படும் தீர்மானமாகும் என குறிப்பிட்டுள்ளார்.
  இங்கு ஒரு இனத்தை அல்லது சமயத்தை சார்ந்தவர்களுக்கு தனித்துவம் அளிக்க முடியாது எனக் கூறியுள்ளதோடு வைரஸ் தொற்று பரவும் விதம் போன்றவற்றை ஆராய்ந்து விஞ்ஞான ரீதியான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது என டொக்டர் சுதத் சமரவீர குறிப்பிட்டுள்ளார் (கொரோனாவினால் மரணித்த உடல்கள் தகனம், 2020).

- சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் (22.12.2020) ஆம் திகதியன்று பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடொன்றை எழுத்துமூலம் சமர்ப்பித்துள்ளார். "கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும் அரசாங்கம் மேற்கொள்ளும் பொதுவான சட்டத்தைக் கடைப்பிடிப்பது இந்த நாட்டு மக்களின் கடமையாகும். இவ்வாறான நிலையில் கொவிட் -19 தொற்றுக்கு உள்ளாகி உயிரிழப்பவர்களை தகனம் செய்யும் அரசாங்கத்தின் நடைமுறைக்கு எதிராக செயல்பட்டு வரும் நீதி அமைச்சர் அலி சப்ரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" (சிங்கள ராவய முறைப்பாடு,2020).

- அத்துடன் சிங்களே அமைப்பின் கொழும்பு மாவட்டத் தலைவர் டான் பிரியாசாத், கொரோனா மரணம் தொடர்பான சடலங்கள் அனைத்தையும் தகனம் செய்ய வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முனைந்துள்ளார் (ஜனாஸா எரிப்பு,2020).

**இலங்கையில் நடைபெற்ற முஸ்லிம் ஜனாஸாக்களின் எரிப்பு தொடர்பான தகவல்கள்**

- இரு நாட்களுக்குள் 15 ஜனாஸாக்கள் எரிப்பு

குளிரூட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 19 ஜனாஸாக்களுள் 15 ஜனாஸாக்கள் இரண்டு நாட்களுக்குள் எரிக்கப்பட்டுள்ளன. கொரோனாவினால் மரணித்த ஜனாஸாக்களை அடக்குவதா? எரிப்பதா? என்பது குறித்து இறுதி முடிவு வரும் வரை குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த 15 ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவற்றில் 27.12.2020 அன்று 10 ஜனாஸாக்களும் 28.12.2020 அன்று 05 ஜனாஸாக்களும் எரிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் ஜனாஸாக்கள் பற்றி இறுதி முடிவு வரும் வரை ஜனாஸாக்களை குளிரூட்டியில் வைத்துப் பாதுகாக்குமாறு சுகாதார அமைச்சு அறிவித்தல் விடுத்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இதுவரை இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களில் 120 பேர் முஸ்லிம்கள் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார் (இரு நாட்களுக்குள் ஜனாஸா எரிப்பு,2020).

- 20 நாள் குழந்தை எரிப்பு : (20 நாட்கள் குழந்தை,2020)

- 2 மாதக் குழந்தை:

வெலிகமை மலாப்பலாவ பகுதியில் கொரோனா தொற்று காரணமாக இரண்டுமாதக் கைக் குழந்தையொன்று (14.01.2020) ஆம் திகதி மரணமடைந்ததாக செய்திகள் வெளிவந்தன. இக்குழந்தையின் மரணம் தொடர்பாக லங்கா நெட் நிவ்ஸ் தேடலை மேற்கொண்ட போது குறித்த குழந்தை மரணமடைய முன் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் குறித்த குழந்தைக்கு கொரோனா தொற்றில்லை என்று உறுதியாகியுள்ளது. என்றாலும் மரணித்ததன் பின்னர் மேற்கொண்ட பரிசோதனையில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. குழந்தையின் ஜனாஸா 15.01.2021ஆம் திகதி தகனம் செய்யப்பட்டது (இருமாதக் குழந்தையின் தகனம்,2021).

- வெலிகமையில் பக்கவாதம் ஏற்பட்டு கொரோனாவால் மரணம்:

வெலிகம கல்பொக்க பகுதியைச் சேர்ந்த 55 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் மரணித்துள்ளார். குறித்த பெண் ஏற்கனவே கடந்த மூன்று மாதங்களாக பாரிசவாதத்திற்கு (Paralysis) உள்ளாகியிருந்தார். இந்நிலையில் இறுதியாக 17.01.2021 ஆம் திகதி நோய்வாய்ப்பாட்டு அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்கையில் மரணமடைந்துள்ளார். பின்னர் பிரதேச சுகாதார அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரில் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் மேற்கொண்ட பீ.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது என்று கூறியுள்ளனர் (வெலிகமயில் பக்கவாதம் ஏற்பட்டு கொரோனாவினால் மரணித்த பரிதாபம்,2021).

- தாயின் ஜனாஸா எரிப்பு: மகனின் வாக்கு மூலம் (கிரேன்பாஸ் சம்பவம்):

இறந்த தாயின் மகனான முஹம்மது இஹ்ஸான் கூறுகையில், “தனது தாய் டிசம்பர் 03 ஆம் திகதி வீட்டில் வழுக்கி விழுந்ததில் தலையின் பின்புறத்தில் காயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு தேசிய வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தோம். மறுநாள் அவருக்கு கொரோனா தொற்றிருந்ததாகக் கூறி அவரை ஹோமகம வைத்திய சாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பியுள்ளதாக கூறினார். பின்னர் டிசம்பர் 16 ஆம் திகதி வரை சிகிச்சை பெற்று வந்த நிலையில் 15.12.2020 அன்று காலை 10.30 மணியளவில் தனது தாய் பூரணமாக சுகம் கிடைத்து தன்னை Discharge பண்ணியுள்ளதாகவும் கூறினார். ஆனால் 17.12.2020 ஆம் திகதி அதிகாலை 4.00 மணியளவில் எமது தாயார் இறந்து விட்டதாக ஆஸ்பத்திரி நிர்வாகம் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்ட தெரிவித்தது. இறுதியாக 26.12.2020 ஆம் திகதியன்று 10 நாட்கள் கடந்த நிலையில் எமது அன்புத் தாயாரின் ஜனாஸாவை முற்பகல் 11.15 மணியளவில் கொஹுவலை பொது மயானத்தில் எமது அனுமதியின்றியே சாம்பலாக்கிவிட்டார்கள்.” எனக் குறிப்பிடுகின்றார் (தாயின் ஜனாஸா எரிப்பு,2020).

➢ 46 நாள் குழந்தை கொரோனாவில் மரணம்: (46 நாள் குழந்தை கொரோனாவினால் மரணம்,2020)

**ஏன் முஸ்லிம்களை அடக்கம் செய்ய வேண்டும்?**

இறந்த உடலைப் புதைப்பது ஒரு மனிதனின் பிறப்புரிமை மட்டுமல்ல. அது முஸ்லிம் சமூகத்தின் மீதுள்ள கூட்டுக் கடமையுமாகும். அவன் பிறக்கும் போதும் கண்ணியமானவன். இறக்கும் போதும் கண்ணியமானவன். அதைப் பேணுவது இஸ்லாமியர்களின் கூட்டுப் பொறுப்பாகும்.
இஸ்லாமிய வரலாற்றில் மையித்தை எரிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்த சூழ்நிலை காணப்படவில்லை. எனவே பிரேதங்களை எரிப்பது சம்பந்தமாக எந்த மார்க்கத் தீர்ப்பையும் இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியத்தை கண்டு கொள்ள முடியாது. 1907 ஆம் ஆண்டுகளில் எகிப்தில் பிணங்கள் எரிக்கும் உலைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டதாக ஒரு பதிவு உண்டு. அங்குள்ள முஸ்லிம் அல்லாதவர்களின் பிரேதத்தை எரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அந்த அனுமதி வழங்கப்பட்டது. அதுவும் கூட சர்ச்சைக்குரிய ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

இஸ்லாமிய வரலாற்றில் ஆரம்பம் காலம் முதல் பல தடவைகள் தொற்று நோய் பரவல் வந்து போயுள்ளது. ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சியில் இருக்கும் போது ஷாம் தேசத்தில் நிலை கொண்ட கொள்ளை நோய் பரவல் மிகவும் பிரபல்யமானது. இதில் சுமார் இருபதாயிரம் பேர் மரணத்தை தழுவினார்கள். அன்றும் அக்காலத்திற்குரிய வைத்திய நிபுணர்கள் இருந்தார்கள். ஆனால் புதைப்பது தான் தீர்வாக அமைந்தது.(முஹம்மது பகீஹுத்தீன்,2020)

காலத்திற்குக் காலம் வந்த தொற்று நோய் வரலாற்றில், முஸ்லிம்களின் மரணித்த உடல்களை புதைப்பதே மரபு வழியாக இருந்து வந்துள்ளது. தற்போது பரவியுள்ள கொரோனா கொவிட்-19 வைரஸ் தொற்று காரணமாக மரணித்தவர்களையும் சுட்டெரிக்கலாம் அல்லது அடக்கம் செய்யலாம் என்றே உலக சுகாதார அமைப்பு வழிகாட்டியுள்ளது. இலங்கையிலும் அதே ஒழுங்குதான் சட்டத்தில் இருந்தாலும் முஸ்லிம் புத்திஜீவிகளின் முயற்சியால் ஜனாஸாக்களை புதைப்பதற்கு உடன்பாடு எட்டப்பட்டது. ஆனால் அந்த சுற்று நிருபம் மாற்றப்பட்டுள்ளதாகவே கடைசியாக வந்த செய்திகள் உறுதி செய்தன.

இறந்த மனிதனின் பிரேதத்திற்கு உயிருள்ள மனிதனுக்கு உள்ள அதே கண்ணியமும் கௌரவமும் கொடுக்கப்பட வேண்டும் என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். “மரணித்த ஒரு மனிதனின் எலும்பை முறிப்பது, அவன் உயிருடன் இருக்கும் நிலையில் அவனது எலும்பை முறிப்பதற்கு சமனாகும்” என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (ஸுனன் அபூதாவுத் : 3207)

பிரேதத்தை பாடையில் சுமந்து செல்லும் போது கூட குழுங்காமல் அதிராமல் சுமந்து செல்ல வேண்டும் என நபிகளார் வழிகாட்டியுள்ளார்கள்.

ஒரு யூதனின் சடலம் போகும் போது கூட எழுந்து மரியாதை செய்த நபியவர்கள் அதுவும் ஓர் ஆத்மா தானே என்றார்கள். (புகாரி:1311) எனவே மையித்தை எரிப்பது அதற்கு செய்யும் இழிவாகும். மனிதன் மரணித்த பிறகும் கூட அவனது பிரேதம் காயப்படவோ அல்லது அவமானப்படுத்தப்படவோ கூடாது என இஸ்லாம் போதிக்கிறது.
தொற்று நோயுள்ள காலத்தில் இறந்த சடலங்களை ஒன்று எரிக்கலாம் அல்லது புதைக்கலாம் அல்லது இரசாயன கலவைகள் கொண்டு கரைக்கலாம். இதில் புதைப்பதே முஸ்லிம்களின் தேர்வாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதல்லாத ஒரு முடிவை தெரிவு செய்வதற்கு அவர்களது மார்க்கம் வழிகாட்டவில்லை.

எனவே இஸ்லாமிய சமயத்தின் புனிதங்களை மீறி சுட்டெரிப்பது கண்டிக்கத்தக்க விடயமே! எனவே இஸ்லாத்தின் தீர்க்கமான நிலைப்பாடு மரணித்த உடல்களை எரிக்கக் கூடாது என்பதே! ஒரு மனிதனின் அடிப்படை உரிமை என்ற வகையிலும் சமய ரீதியான கடப்பாடு என்ற வகையிலும் கொரோனாவின் காரணமாக இறந்த உடலை அடக்கம் செய்ய முழுமையான முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருவது கட்டாயமானதோர் விடயமாகும். (அல்லாஹ் எந்தவொரு ஆத்மாவையையும் அதன் சக்திக்கு மேல் நிர்ப்பந்திப்பதில்லை)

“இலங்கை அரசின் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட நோய்க்கிருமிகள் சம்பந்தப்பட்ட 06 நிபுணர்கள், 03 நுண்ணுயிர் ஆய்வாளர்கள், 01 நோயெதிர்ப்பு நிபுணர், 01 நோய்த்தடுப்பு நிபுணருமாக மொத்தம் 11 பேர் அடங்கிய குழாம் கொவிட் -19 ஆல் இறப்பவர்களை நல்லடக்கம் அல்லது தகனம் செய்யப்படலாம்” (இலங்கை சுகாதார அமைச்சு,2020).

1. இந்த நிபுணர்குழு 24.12.2020 அன்று சுகாதார அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டு 30.12.2020 அன்று அறிக்கையை சமர்ப்பிதத்தது. இந்த அறிக்கையின் நகல் ஊடகங்களால் வெளியிடப்பட்டிருந்தும் இந்த அறிக்கை குறித்து அரசாங்கத்தின் முடிவு எட்டப்படவில்லை.
2. கடந்த 2020.04.11 ஆம் திகதி சுகாதார அமைச்சின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி கொரோனாவினால் மரணிப்பவரை தகனம் செய்ய வேண்டியுள்ளது. எனவே அந்த வர்த்தமானியை மீள் திருத்த வேண்டிய தேவையுள்ளது.

- **குறித்த பரிந்துரையின் தமிழ் மொழிபெயர்ப்பு**

1. இறந்தவர்களின் மற்றும் அவர்களின் குடும்பங்களின் கௌரவம் மரணித்த உடலை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் செயல்முறை முழுவதும் முடிந்தவரை மதிக்கப்பட வேண்டும்.

2. நியமிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் மட்டுமே சடலங்களைக் கையாளுவதை செய்ய வேண்டும்.

3. உடல் தகனம் அல்லது அடக்கம் செய்ய உறவினர்களிடம் ஒப்படைக்கக்கூடாது.

4. உடலுடன் தொடர்பு கொள்ளும் அனைவரையும் (சுகாதார மற்றும் சவக்கிடங்கு ஊழியர்கள்) நிலையான தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு முன்னெச்சரிக்கைகளைப் பயன்படுத்துவதை உறுதிசெய்ய வேண்டும். தொடர்ச்சியான மற்றும் போதுமான கை சுகாதார பொருட்கள், பிபிஇ, சுத்தம் மற்றும் கிருமிநாசினி பொருட்கள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

5. தகனம் அல்லது அடக்கம் செய்வதற்கான உடல்களை எம்பம் செய்யக்கூடாது.

6. உடலை அகற்றுவதற்கான உத்தரவு வழங்கப்பட்டவுடன், தகனம் அல்லது அடக்கம் 24 மணி நேரத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. சவப்பெட்டியில் வைப்பதற்கு முன், உடலை இரட்டை அடுக்கு உடல் பையில் வைக்க வேண்டும். உடல் பைகள் 300 ரஅ தடிமன் கொண்டதாக இருக்க வேண்டும், உறிஞ்சக்கூடிய பொருட்களால் சுற்றப்பட்டு, கசிவு மற்றும் மக்கும் தன்மை இல்லாதவைகளாக அவை இருக்க வேண்டும்.

8. உடலைப் பார்ப்பது சுகாதார வசதி சவக்கிடங்கிற்குள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

9. குடும்பத்தினர் உடலைக் காண விரும்பினால், உடல் பையைத் திறந்து அவிழ்த்து, ஒரு மீட்டர் தூரத்தில் ஒரு முக மூடியை அணிந்து, ஒருவருக்கொருவர் வைத்திருக்க அனுமதிக்க வேண்டும்.

10. இறந்த நபரின் உடலையோ அல்லது உடமைகளையோ தொடுவது அனுமதிக்கப்படாது. உடலை பார்ப்பதற்கு உடல் பையில் இருந்து அகற்றக்கூடாது.

11. குடும்பத்தைச் சேர்ந்த 4 நபர்கள் மட்டுமே உடலைக் காண அனுமதிக்கப்படுவார்கள். ஒரு நேரத்தில் இரண்டு நபர்கள் உடலைக் காண அனுமதிக்கப்பட வேண்டும், மேலும் இரண்டு நபர்களுக்கு அதிகபட்சம் 5 நிமிடம் இரண்டு நபர்கள் வீதம் உடலை மேற்பார்வையின் கீழ் பார்க்க அனுமதிக்க வேண்டும். உடலைப் பார்க்க மொத்தம் 10 நிமிடம் அனுமதிக்கப்படுகிறது.

12. உரிய அதிகாரிகளால் உடல் தகனம்.். அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு கொண்டு செல்லப்படும்போது, குடும்பத்தைச் சேர்ந்த அதிகபட்சம் 4 நபர்கள் உடலுடன் ஒரு தனி போக்குவரத்து முறையில் செல்ல அனுமதிக்கப்படலாம்.

13. சுகாதார அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட தகனம் அடக்கம் செய்யப்பட்ட இடம் உடலை அகற்ற பயன்படுத்தப்பட வேண்டும்.

14. சவப்பெட்டி எந்த காரணத்திற்காகவும் தகனம் அல்லது அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் திறக்கப்படாது.

15. சமூக தூர மற்றும் நிலையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைபிடிக்கும் போது தகனம், அடக்கம் செய்வதற்கு முன்னர் தகனம் அடக்கம் செய்யும் இடத்தில் மேற்பார்வையின் கீழ் எந்த மத நடவடிக்கைகளுக்கும் 10 நிமிடங்கள் அனுமதிக்கவும். மதச் செயல்பாட்டின் போது ஒரு மத பிரமுகரும் குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் மட்டுமே ஆஜராக அனுமதிக்கப்படுவார்கள்.

16. கல்லறையின் அடிப்பகுதி தரை மேற்பரப்பில் இருந்து 1.5அடி மற்றும் நிலக் கீழ் நீர்மட்டத்திற்கு மேலே 1.2 அடி இருக்க வேண்டும். அடக்கம் செய்யும் இடம் மற்றும் வடிகால்களுக்கு இடையிலான தூரம் குறைந்தபட்சம் 10அடி இருக்க வேண்டும். புதைகுழி மற்றும் குடிநீர் கிணறுகள், போர்ஹோல்கள் மற்றும் கிணறுகள் ஆகியவற்றுக்கு இடையேயான தூரம் குறைந்தபட்சம் 250அடி இருக்க வேண்டும். உலகளாவிய நிபுணர்களின் தற்போதைய பரிந்துரைகளின்படி அடக்கம் செய்யப்படும் இடம் மற்றும் நீரூற்றுகள் மற்றும் நீர் நிலைகளுக்கு இடையிலான தூரம் குறைந்தபட்சம் 30ஆக இருக்க வேண்டும்.

**மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய மூவரடங்கிய குழு நியமனம்**

இந்நாட்டில் இடம் பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல் தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகளை பெற்றுக் கொடுக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் மூவரடங்கிய விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதி பதி ஏ.எச்.எம். நவாஸின் தலைமையிலான குறித்த விசாரணைக் குழு ஜனவரி 20 ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ மற்றும் ஓய்வு பெற்ற மாவட்டச் செயலாளர் நிமல் அபேசிறி ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர் (மூவரடங்கிய குழு நியமனம்,2021).

**பொறுப்புக்கள் அரசாங்கத்தால் இழுத்தடிக்கப்படுகின்றன.**

"ஆறு மாதங்கள் தேவை என, பிற்போடப்பட்ட சமூகத்தின் முக்கிய பிரச்சினை, அதிலும் தீர்க்கப்படாமல் மீண்டும் மீண்டும் இழுத்தடிப்புக்கள் இழுபறிகள் நடந்தே வருகின்றன. ஏனெனில் கொரோனா மரணம் சம்பந்தமாக உலக அரங்கில் தெளிவான ஒரு தீர்வுகளும் தெளிவான ஆராய்ச்சிகளும் உள்ள போது நம் நாட்டில் அரசு மருத்துவ பிரிவுக்கும், மருத்துவ பிரிவு புவியியல் பிரிவுக்கும் அரசுக்கும் மாறி மாறி பந்தைக் கைமாற்றுவதில் அந்த நாட்டின் சனத் தொகையில் ஒரு பிரிவாக ஒரு அங்கமாக உள்ள முஸ்லிம்களின் உரிமைகளில் முக்கிய பிரச்சினைகளில் அரசு முன்னுரிமை வழங்குவதில் கரிசனை கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது.

ஜனாஸாக்களை அடக்கம் செய்யலாம் என ஆயிரம் ஆய்வுகள் இருந்தபோதிலும் ஒரு சமுதாயத்தின் மனநிலை பற்றி கணக்கில் எடுக்காமல் எரித்தவர்கள், அடக்குவதை அனுமதிக்காமல் இருப்பதற்கு ஆய்வுகளை சோடிக்கின்றனர். எரிப்பதால் பாதிப்படையும் சமூகத்தின் நிலை பற்றி சிந்திக்காதவர்கள் அடக்கம் செய்வதால் எந்தப் பாதிப்பும் அடையாத சமூகம் பற்றி சிந்திக்கின்றனர்.

ஒருதலைப்பட்சமாக சில மணித்தியாலங்களில் எந்த ஆதாரமும் இல்லாமல் எரிக்கும் முடிவை எடுத்தவர்களுக்கு அடக்கம் செய்வதற்கு ஆயிரம் ஆய்வுகளும் பத்திற்கு மேற்பட்ட காலமும் போதாமல் இருப்பது கவலைக்குரியதோர் விடயமே!

**அதிகரித்து வரும் அழுத்தங்கள்:-**

- ஜனாஸாக்களை தகனம் செய்யும் விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் மீது அதிகரித்து வரும் அழுத்தங்கள்

கொரோனாவினால் உயிரிழப்பவர்களின் சடலங்களை கட்டாயம் தகனம் செய்யும் நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வருமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கை அரசாங்கத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நான்கு விசேட நிபுணர்களை மேற்கோள் காட்டி இது தொடர்பான அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. கொரோனா உறுதிப்படுத்தப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படும் நபர்களின் சடலங்களைத் தகனம் செய்வதற்கு இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானமானது மனித உரிமை மீறலுக்கு நிகரான விடயமாகும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் நபர்களின் சடலங்களை புதைப்பதனூடாக கொரோனா தொற்று பரவுவதற்கான அபாயம் அதிகரிப்பதாக மருத்துவ மற்றும் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலத்தடி நீரின் ஊடாக வைரஸ் பரவுவதற்கான வாய்ப்பு உள்ளதாக கூறியே இலங்கை அரசாங்கம் சடலங்களைத் தகனம் செய்வதாக ஐ.நா.சபையின் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது. எனினும், சடலங்களை புதைப்பதன் ஊடாக வைரஸ் பரவுவதற்கான வாய்ப்பில்லை என உலக சுகாதார ஸ்தாபனம் உறுதிப்படுத்தியுள்ளதாக மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த நிலையில் இலங்கை முஸ்லிம்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையினரை துன்புறுத்தும் நோக்கில் பாகுபாடு, அடக்குமுறை மற்றும் தேசிய வாதம் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கொரோனாவினால் பாதிக்ககப்பட்டதாக கூறப்படும் நபர்களின் சடலங்களை அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்காது தகனம் செய்யப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சடலங்கள் தகனம் செய்யப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் முஸ்லிம்கள் உள்ளிட்ட ஏனைய சிறுபான்மை மக்கள் மீது பிரயோகிக்கப்படும் வெறுப்புணர்வு உள்ளிட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது (இலங்கை அரசாங்கத்தின் மீது அதிகரித்து வரும் அழுத்தங்கள், 2021).

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் வலுகட்டாயமாகத் தகனம் செய்யப்படுகிறது. முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான இந்தத் தீர்மானத்தை அரசாங்கம் நிச்சயமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று பிரிட்டன் முஸ்லிம் கவுன்சில் வலியுறுத்தியிருக்கிறது. மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, அரசாங்கத்தின் இத்தீர்மானம் இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் மதரீதியான நம்பிக்கை மற்றும் உரிமை என்பவற்றைப் பாதிப்பதுடன் இதுவிடயத்தில் முன்வைக்கப்படும் விஞ்ஞான பூர்வமான முறைக்கும் எதிரானதாகக் காணப்படுகின்றது என்று அந்த கவுன்சில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இறுதிசடங்குகள் குறித்த உரிமைகளை மதிக்குமாறு இலங்கை ஜனாதிபதிக்கு வேண்டுகோள்விடுத்துள்ள ஐ.நா முஸ்லீம்களிற்கு எதிரான குரோத பேச்சுக்களை கட்டுப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளது . ஐநாவின் மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்திற்கான விசேட அறிக்கையாளர் அஹமட்சஹீட் இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் (றஜீபான், (2020,February14). இறுதி சடங்குகள் குறித்த உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றுங்கள் இலங்கை ஜனாதிபதிக்கு ஐ.நா வேண்டுகோள் முஸ்லீம்களிற்கு எதிரான குரோத பேச்சுக்கள் குறித்து கவலை. (வீரகேசரி,2020).

**நாட்டின் பல பாகங்களிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்**

1. பேருவளை- இடைநிறுத்தம் (பேருவளை ஆர்ப்பாட்டம்,2020).
2. கல்முனை தந்தை மற்றும் மகன் நடைப்பவனி - இடைநிறுத்தம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் கல்முனைத்தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ். அப்துர் ரஸ்ஸாக் தலைமையில், மக்கள் வங்கிக்கு முன்பாக 2020.12.25 ஆம் திகதி அமைதி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.
3. வவுனியா- முஸ்லிம் மௌலவி ஒருவர் தனியாக ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தல்.
4. பொரல்ல மயானத்துக்கு அருகில் வெள்ளைத் துணி கட்டல்: கொரோனா நோய் தொடர்பில் இடம்பெறும் மரணத்தின்போது, முஸ்லிம்கள் உள்ளிட்ட அவரவர் மத அனுஷ்டானங்களுக்கு அமைய, உடல்களை அடக்கம் செய்ய அரசாங்கம் உடனடியாக அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் ஆகியோரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாஷிம், முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம். மரிக்கார், மனோ கணேசன், குமார வெல்கம உள்ளிட்டோர் இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.
5. வீடுகளில் வெள்ளைத் துணி பறக்கவிடல் (வெள்ளைத்துணி போராட்டத்தில் இணைந்த மங்கள,2020).
6. பாராளுமன்றத்தில் பல அமைச்சர்கள் முஸ்லிம் ஜனாஸாக்களை அடக்கம் செய்தல் தொடர்பாகப் பேசல்.
7. உயர் நீதிமன்றத்தால் ஜனாஸாக்களை அடக்குவது தொடர்பான வழக்குத் தாக்கல் ரத்து செய்யப்பட்டமை.
8. கொழும்பில் கபன் துணி போராட்டம்: குறித்த ஆர்பாட்டம், “கபன் துணி போராட்டம்” என்ற தொனிப் பொருளில் இடம்பெற்றது (கொழும்பில் கபன் துணிப் போராட்டம்,2020).
9. புத்தளம், யாழ்ப்பாணம், அக்குரணை, களுத்துறை, காலி, நுவரெலியா, மன்னார் போன்ற இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைப்பெற்றன.

**மரணித்த உடல்களை அடக்கம் செய்ய அனுமதிப்பதை ஆதரிக்கும் கருத்துக்கள்**

- ஸ்ரீலங்கா பிரஜா மருத்துவர்களின் கல்லூரி (CCPSL)

கொவிட்-19 பாதிக்கப்பட்டவர்களை அடக்கம் செய்ய அனுமதிப்பதை ஆதரிக்கும் மிக சமீபத்திய அறிக்கையொன்றை ஸ்ரீலங்கா பிரஜா மருத்துவர்களின் கல்லூரி வெளியிட்டுள்ளது. அவர்கள், இறந்த உடல்களை அடக்கம் செய்வது கொவிட்-19 இன் பரவலை அதிகரிக்கும் என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் இல்லை என்று கூறியுள்ளனர். மேலும் ஒவ்வொரு குடிமகனையும் அவரவர் மற்றும் அவரின் குடும்பத்தின் விருப்பதிதின் படி தகனம் செய்யவோ அல்லது அடக்கம் செய்யவோ அனுமதிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது.

▪ **ஸ்ரீலங்கா மருத்துவச் சங்கம்**

"தற்போதுள்ள விஞ்ஞானத் தரவுகளின் அடிப்படையில் கொவிட்-19 காரணமாக மரணிப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்க முடியும் என ஸ்ரீலங்கா மருத்துவச் சங்கமும் பரிந்துரை செய்துள்ளது. ஒரு உயிருள்ள உடலிலேயே வைரஸ் பெருக முடியுமென்றும் உயிரற்ற உடலில் குறிப்பிடுமளவு நீண்ட காலத்திற்கு வைரஸ்கள் வாழ முடியாது எனவும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

▪ **பேராசிரியர் மலிக் பீரிஸ்**

உலகப் பிரசித்தி பெற்ற வைரஸ் நிபுணரில் ஒருவரான தற்போது ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் வைரஸ் பிரிவின் தலைவராகப் பணியாற்றும் இலங்கை பேராசிரியர் மலிக் பீரிஸ் அவர்களும் அடக்கம் காரணமாக கொவிட்-19 வைரஸ் பரவுவதன் சாத்தியப்பாடு மிக மிகக் குறைவு என்றும் உக்கிப் போகாத பொருளால் சுற்றி (மெடீரியல்) அடக்கம் செய்வது அதிகம் பாதுகாப்பானது எனவும் அவர் சிபாரிசு செய்துள்ளார்.

▪ **டாக்டர் நிஹால் அபேசிங்**

வைரஸ் நிபுணர் மற்றும் முன்னாள் அரச நோய்ப் பிரிவின் தலைவர் டாக்டர் நிஹால் அபேசிங்ஹ அவர்களும் கொவிட்-19 காரணமாக மரணிப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதிக்கலாம் என்றும் ஒரு அடக்கஸ்தளத்தின் நில நீரிலிருந்து கிருமிகள் வெளியாகி சுகாதார அச்சுறுத்தல் ஏற்படும் என்ற கேள்விக்கே இடமில்லை எனவும் கூறியுள்ளார்.
(Talk show – Prof. Nihal Abeysinghe)

▪ **உலக சுகாதார அமைப்பு**

2020 செப்டெம்பர் மாதம் உலக சுகாதார அமைப்பு 'நோய் பரவல் தடுப்பு மற்றும் கொவிட்-19 பின்னணியில் உடல்களை அடக்கம் செய்தல்' என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையிலும் குறிப்பிட்ட சில வழிமுறைகளை பேணும் பட்சத்தில் கொவிட்-19 காரணமாக மரணிப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கலாம் என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தொற்று காரணமாக மரணிப்பவரின் உடலைத் தகனம் செய்ய வேண்டும் என பொதுவான நம்பிக்கை இருந்தாலும் இதற்கான விஞ்ஞான ஆதாரங்கள் குறைவாகவே உள்ளது என அவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது. (WHO)

▪ **அமெரிக்க சுகாதார மற்றும் மானிட சேவைகள் திணைக்களத்தின் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நிலையம்**

அமெரிக்காவிலுள்ள மேற்படி அமைப்பும் கொவிட்-19 காரணமாக மரணிப்பவர்களை அடக்கம் செய்வதால் நோய் பரவும் அபாயம் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளது. எனவே மரணித்தவரின் குடும்பத்தினர்களின் இறுதிக் கிரியை தொடர்பான விருப்பங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் அவ்வமைப்புக் கூறியுள்ளது (அகில இலங்கை ஜமியத்துல் உலமாவினால் சு.சே. பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம்,2021).

▪ **அடக்கினாலும் வைரஸ் பரவாது - சந்திரிகா**

"முஸ்லிம் மக்களின் மீது காணப்படும் அரசியல் பழிவாங்கல் நோக்கத்திற்காக, நாம் பௌத்தர்கள் எனக் கூறும் அடிப்படைவாதிகளின் முஸ்லிம்கள் மீதுள்ள வெறுப்பிற்காக அவர்களைப் பழிவாங்குவது சிறந்ததல்ல. எனவே கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எவ்வித அடிப்படையுமின்றி தகனம் செய்யப்படுகின்றமை தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன (உயிரிழந்தவர்களை பெட்டியின்றி அடக்கல்,2020).

உள்நாட்டு மற்றும் சர்வதேச விசேட வைத்தியர்களுடன் இவ்விடயம் பற்றி ஆலோசித்ததன் பின்னர் தற்போது இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிடுகின்றேன் என மேலும் கருத்துக் கூறியுள்ளார். மேலும் இலங்கையில் எடுக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் அடிப்படையற்றது. காரணம், கொரேனாவால் உயிரிழந்தவர்களின் பெட்டி இன்றி நிலத்தில் புதைக்கப்பட்டாலும் மண் அல்லது நீர் மூலம் வைரஸ் மீண்டும் பரவ எவ்வித வாய்ப்புமில்லை என்று விஞ்ஞானபூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.உலகில் முக்கிய நாடுகளில் ஆய்வு செய்யப்பட்டு இந்த விடயம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்கள் பல நூற்றாண்டுகளாக பின்பற்றிவரும் அவர்களது நம்பிக்கை நாட்டில் சிதைக்கப்பட்டுள்ளது. அவர்களது நம்பிக்கைக்கு ஏற்ப வாழ்வதற்கும் இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கும் அவர்களுக்கு உரிமையிருக்கிறது. அவ்வாறிருக்கையில் ஏன் அந்த மக்களின் ஜனாஸாக்களை பலவந்தமாகத் தகனம் செய்கிறார்கள்? அரசாங்கம் சரியான வகையில் விஞ்ஞானபூர்வமாக அதற்காக தீர்வொன்றை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்". (21.12.2020)

இவை தவிர இவ்விவகாரம் தொடர்பாக சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவும் அடக்கம் மற்றும் தகனம் ஆகிய இரண்டையும் மேற்கொள்ளலாம் எனப் பரிந்துரைத்துள்ளது. அடக்கம் செய்யப்பட்ட பின்னர் நீர் மாசுபடுவதன் மூலம் வைரஸ் பரவுகிறது என்பதை நிரூபிக்க எந்த விஞ்ஞானபூர்வமான ஆதாரமும் இல்லை என்று அக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் உடல்களை எரிப்பது பேரழிவு தரும் விளைவுகளை ஏற்படுத்தும் மிலிந்த மொரகொட: இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை தாய்நாட்டில் அடக்கம் செய்யாமல் தகனம் செய்ய இலங்கை அரசு எடுத்துள்ள தீர்மானம் குறித்து அரசாங்கத்திற்குள் அதிருப்தி அதிகரித்து வருகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனமும் கூட முஸ்லிம்களின் இறுதி சடலங்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என அறிவித்துள்ளதோடு தீவிரவாத சிந்தனையிலிருந்து வெளியேறி அறிவார்ந்து செயற்பட வேண்டிய பொறுப்பு நாட்டிற்கு காணப்படுவதாக, இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகரும் முன்னால் அமைச்சருமான மிலிந்த மொரகொட அறிவுறுத்தியுள்ளார்.

“அனைத்து மத மற்றும் தேசிய பழக்கவழக்கங்களுக்கு மதிப்பளிப்போம்” என்ற தலைப்பில் கொழும்பு சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய பந்தியில் இவர் இதனைக் கூறியுள்ளார்.

கொரோனா நோய்த் தொற்று காரணமாக முஸ்லிம்கள் இறந்தால் அவர்களின் இறுதி சடங்கிற்கான ஏற்பாடுகள் குறித்து வலுவான விவாதம் நடைபெற்று வருவதை சுட்டிக் காட்டிய முன்னாள் அமைச்சர், பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் சமூக கலாசாரங்களுக்கு மரியாதை உள்ள உயர் சமூகமாக நடுநிலை தீர்வை எட்டுவது பொருத்தமானது என வலியுறுத்தியுள்ளார்.

அயல் வீட்டாரின் மரணத்தை நல்லிணக்கத்திற்கான முதல் படியாக மாற்ற முன்மொழிந்துள்ள இலங்கையின் இந்தியாவிற்கான உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, வைரஸால் ஏற்படும் ஆபத்துக்களைக் கருத்திற் கொண்டு உடலைத் தகனம் செய்வதற்கான தீர்மானமானது, முஸ்லிம்களின் நம்பிக்கைகளுக்கு சவாலாக அமைந்துள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். இது எதிர்காலத்தில் பேரழிவு தரும் விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் முன்னாள் அமைச்சர் எச்சரித்துள்ளார்.

கொரோனாவால் உயிழிப்பவர்களை அடக்கம் செய்ய உலகின் பிற நாடுகள் அனுமதித்துள்ளது எனவும், சுட்டிக் காட்டியுள்ள அவர், மேலும் இலங்கையில் முஸ்லிம்களுக்கு இந்த விடயத்தில் தடை விதிக்கப்படுவது பிரச்சினைக்கு வழிவகுக்கம் எனவும் கூறியுள்ளார் (**Tamil.newsnow.lk, 2020**).

**ஜனாஸாக்களை அடக்க வேண்டும் என்பதற்கான இஸ்லாமிய ஆதாரங்கள்**

- மனிதன் (இறப்பெய்தி, மண்ணோடு மண்ணாக மக்கிப்போன பின்னர்) அவனுடைய எலும்புகளை நாம் ஒன்று சேர்க்கவேமாட்டோம் என்று எண்ணுகின்றானா? (75:03)
- “உயிருடன் புதைக்கப்பட்ட (பெண் குழந்தையான)வளும் வினவப்படும்போது”(81:08)
- “எதனைக் கொண்டு நன்மாராயனங் கூறப்பட்டானோ, அதன் தீமையினால் இழிவுடன் அதை வைத்துக் கொள்வதா? அல்லது அதை மண்ணில் புதைத்து விடுவதா? என்று (கவலைப்பட்டு, மக்கள் முன் வராமல்) சமூகத்தாரை விட்டும் மறைந்து கொள்கின்றான்; அவர்கள் செய்யும் தீர்மானம் மிகக் கெட்டது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்”.(16:59)
- “(பூமியாகிய) அதிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம்;பின்னர், அதிலேயே நாம் உங்களை மீள வைப்போம்; மற்றொரு தடவையும் (உங்களுக்கு உயிர் கொடுத்து) அதிலிருந்தே நாம் உங்களை வெளிப்படுதடதுவோம்” (என்று அவனுக்குக் கூறும்படிச் செய்தோம்).(20:55)
- “பின்னர், பூமியைத் தோண்டக் கூடிய ஒரு காகத்தை, தன் சகோதரரின் பிரேதத்தை எவ்வாறு அவர் மறைக்க வேண்டுமென்பதை அவருக்கு அது காண்பிப்பதற்காக அல்லாஹ் அனுப்பி வைத்தான்; (அது பூமியைத் தோண்டிற்று. இதனைக் கண்ட) அவர், “என்னுடைய கேடே! இந்தக் காகத்தைப் போல் ஆவதற்குக் கூட இயலாதவனாக நான் ஆகிவிட்டேனா? அவ்வாறு (நான் இருந்திருந்தாலும்,) என் சகோதரரின் சவத்தை நான் மறைத்திருப்பேன் என்று (அழுது) கூறி கைசேதப்படக் கூடியவர்களில் ஒருவராக அவர் ஆகிவிட்டார்”.(05:31)
- “பிறகு, அவனை அவன் மரணிக்கச் செய்தான்;அப்பால் மண்ணறையில் அவனை அவன் ஆக்குகின்றான்”.(80:21)
- உயிரோடிருப்போரையும், மரணித்தோரையும் (அணைத்துக் கொள்ளக் கூடியதாக அதை நாம் ஆக்கினோம்.) (அல்குர்ஆன்: 77:26)

- (அதற்கு அல்லாஹ்) “இதிலிருந்து நீங்கள் இறங்கி விடுங்கள், உங்களில் சிலர் (மற்ற) சிலருக்கு பகைவர்களாவீர்கள், பூமியில் உங்களுக்குத் தங்குமிடம் உண்டு, (அதில்) ஒரு காலம் வரை சுகம் அனுபவித்தலும் உண்டு” என்று கூறினான். (அல்குர்ஆன்: 7:24)

- “அதிலேயே நீங்கள் வாழ்வீர்கள், அதிலேயே நீங்கள் இறப்பீர்கள், (பின்னர் ஒரு நாளில்) அதிலிருந்தே நீங்கள் (மீண்டும் உயிர் கொடுத்து) வெளியாக்கப் படுவீர்கள்” என்று கூறினான். (அல்குர்ஆன்: 7:25)

- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது தோழர்களிடம், “நீங்கள் சென்று உங்களது தோழரை நல்லடக்கம் செய்யுங்கள்” என்று கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம் : 2236)

- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உஹத் என்ற இடத்தில் ஷஹீதாக்கப்பட்டவர்களைக் குறித்து தம் தோழர்களிடம், அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட இடங்களிலேயே அவர்களை நல்லடக்கம் செய்து விடுங்கள் என்று கூறினார்கள். (ஸுனன் அபூதாவுத் : 8557)

- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் நீங்கள் சென்று, உங்கள் தந்தை அபூ தாலிப் அவர்களை அடக்கம் செய்வீராக!” என்று கூறினார்கள். (ஸுனன் நஸாஈ : 193)

- “மரணித்தவரின் எலும்பை முறிப்பது, உயிருடன் இருப்பவரின் எலும்பை முறிப்பது போன்றாகும்.” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (ஸுனன் அபூதாவூத்: 3207)

- நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மைய்யத்துக்களை கப்ரில் வைக்கும் போது “பிஸ்மில்லாஹி வஅலா மில்லத்தி ரசூலில்லாஹி என்று கூறுவார்கள்.”(இப்னுமாஜா 1597)

- நாங்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது மகளாரின் அடக்கத்தில் கலந்து கொண்டோம். அப்போது கப்ருக்கருகில் உட்கார்ந்திருந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி லஸல்லம்) அவர்களின் கண்கள் கண்ணீர் வடிந்து கொண்டிருந்ததை நான் பார்த்தேன். (கடந்த) இரவு வீடுகூடாதவர் உங்களில் யாரும் உண்டா என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கேட்டார்கள். அப்போது அபூதல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நான் இருக்கிறேன் என்றதும் “இந்தக் கப்ரில் இறங்குங்கள் என்றார்கள். உடனே அவர் கப்ரில் இறங்கி அடக்கம் செய்தார்.” அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரி:1342)

மேற்கூறப்பட்ட ஹதீஸ்கள், மரணித்த ஒருவரை பூமியில் கட்டாயம் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதையே உணர்த்துகின்றன. அல் குர்ஆனில், ஒருவர் மரணித்துவிட்டால் அவரை அடக்கம் செய்யவேண்டும் என்பதைத் தவிர வேறு எம்முறைகளும் கூறப்படவில்லை. அதேபோன்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஹதீஸ்களில் தெளிவாகவும் நேரடியாகவும் “அடக்கம் செய்யுங்கள்” என்ற ஏவலே வந்துள்ளது.

பொதுவாக ஒரு விடயத்தை செய்யுமாறு ஏவப்படுவது, அதனை கட்டாயம் செய்யப்பட வேண்டும் என்பதையே குறிக்கின்றது. எனவே, இவ்விருமூலாதாரங்களை வைத்தே மார்க்க அறிஞர்கள் அடக்கம் மாத்திரமே செய்யப்பட வேண்டும் என்றும், அதற்கு மாற்றமாக வேறு ஒரு முறையை கையாள்வது மார்க்க அடிப்படையில் தடுக்கப்பட்ட (ஹராம்) ஆகும் என்றும் கூறியுள்ளனர்.

அடக்கம் செய்வது பற்றி இஜ்மா (இஸ்லாமிய அனைத்து மார்க்க அறிஞர்களின் ஒட்டுமொத்த தீர்ப்பு) மரணித்தவரை பூமியில் நல்லடக்கம் செய்வது கட்டாயம் என்பது மார்க்க அறிஞர்களின் ஏகோபித்த கருத்து என இமாம் இப்னுல் முன்திர், இமாம் அந் நவவி, இமாம் அல் மர்தாவீ, இமாம் இப்னுல் முலக்கின் மற்றும் இப்னுல் ஆபிதீன் (ரஹீமஹுமுல்லாஹ்) போன்றோர் குறிப்பிட்டுள்ளார்கள். அல்லாஹ்வே எல்லாவற்றையும் நன்கறிந்தவன்!

**விஞ்ஞான ரீதியான ஆதாரங்கள்:**

- நவீன அறிவியல் வளர்ச்சியின் மூலம் மனித உடல் கூறுகளை ஆராய்ச்சி செய்தபோது, இப்பூமியின் நிலப்பரப்பில் காணப்படும் பல்வேறு மூலக்கூறுகள், சத்துக்கள் மனித உடலிலும் காணப்படுவதாக அறிவியலறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். சராசரியாக ஒரு உயிரினம் 95% கார்பன், ஹைட்ரஜன், ஒக்சிஜன், நைட்ரஜன், பொஸ்பரஸ், சல்பர் மற்றும் இரும்பு ஆகிய மூலக்கூறுகளைப் பெற்றுள்ளன. இவையல்லாத மேலும் 26 வகையான வெவ்வேறு மூலக்கூறுகளையும் பெற்றிருக்கின்றன.

- ஒருவர் இறந்து சில மணிநேரங்களுக்கு, கூடியது 72 மணி நேரங்கள்வரை இந்த உடலில் ஏற்கனவே இருந்த கிருமிகள், வைரஸ்கள் இருக்கும். அதன் பின்னர் பக்டீரியாவைத் தவிர ஏனையவை முற்றாக அழிந்துபோகும். எனவே அந்த சடலத்தை புதைக்க முடியும் என்பதாக தொற்று நோய்கள் சம்பந்தமான துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றிருக்கும் பேராசிரியர் நிஹால் அபேஸிங்ஹே குறிப்பிடுகின்றார்.

- ஹொங்கொங் இல் பணியாற்றி வரும் பேராசிரியரும் நோய்க் குணங்களை ஆய்வுசெய்யும் வல்லுநருமாகிய மலிக் பீரிஸ் (pathologist & virologist) குறிப்பிடுவதாவது "வைரஸ் கிருமிகள் உயிருள்ள கலங்களில்தான் வாழும். அதிலிருந்து தான் பரவும். கலங்கள் இறந்தால் பக்டீரியாவைத் தவிர ஏனைய வைரஸ் கிருமிகளால் வாழ முடியாது இறந்துபோகும். அத்தோடு இறந்த சடலத்தின் மீது கிருமிகளை அழிக்கும் பல்வேறு வேதியில் இராசயனங்களைத் தெளித்து, அதனை கணமான பொலித்தீன் உரையினால் பொதி செய்து, அதன் மீது மீண்டும் இரசாயனங்கள் தெளித்து நிலத்தில் நான்கு அடிகளுக்கு கீழ் தோண்டி புதைத்தபின்னரும் நோய்க் கிருமி பரவும் என்பது எந்த வித விஞ்ஞான முறையுமில்லாத வாதமாகும் – This is completely nonscientific argument" என்கிறார்.

- தரம் 10 இன் விஞ்ஞானப் புத்தகத்தில் "அங்கிகளின் சிறப்பியல்புகள்" என்ற பாடத்தில் வைரஸ்கள் உயிருள்ளவற்றில் மாத்திரமே வாழ்கின்றன. இறந்தவற்றில் அவை வாழ்வதில்லை என்று அச்சிடப்பட்டிருக்கின்றது.

- கிருமிகளை அழிக்கக்கூடிய டெட்ரா சைக்ளின், டெட்ராலைட் ஆகிய இரண்டு மூலங்களும் மண்ணில் உள்ள புழுதிகளில் உள்ளன. எனவே இந்த மூலங்கள் கிருமிகளை அழித்து சுத்தப்படுத்துகிறது. பலவிதமான நோய்கிருமிகள் உடலில் உள்ள நிலையில் மரணித்தவர்கள் அடக்கம் செய்யப்பட்டபின் அந்த கிருமிகள் பூமியில் உயிரோடு இருப்பதில்லை. ஏனென்றால் மண்ணில் உள்ள இவ்வகையான மூலங்கள் அந்தக் கிருமிகளை அழித்து விடுகின்றன. இதனை விஞ்ஞானிகள் ஆய்வு செய்து நிரூபித்துள்ளனர்.

- சமீபத்திய விஞ்ஞான ஆய்வொன்று இதனை உறுதிப்படுத்துகின்றது. டொக்டர் சேம் பர்னியா அவர்களின் தலைமையில் NYU's Langone Medical Center இனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் "ஒருவர் இறந்து அவருடைய இதயம் செயற்பாட்டை நிறுத்திய பின்னரும் சில மணி நேரங்களுக்கு அவருடைய மூளை மற்றும் உடலில் உள்ள பல கலங்கள் இயங்கிக்கொண்டுதான் இருக்கும். அந்த நிலையில் இந்த இறந்த மனிதரைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதை அவரால் உணர்ந்துகொள்ள முடியும். மருத்துவர்கள், தாதிகள் பேசிக்கொள்வதையெல்லாம் அவரால் கேட்க முடியும், தான் இறந்துள்ளதையும் அவரால் உணர முடியும்" எனத் தெரியவந்துள்ளது.

- சுத்தமான மண் என திருக்குர்ஆன் குறிப்பிடுவதில் நிறைய இயற்கை மருத்துவ காரணங்கள் இருக்கிறன. இயற்கை மருத்துவத்தின் ஒரு அங்கமாக திகழ்வதுதான் தயம்மும் என்ற "மண் மருத்துவம்". மண்ணிற்கு சில பண்புகள் உண்டு. அது உடலில் சேர்ந்துள்ள அன்னிய பொருள்களை களைத்துவிடும். நறுமணம் கமழும் சுத்தமான செம்மண், மிருதுவான வண்டல் மண், தோல் வியாதிகளை போக்கக் கூடியது என்பதால் தான் இயற்கை மருத்துவத்தில் மண் சிகிச்சையை பயன்படுத்துகிறார்கள். விஷப்பாம்புகள் கடித்தால் கூட அந்த சமயத்தில் உடம்பு முழுவதும் ஈரமண் வைத்து கட்டினால் பாம்பு கடித்தவனை குணப்படுத்திவிடும் என்கிறார். "இயற்கைக்கு திரும்புக" (Return to Nature) என்ற புகழ்பெற்ற புத்தகத்தை எழுதிய டாக்டர் ஜஸ்ட் மண்ணின் மருத்துவ ஆற்றல்களைப் பற்றியும், மண்குளியல், மண்பட்டி, மண்பற்று போடுவது பற்றியும் அந்த நூலில் தெளிவாக விளக்கியுள்ளார்.

- அ.மார்க்ஸ் எழுதிய 'இஸ்லாமியருக்கு எதிரான கட்டுக் கதைகள்' என்ற நூலிலிருந்து: அறிவியல் ரீதியாய் பார்த்தாலும் கூட எரிப்பதைக் காட்டிலும் புதைப்பதுதான் சரியானது எனச் சுற்றுச் சூழலியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

- ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் கண்காணிப்பு அமைப்பின் Persistent Organic Pollutants (POP) அறிக்கையின்படி பிணம் எரியூட்டப் படுவதால் கொடிய விஷத்தன்மையுள்ள நைட்ரஜன் ஆக்சைடு, கார்பன் மோனாக்சைடு, அமில மழைக்குக் காரணமான கந்தக டையாக்சைடு ஆகியவை வெளியேறுகின்றன. பிண எரிப்பால் வெளியாகும் டையாக்ஸினின் அளவு 0.2%. உலகின் பெரும்பாலான பகுதிகளில் பிணங்களை புதைப்பதே வழக்கத்தில் உள்ளது என்றும் இறந்த சடலங்களை தகனம் செய்வதால் சூழல் மாசடைகின்றது. ஆகவே ஒரு இடத்தில் ஒரே சமயத்தில் பல உடல்களை எரிக்க பல நாடுகள் தடை விதித்துள்ளன. (எம்.என். ஆலிப் அலி (இஸ்லாஹி, 2020)

**இலங்கையில் நடைபெறுவது முஸ்லிம் சிறுபான்மை மனித உரிமை மீறல்:**

மனித உரிமை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கப் பெற வேண்டிய மற்றும் அவனுக்கே உரித்தான அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் ஆகும். "மனிதர்கள் மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க இயலாத மறுக்க முடியாத சில உரிமைகளாகக் கருதப்படுபவையே மனித உரிமைகள் எனப் பொருள் கொள்ளப்படுகின்றன.

இனம், சாதி, நிறம், சமயம், பால், தேசியம், வயது, உடல், உள, வலு ஆகியவற்றுக்கு அப்பால் ஒவ்வொரு தனி மனிதருக்கும் அடிப்படை உரிமைகள் என்பது அவன் சுதந்திரமாகவும், சமூகமாகவும் வாழ அவசியமான உரிமைகளாகக் கருதப்படுகின்றன. இந்தவகையில் குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுள் வாழும் உரிமை, சுதந்திரம், கருத்து வெளியிடும் உரிமை, சட்டத்தின் முன் சமநிலை, நகர்வதற்கான சுதந்திரம், பண்பாட்டுச் சுதந்திரம், சமயச் சுதந்திரம், விமர்சனம் செய்யும் சுதந்திரம், சித்திரவதைகளுக்கு உட்படா சுதந்திரம் என பல வகையான உரிமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்தவகையில் தற்கால சூழ்நிலையைப் பொறுத்த வரையில் பல்வேறு நாடுகளும் எதிர்கொண்டுள்ள மிகவும் முக்கியமானதோர் சவாலே கொரோனா வைரஸின் அச்சுறுத்தலாகும். இக் கொரோனா வைரஸானது 2019 டிசம்பரில் சீனாவின் ஹுபே மாகாணத்தின் வூஹானில் முதன்முதலில் கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து உலகின் பல பாகங்களிலும் அந்நோயானது பரவியது.இதுபற்றி உலக சுகாதார அமைப்பு (WHO) தெரிவிக்கையில் "கொரோனா வைரஸ் நோய் கடந்த இருபது ஆண்டுகளில் பொது சுகாதாரத்திற்கு ஒரு தீவிரமான பிரச்சினை அதிவேகமாக உலக அளவில் பரவியுள்ளது" எனக் குறிப்பிட்டது.

அத்துடன் இந்நோய் நிலைமையால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் அறிகுறிகள் என்பவற்றோடு அதனைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் என்பனவும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் ஆய்வியல் ரீதியாக முன்வைக்கப்பட்டு அவை பல உலக நாடுகளாலும் கூடப் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறான ஆய்வியல் ரீதியான கண்டுபிடிப்புகளில் கூறப்பட்டதோர் விடயமே மரணித்த உடல்களை அவரவர்களது சமய அனுஷ்டானங்களின் பிரகாரம் அடக்கம் செய்யலாம் அல்லது எரிக்கலாம் என்று.

எனினும் இலங்கை நாட்டைப் பொறுத்த வரையில் இவ் ஜனாஸாக்களை எரிப்பதானது தொடர்ந்தும் இடம்பெற்றே வருகின்றது. அதிலும் அண்மையில் கொரோனா தொற்றெனக் கூறி 20 நாள் பச்சிளம் குழந்தையையும் எரித்த செயற்பாடானது உலகின் பலரது கவனத்தையும் இலங்கை பக்கம் திருப்பியது. பின் வெலிகமயைச் சேர்ந்த 2 மாதக் குழந்தையும் கொரோனா தொற்றென எரிக்கப்பட்டது.எனினும் இது தொடர்பில் உலக நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை என்பன அவ்வளவு பெரிய அழுத்தத்தை முன்வைத்து இச் செயற்பாட்டை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறும் அல்லது அவற்றிற்கெதிராக மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்தானதுமான எச்சரிக்கைகளை இதுவரையில் வெளியிட்டதாகத் தெரியவில்லை. (ஏனைய நாடுகளில் ஏற்படும் மனித உரிமை மீறல்களுக்கான குரல் கொடுக்கும் விதத்தை ஒப்பு நோக்கிப் பார்க்குமிடத்து)

எனவே இது குறித்தான பார்வையை நோக்குமிடத்து இலங்கை அரசாங்கம் முஸ்லிம்களின் சமய உரிமையான ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான உரிமையைத் தொடர்தும் மறுத்து வரும் செயற்பாடும் மற்றும் இது தொடர்பில் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிராகரிக்கப்பட்டு வந்தமையும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வருவதற்கான ஆதாரமாகவே கொள்ளப்படுகின்றன.

**ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்காக முஸ்லிம் அமைப்புக்கள் மேற்கொண்ட முயற்சிகள்**

- இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, துறைசார்ந்தோர், சிவில் அமைப்பினர் மற்றும் அரசியல் பிரமுகர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான அனுமதியைப் பெறும் நோக்கில் தொடர்ந்து உச்சகட்ட முயற்சிகளை மேற்கொண்டனர். அவையாவன:

1. 24.03.2020 ஜனாதிபதி, பிரதமர், கொரோனா பாதுகாப்புப் பிரிவு ஆகிய தரப்பினருக்கு உலக சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தலை அமுல் படுத்த வேண்டி ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (*https://acju.lk/en/news/acju-news/item/2049-letter-to-hep-pm-let-gen)*

2. 31.03.2020 ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர், கொரோனா பாதுகாப்புப் பிரிவின் தலைமையகம் மற்றும் டாக்டர் அனில் ஜயசிங்க முதலானோருக்கு மற்றுமொரு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. (*https://acju.lk/en/news/acju-news/item/2050-a-letter-sent-from-acju)*

3. 31.03.2020 அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா உறுப்பினர்கள் உட்பட ஒரு குழு, இலங்கை ராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வாவுடன், கொவிட் -19 பாதிக்கப்பட்டவர்களின் இறந்த உடல்களை அடக்கம் செய்வது தொடர்பாக ஒரு சந்திப்பை இராணுவத் தலைமையகத்தில் நடத்தியது.

4. 31.03.2020 அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா உறுப்பினர்கள் உட்பட ஒரு குழு, சுகாதார அமைச்சர் திரு பவித்ரா வன்னிஆரச்சி அவர்களுடன், கொவிட் -19 பாதிக்கப்பட்டவர்களின் இறந்த உடல்களை அடக்கம் செய்வது தொடர்பாக ஒரு சந்திப்பை சுகாதார அமைச்சில் நடத்தியது.

5. 01.04.2020 அன்று தகனம் தொடர்பிலான அதிருப்தியைத் தெரிவித்து ஓர் ஊடக அறிக்கையை ஜம்இய்யா வெளியிட்டது. *(https://acju.lk/en/news/acju-news/item/1887-acju-expresses-its-disappointment-with-regard-to-revising-the-method-of-disposal-of-the-covid-19-bodies)*

6. 02.04.2020 அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் முப்தி எம்.ஐ.எம். ரிஸ்வி அவர்கள் கொவிட்-19 வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் ஜனாசா தொடர்பான சமகால பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு விஞ்ஞான பூர்வமாக அறிவிப்பது மற்றும் முஸ்லிம் சமூகத்திற்கு வழிகாட்டுதல் வழங்குவது குறித்து முஸ்லிம் புத்திஜீவிகளுடன் ஒரு சந்திப்பை நடத்தினார்.

7. 22.04.2020 ஆம் திகதி தகனம் செய்வது இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட விடயம் என்பதை உறுதிப்படுத்தி ஒரு பத்வா ஜம்இய்யாவினால் வெளியிடப்பட்டது. *(https://acju.lk/en/fatwa-bank/recent-fatwa/item/1958-religious-clarification-with-regard-to-cremating-the-body-of-a-muslim-covid-19-victim)*

8. 07.05.2020 சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜயசிங்க அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. *(https://acju.lk/en/news/acju-news/item/1935-clarification-on-the-ambiguity-on-burying-the-ashes-of-a-muslim-who-succumbed-to-covid-19-and-request-to-reverse-the-stance-by-permitting-burial)*

9. 10.05.2020 சுகாதார அமைச்சருக்கு ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டி ஒரு வேண்டுகோள் கடிதம் அனுப்பப்பட்டது. *(https://acju.lk/en/news/acju-news/item/2051-a-letter-to-hon-min-pavithra-wanniarachchi-minister-of-health)*

10. 05.06.2020 மரணித்தவர்களை அடக்கம் செய்வது சம்பந்தமாக ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. இதில் தகனம் செய்வது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டது என்பதும் அடக்கம் செய்வதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்பதும் பல ஆவணங்களை மேற்கோள் காட்டி சுட்டிக்காட்டப்பட்டது. *(https://acju.lk/en/news/acju-news/item/1963-opinion-regarding-disposal-of-covid-19-affected-human-remains)*

11. 10.11.2020 கொவிட்-19 தொற்றினால் மரணித்தவர்களை நல்லடக்கம் செய்வதற்கான பொருத்தமான இடத்தை கண்டறிய அதிகாரிகளுடன் சேர்ந்து மன்னார் பிரதேசத்திற்கு விஜயம் செய்யப்பட்டது.

12. 24.11.2020 தெஹிவளை முஹையத்தீன் ஜூம்ஆ மஸ்ஜிதில் ஜனாஸா சம்பந்தமாக முஸ்லிம் அமைப்புக்களுடனான விஷேட கூட்டமொன்று இடம்பெற்றது.

13. 10.12.2020 அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் உயிர்த்த ஞாயிறு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் முஸ்லிம்களது ஜனாஸாக்களை தகனம் செய்ய மார்க்க ரீதியான எந்த அனுமதியும் கிடையாது என்பதை கூறி முஸ்லிம்களது ஜனாஸாக்களை அடக்கும் உரிமையை பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுத்தார். *(https://www.youtube.com/watch?v=ZCebVqobrZ8&t=1s)*

**புதைப்பதற்கான பரிந்துரைகளும் ஆலோசனைகளும்:**

➢ கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றினால் இறப்பு நிகழ்ந்ததாக சொல்லப்படுகின்ற சம்மாந்துறையைச் சேர்ந்த வயது முதிர்ந்த சகோதரரின் ஜனாஸாவை ஒரு ஆய்வுக்கான மாதிரியாகக் கொண்டு (Sample) அடக்கம் செய்வதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளனர். இதற்கு தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீடம், தொழில்நுட்ப பீடம், சமூகவியல் பிரிவு, புவியியல் பிரிவு மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆகியவற்றிலுள்ள துறைசார் கல்வியிலாளர்கள் இணைந்து இவ்வாய்வை மேற்கொள்ள முடியும் என்று கூறியுள்ளனர்.

➢ குளிர் அறைகளில் ஜனாஸாக்களை வைப்பதற்கான வசதி கொழும்பில் மாத்திரமே காணப்படுகின்றமையால் ஏனைய மாவட்டங்களில் கொரோனா தொற்றால் மரணிப்போரின் உடல்களையும் குளிர் அறைகளில் வைப்பதற்கான குளிரூட்டப்பட்ட விஷேட அறைகள் காலி, களுத்தறை, கண்டி, கல்முனை அஷ்ரப் வைத்தியசாலை உட்பட நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அமைத்து சடலங்களை தகனம் செய்யாமல் பாதுகாக்க தனவந்தர்கள் முன்வர வேண்டும்.

➢ அத்துடன் முஸ்லிம் ஜனாஸாக்களை எவ்வளவு விரைவாக அடக்க வேண்டுமோ அவ்வளவு விரைவாக அடக்குவதே இஸ்லாம் எமக்குக் காட்டித் தரும் வழிமுறையாகும்.எனவே முஸ்லிம் வைத்தியர்கள் மற்றும் கலாநிதிகள், புத்திஜீவிகள் ஆகியோர் அனைவரும் ஒன்று சேர்ந்து புதைப்பதன் அனுகூலங்களையும் எரிப்பதன் பின் விளைவுகளையும் குறித்து இலங்கையிலேயே ஆதாரபூர்வமாக நிறுவ முன்வர வேண்டும்.

➢ மேலும், இறக்கும் முஸ்லிம் ஜனாஸாக்கள் உண்மையிலேயே கொரோனாவினால்தான் இறக்கின்றனவா? என்பதைப் பரிசோதனை செய்ய முஸ்லிம் துறைசார் நிபுணர்கள் முன்வருவதோடு உடல்களை Postmodal செய்யும் நிலையை இல்லாதொழித்து அதற்கான மாற்றுத் தீர்வுகளை முன்வைத்தல்.

## References


1. அல்குர்ஆன், அல்ஹதீஸ்
2. பஸீம்,"முஸ்லிம் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்படுவது மனித உரிமை மீறல்", From:https://youthceylon.com/?p=22594, Access: 27/01/2021,Retrived:22/01/2021.

1. சுதத் சமரவீர,“கொரோனாவினால் மரணித்த உடல்கள் தகனம் செய்யப்படும்”,From: https://youthceylon.com/?p=21038, Retrived:24/11/2020,Access:27/01/2021.

2. “கொவிட்-19 காரணமாக மரணிப்பவர்களை அடக்கம் செய்வது தொடர்பாக ஸனாதிபதி,பிரதமர்,சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இவர்களுக்கு அனுப்பபபட்ட கடிதம்”,அகில இலங்கை ஜமியத்துல் உலமா, From:http://acju.lk./news-ta/item/2068-requesting-burial-from-he-president-pm-hm-dghs, Retrived:06/01/2021, Access:27/01/2021.

3. “மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய மூவரடங்கிய குழு நியமனம்”, From:https://sltimes.lk/?p=1213, Retrived:22/01/2021, Access:27/01/2021

4. “20 நாள் பிஞ்சு உடலும் சற்று முன் தகனம் செய்யப்பட்டது”,From: https://youthceylon.com/?p=21458,Retrived:09/12/2020,Access:09/12/2020

5. “உயிரிழந்தவர்களை பெட்டியின்றி அடக்கினாலும் வைரஸ் பரவாது- சந்திரிகா”, From:https://youthceylon.com/?p=21777,Retrived:21/01/2020,Access:27/01/2021.

6. “ஜனாஸா எரிப்பிற்கு எதிராக ஜம்மியத்துல் உலமா”,

7. முஹம்மத் பஃஹுத்தீன்,“மரணித்த உடல்களை ஏன் நல்லடக்கம் செய்ய வேண்டும்”, From:https://youthceylon.com/?p=22039,Retrived:29/12/2020,Access:27/01/2021.

8. “நல்லடக்கம் அல்லது தகனம்:புதிய பரிந்துரை”,From: https://youthceylon.com/?p=22177, Retrived:02/01/2021,Access:27/01/2021.

9. “முஸ்லிம் உடல்களை எரிப்பது பேரழிவு தரும் விளைவுகளை ஏற்படுத்தும்-மிலிந்த மொரகொட”,From:https;//tamil.newsnow.lk,Retrived:22/12/2020,Access:22/12/2020.

10. “கொரோனாவால் இறந்தவர்களின் இறுதிச் சடங்கை எப்படிச் செய்ய வேண்டும்?” ,From:www.bbc.com/tamil/india-52133924, Retrived: 02/04/2020, Access: 22/12/2020.

11. “இறுதிச் சடங்குகள் குறித்த சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றுங்கள்-இலங்கை ஜனாதிபதிக்கு ஐ.நா. வேண்டுகோள் (முஸ்லிம்களுக்கு எதிரான குரோத பேச்சுக்கள் குறித்து கவலை”,From:www.virakesari.lk, Retrived:14/04/2020, Access:28/12/2020

12. எம்.என்.ஆலிப் அலி (இஸ்லாஹி),“இறந்த பின்பும் உடல் வேதனையை உணர்கிறது- விஞ்ஞானிகள் தெரிவிப்பு எரிப்பதா? புதைப்பதா?”, From:aliaalif.blogspot.com, Retrived:29/12/2020,Access:30,12/2020



# எரிக்கப்பட்ட முஸ்லிம் ஜனாஸாக்களும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகமும் : ஓர் உளவியல் ஆய்வு

**M.M.F.Aqeela**
Department of Arabic Language
FIA, SEUSL.

**M.J.F. Sana Anjum**
Department of Arabic Language
FIA, SEUSL.

**M.A.F. Ashfa**
Department of Islamic studies
FIA, SEUSL.

**A . Ijas Mohammed**
Department of Arabic Language
FIA, SEUSL.

## ஆய்வு அறிமுகம்

உலகளாவிய வரலாற்று ரீதியில் பார்க்கும் போது யுத்தங்கள், அனர்த்தங்கள் போன்ற விடயங்களால் சமுதாயத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியில் பாரியளவில் மரணங்கள் ஏற்படுவது இயல்பான விடயம். அந்தவகையில் சமுதாயத்தில் மரணங்கள் ஏற்படும் போது அந்தந்த கலாசார முறைப்படி அடக்கம் செய்வதும், யுத்த காலப்பகுதியினால் தவிர்க்க முடியாத காரணங்களால் மரணங்களை வெவ்வேறு விதி முறைகளில் அடக்கம் செய்வதும் உலக வரலாற்றில் அவதானிக்க முடிகிறது (முஹம்மத் பகீஹுதீன், 2020). அந்தவகையில் தான் உலக வரலாற்றில், பார்க்கும் போது பல்வேறு காலகட்டங்களில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் மனிதனுடைய இறப்பில் செல்வாக்கு செலுத்தி வந்துள்ளது.

உ+ம்:- ஆபிரிக்காவில் ஏற்பட்ட எபோலா, டெங்கு, மலேரியா இவ்வாறான இயற்கை நோய்களால் பாதிக்கப்படும் போது அவற்றினூடாக இயற்கை மரணங்கள் ஏற்படுவதுடன் அவை கலாசார அடிப்படையில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது (முஹம்மத் பகீஹுதீன், 2020). இந்த வகையில் தான் 2019ம் ஆண்டும் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட கொவிட்-19 காரணமாக உலகளாவிய ரீதியில் பல மரணங்கள் ஏற்பட்டுள்ளன (WHO 2021). எத்தனை நாடுகளுக்கு இறந்தவர்களின் உடல்களை பார்ப்பதற்கும், எரிப்பதற்குமான அனுமதிகளை உலக சுகாதார நிறுவனம் (WHO) வழங்கியுள்ளது. இத்தகைய மரணங்களை WHO அறிவுறுத்தியுள்ள அடிப்படையில் அடக்கம் செய்வதற்கும் அது பரிந்துரை செய்துள்ளது (WION, 2020). இருந்தபோதிலும் இத்தகைய மரணங்களை WHO குறிப்பிட்டது போல் அல்லாமல் எரிப்பதை மட்டுமே சட்டமாக இலங்கை அமுல்படுத்தியுள்ளது (வர்த்தமானி, 2020). இத்தகைய பொதுச்சட்டமானது எல்லா கலாச்சாரத்திலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமையவில்லை என பல அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

மரணமென்பது ஒவ்வொரு சமுதாயமும் மரணச்சடங்குகளை அதனது கலாசார அடிப்படையில் நிறைவேற்றுவதையே அடிப்படையாக கொண்டுள்ளது. இலங்கையின் யாப்பின் அடிப்படையிலும் சிறுபான்மையினரது உரிமைகள் அவர்களது சமய, பண்பாட்டு அடிப்படையில் அமைய வேண்டும் என்பதையும் அவதானிக்க முடிகிறது. இருந்த போதிலும் 2020 தொடக்கம் இன்று வரை முஸ்லிம்களில் அவ்வாறு மரணித்தவர்களை எரிக்கின்ற சட்ட முறைமையை மிகவும் இறுக்கமாக எமது நாடு மேற்கொண்டு வருகிறது (ஆலிப், 2020). ஆயினும் இத்தகைய செயற்பாட்டுக்கு எதிராக குறிப்பிட்ட சமூகத்தினாலும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன ( பகீஹுதீன், 2020).

எனவே இது தொடர்பாக இலங்கையில் பல்வேறு மருத்துவ அறிக்கைககள் சடலங்களை புதைக்கலாம் என்பதை மருத்துவ ரீதியான ஆய்வுகள் முன்வைத்துள்ளன. இது தொடர்பான பல மாநாடுகளும் வலியுறுத்தியுள்ளன. இருந்த போதிலும் இத்தகைய விபரங்களை அரசாங்கம் இன்றுவரை நடைமுறைப்படுத்தவில்லை. இவ்வாறான அனர்த்த சூழல்களில் ஏற்படும் மரணங்கள் பல்வேறு சமூக தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக இயற்கையாக ஏற்படுகின்ற மரணம் என்பது குடும்பத்திலும், சமூகத்திலும் ஏதோ ஒரு வகையில் தாக்கம் செலுத்துவது இயல்பான விடயம். எனவே இத்தகைய யுத்த அனர்த்தங்கள் ஏற்படும் போது அது நிச்சயமாக குடும்பத்திலும் சமூகத்திலும் செல்வாக்கு செலுத்துகிறது. எனவே இக்கருத்துக்கள் எதை குறிக்கிறது என அவதானிக்கும் போது அவை ஒவ்வொரு சமூகத்தினது மரணங்களும் அதனது கலாசார அடிப்படையில் இடம்பெற வேண்டும் என்பதும், அவ்வாறு இடம்பெறாத பட்சத்தில் பல்வேறுபட்ட பாதிப்புக்களுக்குள்ளாகி இருப்பதும் விளக்கி நிற்கின்றது. அந்தவகையில் தான் அண்மைக்காலமாக ஏற்படுகின்ற கட்டாய எரிப்பு விடயமானது இலங்கை வாழ் சிறுபான்மை மக்களுக்கு மத்தியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அவை உடலியல் ரீதியான நோவினையும் சரி, குறிப்பாக உளவியலிலும் சரி பாரிய தக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அவை எரிக்கப்பட்ட ஜனாஸாக்களின் குடும்பங்களில் மட்டுமல்லாமல் முஸ்லிம் சமூகத்திலும் பல்வேறு உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதாக பல தரவுகள் முன்வைக்கின்றன. மேலும் ஊடகங்கள், பத்திரிகைகள் என்பவற்றினூடாகவும் அறிய முடிகிறது. எனவே இவ்வாய்வானது இத்தகைய விடயங்களை ஆராய்வதை கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

அவர்களுடன் கலந்துரையாடிய பொழுது, எனது தந்தை மட்டுமல்ல தீயில் எரிக்கப்பட்டது எமது முழு குடும்பத்தையும் தீயில் எரித்து விட்டார்கள். எமது உள்ளங்கள் கவலை என்னும் தீயில் கொதித்துக் கொண்டிருக்கின்றன. கேட்கின்ற உள்ளமே கரையும்போது பாதிக்கப்பட்ட உள்ளத்தை நினைக்க பரிதாபமாக இருக்கிறது.

இன்னும் சிலர், எமது உள்ளம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது, அதனைத் தாங்குவது அவ்வளவு இலகுவானது அல்ல என்று கூறி அவர்களுடைய மன வேதனையை பகிர்ந்து கொண்டனர். எரிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்களின் மனோநிலை பற்றி வினவப்பட்டபோது, அவர்கள் எமது குடும்பத்தவரோ அல்லது இதற்கு முன் பழக்கமானவர்களோ இல்லை எனினும் நமக்கே இச்செய்தி பெரியதோர் தாக்கத்தை செலுத்தியுள்ளது. இவ்வாறு இருக்கையில் அவர்களுடனே ஒட்டி உறவாடிய அவர்களின் மனோநிலை நிச்சயமாக சொல்ல வார்த்தை இல்லை... வாழ்க்கை முழுவதும் அவர்களின் நினைவுகள் குடும்ப அங்கத்தவர்களுக்கு மனச்சுமையும், கண்ணீரும் தான். எரிக்கப்பட்டு கிட்டத்தட்ட பத்து மாதங்களுக்கு மேலாகிவிட்டது ஆனாலும் சாதாரண நிலைக்கு மீளமுடியாமல் மனப் போராட்டத்தில் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே ஜனாஸா எரிப்பானது குடும்ப அங்கத்தவர்களுக்கு தாங்கமுடியாத வேதனையையும், வார்த்தைகளற்ற கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம் ஜனாஸாக்களை எரிப்பது தொடர்பில் பல சர்ச்சைகள் இலங்கை நாட்டிலும் சரி, சர்வதேச ரீதியிலும் சரி எழத்தான் செய்தது. ஆனாலும் இலங்கை முஸ்லிம் சமூகத்தினருக்கு மத்தியில் இது இஸ்லாத்தின் தூய்மையை குறைப்பதாக காணமுடிகிறது. மனித உரிமை, மத உரிமை என உரிமைகளை மீறும் செயலாக சமூகத்தின் மத்தியில் உருவெடுத்துவிட்டது. இது ஒரு பகிரங்க அடிப்படை மனித உரிமை மீறல் என்று குறிப்பிடுகின்றனர். இந்த காழ்ப்புணர்வு இலங்கை வாழ் முஸ்லிம்களிடம் பல விதமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. முஸ்லிம்களாகிய நமது உரிமைகள் வழங்கப்படாத இந்நாட்டில் வாழத்தான் வேண்டுமா?
உண்மையிலேயே நாட்டின் மீதும் நம் நலனுக்காக வாக்கின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசின் மீதும் அதிக வெறுப்பாக இருக்கிறது. ஒரு மனிதனின் உளவியல் சீரற்று, பல தாக்கங்களை முகங்கொடுக்குமாயின். நிச்சயம் அது பலவிதமான எதிர்மறை சிந்தனைகளை உருவாக்கும். அதன் பிரகாரம் ஒரு முஸ்லிமுக்கு நாட்டுப் பற்றில் பாதிப்பு ஏற்படுவதும் நியாயமானதே. முஸ்லிம்களின் உரிமை கோஷம் எழுப்பப்பட்ட வேளையில் அதற்கு எவ்வித பதிலும் இன்றி பச்சிளம் குழந்தையையும் எரித்து விட்டது இலங்கை அரசாங்கம். இலங்கைவாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் அக்குழந்தையை தமது குழந்தையாக எண்ணினர். கண்ணீர் சிந்தி இறைவனிடம் பொறுப்பு சாட்டினர். இலங்கையில் இனத் துவேஷம் தான் தலைவிரித்தோங்குகின்றதோ என்ற எண்ணம் ஆழமாக வேரூன்றி விட்டது.

இனவெறி உயிரற்ற உடலைக் கூட விட்டுவைக்க வில்லை. எந்த நாட்டிலும் செயற்படுத்தப்படாத ஒரு சட்டத்தை ஏன் இங்கு அமுல்படுத்த வேண்டும்...! என்ன சதித்திட்டம்..! என்றே சிந்திக்கிறார்கள். எதிர்ப்புக்கள் எதுவுமே இலங்கை அரசாங்கத்திடம் எடுபடாமல் இருப்பது, முஸ்லிம்களுக்கு மத்தியில் பல்வேறான உளவியல் தாக்கங்களை மென்மேலும் அதிகப்படுத்துகிறது.
மரணத்தை நினைத்து பயப்படாமல் எந்நேரமும் தயாராக இருக்கும் முஸ்லிம் சமூகம், இப்போது மரணத்தை நினைத்து அஞ்சி கண்ணீர் வடிக்கிறார்கள். தடுமல், காய்ச்சல் ஏனைய சிறு நோய்கள் ஏற்பட்டாலும் அச்சம் காரணமாக வைத்தியருடன் செல்லாமல் நோயினால் அவதிப்படுகிறார்கள். தங்களது பாதுகாப்பினையையும், நம்பிக்கையையும் இழந்திருக்கிறார்கள். அச்சம் காரணமாக உயிருடனே அவர்களை அவர்கள் இழந்து கொண்டிருக்கிறார்கள். தமக்கு மரணம் வருவதைக் கூட வெறுக்கிறார்கள். அதனையும் தாண்டி இறைவனின் நாட்டப்படி மரணம் சம்பவித்தால், இறைவனின் நாட்டம் அது, அதன் அடிப்படையிலேயே நடைபெறும் என்று நம்புவதோடு இறைவனிடமே பொறுப்பு சாட்டுவார்கள். (நெருப்பை குளிராக இறைவன் போதுமானவன்.) அவர்களது மரணம் வீரமரணமாக (ஷஹீத்) இருக்க வேண்டும் என ஆசிக்கிறார்கள். இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நெருப்பை குளிராக்கி வைத்த ஏக இறைவன் தமக்கும் அதனை நஸீபாக்க வேண்டும் என அவாக் கொள்கிறார்கள்.

பல சவால்கள்களுக்கு முகங்கொடுத்து இலங்கைவாழ் முஸ்லிம்கள், ஜனாஸா எரிப்பு விடயத்தையும் எதிர்த்து பல நடவடிக்கைகளை மேற்கொள்ள தான் செய்தார்கள். வெள்ளை துணி கட்டி அமைதிப்போராட்டம் நடத்தினார்கள், சமூக வலைத்தளங்களினூடாக தமது கருத்துக்களை பறிமாறினார்கள். ஆக்கங்கள், கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்கள், அனைத்து முஸ்லிம்களும் நோன்பு நோற்று பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். எரிப்பதற்கான முழு எதிர்ப்பையும், அடக்கம் செய்வதற்கான முழு முயற்சியையும் செய்தாலும் உடலை எரிப்பது தான் பாதுகாப்பானது என நாட்டின் துறை சார்ந்த அதிகாரிகள் எடுத்துள்ள தீர்மானம் முஸ்லிம்களை ஒரு நிர்ப்பந்த நிலைக்கு தள்ளியுள்ளது. உண்மையில் உலக சுகாதார நிறுவனத்தின் தீர்மானம் அப்படியல்ல. எது எவ்வாறாயினும் நடப்பது யாவும் இறை நாட்டத்தோடு தான் நடைபெறுகின்றது. நெருப்பை குளிராக்குவதும், சூடாக்குவதும் இறைவனது விருப்பம். நிச்சயமாக கஷ்டத்துடன் இலகு இருக்கின்றது. கொரோனாவால் கெட்டுவிடும் மேனியை சுட்டுவிடும் நெருப்பு ஒரு அவமானம் அல்ல ஈமானின் வெற்றிக்கான அடையாளம்....!!

**முடிவுரை**

ஒரு மனிதன் பிறந்தது முதல் அவனது மரணம் வரை அவனைக் கண்ணியபடுத்தும் விதத்தில் பல உரிமைகளை வழங்கி கௌரவித்துள்ளது இஸ்லாம். ஏனெனில், மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி. அதன்பிரகாரமே, கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட உடல்களை நெருப்பிலிட்டு எரிக்கும் நடைமுறையைக் கைக்கொண்ட இலங்கை, மரணித்த உடல்களை அடக்கம் செய்வது மனிதனின் அடிப்படை உரிமை என்பதை மறந்துவிட்டது. குறிப்பாக, இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்தனர். அவர்களின் உளவியலில் பாரிய மாற்றங்களை உண்டு பண்ணியதையும் அவதானிக்க முடிந்தது. மனதளவில் பாதிக்கப்பட்ட ஒரு மனிதன் தனக்கான விமோசனம் கிடைக்க வேண்டும் என்றே போராடுவான். அதற்காக எதையும் செய்யத்துணிவான். அவ்வாறே, மனதளவில் ஒடிந்து போன முஸ்லிம் சமூகமும் தமது உரிமையை மீட்டெடுக்க தங்களால் முடிந்த அத்தனை விடயங்களையும் மேற்கொள்ளத்தான் செய்தார்கள். வாட்ஸ் அப் (பகிரி) இல் ஸ்டேடஸ் மற்றும் புரோபைல்களை இட்டு தமது எதிர்ப்பை தெரிவித்தனர். பல முஸ்லிம் தலைவர்கள் வெள்ளைத்துணி கட்டி அமைதிப் போராட்டம் நடத்தினர். முஸ்லிம் சட்டத்தரணிகள், அரசியல் வாதிகள் இதற்காக வாதாடினர். இவையனைத்திற்கும், எந்தப் பலனுமே முஸ்லிம்களுக்கு கைகூடவில்லை. மிஞ்சியது ஏமாற்றமும் உரிமை பகிஷ்கரிப்புமே....

**ஆய்வுப் பிரச்சினை**

இறந்த உடல்களை புதைக்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் கடமை. இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் முதல் மனிதன் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலந்தொட்டு இறந்த உடலை புதைப்பது தான் வழக்கமாக வந்துள்ளது. இறந்த உடலை புதைப்பது ஒரு மனிதனின் பிறப்புரிமை மட்டுமல்ல அது முஸ்லிம் சமூகத்தின் கூட்டுக்கடமை. மேலும் இலங்கை யாப்பில் சிறுபான்மையினருக்காக தனிச்சட்டம் காணப்படுகிறது. அவர்கள் விரும்பிய மதத்தை பின்பற்ற முடியும், சமய சடங்குகளை சரிவர நிறைவேற்ற முடியும், மதகுருமாரை போற்ற வேண்டும் என்றும் பல்வேறு உரிமைகள் காணப்படுகின்ற பட்சத்திலும், இலங்கையில் அண்மைக்காலமாக மத உரிமை மீறப்படுகிறது. நாட்டையும் நாட்டு மக்களையும் மதித்து அவர்களின் உரிமையை பேணிப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என கட்டுரைகள் முன்வைக்கின்றன. சர்வதேச மட்டத்தில் நோக்கினால் கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணித்த உடல்களை அடக்கம் செய்யும் வழக்கத்தையே கடைபிடிக்கின்றனர் (அகரம் நிகச்சி, 2020). ஆனால் இந்நிலையை இலங்கை அரசாங்கம் தொடர மறுத்துவிட்டது. கொரோனா தொற்றுக்கு உட்பட்ட உடல்களை அடக்கம் செய்யலாம் என்றே உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது. வைத்தியர்களும் அடக்கம் செய்வதில் எவ்வித பாதிப்பும் இல்லை என்பதை ஆய்வுரீதியாக முன்வைக்கின்றனர். கிட்டத்தட்ட 195 நாடுகள் கோரோனா தொற்றுக்கு உட்பட்ட உடல்களை அடக்கம் செய்கிறன (அகரம் நிகச்சி, 2020). இருப்பினும் நேரான ஆய்வு முடிவும், சரியான அனுமதியும் கிடைத்தாலும் இலங்கை அரசாங்கம் தொற்றுக்கு உட்பட்ட உடல்களை எரித்துக் கொண்டிருக்கின்றனர். இது தொடர்பான கட்டுரைகளும், வினாக்களும் வெளிவருகின்றன. இலங்கை அரசாங்கம் மக்கள் விரும்பாத பண்பாட்டை மீறுகின்ற செயல் மூலம் முஸ்லிம் சமூகத்திற்கிடையில் எவ்வாறான உளவியல் தாக்கங்கள் நிகழ்கின்றன என்பதை ஆய்வு பிரச்சினையாக கருதி இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

மேற்குறிப்பிட்ட பிரச்சினையை ஆய்வுப் பிரச்சினையாக கொண்டு, எரிக்கப்பட்ட முஸ்லிம் ஜனாஸாக்களின் மூலம் முஸ்லிம் சமூகத்திற்கிடையில் எவ்வாறான உளவியல் தாக்கங்கள் இடம்பெறுகின்றன என்பதை அடையாளப் படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது விபரிப்பு ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பண்புசார் ஆய்வாக அமைகின்றது. இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகள் (Primary data) மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள்(Secondary data) மூலம் தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் முதலாம் நிலை தரவுகள் கலந்துரையாடல், வினாக்கொத்து மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகள் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையப்பக்கங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டன.

**தரவுப் பகுப்பாய்வு**

இறந்த மனிதனின் பிரதேத்திற்கு, உயிருள்ள மனிதனுக்குள்ள அதே கண்ணியமும் கௌரவமும் கொடுக்க வேண்டும். என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். மனிதன் என்பவன் உலக படைப்பினங்களில் சிரேஷ்டமானவன். அவன் உயிருள்ள நிலையிலும், இறந்த நிலையிலும் கண்ணியமாகவே நடத்தப்பட வேண்டும். என இஸ்லாம் வழிகாட்டுகிறது. "மரணித்த ஒரு மனிதனின் எலும்பை முறிப்பது, அவன் உயிரோடு இருக்கும் நிலையில் அவனது எலும்பை முறிப்பதற்குச் சமனாகும்." மரணித்த உடலை அடக்கம் செய்ய வேண்டும் என இஸ்லாம் கூறுவதற்கான பிரதான நோக்கம் இறந்த உடலுக்குக் கூட கௌரவம் வழங்க வேண்டும் என்பதனால் தான்.
உயிரற்ற உடலையும் கூட இஸ்லாம் கண்ணியப்படுத்துகின்றது. அதற்கென பல கடமைகளை வைத்திருக்கின்றது. இப்படிப்பட்ட மார்க்கத்தின் ஜனாஸாக்களை இலங்கை அரசாங்கம் எந்தவித ஐயப்பாடும் இல்லாமல் கிட்டத்தட்ட ஒரு வருடகாலமாக எரித்துக்கொண்டிருக்கிறார்கள். இரக்கமற்ற இச்செயலினால் இலங்கை முஸ்லிம்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். உயிர் வாழ்வதே ஏன்? என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். முஸ்லீம்கள் அவர்களுடைய மௌத்தை எண்ணி அஞ்சி அஞ்சி உயிர் வாழ்கிறார்கள்.

அந்தவகையில் முதன் முதலில் ஜனாஸாக்களை எரிக்கத்தான் போகிறார்கள் என்பதை செவியுற்ற அந்நொடியிலேயே பல்வேறு உளவியல் மாற்றங்களை முஸ்லிம் சமூகம் உணர்ந்தது. குறிப்பாக ஒரு ஜனாஸாவாக இருந்தாலும் அதன் கண்ணியத்தை மதிக்காது அதன் உரிமையை மறுத்துவிட்டதாக உணரத்தொடங்கினர். ஒரு மனிதனின் உள்ளம் மிகுந்த கவலைக்குள்ளாவதே அவனில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தும். அப்படியாயின் இந்நிகழ்வு முஸ்லிம்களை மனதால் நோகடித்து பலவீனப்படுத்தி விட்டது. என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இது பற்றி அவர்கள் கூறுகையில், கோபமாகவும், அதிர்ச்சியாகவும், கவலையாகவும், வேதனையாகவும், எரித்தவர்கள் மீது வெறுப்பு கொண்டவர்களாகவுமே இருந்தோம். இந்த நிலைமை வேறு யாருக்கும் வந்துவிடக் கூடாது என்று நினைத்தோம். ஆனால் இப்பொழுது அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் இதே நிலைமை காணப்படுகிறது. ஆரம்பத்திலேயே மனதளவில் உடைந்துபோன முஸ்லிம்கள் அடுத்த கட்ட நடவடிக்கையை கூட எவ்வாறு மேற்கொள்வது என செய்வதறியாது திகைத்து நிற்கும் நிலை ஏற்பட்டது. ஒரு முஸ்லிமின் அடிப்படை உரிமை பறிக்கப்பட்டுவிட்ட உணர்வு அவனில் மேலோங்கி இறைவனின் பக்கம் பொறுப்பு சாட்டிவிட்டு, அந்த உரிமையைப் பெற்றுத்தர முஸ்லிம் தலைவர்கள் ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டார்களா? என்ற எதிர்பார்ப்பே மிகைத்திருந்தது.

பொதுவான சமூகப் பார்வையின் கீழே அனைத்து மக்களின் மனோநிலையும் சீரற்று பல தாக்கங்களுக்கு உள்ளாகியிருப்பின் எரிக்கப்பட்ட ஜனாஸாக்களின் குடும்பத்தவர்களின் மனோநிலை மிகவும் கவலைக்குரியதே. இஸ்லாம் ஜனாஸாவைக் கூட கடமைகளை நிறைவேற்றி கண்ணியப்படுத்த சொன்ன மார்க்கம். அது அந்த உறவினர்களுக்கு ஒரு திருப்தி, ஓர் ஆறுதல் அவையெல்லாமே மறுக்கப்பட்ட நிலையில் ஆகக்குறைந்தது, உறவினர்களுக்கு ஜனாஸாவை கண்ணால் கூட பார்க்க அனுமதிக்காமல் எரித்து மிகுந்த ஒரு கவலையை ஏற்படுத்தியிருந்தது.

உடலளவிலும் உள அளவிலும் நொந்து போன முஸ்லிம் சமூகம் தமது உரிமையை வென்றெடுப்பதற்காக இன்னும் கூட போராடிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களது உரிமைப் போராட்டம் இனிமேலும் தொடரும்...

**உஷாத்துணைகள்:**


1. அஷ்ஷேஹ் முஹம்மத் பகீஹுத்தீன்.(2020).நெருப்பில் எரித்தாலும் ஈமான் கறுப்பதில்லை.களுத்தரை : ஜாமியா நளீமிய்யா.

2. ஆலிப்.எம்.என்.(2020). இறந்த பின்பும் உடல் வேதனையை உணர்கின்றது – விஞ்ஞானிகள் தெரிவிப்பு. எரிப்பதா? புதைப்பதா?. Accessed on: 2020 Decermber 29. Retrieved from : http://aliaalif.blogstop.com

3. தரிஷா பஸ்டியன். (2020). நெருப்புடன் விளையாடுதல். Accessed on : 2020 Decermber 20. Retrieved from : https://maatram.org

4. பாஸித்,ஏ.நியாஸ். (தொகுத்து வழங்குபவர்). (2020, January 10). அகாரம் நிகழ்ச்சி. தலைப்பு: ஜனாஸா எரிப்பு. ( Radio broadcast ). சூரியன்குஆ

5. முஹம்மத் பகீஹுத்தீன்.(2020). மரணித்த உடலை ஏன் அடக்கம் செய்ய வேண்டும்?. களுத்தரை : ஜாமியா நளீமிய்யா

6. மொஹம்ட் பாதுஷா.(2020). ஜனாஸா எரிப்பு விவகாரம். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுதல். Accessed on : 2020 Novermber 5. Retrieved from : https//malaysiandru.my

7. ஜப்பானிய ஊடகம். (2020). இலங்கையில் பலாத்கார ஜனாஸா எரிப்பு, தகவல் சேகரிக்கும் முஸ்லிம் நாட்டுத் தூதுவர்கள். Accessed on : 2020 December 26. Retrieved from : https://www.jaffnamuslim.com

8. JP NEWS. (2020). இலங்கையில் ஜனாஸா எரிப்பு பாகிஸ்தான் பிரதமர் பேச்சு. Accessed on : 2020 Decermber 25. Retrieved from : https://www.jvpnews.com

9. WION. (2020). Sri Lanka debates: Does burying corona virus victims contaminate ground water?. Accessed on: 2020 December 15. Retrieved from; https;//www.wionews.com/south–asia/sri lanka-debates

10. ශ්‍රී ලංකාව තුළ කොවිඩ් 19 වෛරසය ශරීරගත වී මරණයට පත් වූ මිනිස්සුන්ගේ දේහයන් අයුක්ති සහගත ලෙස ආදාහනය කිරීමට විරුද්ධව නගන්නා වූ හඬයි. http://m.facebook.com/story.php?story_fbid=1504974089045066&id=235882509954236&sfnsn=wa



# Covid - 19 தொற்றுக்குள்ளான இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுதல் தொடர்பான சர்வதேச கண்ணோட்டம்


**P.M.A. Aleeshan**
Department of Islamic Studies,
South Eastern University Of Sri Lanka

**M.A.F. Ilma**
Department of Islamic Studies,
South Eastern University Of Sri Lanka


## 1. அறிமுகம்

இன்று உலகையே தன் கைக்குள் கொண்டு ஆட்டிப்படைக்கும் ஒன்றாக கொரோனா தொற்று நோய் உருவாகியுள்ளது. செல்லும் திசைகளிலெல்லாம் செவிகளில் ஒலிக்கும் ஒன்றாய், கொடிய விஷத்தைக் கக்கி உயிர் பறிக்கும் உயிர்கொல்லியாய் மாறிப்போயுள்ளது.

### 1.1. Covid - 19 என்றால் என்ன?

உலகை உள்ளங்கைக்குள் பொத்திக்கொண்டிருக்கும் இக்கொரோனா பற்றி நோக்குவோமானால், கொரோனா வைரஸ் என்பது பெருந்தொற்று நோய் என்று அழைக்கப்படுகிறது. தொற்றுநோய் என்ற சொல் கிரேக்க 'பாண்டெமோஸ்' என்பதிலிருந்து வந்தது. ஆரம்பத்தில் புதிய வைரஸ் '2019 - nCov' என அழைக்கப்பட்டது. பின்னர், வைரஸ்கள் வகை பிரித்தல் தொடர்பான சர்வதேச குழுவின் நிபுணர்கள் இது 'SARS - Con - 2' வைரஸ் என்று கூறியது. பின்னர், உலக சுகாதார அமைப்பு 'Covid - 19' பெருந்தொற்று நோயாக அறிவித்தது (டாக்டர் தேவகி, 2020). இவ்வாறு பெருந்தொற்று நோயாக அறிவிக்கப்பட்ட கொரோனா நோயினால் மரணத்தை தழுவும் இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸாவை பலவந்தமாக எரிக்கும் கொடுஞ்செயல் தொடர்கதையாய்த் தொடர்கின்றது.

### 1.2. இஸ்லாமிய ஜனாஸா நல்லடக்கம்

இஸ்லாமிய வாழ்வியல் நெறிமுறைகள் குறித்து புனித அல்குர்ஆனின் 114 அத்தியாயங்களிலும் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகின்றது. அத்தியாயம் 32 : 11 இன்படி மரணத்தின் பின் ஜனாஸா முழுமையாக வெள்ளைத் துணியினால் சுற்றப்பட்டு அடக்கம் செய்யப்பட வேண்டும். இவ்வாறு வெள்ளைத்துணி சுற்றப்படுவது "கபனிடுதல்" எனப்படும். இதற்கு முன்னர் ஜனாஸா கழுவித் துப்புரவு செய்யப்பட வேண்டும். ஜனாஸா வெள்ளைத் துணியினால் சுற்றப்பட்டு கபனிட பருத்தித் துணியே பயன்படுத்தப்படும். ஆண் ஜனாஸா மூன்று துணிகளாலும், பெண் ஜனாஸா ஐந்து துணிகளாலும், பிள்ளைகளின் ஜனாஸா ஒரு துணியினாலும் முழுமையாக சுற்றப்பட வேண்டும். ஜனாஸாவானது இறந்து ஒரு நாளில் - 24 மணித்தியாலங்களில் அடக்கம் செய்யப்பட வேண்டும். கொரோனா மரணத்தின் பின் ஒரு ஜனாஸா இந்த நெறிமுறைகளின்படி கௌரவத்துடன் நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதே முஸ்லிம் சமூகத்தின் தார்மீக கோரிக்கையாகும் (குணசீலன், 2020).

இன்று கொரோனா தொற்றுக்குள்ளான இலங்கை முஸ்லிம்களின் மரணங்களில் இவை கடைபிடிக்கப்படுவதில்லை. குளிப்பாட்டுதல், கபனிடுதல் போன்ற நெறிமுறைகளை மேற்கொள்வதனூடாக ஜனாஸாவின் மூலம் கொரோனா தொற்றும் ஆபத்து ஏற்படலாம் எனக் கருதி அவற்றைத் தவிர்த்தாலும், தொழுவித்தல், அடக்கம் செய்தல் போன்ற நெறிமுறைகளுக்கு சாத்தியப்பாடு உள்ளது. அதற்காவது இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும் என்பதே இலங்கை முஸ்லிம்கள் உட்பட உலகளாவிய ரீதியாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதில் தொழுவித்தல் என்ற விடயம் ஏதோவொரு வகையில் சில ஜனாஸாக்களுக்கு இடம்பெற்றாலும் அடக்கம் செய்வது முற்றுமுழுதாக தடுக்கப்பட்ட ஒரு விடயமாகவே இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காட்டுகின்றன. இது தொடர்பான சர்வதேச ரீதியான நிலைப்பாடு மற்றும் கருத்துக்களையே இவ் ஆய்வுக் கட்டுரையில் முன்வைத்துள்ளோம்.

## 2. ஆய்வுப்பிரச்சினை

இலங்கையில் Covid - 19 தொற்றுக்குள்ளாகி மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை இலங்கை அரசாங்கம் பலவந்தமாக எரிக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது. ஏற்கனவே உலக சுகாதார அமைப்பானது இவ்வாறுள்ள பிரேதங்களை புதைக்கலாம் அல்லது எரிக்கலாம் என்ற இருபக்க முடிவுகளை வழங்கியுள்ள நிலையில், முஸ்லிம்கள் தங்களது இறந்த உடல்களை புதைப்பதையே சமய வழக்காறாகக் கொண்டுள்ளனர், இது அவர்களின் சமயத்தில் வலியுறுத்தப்பட்ட ஒன்றாக உள்ளதால் இலங்கை அரசாங்கத்தின் இவ் ஒருபக்கச் செயற்பாடு முஸ்லிம்களின் சமய உரிமைகளை பறிப்பதாகவும், அவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

## 3. ஆய்வின் நோக்கங்கள்

1) இலங்கையில் Covid - 19 தொற்றுக்குள்ளாகி மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதற்கு எதிராக சர்வதேச நாடுகள், அவற்றின் அமைப்புகள் மற்றும் பிரமுகர்களின் ஆதரவுகளைக் கண்டறிதல்.

2) இலங்கையில் Covid - 19 தொற்றுக்குள்ளாகி மரணிக்கும் ஜனாஸாக்கள் இலங்கை அரசினால் பலவந்தமாக எரிக்கப்படுவதற்கான நியாயமான காரணங்கள் சர்வதேச ரீதியான கருத்துக்களினூடாக முன்வைக்கப்பட்டுள்ளனவா எனக் கண்டறிதல்.

## 4. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வுக் கட்டுரைக்கு இரண்டாம் நிலை மூலகங்களினூடாகவே தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதற்காக பத்திரிகை இனையத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்கள் (Youtube, Face Book) போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளே பயன்படுத்தப்பட்டன.

## 5. தரவு முன்வைத்தல்

### 5.1. Covid - 19 தொற்றுக்குள்ளான இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுதல் தொடர்பான சர்வதேச கண்ணோட்டம்

உலகினையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் கொரோனா, இலங்கையிலும் எண்ணற்ற சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. நாளாந்த வாழ்வை, இயல்பு வாழ்க்கையை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் ஒரு பிரச்சினையாக இது மாறியிருக்கின்றது. கொரோனா தொற்று ஏற்பட்டது முதல் இந்த விடயம் பேசுபொருளாக உள்ளது. இதில் ஒரு முக்கிய விடயம் இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் இஸ்லாம் மதநெறிமுறைகளுக்கு மாறாக எரிக்கப்படுவதாகும். சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் பெரியளவில் விவாதிக்கப்படும் ஒரு விடயமாக இந்த ஜனாஸா எரிப்பு விவகாரம் இருந்து வருகின்றது.

கொரோனா தொற்று உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தது முதல் கொரோனாவில் உயிரிழப்பவர்களின் உடல்களை உலக நாடுகள் அடக்கம் செய்தே வருகின்றன. உலக சுகாதார மையம் (WHO) கொரோனாவில் மரணிப்போரை அடக்கமும் செய்யலாம், எரிக்கவும் செய்யலாம் என மிகத் தெளிவாக அறிவித்துள்ளது. அடக்கம் செய்வதால் நோய்த்தொற்று பரவும் என்று மருத்துவ உலகும் சொல்லவில்லை. இந்நிலையில், இலங்கையில் மாத்திரம் கொரோனாவினால் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டு அவர்களின் உடல்கள் எரியூட்டப்பட்டு வருகின்றன.

இந்த ஜனாஸா எரிப்பு விடயமானது இலங்கை மக்களுக்கு மட்டுமன்றி உலக மக்களுக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக தேசிய மட்டத்தில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையைத் தொடர்ந்து சர்வதேச மட்டத்திலும் இலங்கை மக்களுக்காக குரல்கள் ஓங்கிக் கொண்டிருக்கின்றன. இது தொடர்பான பல்வேறு கருத்துக்களை சர்வதேசத்தில் பல அமைப்புக்களும் பிரமுகர்களும் முன்வைத்துள்ளதைக் காண முடிகிறது.

#### 5.1.1. ஜனாஸா எரிப்பு பற்றிய சர்வதேச அமைப்புகளிள் கருத்துக்கள்

இலங்கை அரசினால் கொடூரமாக செயற்படுத்தப்பட்டு வரும் கொரோனா தொற்றுக்குள்ளான முஸ்லிம் ஜனாஸாக்களை எரிப்பது தொடர்பாக துறைசார் சர்வதேச அமைப்புக்களின் நிலைப்பாடு எவ்வாறானதாக உள்ளது என்பதை ஆராயுமிடத்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அகமட் அல் தாவூடி, ஏராகன் பினேகன் இருவரும் மேற்கொண்டுள்ள ஆய்வில் பின்வரும் விடயங்களைப் பதிவு செய்துள்ளனர்.

"மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரையும், இறப்பின் பின்னரும் ஒவ்வொரு மதங்களிலும் நம்பிக்கையுடன் கூடிய பல வேறுபட்ட நெறிமுறைகள் உண்டு. இங்கு மிகவும் முக்கியமானது, இறந்தவர் தனது வாழ்நாள் முழுவதும் பயணித்து மத நெறிமுறைகளுக்கு மதிப்பளித்து அவரையும் உறவினர்களையும் கௌரவப்படுத்துவதாகும்" (குணசீலன், 2020).

மேலும், உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) இடைக்கால அறிக்கை கொரோனா தொற்றினால் இறந்தவர்களின் உடல்களை எரிக்கவோ அல்லது அடக்கம் செய்யவோ முடியும் என்றும், இதனால் நிலக்கீழ் நீருக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்றும் கூறுகின்றது (குணசீலன், 2020).

தொற்றுநோய் முகவர் நிலைய ஆய்வுகளின்படி, இறந்த ஒருவரின் உடலிலிருந்து கொரோனா தொற்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று தெரிய வருகின்றது. மற்றும் நிலக்கீழ் நீர் மாசடைவதற்கான ஆதாரம் எதுவும் இதுவரை இல்லையென்றும், கொரோனாவானது நீர், உணவில் இருந்து தொற்றுவதில்லை என்றும், அடிப்படையில் மூக்கு சுவாசத்தின் மூலம் தொற்றும் நோய் என்றும் வாதிடுகின்றது. மேலும், இலங்கையை விடவும் கொரோனா இறப்புகள் கூடிய நாடுகள் தொடர்ந்தும் அடக்கம் செய்யும் நடைமுறையைப் பின்பற்றுவதோடு, மாலைதீவு இலங்கையை விடவும் சிறிய நாடு. அது நிலக்கீழ் நீர்ப்பிரச்சினையை எதிர்கொள்கின்றது. அதன் கடல் மட்டம் தாழ்வானது. அப்படியிருந்தும் அங்கு கொரோனா இறப்புகள் அடக்கம் செய்யப்படுகின்றன என்றும் தொற்றுநோய் முகவர் நிலையம் குறிப்பிடுகின்றது (குணசீலன், 2020).

மேலும், கொரோனாவினால் மரணிப்போரின் உடல்களை எரியூட்டும் இலங்கை அரசின் செயற்பாடுகளுக்கு உலக இஸ்லாமிய கூட்டமைப்பின் (OIC) மனித உரிமைகளுக்கான பிரிவு (IPHRC) தனது வருத்தத்தை வெளியிட்டுள்ளது. மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வது என்பது முஸ்லிம்கள் உட்பட பல மதத்தினர் பின்பற்றும் ஒரு நடைமுறை. பல மனித உரிமை அமைப்புகளும், ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளரும் மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கை குறித்து இலங்கை அரசாங்கத்தை அதன் முஸ்லிம் சிறுபான்மையினரின் அடக்கும் உரிமைகளை வலியுறுத்தியுள்ளனர். சர்வதேச மனித உரிமைகள் சட்டம் குறிப்பாக, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) பிரிவு 18 அனைத்து மக்களின் மத சுதந்திரத்தையும் பாதுகாக்கிறது. அதில் அவர்களின் மதம் அல்லது வழிபாட்டில் நம்பிக்கையுடன் செயல்படும் உரிமை வழங்கப்பட்டுள்ளது சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்து ICCPR பிரிவு 27 மத சிறுபான்மையினருக்குரிய உரிமைகளை மறுக்கக் கூடாது என்பதை மேலும் வலியுறுத்துகிறது (Short News, 2020)

அதுமட்டுமின்றி கொவிட் 19 தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களைக் கட்டாய தகனத்துக்கு உட்படுத்துவதை நிறுத்த வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. கட்டாய தகனம் செய்யும் கொள்கையை முடிவுக்கு கொண்டுவருமாறு ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் இலங்கையை வலியுறுத்தியுள்ளதுடன் இது நாட்டின் முஸ்லிம்கள் மற்றும் இதர சிறுபான்மையினரின் நம்பிக்கைகளுக்கு முரணானது என்றும் தெரிவித்தனர். உடல்களைத் தகனம் செய்வது தான் ஒரே வழி எனக் குறிப்பிடுவதானது மனித உரிமை மீறலுக்குச் சமம் என நிபுணர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கையில் அல்லது வேறு நாடுகளில் இறந்த உடல்களை அடக்கம் செய்வது கொவிட் 19 தொற்று பரவும் அபாயத்திற்கு வழிவகுக்கிறது என்பதற்கு உறுதிப்படுத்தப்பட்ட மருத்துவ அல்லது அறிவியல் சான்றுகள் எதுவும் இல்லையென நிபுணர்கள் தெரிவித்ததாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது (சிவா ராமசாமி, 2021).

இவ்வாறானதொரு அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட போதும் கட்டாய தகனம் என்ற தமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லையென இலங்கை அரசாங்கம் தெரிவித்திருந்தது. இலங்கையின் இச்செயற்பாடு அடம்பிடிக்கும் குழந்தைத்தனமாகவே உள்ளது.

இது இவ்வாறிருக்க, ஜனாஸா எரிப்பு தொடர்பில் மனித நேயத்துடன் செயற்படுமாறு கோரிக்கை விடுத்து இலங்கை அரசுக்கு விஷேட கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையையும் காணலாம். இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் இலங்கை ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தனர். இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயமாவது, "வைரஸ் தாக்கத்திற்குள்ளாகி உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களைத் தகனம் செய்வது குறித்து இலங்கை முஸ்லிம்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் வெளிப்படையான பேச்சு வார்த்தைகள் இடம்பெற வேண்டும். உலகளாவிய நோய்த்தொற்றின் போது உலக நாடுகளில் இறந்தவரின் உடலை மக்களின் பார்வைக்கு வைத்தல் என்பது உயிரிழந்தவரின் மத நம்பிக்கையை கணக்கிலெடுப்பதன் மூலமும் உடலின் புனிதத் தன்மை மற்றும் மரியாதையை நிலை நிறுத்துவதன் மூலமும் தீர்மானிக்கப்படுகின்றது. இறந்த உடலைப் புதைப்பதால் வைரஸ் பரவுகின்றது என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் இல்லை. இலங்கையில் கொரோனா வைரசினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தொடர்பான விவகாரம் இலங்கையிலும் உலக நாடுகளிலும் உள்ள முஸ்லிம்களுக்கு துயரத்தை ஏறாபடுத்துகின்றது" என இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தூதுவர்கள் தெரிவித்துள்ளனர் (விடிவெள்ளி, 2020).

அத்தோடு, இவ் ஜனாஸா எரிப்பு விவகாரம் தொடர்பில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் தலையீட்டைக் கோரி சர்வதேச நாடுகளில் செயல்பட்டு வரும் இலங்கை முஸ்லிம் அமைப்புகள் ஒன்றிணைந்து கூட்டாக கடிதம் அனுப்பியுள்ளன. இம்ரான் கான் இலங்கை செல்லவுள்ளதாக தகவல் வெளியானமையை அடுத்து அவரது இலங்கைக்கான இவாவிஜயத்தின் போது, கட்டாய ஜனாஸா எரிப்பு விடயத்தினால் முஸ்லிம் சமூகம் பாதிக்கப்பட்டுள்ளமையை இலங்கை ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறி இதற்கொரு முடிவு காண உதவுமாறு கோரியே இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெய்ன், சுவீடன், மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் முன்னணி அமைப்புகளுடன் இணைந்து ஐக்கிய இராச்சியத்தில் செயற்பட்டு வரும் 23 முன்னிலை சமூக அமைப்புகள் இக்கடிதத்தில் முழுமையான விபரங்களுடன் கையொப்பமிட்டுள்ளன. இத்தகைய கட்டாய ஜனாஸா எரிப்பின் காரணமாக உலக முஸ்லிம்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள நிலையில், முஸ்லிம் சமூகத்துக்காக பகிரங்கமாக குரல் கொடுக்கும் இம்ரான் கான் இவ்விடயத்திலும் தனது பங்களிப்பினை வழங்குவார் என எதிர்பாராப்பதாக ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர் (ஜனாஸா எரிப்பு..., 2021)

இவ்வாறு கொரோனா தொற்று பற்றி ஆய்வுகளை மேற்கொண்டு அது பற்றி அதிக அறிவையும், தகவல்களையும் கொண்டுள்ள பெரும் அமைப்புகள் கூட கட்டாய ஜனாஸா எரிப்பு நியாயமற்றது, விஞ்ஞானத்திற்கு முரணானது என்ற நிலைப்பாட்டுடன் அதனை ஆதரிக்காத போது, இது பற்றி குறிப்பிட்ட சில அறிவினையே கொண்ட இலங்கை அரசாங்கம் கடினத்தன்மையுடன் செயற்படுவது மனித உரிமை மீறலென்பது அவர்களது செயல்களினூடாகப் புலனாகிறது.

### 5.1.2. ஜனாஸா எரிப்பு பற்றிய சர்வதேச அறிஞர்கள்/பிரமுகர்களின் கருத்துக்கள்

இலங்கையில் கட்டாய ஜனாஸா எரிப்பு இடம்பெறத் துவங்கியதைத் தொடர்ந்து சர்வதேச நாடுகளைச் சேர்ந்த பல்வேறு அறிஞர்களும் பலவிதமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். தற்போது மலேசியாவில் வசித்து வரும் இந்தியாவின் பிரபல மார்க்க பிரசாரகர் டாக்டர் ஜாகிர் நாயிக் இலங்கையில் கொவிட் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் பலவந்தமாக எரிக்கப்படுவது தொடர்பில் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

உலகிலுள்ள 200 இற்கும் மேற்பட்ட நாடுகளிடையே இலங்கையில் மாத்திரமே கொவிட் 19 தொற்றினால் ஒருவர் உயிரிழந்தால் அந்த உடலை தகனம் செய்ய வேண்டுமென தீர்மானித்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. உலகில் எந்த நாட்டிலும் இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்படவில்லை. உலக சுகாதார நிறுவனம் கூட கொவிட் 19 தொற்றினால் ஒருவர் உயிரிழந்தால் அந்த உடலை அடக்கம் செய்யலாம் அல்லது தகனம் செய்யலாம். இரு முறைகளும் பாதுகாப்பானவையே எனத் தெரிவித்திருக்கின்றது. ஆனால், கொவிட் 19 தொற்றினால் உயிரிழந்தால் அந்த உடலைத் தகனம் மாத்திரமே செய்ய வேண்டும் என்ற விதிமுறையை இலங்கை எங்கிருந்து பெற்றது? என்ற கேள்வியை எழுப்புகின்றார்.

“முஸ்லிம்கள் ஒரு உடலைப் போன்றவர்கள். உடலின் ஒரு பகுதியில் வலித்தால் அந்த வலி முழு உடலுக்கும் பரவும்” என்கிற முஹம்மத் நபியவர்களின் உபதேசத்தை நினைவுபடுத்திய ஜாகிர் நாயிக் அவர்கள், “இலங்கையில் சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு மேற்கொள்ளப்படும் அநீதிக்கு எதிராக சர்வதேச ரீதியில் முஸ்லிம்கள் ஒன்றுபட்டு எழுந்து நினறால் தனது சட்டத்தை இலங்கை அரசு மாற்றுவதற்கான அதிகபட்ச சந்தர்ப்பம் உள்ளது” எனத் தெரிவித்துள்ளார் (அப்துல் நஸார், 2021).

கொவிட் 19 தொற்றினால் உயிரிழந்தவர்களை தகனம் மாத்திரமே செய்ய வேண்டும் என்பதற்கு மருத்துவ ரீதியாகவோ அல்லது விஞ்ஞான ரீதியாகவோ எவ்வித ஆதாரங்களும் இல்லை. மருத்துவ ரீதியாக இதனை எவராலும் நிரூபிக்க முடியாது. விஞ்ஞான ரீதியாக தகனம் மற்றும் அடக்கம் செய்தல் என்ற விடயங்களை நாம் ஒப்பீடு செய்து பார்ப்போமானால், உலகில் பெரும்பான்மையான மக்கள் மரணித்தவர்களை அடக்கம் செய்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளர். எனவே, டாக்டர் ஜாகிர் நாயிக்கின் மேற்குறிப்பிட்ட கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே உள்ளது.

மேலும், மேற்கு அவுஸ்திரேலியாவின் மேர்டொக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி அமீர் அலி அவர்கள் இத்தகைய முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு பற்றிக் கூறுகின்ற கருத்தினை நோக்குகின்ற போது, “கொவிட் - 19 தொற்றினால் உயிரிழந்தோரை மண்ணுக்குள் அடக்கினால் அப்புதை குழிக்குள் கசிந்து வரும் நீரின் மூலம் நோய்க் கிருமிகள் வெளியே பரவும் என்ற ஒரு புதுமையான மருத்துவச் சித்தாந்தத்தை உலகிலேயே முதன்முதலாகச் சிருஷ்டித்து, அந்நோயினால் மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்க வேண்டுமெனக் கட்டளை பிறப்பித்த ஒரே நாடு இலங்கையாகும். உலக சுகாதார ஸ்தாபனம் தொடக்கம் அகில முஸ்லிம் நாடுகள், அவற்றின் அமைப்புகள் ஈறாக எழுந்த அத்தனை எதிர்ப்புகளும் இலங்கை அரசுக்கு செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயிற்று. ஜனாஸா எரிக்கும் விடயத்தில் மொத்த முஸ்லிம் சமுகமுமே கொதிப்படைந்துள்ளது. இந்த நிலையில் ஆத்திரங்கொண்ட ஒருவர் சட்டத்தை தன் கையிலெடுத்துக்கொண்டு ஏதோ ஓர் அசம்பாவிதத்தை உண்டாக்கலாம். அவ்வாறு நடைபெற்றால் அது பேரினவாதிகளுக்குக் கிடைக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். ஜூலை 1983 இல் தமிழினத்துக்கு நடந்தது போன்ற அழிவு இம்முறை முஸ்லிம்களுக்கும் ஏற்படலாம். அவ்வாறு ஏற்பட்டால் சீனாவில் உய்கர் முஸ்லிம்களுக்கு நடந்தது போன்று இங்கேயும் முஸ்லிம்களை முகாம்களுக்குள் அடைத்து மூளைச்சலவை செய்ய பேரினவாதிகளுக்கு அது ஒரு சந்தர்ப்பமாக மாறும். ஆட்சியாளர்களும் முஸ்லிம்களைப் பாதுகாக்கிறோம் என்ற போர்வையில் அவ்வாறான முகாம்களை ஏற்படுத்திக் கொடுப்பர். அவ்வாறான ஆபத்துகளிலிருந்து விடுதலை பெறவேண்டுமானால் முஸ்லிம் சமூகம் ஒரு புதிய பாதையிற் செல்ல வேண்டும்” என்று ஒரு நீண்ட கருத்தினை முன்வைத்துள்ளார் (அமீரலி, 2020).

உண்மையில் முஸ்லிம்களுக்கெதிரான ஜனாஸா எரிப்பினால் அவர்களது உணர்வுகள் தூண்டப்பட்டு ஏதாவதோர் அசம்பாவிதத்தை மேற்கொள்ளுமிடத்து அது எமக்கு நாமே தோண்டும் குழியாகி விடும் என்பதை கலாநிதி அமீர் அலி அவர்களின் மேற்படி கருத்து புடம்போட்டுக் காட்டுகிறது. இப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஆவேசமின்றி, விவேகத்துடன் செயற்படுவதே சாலச் சிறந்ததாகும்.

Covid - 19 காரணமாக மரணித்த இலங்கை முஸ்லிம்களின் இஸ்லாமிய இறுதிச் சடங்குகளை மீறும் கட்டாய தகனத்தை International Bar Association's Human Rights (IBAHR) வலுவாகக் கண்டித்துள்ளது. IBAHRI இன் இணைத்தலைவரும் Swedish Bar Association இன் கடந்த பொதுச்செயலாளருமான Ramberg Dr nur hc இலங்கை ஜனாஸா எரிப்பு பற்றி தெரிவிக்கையில், "Covid - 19 தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களை அடக்கம் செய்வதன் மூலம் WHO வழிகாட்டுதல் பொது சுகாதார அபாயம் இல்லை என்று கூறியுள்ளதால், இலங்கை அரசாங்கத்தின் பலவந்தமான தகனம் குறித்த கொள்கையை உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் மற்றும் சிவில் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) பிரிவு 9 மற்றும் 18 இல் இது ஒரு நபரின் மத சுதந்திரத்திற்கான உரிமையாகும். மேலும், பழக்கவழக்கங்களிலும் நடைமுறையிலும் தங்கள் மதத்தை வெளிப்படுத்தும் உரிமையும் உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே, இலங்கையின் முஸ்லிம்களுக்கு அவர்களின் மத நம்பிக்கைகளுக்கு ஏற்ப இறந்தவர்களை அடக்கம் செய்ய மத சுதந்திரம் மறுக்கப்படுவது சர்வதேச சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி நேரடி மீறலாகும். இறந்தவர்களின் கலாச்சார மற்றும் மத மரபுகள், அவர்களது குடும்பங்கள் முழுவதும் மதிக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டுமென உலக சுகாதார அமைப்பு (WHO) கூறுகிறது. எனவே, தனிநபர்களின் சுயாட்சியை மறுப்பதற்கான எந்தவொரு விஞ்ஞான அடிப்படையுமின்றி அமுல்படுத்தப்பட்ட தகனக் கொள்கையை மாற்றியமைக்குமாறும், தனிநபரின் மத சுதந்திரத்திற்கான உரிமையை உறுதிப்படுத்துமாறும் இலங்கையை வேண்டுகோள் விடுக்கின்றோம்" என்று Ramberg Dr jur hc அவரது கருத்தை முன்வைத்துள்ளார் (IBAHRI, 2021).

அதேபோல், IBAHRI இன் இயக்குனர் Baroness Helena Kannedy Qc என்பவரும் முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு குறித்து கருத்துக்களை முன்வைத்துள்ளார். "இலங்கையின் கட்டாய தகனக் கொள்கையை நியாயப்படுத்த உலகளவில் மருத்துவ அமைப்புகளிடமிருந்து எந்த வழிகாட்டுதல்களும் இல்லை. மற்றும் தொற்றுநோய்களின் போது உடலை அடக்கம் செய்வதனால் பொது சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதைக் குறிக்கும் எந்த அறிவியல் ஆதாரங்களும் இல்லை. Covid - 19 தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்களை நிர்வகிக்க ஆணையிடும்

கொள்கையை சர்வதேச சட்டத்திற்கு இணங்க மாற்றியமைக்க வேண்டும். முஸ்லிம் மக்களது மரணத்தில் கண்ணியத்தை ஏற்படுத்த வேண்டும். மேலும், அடிப்படை மத பாரம்பரியத்தை இயற்றுவதற்கான உரிமையையும் வழங்க வேண்டும;" என்று அவர் கூறியுள்ளார் (IBAHRI, 2021).

அத்தோடு, பிரிட்டனின் மிகப்பெரிய Muslim Umbrella Group இன் ஸ்தாபக பொதுச்செயலாளர், பிரிட்டன் முஸ்லிம் கவுன்சில் (MCB) இக்பால் சக்ரானி (Iqbal Sacranie) அவர்களும் இலங்கையில் முஸ்லிம் ஜனாஸாக்களை எரிப்பது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ளார். இலங்கையில் முஸ்லிம்களைத் தகனம் செய்வது முஸ்லிம் சமூகத்தைக் குறிவைக்கும் வகையில் செயல்படுத்தப்பட்ட ஒரு நடவடிக்கையாக விவரித்துள்ளார். அதை அவர், "அரசியல் காரணங்களுக்காக முஸ்லிம் சமூகத்திற்கு கூட்டு தண்டனை வழங்கும் ஒரு அரசியல் நடவடிக்கை" என்று கூறியுள்ளார் (UNI, 2021).

மேலும், இலங்கை நாட்டு அரசு ஜனாஸாக்களை பலவந்தமாக எரிக்கும் நடவடிக்கையைக் கண்டித்து எஸ்.டி.பி.ஐ கட்சியின் சார்பாக சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட போது, அக்கட்சியின் மாநில பொதுச்செயலாளர் நிஜாம் முகைதீன் கண்டன உரையொன்றை நிகழ்த்தினார். "இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த இஸ்லாமியர்களின் உடல்களை அடக்கம் செய்யாமல் அரசே வலுக்கட்டாயமாக எரித்து விடுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. உலகில் வேறு எந்த நாடுகளிலும் இது போன்றதொரு நடைமுறை இல்லாதபோது இலங்கையில் மட்டும் நடைபெறும் இத்தகைய நிகழ்வு காரணமாக இலங்கையிலுள்ள இஸ்லாமியர்கள் மட்டுமன்றி உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்களும் மிகுந்த மன வேதனையை அடைந்துள்ளனர். ஒரு முஸ்லிம் மரணித்தால் குளிப்பாட்டுவது, உடலைத் துணியால் போர்த்துவது, இறுதி தொழுகை நடாத்துவது, அடக்கம் செய்வது என்பது கட்டாய கடமையாகும் என்கிறபோது, கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த இஸ்லாமியர்களின் உடலை குறைந்த பட்சம் இறுதி தொழுகை நடாத்தி அடக்கம் செய்யக்கூட அனுமதிக்காமல் உடலை எரியூட்டுவது என்பது மத உரிமைகளை மறுக்கும் அதேவேளையில் மனித உரிமைக்கு எதிரான நடவடிக்கையுமாகும். சர்வதேச அளவில் மரணித்தவர்களின் உடல்கள் அதிகளவில் மண்ணில் தான் அடக்கம் செய்யப்படுகின்றன. கொரோனாவினால் உயிரிழந்தவர்களின் உடல்களும் அவ்வாறே அடக்கம் செய்யப்படுகின்றன. எங்கும் எரியூட்டப்படுவதில்லை. உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தல்களில் கூட இத்தகைய எரியூட்டும் வழிகாட்டுதல்கள் இல்லாதபோது, இலங்கை அரசின் இத்தகைய சிறுபான்மை மக்களுக்கு எதிரான விரோத நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. ஆகவே, தவறான உயிரியல் காரணங்களை முன்வைத்து இலங்கையில் கொரோனாவினால் உயிரிழந்த இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உடல்களை எரியூட்டுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மேலும், உடல் அடக்கம் உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் அனைத்து மத உரிமைகளும் பாதுகாக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்'' என்று வலியுறுத்தி நிஜாம் முகைதீன் அவர்கள் தனது உரையை நிகழ்த்தியுள்ளார் (முர்சித் முகம்மத், 2020). இவ்வாறாக உலகளவில் பல முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதோர் இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு தொடர்பாக தமது கருத்துக்களை பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

### 5.1.3. ஜனாஸா எரிப்புக்கு எதிராக சர்வதேச ரீதியான ஆர்ப்பாட்டங்கள்

இலங்கை அரசினால் தனது சகோதர இனத்துக்கு வழங்கப்படாத மனிதநேயம் அண்டை நாட்டு உறவுகளிடமிருந்து வெகுவாய்க் கிடைத்து வருகின்றது. முழு உலகையுமே கலங்கடிக்கச் செய்த இவ் ஜனாஸா எரிப்பிற்கான எதிரொலி பல நாடுகளிலும் ஆர்ப்பாட்டத்தினூடாக வெளிப்படுகின்றது. குறிப்பாக 20 நாட்களேயான சிசுவின் இறப்புக்கு கொரோனா தொற்றே காரணமெனக் கூறப்பட்டு அப்பிஞ்சு உடல் எரிக்கப்பட்ட விவகாரம் முழு உலகிலும் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதனால், முஸ்லிம் நாடுகளில் வாழும் மக்கள் அதிகளவில் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந்த சிசுவின் புகைப்படம் வளைகுடா நாடுகளில் வாகனங்களிலும், பொது இடங்களிலும் ஒட்டப்பட்டு அனுதாபம் தெரிவிப்பதனூடாக ஜனாஸா எரிப்புக்கெதிராக குரல் கொடுக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் வாழும் இலங்கையர்களும் லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். கொரோனா தொற்றில் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் எரிக்கப்படுகின்றமைக்கு அங்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது (லத்தீப் பாரூக், 2020).

மேலும், ஜெனிவாவிலும் ஜனாஸா எரிப்புக்கெதிராக ஓர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. கடும் குளிருக்கும், மழைக்கும் மத்தியில் கூட சுவிட்சர்லாந்தில் இந்த ஆர்ப்பாட்டம் ஜெனீவா மனித உரிமை ஆணையகத்திற்கு முன்னாலுள்ள திடலில் நடைபெற்றது. சுவிட்சர்லாந்தில் கொரோனா காரணமாக கட்டுப்பாடுகள் விதித்திருந்த நிலையிலும் வரையறுக்கப்பட்ட தொகையினருக்கு சுவிஸ் அரசு இவ் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி அளித்தமையானது இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்கு சுவிஸ் அரசு முக்கியமளித்ததை எடுத்துக்காட்டுகின்றது (ஜெனீவா ஆர்ப்பாட்டம், 2020).

அத்தோடு, நைஜீரியாவிலுள்ள ஒரு மார்க்க அறிஞர் அங்குள்ள பிரதான பள்ளிவாசலில் முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு பற்றி ஓர் உரையாற்றினார் (லத்தீப் பாரூக், 2020). இலங்கையில் Covid - 19 தொற்றினால் மரணிப்பவர்களின் ஜனாஸாக்களை பலவந்தமாக எரிப்பதைக் கண்டித்து அவுஸ்திரேலியாவில் வாழும் இலங்கையர்களால் ஓர் அமைதி வாகனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது சிட்னி நகரிலேயே இடம்பெற்றது. இலங்கை அரசாங்கத்திற்கு தமது செய்தியை எடுத்துக்கூறும் வகையிலும் அவுஸ்திரேலிய மக்கள் மத்தியில் இந்த விவகாரம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் இலங்கை முஸ்லிம்களால் ஏற்பாடு செய்யப்பட்டதாக அவுஸ்திரேலிய இலங்கை முஸ்லிம் சங்கத்தின் உதவிச் செயலாளர் ரிஸ்வி காஸிம் அவர்கள் தெரிவித்துள்ளார் (விடிவெள்ளி, 2021).

அந்த அளவுக்கு இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்புக்கு எதிரான பிரசாரங்கள் சர்வதேச நாடுகளில் தலைதூக்கியுள்ளன. உடனிருப்பவர்களின் நெஞ்சில் கசியாத ஈரம் முழு உலகிலுமே கசிகிறது.

## முடிவுரை

இலங்கையில் Covid - 19 தொற்றினால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை வலுக்கட்டாயமாக எரிக்கும் நடவடிக்கை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இந்த விடயம் முழு உலகையும் கலங்கடிக்கச் செய்து இலங்கையைத் திரும்பிப் பார்க்க வைக்கும் ஒன்றாகவே மாறியுள்ளது. 20 நாள் குழந்தை முதல் வயது முதிர்த்தோர் வரை என அனைவரும் இந்த ஜனாஸா எரிப்புக்கு பலியாகி தீச்சுவாலையின் நாவினால் விழுங்கப்பட்டுக்கொண்டு தான் இருக்கின்றனர். இலங்கையில் இது தொடர்பில் பல கருத்துக்களும், கண்டனங்களும் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இலங்கை முஸ்லிம்கள் இதற்கென பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். பொதுமக்கள் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இணைந்து மேற்கொள்ளும் ஜனாஸா எரிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டாங்கள், அமைதிப் போராட்டம், அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடுதல் என அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். விஷேடமாக இலங்கையின் பல ஈர மனம் கொண்ட நம் சகோதர இனத்தைச் சேர்ந்தவர்கள் கூட எமக்கெதிரான அநீதியின் போது எமக்காக பல விதத்திலும் கை கொடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

இதற்கப்பால், சர்வதேச உறவுகளும் இலங்கை முஸ்லிம்களுக்கெதிரான அநீதிக்கு ஆதரவாக செயற்படுகின்றமையைக் காண முடிகின்றது. பல பக்கங்களாலும் ஜனாஸா எரிப்புக்கு எதிராக குரல்கள் எழுப்பப்படுகின்ற நிலையிலும் கூட இலங்கை அரசாங்கம் தன் பிடியிலிருந்து சற்றும் நகராத ஒரு நிலைப்பாட்டையே காண முடிகிறது. உலக சுகாதார நிறுவனம், கொரோனா தொற்றினால் மரணிக்கும் ஜனாஸாக்களை அடக்குவதினால் நிலக்கீழ் நீர் மாசடையாது என்று தெளிவாக கூறிய போதிலும், இலங்கை அரசாங்கம் அதற்கு செவிசாய்க்காது நிலக்கீழ் நீர் மாசடையும் என்று விதண்டாவாதம் புரிகின்றது. இந்நிலைமை தொடர்ந்தால் முஸ்லிம்கள் தொடர்ந்தும் அரசியல் காரணங்களுக்காக பலியாகிக் கொண்டே தானிருப்பர். நாம் எமது உரிமையை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது. நியாயமற்ற காரணங்களை முன்னிறுத்தி எமது சமய உரிமை மறுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எமது உரிமைகளை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் அதற்கான முயற்சிகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். இறைவனுடனான எமது தொடர்பை இன்னும் அதிகரிக்க வேண்டும். மேலும், எமது சமய ரீதியான உரிமைகளை நாம் வலியுறுத்தும் அதேவேளையில், தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலையில் அதிகமாக உணர்ச்சிவசப்பட்டு நிலைமையை மேலும் சிக்கலாக்காமல் யதார்த்தபூர்வமான நடைமுறைச் சாத்தியமுள்ள தீர்க்கமான முடிவை மேற்கொள்வதே சாலச் சிறந்ததாகும்.

## உசாத்துணைகள்


1. ஸாகிர் நாயிக்.(2021). "ஜனாஸா எரிப்பு விவகாரத்தை OIC க்கு கொண்டு செல்வேன்". Available From: YouTube - Muslim Channel (Islam & Muslims). (Accessed on 9 January 2021).
2. "இலங்கை ஜனாஸா தகனத்தை கண்டித்து அவுஸ்திரேலியாவில் அமைதி வாகன பேரணி". விடிவெள்ளி (15 January 2021).
3. "இலங்கை ஜனாஸா தகனத்திற்கு எதிரான ஜெனீவா ஆர்ப்பாட்டம்".(2020). Available From: https://www.facebook.com. (Accessed on 21 January 2021).
4. "இலங்கை ஜனாஸா தகனத்திற்கு எதிரான ஜெனீவா ஆர்ப்பாட்டம்".(2020). Available From: https://tamil.lankanetnews.com. (Accessed on 21 January 2021).
5. "இலங்கை ஜனாஸா எரிப்பு விவகாரத்திற்கு சர்வதேச இஸ்லாமிய ஒன்றியம் கடும் கண்டனம்".(2020). Available From: https://www.shortnews.lk. (Accessed on 21 January 2021).
6. "ஜனாஸா எரிப்பு விவகாரம்: இம்ரான் கானின் தலையீட்டை கோரி முஸ்லிம் அமைப்புகள்".(2021). Available From: http://aruvi.com. (Accessed on 5 February 2021).
7. "ஜனாஸா எரிப்பு விவகாரம்: அரபு நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதிக்கு விஷேட கடிதம்".(2020) Available From: https://www.madawalaenews.com. (Accessed on 21 January 2021).
8. "British Muslim leader cites 'forced cremation' in Sri Lanka unacceptable".(2021). Available From: https://www.adaderana.lk. (Accessed on 9 February 2021).
9. "Cremation in Sri Lanka".(2021). Available From: YouTube – JJ Stream : India. (Accessed on 2 February 2021).
10. "உலக முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டால் இலங்கை நல்லடக்க விவகாரத்தில் அழுத்தம் கொடுக்கலாம் - ஜாக்கிர் நாயக்".(2021). Available From: https://tamil.lankanetnews.com. (Accessed on 21 January 2021).
11. "IBAHRI condemns forced cremations of Muslim Covid – 19 victims".(2021). Available From: https://www.ibanet.org. (Accessed on 9 February 2021).
12. குணசீலன்.(2020). "ஜனாஸா – எரியும் நெருப்பு". Available From: https://sdptnews.org. (Accessed on 24 January 2021).
13. முர்சித் முகம்மத்.(2020). "ஜனாஸா எரிப்பு விவகாரம் - சென்னையில் இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு எஸ்.டி.பி.ஐ. கட்சி போராட்டம்". Available From: https://www.madawalaenews.com. (Accessed on 5 February 2021).
14. டாக்டர் தேவகி, இ.(2020). "கொரோனா வைரஸ் முழுமையான பார்வை". Available From: https://www.hindutamil.in. (Accessed on 29 January 2021).
15. அப்துல் நஸார்,எம்.ஐ. "ஜனாஸாக்களை எரிக்கும் அநியாயத்திற்கு எதிராக முஸ்லிம் நாடுகளை ஒன்று திரட்டுவேன் - ஸாகிர் நாயிக்". விடிவெள்ளி (8 January 2021).
16. அமீரலி.(2020). "ஜனாஸா எரிப்பின் மறுபக்கம்". Available From: https://tamil.lankanetnews.com. (Accessed on 21 January 2021).
17. சிவா ராமசாமி.(2021). "கொரோனாவினால் உயிரிழப்போரின் உடல்களை கட்டாய தகனத்துக்கு உட்படுத்துவதை நிறுத்த வேண்டும்". Available From: https://youthceylon.com. (Accessed on 26 January 2021).
18. லத்தீப் பாரூக்.(2020). "கொரோனாவால் மரணம் அடைந்த முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்தல்". Available From: https://tamil.lankanetnews.com. (Accessed on 21 January 2021



**Azka Alhan**
azkazz0220@gmail.com

# கோவிட் – 19 தொற்றும் இலங்கை முஸ்லிம்களும் (சமய ரீதியான தாக்கங்கள்)

கொவிட் - 19 என அழைக்கப்படுகின்ற கொரோனா வைரஸ் என்பது ஒரு பெரும் தொற்றுநோய் ஆகும். உலக சுகாதார அமைப்பான (WHO) அமைப்பின் கருத்துப்படி கொரோனா வைரஸ் நோய் கடந்த 20 ஆண்டுகளில் பொது சுகாதாரத்திற்கு ஒரு தீவிரமான பிரச்சினையாக காணப்படுகின்றது. இந்நோய் அதிவேகமாக உலக அளவில் பரவியுள்ள அதேசமயம் நமது நாடான இலங்கையிலும் ஊடுருவி பல பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. அந்தவகையில் இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுபான்மை சமூகம் பெரும்பான்மை சமூகத்தை விடவும் பல்வேறு வகையில் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றது.

சிறுபான்மையினரான முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பார்த்தோமேயானால் கலாச்சார ரீதியாக, சமூக ரீதியாக, உளவியல் ரீதியாக, சமய ரீதியாக எனப் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகள் ஒருபுறம் இருக்க சாதகமான சில தாக்கங்கள் பெருந்தொற்றுக் காலத்தில் நடந்ததையும் மறுக்க முடியாது.

அதாவது, நமது முஸ்லிம் சமூகத்தில் காணப்படுகின்ற ஆடம்பரமான நிகழ்வுகள் குறைவடைந்து அனைத்தையும் ஒரு கட்டுப்பாட்டுடன் செய்வதற்கு இப் பெருந்தொற்றுக் காலமே காரணமாகும். அதுமட்டுமன்றி குடும்பங்கள் ஒன்றிணைந்து வாழவும் கொவிட் - 19 பெருந்தொற்றுக் காலம் உதவியுள்ளது. இருந்தாலும் பெரும்பாலும் சாதகமான விடயங்களை விட பாதகமான விடயங்களே அதிகமாக நடந்தேறியுள்ளன. வேகமாகப் பரவிவரும் கொவிட் - 19 கொள்ளை நோயை கட்டுப்படுத்தும் போராட்டத்தில் முழு உலகமும் முழு வீச்சில் போராடி வரும் சவால் மிகுந்த காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இக் கொள்ளை நோய்க்கு பல உயிர்களை பறிகொடுத்த நிலையில் இலங்கையும் இப்போராட்டத்தில் இணைந்துள்ளது. சமூக இடைவெளி, முகக் கவசம், ஒரு மாதத்திற்கு மேல் தொடரும் ஊரடங்கு, வீடுகளுக்குள் சுய தனிமைப்படுத்தல், தடுத்து வைப்புக்கள், சுற்றிவளைப்புகள், நோய் தொற்றியுள்ளதைக் தடமறியும் நடவடிக்கைகள் என இக்கொடிய வைரஸிற்கு எதிரான முன்னர் அறிந்திராத பல நடவடிக்கைகள் இந்நாட்டில் நிகழ்ந்தேறிக் கொண்டிருக்கின்றன. இனியும் என்ன நடக்குமோ? என மக்கள் அறியாது கதிகலங்கி நிற்கும் பதற்றம் மிக்க இச் சூழலில் சிறுபான்மை சமுதாயத்தினை வேறாக்கி பாகுபாட்டுக்கு உட்படுத்தாமல் இருப்பது மிக முக்கியமாகும்.

வைரஸை கட்டுப்படுத்துகிறோம் என்ற பெயரில் தன்னிச்சையாகவும் பாகுபாடு மிகு முறையிலும் நடவடிக்கைகளில் இறங்குவது இன நல்லுறவினைத் துண்டாடுவது மட்டுமன்றி நோயுற்றிருப்பவர்கள் தம்மை அடையாளப்படுத்தாமல் வெருண்டோடும் நிலையினையும் உருவாக்கலாம். இதனால் கட்டுப்படுத்த நினைக்கும் வைரஸ் எங்கும் வியாபிக்கும் மோசமான நிலை உருவாகலாம். ஏனென்றால் வைரஸிற்கு இனத்துவ வேற்றுமை பார்க்க முடியாது.
வைரஸ் தொடர்பில் அரசாங்கம் மேற்கொள்ளும் அணுகுமுறையில் மக்களின் வாழ்வும் சுதந்திரமும் ஏற்கனவே அபாய நிலைக்கு உள்ளாகியுள்ளது. புதிய ஒழுங்கு விதிகளில் இறந்த உடலை அகற்றுவதற்காக ஒரே தெரிவு உடல்களை எரியூட்டுவதே எனத் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்லாமிய சமயத்தினை பொறுத்தவரையில் இறந்த உடல்களை தகனம் செய்வதற்கு மார்க்கத்தில் அனுமதி இல்லை. இவ்வாறான சட்டம் இலங்கை முஸ்லிம் சமுதாயத்தின் மனங்களில் ஆறாத ரணத்தை ஏற்படுத்திவிட்டது. இறந்த உடலை மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டவாறு அடக்கம் செய்வதற்கான உரிமையும் பறிக்கப்பட ஒரு சமூகம் என்ற நிலைக்கு இன்று முஸ்லிம் சமூகம் திட்டமிட்டுத் தள்ளப்பட்டுள்ளது.

மார்ச் 30 வரையில் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் கொவிட் - 19 தொற்றால் இறப்பவர்களை அடக்கம் செய்வது ஒரு தெரிவு என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தொற்றால் பாதிக்கப்பட்ட முதலாவது முஸ்லிம் நபர் இறந்தவுடன் அவசர அவசரமாக பழைய சுற்றுநிருப வழிகாட்டல் ஓர் இரவிலேயே மறைக்கப்பட்டு அந்த முஸ்லிம் சகோதரனின் உடல் இஸ்லாமிய சட்டத்தை மீறி தகனம் செய்யப்பட்டது.

தொற்றுக்குள்ளான முஸ்லிம் நோயாளி மார்ச் 30ஆம் திகதி பிற்பகல் 7 மணியளவில் நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலையில் காலமானார். அந்த முஸ்லிம் சகோதரனின் உடலை குடும்ப உறுப்பினர்கள் யாரும் பார்க்க அனுமதிக்காமலேயே இரவோடு இரவாக துரிதமாக தகனம் செய்யப்பட்டது. கொவிட் - 19 தொற்று காரணமாக மரணமடைந்தவர்களின் புதைக்கப்பட்ட சடலங்களில் இருந்து கொரோனா வைரஸ் பரவ முடியும் என்று இதுவரையில் எந்தவொரு விஞ்ஞானியும் அல்லது தொற்று நோயியல் நிபுணரும் உலகின் எந்தப் பகுதியிலும் உறுதி வாய்ந்த ஆதாரத்துடன் நிரூபிக்கவில்லை.

இலங்கையில் சுகாதார நிபுணர்கள் மாத்திரமே கொரோனாவினால் மரணமடைந்தவர்களின் புதைக்கப்பட்ட சடலங்களிலிருந்து வைரஸ் பரவக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் நிலத்தடி நீரின் மட்டம் உயர்வானதாக இருப்பதே அதற்குக் காரணம் என்றும் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கின்றனர். அதனால் அவர்கள் கொரோனா மரணத்திற்குள்ளாகும் சகலரினதும் சடலங்கள் தகனம் செய்யப்பட வேண்டும் என்று விதிமுறை செய்திருப்பது நேரடியாகவே இலங்கை வாழ் முஸ்லிம்களின் மத உணர்வுகளை புண்படுத்துவதாக அமைகின்றது.

மேலே கூறப்பட்ட சம்பவம் மட்டுமன்றி இன்னும் மனதை உருக்கும் சம்பவங்கள் இனவெறியர்களினால் கொவிட் - 19 தொற்றுக் காலத்தில் நடைபெற்றது. கொரோனோ தொற்றுக்குள்ளானதாக கூறப்பட்டு 20 நாட்களேயான சிசுவொன்று பலவந்தமாக தகனம் செய்யப்பட்ட சம்பவம் இலங்கையில் மட்டுமன்றி பல உலக நாடுகளிலும் சர்ச்சையை தோற்றுவித்திருந்தது. இந்த சம்பவத்தினால் மனமுடைந்து சிலர் கொழும்பு - பொரளை மயானத்தில் இரும்பு வேலியில் வெள்ளை நிறத்திலான துணிகளைக் கட்டி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த சம்பவத்திற்கு எதிராக பிரிட்டனில் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கொவிட் தொற்றினால் உயிரிழக்கும் தமது உறவினர்களின் ஜனாஸாக்களை தகனம் செய்ய வேண்டாம் என முஸ்லிம் மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை விடுத்து வந்தாலும் உயிரிழக்கும் அனைவரது உடலும் தகனம் செய்யும் கொள்கையை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது.

சளி, இருமல் அறிகுறிகளுடன் கொழும்பு சீமாட்டி ரிஜ்வே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 20 நாள் பச்சிளம் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. கொரோனா தொற்றுப் பரிசோதனையை மேற்கொண்ட வைத்தியர்கள் அக்குழந்தையின் முஸ்லிமான பெற்றோருக்கு தொற்று இல்லை என்றும் குழந்தைக்கு தொற்று இருப்பதாகவும் ஆச்சரியமான தகவலொன்றை கூறியுள்ளனர். எனவேதான் அக்குழந்தையை இஸ்லாமிய முறைப்படி நல்லடக்கம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டது. அத்துடன் உடல் தகனத்துக்கான ஆவணத்தில் கையொப்பம் இடுமாறு தந்தையை வற்புறுத்தியுள்ளனர். ஆனால் இந்த சின்னஞ்சிறு மொட்டை எரிப்பதற்கு எந்தத் தந்தையாவது விரும்புவாரா? எனவே அந்தத் தந்தையும் அதற்கு மறுத்துவிட்டார். பிறந்து 20 நாட்கள் மட்டுமே இந்த உலகில் வாழ்ந்த அந்தக்குழந்தையின் ஜனாஸாவையாவது முறையாக நல்லடக்கம் செய்வதற்கு அனுமதி தருமாறு மன்றாட்டம் கோரியும் அதிகாரிகளோ, அரசாங்கமோ, தனிமைப்படுத்தல் சட்டமோ மனம் இரங்கவில்லை.

கடைசியாக பெற்றோரின் அனுமதியின்றி வலுக்கட்டாயமாக அந்தச் சிறு ஜனாஸாவை உரிமை கோரப்படாதிருந்த ஏனைய ஜனாஸாக்களுடன் ஒரே நாளில் எரியூட்டப்பட்டது. இந்த செய்தி இலங்கையில் வாழும் முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் வாழ்கின்ற முஸ்லிம்களின் மனதை மிகக் கடுமையாக தீயில் சுட்டுப் பொசுக்கி புண்ணாக்கி இருக்கின்றது. முஸ்லிம்கள் மட்டுமன்றி சிங்கள, தமிழ் மக்களும் இன்று குழந்தைக்காக அனுதாபப்படுகின்றனர். முஸ்லிம்களின் ஜனாஸாக்களை தொடர்ச்சியாக எரித்து வந்ததை விடவும் இக்குழந்தையின் ஜனாஸாவை எரித்தமை பாரதூரமான உரிமை மீறலாகப் பார்க்கப்படுகின்றது. இலங்கையின் மனிதாபிமானம், இரக்கம் பற்றி பல கேள்விகள் எழுந்துள்ளன.

இறந்த உடல்களை அடக்கம் செய்வது பொதுவான உலக வழமை. குறிப்பிட்ட சில சமய வழக்காறுகளைத் தவிர அதிகளவாக இறந்த உடல்களை புதைக்கும் வழக்கமே தொன்று தொட்டு நடைமுறையில் இருந்து வருகின்றது. இஸ்லாமிய மதத்தைப் பொருத்தவரையில் இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் முதல் மனிதன் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தொட்டு இறந்த உடலை புதைத்ததுதான் வழக்கமாக இருந்து வந்துள்ளது. புதைக்கும் வழக்கம் கூட இறை நியதிப்படியே நடைபெறுகின்றது. இறந்த உடலைப் புதைப்பது ஒரு மனிதனின் பிறப்புரிமை மட்டுமல்ல. அது முஸ்லிம் சமூகத்தின் மீதுள்ள கூட்டுக் கடமையாகும். அவன் பிறக்கும் போதும் கண்ணியமானவன். இறக்கும்போதும் கண்ணியமானவன். அதைப் பேணுவது முஸ்லிம்களின் கூட்டுப் பொறுப்பாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் மையித்தை எரிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்த சூழ்நிலை காணப்படவில்லை. எனவே பிரேதங்களை எரிப்பது தொடர்பாக எந்த மார்க்கத்தையும் இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியத்தில் கண்டுகொள்ள முடியாது. 1907ஆம் ஆண்டுகளில் எகிப்தில் பிணங்களை எரிக்கும் உலைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டதாக ஒரு பதிவு உண்டு. அங்குள்ள முஸ்லிம் அல்லாதவர்களின் பிரேதத்தை அழிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அந்த அனுமதி வழங்கப்பட்டது. அதுவும்கூட சர்ச்சைக்குரிய ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. இஸ்லாமிய வரலாற்றில் ஆரம்ப காலம் முதல் பல தடவைகள் தொற்றுநோய் வந்து போய் உள்ளது. ஹிஜ்ரி 18ஆம் ஆண்டு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சியில் இருக்கும்போது ஷாம் தேசத்தில் நிலைகொண்ட கொள்ளை நோய் மிகவும் பிரபல்யமானது. இதில் சுமார் இருபதாயிரம் பேர் மரணத்தை தழுவினார்கள். அன்றும் அக் காலத்திற்குரிய வைத்திய நிபுணர்கள் இருந்தார்கள். ஆனால் புதைப்பது தான் தீர்வாக இருந்தது.

ஈராக், மேற்கு ஆபிரிக்க கண்டத்தில் உள்ள நாடுகள், சீனா, அரேபிய தீபகற்பம், மேற்கத்தேய நாடுகள் எனப் பல பாகங்களிலும் தொற்று நோய் பரவல் பாரிய உயிர்ச் சேதங்களையும் சமூகத்தில் அறியாத வடுக்களையும் ஏற்படுத்தியுள்ளன. அந்த வரிசையில் நவீன காலத்தில் எபோலா, சார்ஸ், மோர்ஸ், பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல் எனப் பல தொற்றுநோய்கள் மத்திய கிழக்கு நாடுகளிலும் சீனாவையும் பதம் பார்த்துள்ளன. கொவிட் - 19 என்பது குடும்பத்தின் புதிய வைரஸ் என்பதால் அதன் விளைவுகள், விட்டுச்செல்லும் தாக்கங்கள் மதிப்பிட முடியாதுள்ளது. அதன் பிடியில் இருந்து விடுதலை பெறுவதற்காக உலகம் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றது. காலத்திற்கு காலம் வந்த தொற்றுநோய் வரலாற்றில் முஸ்லிம்களின் மரணித்த உடல்களை புதைப்பதே மரபுவழியாக இருந்து வந்துள்ளது.

கொரோனா காரணமாக இறந்தவரின் உடலை எரிப்பதுதான் பாதுகாப்பானது என நாட்டின் துறை சார்ந்த அதிகாரிகள் எடுத்துள்ள தீர்மானம் முஸ்லிம்களை ஒரு நிர்ப்பந்த சூழ்நிலைக்கு தள்ளியுள்ளது. உண்மையில் உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைகளும் துறைசார்ந்த விஞ்ஞானிகளின் வழிகாட்டல்களும் அப்படியல்ல. இந்நிலையில் முடியுமான எல்லா வழிகளிலும் முஸ்லிம்களின் மரணித்த உடலை அடக்குவதற்காக அனுமதியைத் தரும் வரை ஓயாமல் உழைக்க வேண்டும். மதங்களின் புனிதங்களை மீறி சுட்டெரிப்பது முடிந்த முடிவாக மாறினால் பொறுமையை கடைபிடிப்பதே எமக்கு முன்னால் உள்ள ஒரே வழியாகும். இவை மட்டுமன்றி முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் ஊரடங்கு சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருகின்றமையும் முஸ்லிம்களுக்கெதிராக இனவாதிகள் செய்யும் சதியாகவே கருத முடியும்.

இதனால் முஸ்லிம்களுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படுவது மட்டுமின்றி அரசாங்கத்திற்கு செலவும் அதிகரிக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகள் ஒருபுறம் இருக்க இன்னுமொரு வகையில் பார்க்கும்போது கொவிட் - 19 காலத்தில் சாதகமான சில நல்ல விடயங்களும் நடந்துள்ளன.

அதாவது நமது சமூகத்தில் காணப்படுகின்ற ஆடம்பரமான நிகழ்வுகள் குறைவடைந்து அனைத்தையும் ஒரு கட்டுப்பாட்டுடன் செய்வதற்கு இப்பெருந் தொற்றுக் காலமே காரணமாகும். இதனால் பண வசதி குறைவானவர்கள் திருமணம் போன்ற சடங்குகளை குறைந்த செலவில் மகிழ்ச்சியாக நடத்த முடிகின்றது. கொவிட் - 19 தொற்று காலத்தில் நடைபெற்ற மற்றுமொரு சமூக மாற்றம்தான் சுகாதார வழிகாட்டுதல்களை பேணி நடந்து கொள்வது. அதன்மூலம் அடிக்கடி கைகளை கழுவும் பழக்கம் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. இது மட்டுமன்றி குடும்ப உறவுகளுடன் இணைந்து மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் இப்பெருந் தொற்று உதவியுள்ளது எனலாம்.

அதாவது வேலைத்தளங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகள் என்பன மூடி உள்ளதால் வீட்டில் இருந்தவாறு தமது வேலைகளை செய்து கொண்டும் கற்றுக் கொண்டும் குடும்பத்துடன் தமது நேரத்தை செலவிட முடிந்துள்ளது. இவ்வாறான சாதகமான நிகழ்வுகள் சில நிகழ்ந்தாலும் பெரும்பாலும் பாதகமான விடயங்களே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது எனலாம். இவ்வாறான இனவாத போக்கு அதிகமாக காணப்படுகின்ற சூழ்நிலையில் நமது முஸ்லிம் சமூகத்தினரும் நாட்டின் சட்டதிட்டங்களை மீறாமல் கட்டுப்பாட்டுடன் இருப்பது அவசியமானதாகும். நாட்டில் காணப்படுகின்ற சில முஸ்லிம் பகுதிகளில் ஊரடங்கு சட்டத்தை மீறி கூட்டாக தொழுகை நடத்தப்பட்டமை கவலைக்குரியதாகும்.

அதேபோன்று முஸ்லிம்கள் செறிந்து வாழக்கூடிய ஊர்களில் ஊரடங்கு சட்டத்தை மதிக்காது வெளியில் நடமாடுவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. சட்டத்திற்கு மதிப்பளிக்காது இவ்வாறாக நடந்து கொள்வது இனவாத சதிகளுக்கு தீனி போடுவதாக அமையும் என்பதை மறந்து விடக்கூடாது. கடந்த காலங்களில் இந்நாட்டு முஸ்லிம்களுக்கு எதிராக மிகவும் திட்டமிட்ட வகையில் இனவாத பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. இன்று கொவிட் - 19 விவகாரத்தை பயன்படுத்தியும் முஸ்லிம்களை குறிவைத்து பிரசாரங்கள் சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு நாமும் உடந்தையாக இருந்து விடக்கூடாது.

கொரோனா வைரஸ் தாக்கம் என்பது ஒரு இனத்தையோ மதத்தையோ இலக்கு வைத்தது அல்ல. மாறாக ஒட்டுமொத்த மனிதர்களையும் பாதிக்கக்கூடியது. அந்தவகையில் இந்த இக்கட்டான காலப் பகுதியில் அனைவரும் இன, மத பேதங்களை மறந்து ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசையாக இருந்து செயற்பட வேண்டியது அவசியமானதாகும். குறிப்பாக இந்த நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவுப் பொருட்கள் உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்குவோர் அவற்றை இனத்துக்கோ மதத்துக்கோ மாத்திரம் மட்டுப்படுத்தாது அதே பிரதேசத்தில் வாழ்ந்து வரும் சகல மக்களுக்கும் உதவிகள் சென்றடைவதை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

## REFERENCES


https://www.bbc.com/tamil/sri-lanka-55383506.amp

https://www.google.com/search?q=%E0%AE%87%E0%AE%A9%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D%2020%20%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B3%E0%AF%8D%20%E0%AE%95%E0%AF%81%E0%AE%B4%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%88%20%E0%AE%8E%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81

https://maatram.org/?p=9055

“Book name” – “மரணித்த உடலை ஏன் அடக்கம் செய்ய வேண்டும்?” (Mohammed Fakeehudeen)

# கொரோனா தொற்றும் சமயவழிபாடுகள் மீதான தடைகளும்: ஓர் சமூகவியல் ஆய்வு




**M.A.F.Ashfa**
Department of Islamic studies
FIA, SEUSL
E-mail:ashfaansar@gmail.com

**M.M.F. Aqeela**
Department of Arabic Language
FIA, SEUSL

**M.S. Zunoomy**
Department of Arabic Language
FIA, SEUSL

**A. Ijas Mohamed**
Department of Arabic Language
FIA, SEUSL

**M.J.F. Sana Anjum**
Department of Arabic Language
FIA, SEUSL


**ஆய்வு அறிமுகம்**

முதல் மனிதன் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தொடக்கம் இன்று வரை மனித வரலாறு நெடுகிலும் மனிதர்கள் பல சோதனைகள், பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அதுவே இறைநியதி எனவும் அல்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது. "விசுவாசங்கொண்டோரே! பயம் மற்றும் பசியிலிருந்து ஏதாவது ஒன்றைக் கொண்டும், செல்வங்கள், உயிர்கள், கனிகளின் விளைச்சல்கள் ஆகியவற்றில் குறைவைக் கொண்டும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். மேலும், நபியே! இவற்றைப் பொறுத்துக்கொள்பவர்களுக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக!" (சூறா அல்பகறா: 155). இந்த வசனத்தின் அடிப்படையில் தனிமனிதன், குடும்பம், சமூகம், தேசம் தாண்டி முழு உலக மக்களும் சோதனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்பதை தெளிவாக உணர்த்துகிறது.

உலக வரலாற்றில் ஆரம்ப காலம் முதல் பல தடவைகள் தொற்றுநோய் பரவல் ஏற்பட்டுள்ளது. உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சியில் இருக்கும் போது ஷாம் பிரதேசத்தில் நிலைகொண்ட கொள்ளை நோய் பரவலை இதற்கு எடுத்துக்காட்டாக கூற முடியும். ஈராக், மேற்கு ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள நாடுகளான சீனா, அறேபிய தீபகற்பம், மேற்கத்திய நாடுகள் என பல பாகங்களிலும் தொற்று நோய் பரவல் பாரிய உயிர் சேதங்களையும், சமூகத்தில் அழியாத வடுக்களையும் ஏற்படுத்தியுள்ளன.

இன்றைய நவீன காலத்தில் எபோலா, சார்ஸ், மேர்ஸ், பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல் என பல தொற்று நோய்கள் மத்திய கிழக்கு நாடுகளையும் சீனாவையும் பதம் பார்த்துள்ளன (பகிஹுத்தீன், 2020). காலத்துக்கு காலம் ஏற்பட்ட தொற்றுநோய் காரணமாக வரலாற்றில் எல்லா சமயத்தவர்களும் தங்களது சமய வழிபாடுகளை நிறைவேற்றுவதில் தடைகளை எதிர்கொள்ள நேரிட்டது.

அந்த வகையில் கொவிட் 19 கொரோனா வைரஸ் 2019 ஆம் ஆண்டு டிசம்பரில் சீனாவின் ஹுவான் எனும் பிரதேசத்தில் ஆரம்பித்து அதனைத் தொடர்ந்து மூன்றே மாதங்களில் முழு உலகுக்கும் பரவிவிட்டது. இதன் பரவும் வேகத்தை கட்டுப்படுத்துவதற்காகவே அனைத்து நாட்டு அரசுகளும் முடக்கநிலையை கைக்கொண்டது. இதே நிலைப்பாடு எமது நாட்டிலும் தொடர்ந்தது.

இதனால் பலவிதமான சமூக, பொருளாதார, சுகாதார, உளவியல் தாக்கங்களுக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. அதனடிப்படையில், இலங்கை வாழ் மக்கள் அனைவருக்குமே தமது சமய வழிபாடுகளை சரிவர நிறைவேற்ற முடியாமல் போனது. குறிப்பாக சிறுபான்மை சமூகமான முஸ்லிம்கள் பல்வேறு தடைகளை முகங்கொடுத்தனர். இந்தவகையில், இஸ்லாமிய சமய வழிபாடுகளில் ஏற்பட்ட தடைகளை அடிப்படையாகக் கொண்டே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகின்றார்கள்: "இஸ்லாம், வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஹல்லம்) அவர்கள் இறைத்தூதர் என்று சாட்சி சொல்லுதல், தொழுகையை நிலை நாட்டல், ஸகாத் கொடுத்தல், ரமழானில் நோன்பு நோற்றல், வசதி படைத்தவர்கள் ஹஜ்ஜை நிறைவேற்றல் ஆகிய ஐந்து விடயங்கள் மீது கட்டப்பட்டுள்ளது" (புகாரி: 4515). இதனடிப்படையில், முஸ்லிம்களின் கட்டாயக் கடமைகளாகத் திகழும் இவற்றை நிறைவேற்றுவதில் பல சவால்களுக்கு முகங்கொடுத்தனர். முகங்கொடுத்துக் கொண்டு வருகின்றனர்.

முஸ்லிம்களின் பிரதான கடமையான தொழுகையை நிறைவேற்ற ஆண்களுக்கு பள்ளிக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பெரும்பாலானவர்களுக்கு உரிய நேரத்தில் கூட்டாக தொழுகையை நிறைவேற்ற முடியாமல் இருந்தது.

முஸ்லிம்கள் பாக்கியமாக எண்ணுகின்ற, முஸ்லிம்களின் கட்டாயக் கடமையுமான ரமழானிலும் இடர்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. குறிப்பாக ஏழைகளுக்கு வழங்கப்படும் ஸதகாக்கள் மந்தமாகின. அதேபோலவே இஸ்லாமிய வருட இறுதியில் வசதி படைத்தோருக்கு கடமையான ஹஜ் கடமைக்கு செல்வது தடைப்பட்டது. உலகிலுள்ள அனைத்து நாடுகளிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து ஒற்றுமையுடன் ஒன்றாக சேர்ந்து நிறைவேற்றப்படும் இவ்வணக்கம் ஒரு சிறு குழுவுடன் மட்டுப்படுத்தப்பட்டது. இஸ்லாமிய சட்டப் பரப்பில் காலத்தின் தேவையை கருத்திற்கொண்டு நெகிழ்ந்து கொடுக்கும் பண்பு இருப்பதால் சமூகம் வீழ்ந்துவிடாமல் பயணிக்கிறது.

இஸ்லாத்தின் பிரதான கடமைகளை நிறைவேற்றுவதில் பல சவால்களை முகம்கொடுத்த முஸ்லிம்கள், ஏனைய இதர கடமைகளை நிறைவேற்றுவதிலும் பல தடைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். எனவே கொவிட் 19 கொரோனா தொற்றினால் சிறுபான்மை முஸ்லிம்களின் தடைபட்ட சமய வழிபாடுகள் பற்றியும் அவற்றை கால, சூழ்நிலைக்கேற்ப மேற்கொள்வதற்கான தீர்வுகளைப் பற்றியும் ஆராயும் முகமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு பிரச்சினை**

உலகளாவிய ரீதியில் சமூக, சமய, பொருளாதார, உளவியல், கல்வி விடயங்களில் கொரோனோ தொற்றின் பரவல் எதிர்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இலங்கையிலும் அப்பரவலினால் பல்வேறு துறைகள் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன. அவற்றுள் சமய வழிபாடுகள் மீதான தடைகள் முக்கியமானதாகும். குறிப்பாக, சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களின் சமய விடயங்களில் கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக முஸ்லிம்கள் சமய வழிபாடுகளை நிறைவேற்றுவதில் தடைகளை எதிர்கொண்டனர். இதனால் அவர்களின் இஸ்லாமிய நெறிமுறையிலான வாழ்வொழுங்கில் மந்தநிலையினை அவதானிக்க முடிகின்றது.

**ஆய்வு நோக்கங்கள்**

- கொரோனா தொற்றின் காரணமாக சிறுபான்மை முஸ்லிம்களின் தடைபட்ட சமய வழிபாடுகளை அடையாளப்படுத்துதல்.
- இப்பரவல் காலப்பகுதியில் இஸ்லாமிய நெறிமுறையிலான வாழ்வொழுங்கை பேணிக்கொள்வதற்கான நடைமுறைசார் தீர்வுகளை முன்வைத்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது விபரிப்பு ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பண்புசார் ஆய்வாக அமைகின்றது. ஆய்வின் முதலாம் நிலைத்தரவுகள் (Primary Data) கலந்துரையாடல் மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகள் (Secondary Data) கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையப் பக்கங்கள் ஆகியவற்றிலிருந்தும் பெறப்பட்டன.

**கலந்துரையாடல்**

**இஸ்லாமிய அடிப்படைக் கடமைகளை நிறைவேற்ற முடியாது தடைபட்டமை.**

- **ஐவேளை ஜமாஅத் தொழுகை தடைப்பட்டமை.**

இஸ்லாத்தில் ஐம்பெரும் கடமைகளில் மிக முக்கியமான ஒன்று தொழுகையாகும். தொழுகையென்பது வயது வந்த அனைத்து முஸ்லிமான ஆண், பெண் இருபாலருக்கும் கட்டாயக் கடமையாகும். இது அல்லாஹ்வுடனான நேரடித் தொடர்பை ஏற்படுத்தும் ஓர் வணக்கமாகும். அது நம்மை மோசமான மானக்கேடான காரியங்களிலிருந்து நம்மை பாதுகாக்கும். நடத்தை ஒழுக்க விடயங்களில் ஜமாஅத் தொழுகையின் பங்கு அளப்பரியது. ஏழை, பணக்காரன் என்று எந்தவித வேறுபாடுகள் இன்றி பாதங்களை ஒன்றாக சேர்த்து நெருக்கி வைத்து தோளோடு தோள் சேர்த்து வைத்து இறைவனுக்கு முன்னால் அனைவரும் சமம் என்று கருத்துப்பட நிற்பது, மனிதனை மதிக்கும் தன்மையும், அனைவருக்கும் சம அந்தஸ்தும், சகோதரத்துவமும் வீட்டிலே தனியே தொழுவதால் ஏற்படாது. கூட்டாக அனைவரும் சேர்ந்து மஸ்ஜித்களில் தொழுவதனால் மாத்திரம்தான் கண்டு கொள்ள முடியும். இதனால்தான் இஸ்லாம் அனைவரையும் பள்ளிக்கு வருமாறும், ஜமாஅத்தாக தொழுமாறும் கட்டளையிடுகிறது. இப்படிப் பல உயர் அம்சங்களை சுமந்திருக்கும் ஜமாஅத் தொழுகை தற்போது முற்றாக தடைப்பட்டுள்ளது. வீட்டிலேயே தொழுது கொள்ளும் நிலையும் ஏற்பட்டுள்ள அதேவேளை இன்னும் சிலர் தொழுகையை விட்டும் தூரமாகி பராமுகமாகவும் இருக்கின்றனர் (அப்துல் ரவூப், 2019).

எனவே இதற்கு பிரதியீடாக ஜமாஅத் தொழுகையை வீட்டிலேயே நடாத்த வேண்டும். வீட்டில் இருக்கும் பெற்றார், பிள்ளைகள் என அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருவர் இமாமாக நின்று வீட்டிலேயே இஸ்லாமிய சூழலை உண்டாக்க வேண்டும். தொழுகை முடிந்த பின்னர் சிறியவர் ஒருவர் ஹதீஸ்களை வாசிக்க அனைவரும் ஒன்றாக அமர்ந்து செவிமடுக்க வேண்டும். இதன் மூலம் மஸ்ஜிதில் தவறிய ஆன்மீக திருப்தி வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம். இதன்மூலம் வீட்டை இஸ்லாமியச் சூழலாக மாற்ற முடியும்.

- **ஜும்ஆ தொழுகை தடைப்பட்டமை**

ஜும்ஆத் தொழுகை ஏனைய பர்ளான தொழுகைகளை விட்டும் சிறப்பாலும் சட்டத்தாலும், அதனை விடும்பொழுது எச்சரிக்கையாலும் வித்தியாசப்பட்ட ஒரு தொழுகையாகும். ஏனைய தொழுகைகளைப் போன்றல்லாது மக்கள் அனைவரும் ஓர் இடத்தில் ஒன்று சேர்ந்து தொழ வேண்டும் என்பதே ஜும்ஆ தொழுகை விடயத்தில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வழிகாட்டலாகும். ஜும்ஆ நிறைவேறுவதற்கு பல ஒழுக்கங்களும் நிபந்தனைகளும் உள்ளன. அந்நிபந்தனைகளில் ஊரில் வசிக்கும் நிரந்தரக் குடியிருப்பாளர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் அங்கு சமுகமளித்திருப்பதும் ஒன்றாகும். என்றாலும், குறித்த எண்ணிக்கை விடயத்தில்

ஆதாரங்களின் அடிப்படையில் மார்க்க அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்ற போதிலும், ஷாபிஈ மற்றும் ஹன்பலி மத்ஹப்களைச் சேர்ந்த அறிஞர்கள் உட்பட இன்னும் பல அறிஞர்கள் 40 நபர்கள் சமுகமளித்திருப்பது கட்டாயம் என்றும் ஹனபி மற்றும் மாலிகி மத்ஹப்களில் அதைவிட குறைவான எண்ணிக்கையுடையோர் சமுகமளித்திருப்பதைக் கொண்டும் ஜுமுஆ நிறைவுறும் என்றும் கூறுகின்றனர் (ACJU,2020). அன்றைய நாளில் அனைவரும் குளித்து நகம் வெட்டி, நறுமணம் பூசி, தன்னிடம் இருக்கின்ற ஆடைகளில் சிறந்த ஆடைகளை அணிந்து பள்ளிக்குச் செல்ல வேண்டும். இதனுள் பெரும் மகிழ்ச்சி இருக்கிறது. ஏழை பணக்காரர்கள் என்று அனைவரும் ஒன்றாக அருகருகே அமர்ந்து சொற்பொழிவை கேட்டு தொழுதுவிட்டும் செல்வார்கள். ஐவேளை தொழுகையை உரிய நேரத்திற்கு தொழாதவர்கள் கூட இதனைத் தவறாமல் தொழுது கொள்வார்கள். அந்தளவிற்கு ஜும்மாவின் மீதான மதிப்பும் மகிழ்ச்சியும் முஸ்லிம்களிடத்திலே நிறைந்து கிடக்கிறது.

எனினும் கொரோனாவின் பின்னர் இந்த அத்தனை சந்தோஷங்களும் ஒரேயடியாக ஒட்டுமொத்தமாக தடுக்கப்பட்டிருக்கிறது, ஒடிந்தும் போயிருக்கிறது. மக்கள் எவரும் பொது இடங்களில் ஒன்று கூட முடியாமல் ஆகிவிட்டது. ஜும்மா தொழுகை ஒன்றுகூடி தொழ முடியாமல் போயுள்ளது. இது பெரும் மனஉளைச்சலை ஏற்படுத்தி இருக்கிறது. ஜும்மாவிற்கு செல்வதால் கிடைக்கும் அந்த ஆன்மீக திருப்தி கிடைக்காமலும் போய் விட்டது. இறைவனுடனான உரையாடல் சங்கடத்துக்குள்ளாகியுள்ளது. இப்படி முஸ்லிம்களிடத்தில் ஜும்ஆவிற்கு உண்டான கேள்வி எழ ஆரம்பித்துள்ளது. வீடுகளுக்குள்ளேயே முடங்கிக்கிடந்து அதிக மனஅழுத்தத்திற்கு ஆளாக நேரிடுகிறது. இதற்கு மாற்றீடாக, வீடுகளிலேயே ஜும்ஆ நேரத்தில் லுஹர் தொழுவதற்கான ஏற்பாடுகளை செய்து குடும்பத்தார் சகிதம் கலந்து கொண்டு அந்த வெள்ளிக்கிழமைக்குண்டான சிறப்பை புதுப்பித்துக்கொள்வது சாலச்சிறந்தது. எண்ணங்களைக் கொண்டே செயல்களுக்கு கூலி வழங்கப்படும்.

## ரமழான் மாதத்தில் ஏற்படும் தடைகள்.

- **தராவீஹ் தொழுகை.**

புனித ரமழான் மாதத்தில் மக்கள் இஷாவின் பிந்திய சுன்னத் தொழுகைக்குப் பிறகு தராவீஹ் தொழுகை இடம்பெறும். இதன்போது ஆண்களும் பெண்களும் பள்ளிவாசல் ஒரே நேரத்தில் திரை மறைவுக்குப் பின் தொழுவார்கள். இதன் போது பேரார்வத்துடன் இரவில் தொழுகையில் ஈடுபட்டு அதிக நன்மை ஈட்டி வந்தனர். அத்துடன் அங்கு ஒன்று கூடும் சக மக்கள் மத்தியில் ஒருவருக்கு ஒருவர் நல்ல விடயங்களை பரிமாறிக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். ஆனால் இக்கொரோனா காலப்பகுதியில் மக்களுக்கு பள்ளியில் ஒன்றுகூட முடியாத நிலை காணப்படுகிறது. தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் நிலை காரணமாக தராவீஹ் தொழுகையும் தடைப்பட்டுள்ளது. இதனால் ஒரு சிலர் ஆயிரம் மாதங்களை விட சிறப்பித்துக் கூறப்படும் ரமழான் மாதத்தின் இரவு நேரங்களை விளையாட்டு வேடிக்கைகளிலும் தமது நாளை வீணடித்துக் கொண்டு வாழுகின்றனர். இந்த இக்கட்டான நிலைமையில் இதனை தவிர்த்து ரமழான் மாதத்தை கழிக்க ஒவ்வொரு மு.ஃமினும் தமது வீட்டை பள்ளிவாயிலாக அமைத்து இரவு நேரத் தொழுகைகளில் ஈடுபட வேண்டும். அதனூடாக அதிகம் அதிகம் நன்மைகள் ஈட்டிக்கொள்ளக் கூடியதாக வாழ வேண்டும். குர்ஆனையும் வீட்டிலிருந்து ஓதி, ஏனைய நேரங்களை வீணாக செலவிடுவதையும் தவிர்க்க பெற்றோர்கள் தம் பிள்ளைகளை வழிநடாத்த வேண்டும். இதன்போது அல்குர்ஆனை பார்த்து ஓதியேனும் இத்தொழுகையை நிறைவேற்ற பழகிக்கொள்ள வேண்டும்.

- **ஆண்களுக்கான ஹிஸ்புகள் தடைப்பட்டமை.**

ரமழான் மாதத்தில் மேலும் ஒரு சிறப்பாக ஆண்களில் சிறியோர், இளைஞர், தந்தைமார்கள், மற்றும் வயோதிபர்கள் என அனைவரும் பள்ளிக்கு சென்று இஷாத் தொழுகைக்குப் பின் கூட்டாக இருந்து திருக்குர்ஆனை ஒருவர் பின் ஒருவராக ஓதுவார்கள். இதன்போது ரமழான் மாதத்தில் குர்ஆன் குறைந்தது மூன்று முறையாவது கூட்டாக ஓதி முடிக்கப்படுகிறது. இதனால் அதிக அதிக நன்மையை ஈட்டிக்கொள்ளக்கூடியதாகவும் உள்ளது. அத்துடன் அல்குர்ஆன் மனதில் பதிவதற்கு ஓர் இலகு முறையாகவும் இம்முறை காணப்படுகிறது. அத்துடன் அல்குர்ஆன் ஓதும் போது ஏற்படும் பிழைகளை திருத்த அங்கு கூடியிருக்கும் குர்ஆனில் தேர்ச்சி பெற்றவர்கள் இருப்பதால் குர்ஆனை திறன்பட ஓதக் கற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. இன்னும் சிறியவர்கள் சபை ஒழுக்கத்தையும் கற்றுக்கொள்கிறார்கள்.

ஆனால் இக்கொரோனா காலத்தில் சமூக இடைவெளி பேணவேண்டும் என்பதால் மஸ்ஜித் செல்ல வாய்ப்பு கிடைக்கவும் இல்லை. ஒன்றுகூடி இவ்வாறான நன்மையான காரியங்களை செய்யக் கிடைக்கவும் இல்லை. ஆயினும் குர்ஆனிலிருந்து தூரமாகிவிடாமல் நாம் அதனுடன் தொடர்பை பேணிக்கொள்ளல் வேண்டும். எனவே அதற்கென்று நேரம் ஒதுக்கி முன்னைய வருடத்தை விட அதிகமாக குர்ஆனுடன் நெருக்கமாக இருக்க முயற்சிக்க வேண்டும். காரணம், முந்திய வருடங்களை விட கொரோனாவுடன் தொடரும் இவ்வருடங்களில் அதிக நேரம் இலவசமாகவே கிடைக்கிறது. அத்துடன் வீட்டிலே இருந்து கொண்டு வீட்டில் இருப்பவர்களைக் கொண்டு குர்ஆன் ஹிஸ்பு மஜ்லிஸ்களை ஏற்பாடு செய்து, குர்ஆனை கற்றவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும், அதற்கான சூழலையும் அமைத்துக்கொள்ள வேண்டும். இணைய வழியிலான அல்குர்ஆன் ஓதல் வகுப்புக்களில் கலந்துகொள்வதற்கான பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டும்.

## இஸ்லாமிய கல்விசார் கூடங்கள் மூடப்பட்டமை.

- **இஸ்லாமிய சிறுவர் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டமை**

மக்தப் எனப்படும் இஸ்லாமிய சிறுவர் பள்ளிக்கூடங்கள் சிறுவர்களுக்கு இஸ்லாத்தை போதிப்பதில், கற்றுக்கொடுப்பதில் பெரும் பங்கு வகிக்கிறன. இந்தவகையில் அங்கு அல்குர்ஆன் பாடம், ஸுன்னா பற்றிய விளக்கம், இஸ்லாமிய வரலாறு மற்றும் அது சம்பந்தப்பட்ட பொது அறிவுகள் என்பன சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. இதன் மூலம் சிறுவர்கள் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா கற்கும் நோக்கில் ஆர்வமாக சென்று இஸ்லாத்தின்பால் தமது அறிவை வளர்த்து வருகின்றனர். அத்துடன் அங்குதான் சிறுவர்கள் இஸ்லாமிய கலாசாரத்தை கற்று தனது வாழ்வுடன் இணைத்து செல்ல அடித்தளமும் அத்திவாரமும் இடப்படுகிறது. ஆனால் கொரோனா காலத்தில் மக்தப்கள் மூடப்பட்டதன் விளைவாக சிறுவர்கள் தமது இஸ்லாமிய பள்ளிக்கூட பாடங்களில் மிகவும் பொடுபோக்காகவே உள்ளனர். மேலும் பயனற்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டு தமது அதிக கால நேரத்தை வீணாகவே செலவழிக்கின்றனர்.

இதனால் தன்னுடனான இஸ்லாத்தின்பால் ஈர்ப்புக் குறைந்து விடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இவற்றிற்கு முக்கிய தீர்வாக சிறுவர்களுக்கு அல்குர்ஆனை தினமும் குறிப்பிட்ட காலப்பகுதியிலாவது பெற்றோர்கள் ஓத வைக்க வேண்டும். அதாவது மஃரிப் நேரமொன்றை பிள்ளைகளுக்காக தினமும் ஒதுக்க வேண்டும். குறிப்பாக பாடசாலை இருந்தால் எப்படியான நேரசூசிப்படி பிள்ளைகள் இயங்குவார்களோ அதே போல் தற்போதும் அந்த நேரசூசிப்படி வழிநடாத்த வேண்டும். அப்படி தவறி இருந்தால் இனியாவது மேற்கொள்ள முனைய வேண்டும். அவர்களுக்கு அவர்களுடைய இஸ்லாமிய பாடப்புத்தகங்களில் உள்ள பாடங்களை தெளிவுபடுத்தி விளக்க வேண்டும். அத்துடன் அதிகமாக இணையவழியாக கல்வி கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் நம் சமூகத்தில் உள்ளனர். அவர்களிடம் பிள்ளைகளை அல்குர்ஆன், அஸ்ஸுன்னா மற்றும் இஸ்லாமிய வரலாறு என்பவற்றை கற்க பிள்ளைகளுக்கு வழியமைக்க வேண்டும்.

- **இஸ்லாமிய கலாசாலைகள் மூடப்பட்டமை**

பொதுவாக உலகில் காணப்படுகின்ற அனைத்து சமயங்களுக்கும் சமயம்சார் தனியான கற்கைகள் காணப்படுகின்றன. அதில் மிக முக்கியமாக இஸ்லாமிய கல்லூரிகள் இடம்பெறுகின்றன. காரணம், அங்கு கற்பிக்கப்படும் போதனா விடயங்களாகும். இஸ்லாமிய கல்லூரிகளிலே இஸ்லாம் தொடர்பாக பெரும்பாலான சட்ட, கோட்பாடு விடயங்களோடு அல்குர்ஆன் மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்படுகின்றது. ஹதீஸ்கள் தொடர்பான தெளிவும் கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி சமய விடயங்கள் தவிர்ந்து உலக விடயங்களிலும் கவனம் செலுத்தி அது தொடர்பான கல்வியையும் கற்றுக்கொடுக்கிறன.

நாட்டிற்கு சிறந்த பிரஜையை உருவாக்குகின்றன. பிற மதங்களைப் பற்றிய தெளிவு கொடுக்கப்படுகிறது. இதனால் பிற சமயத்தவர் மத்தியில் ஒரு சுமூகமான நிலையில் பயணிக்க வழிகோலுகிறது. அதேபோல் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் அத்தனை பாடங்களும் கற்றுக்கொடுக்கப்பட்டு ஒரு சிறந்த புத்திஜீவியை உருவாக்குகின்றன. இலங்கை அரச கல்விமுறைகளுக்கு ஏற்ப அனைத்து உயர் பரீட்சைகளுக்கும் தயார்படுத்துகிறது. சிறந்த பெறுபேறுகளை பெற வைக்கிறது. இது போன்று இன்னும் பல நல்ல மனித நடத்தை மாற்றங்களை செய்வதில் இஸ்லாமிய கல்லூரிகளுக்கும் அதிகம் பங்கு உண்டு. இதற்கு முக்கிய காரணம் அதன் கல்விச் சூழல். இன்று அதிக மாணவர்கள் கற்றல் விடயங்களில் பின்தங்குவதற்கு மிக முக்கிய காரணம் கல்வி கற்பதற்கான சரியான சூழல் கிடைக்காமையாகும். சூழல் மாற்றம் அடைகிற போது கற்றுக்கொள்ள வசதி ஏற்படுகிறது. மேற்கூறிய அத்தனை நல்ல விடயங்களும் தற்போதைய கொரோனா பரவலால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. சரியான, முறையான கல்வியை இளைஞர்கள் பெற்றுக்கொள்ள தடையாகிவிட்டது. பெறுமதியான நேரங்கள் வீணாக நாசமாகின்றன. பிழையான பாதையில் அவர்கள் செல்வதற்கு வழிவகுக்கின்றன. இதனால் கல்வியின் விடயத்தில் பெரும் தேக்கநிலையை அவதானிக்க முடிகின்றது.

எனவே இவ்வாறான இறுக்கமான கால, சூழலின் போதும், ஒரு புத்தாக்கமான கல்வி செயற்திட்டத்தை இஸ்லாமிய கல்லூரிகள் கடைபிடிக்க வேண்டும். பொதுவாக காணப்படுகிற அனைத்து மாற்றுவழித் திட்டங்களின் ஊடாக கல்வியை சிறப்பாக மேற்தொடர வேண்டும். அதிலும் குறிப்பாக வீட்டில் இருக்கின்ற காலம் அதிகம் என்பதால் பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வி விடயத்தில் மிகவும் கரிசனையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஆக பிள்ளைகளுடைய கல்வி கற்றல் செயற்பாடுகள் தற்போதைய சூழலில் பெற்றார்களிலேயே தங்கியுள்ளன. அதேபோன்று இஸ்லாமிய கல்லூரிகளும் மாணவர்களுடைய கற்றல் விடயத்தை கருத்திற்கொண்டு புத்தகங்களை மாணவர்களுக்கு கொண்டு சேர்ப்பதற்காக நவீன தொழில்நுட்ப சாதனங்களை கையாளப் பழக வேண்டும். மேலும் அவர்களின் கற்றல் விடயத்தை மேற்பார்வை செய்தல் வேண்டும். அடிக்கடி அவர்களை பரிசீலித்து அவர்களின் அடைவை உறுதி செய்தல் வேண்டும். மேலும் சில இடங்களில் இன்னும் கலாசாலை ஆரம்பிக்கப்படவில்லை எனவே காலையில் 8 மணி தொடக்கம் 12 மணி வரையாவது தினமும் படிக்க ஆர்வமூட்ட வேண்டும்.

### இஸ்லாத்தின் ஏனைய நன்மையான காரியங்களுக்கான ஒன்றுகூடல்களுக்கான தடை

இஸ்லாத்தில் நன்மையை பெற்றுக் கொள்வதற்கான பல்வேறு வழிகாட்டல்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களினால் வழங்கப்பட்டுள்ளன. இந்தவகையில், பயான் நிகழ்ச்சிகள், திக்ர் மஜ்லிஸ், பெண்களுக்கான தஃலீம் மற்றும் பயான் நிகழ்ச்சி, குமரிப் பெண்களுக்கான தர்பிய்யா வகுப்புகள் போன்ற பல்வேறு நல்ல செயற்பாடுகளில் ஈடுபடுவதை இலங்கை முஸ்லிம்கள் வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். எனினும் கொரோனா பரவலின் காரணமாக இவைகள் அனைத்தும் முற்றாக தடைப்பட்டதை அவதானிக்க முடிகின்றது. இதன்போது, வீட்டோடு சேர்ந்த சூழலில் இவ்விடயங்களை பழக்கப்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளை குடும்ப பொறுப்புதாரிகள் மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளனர். குறிப்பாக தஃவா அமைப்புக்களின் பணிகளை மேற்கொள்ள முடியாமல் போன காரணத்தினால் முஸ்லிம்களின் செயற்பாடுகளில் எதிர்த் தாக்கங்களை அடையாளங் காண முடிந்தது. தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி இவ்வியக்கங்கள் தங்கள் பணிகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுக்க வேண்டிய தேவையில் உள்ளனர்.

**முடிவுரை**

கொரோனா காலப்பகுதியில் இலங்கை வாழ் முஸ்லிம்களின் வாழ்வொழுங்கில் குறிப்பாக வணக்க வழிபாடுகளில் ஏற்படுத்திய தடைகளை பிரதானப்படுத்தி இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தவகையில், இவர்களின் அன்றாட வாழ்வில் மேற்கொண்டு வந்த வணக்கங்களை மேற்கொள்ள முடியாத காரணத்தினால் அவர்கள் மத்தியில் இஸ்லாமிய வணக்கங்கள் மீது பொடுபோக்கு, அலட்சியப் போக்கு ஏற்பட்டிருப்பதை இவ்வாய்வு அடையாளப்படுத்தி நிற்கின்றது. தொழுகை, நோன்பு, மார்க்க வகுப்புகள், அறுபுக் கல்லூரிகள், அறபு ஆரம்ப கல்வி நிறுவனங்கள் போன்றனவற்றில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் இக்கொரோனா காலப்பகுதியில் தடைப்பட்டிருந்தமையினால், அவர்கள் தங்கள் வணக்க வழிபாடுகளில் மந்தநிலையை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறானதொரு சந்தரப்பத்தில், குடும்பம் என்ற நிறுவனம் மேற்கூறப்பட்ட விடயங்களை செம்மை செய்வதற்கான திட்டங்களை வகுக்க வேண்டியுள்ளன. சமூகப் பொறுப்பாக இருந்த மேற்கூறப்பட்ட விடயங்கள் குடும்ப பொறுப்பிற்குள் வலிந்து உள்வாங்கப்பட்டிருப்பதை அவதானித்து, ஒவ்வொரு குடும்ப பொறுப்புதாரிகளும் இஸ்லாமிய வணக்க வழிபாடுகள் விடயத்தில் மாற்றுவழிகளை கைக்கொள்ள வேண்டும். இஸ்லாமிய குடும்பச் சூழல் என்பது இஸ்லாத்தின் அடிப்படை எண்ணக்கருக்களில் ஒன்றாகும்.

# கோவிட் – 19 வைரஸ் தொற்று அபாயமும் உளவியல் ரீதியான நெருக்கடி மேலாண்மையும்

## (Covid - 19 Virus Infection Risk and Psychological Crisis Management.)



**Mohamed Ibraheem Fathima Sheefa**
Faculty of Islamic Studies & Arabic Language,
South Eastern University of Sri Lanka

**முன்னுரை**

வாழ்க்கையோட்டத்தில் அழுத்தம் நிறைந்த காலங்களைக் கடப்பதற்கு உடல் ஆரோக்கியத்தைப் போல உள ஆரோக்கியமும் எதிர்கொள்ளும் திறனும் இன்றியமையாதவையாகும். உடலியல்ரீதியாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் உள்ளத்தையும், உளரீதியாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் உடற்கூறுகளையும் பலமாக பாதிக்கும் வல்லமை கொண்டவை. உடலும் உளமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. மனித வரலாறு முழுவதும் தொற்றுநோய்கள் உலகத்தை மோசமாக பாதித்துள்ளன. இதன்போது மனநல மருத்துவர்கள், உளவியலாளர்கள் மற்றும் மனநல பயிற்சியாளர்கள் மக்கள் மத்தியில் அதன் பாதகமான உளத்தாக்கங்களைத் தணிக்க தங்கள் பங்களிப்பைச் செய்து வருகின்றனர் (சனர்உமி, 2020).

1980 மற்றும் 1990 களில் வரலாற்றில் பதிவான மிகவும் பொதுவான தீவிர நோய்ப்பரவலான எச்.ஐ.வி எய்ட்ஸ் நோய் உலக கவனத்தையே ஈர்த்தது (WHO, 2008). 2002-2003இல் SARS எனும் கடுமையான சுவாச நோய்த் தொற்று பரவியது. 2009இல் இன்ஃப்ளுயன்ஸா எச்-1 என்-1 தொற்றுநோயும், 2014 இல் எபோலா வைரஸ் தீவிர நோய்ப் பரவலும், 2016 இல் ஸிகா வைரஸ் தீவிர நோய்ப் பரவலும் அழிவுகரமானவையாகவே அமைந்தன. இப்பாரிய நோய்ப்பரவல்கள் அனைத்தும் வெறுமனே உடல்ரீதியான பாதிப்புக்களை மட்டுமே கொண்டுவரவில்லை. மாற்றமாக மிகப்பாரியளவிலான உளவியல் சுமையையுமே வளர்த்துவிட்டது (சனர்உமி, 2020).

இப்படியான சூழ்நிலைகளில் வைத்தியர்கள், தாதிமார்களுக்கு அப்பால் உளவியலாளர்கள், உளவளத்துணையாளர்கள், மனநல மருத்தவ நிபுணர்கள் போன்றோர் தமது காத்திரமான பங்களிப்பகளை கணிசமான அளவு வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றனர். இதன் நீட்சியாக 2019ம் ஆண்டு வரிசையில் கோவிட்-19 இன் தோற்றம் சிக்கலானதும் பூதாகரமானதுமான விளைவுகளை அத்தொற்றால் பாதிக்கப்பட்டோர் தொடக்கம் பாதிக்கப்படாதோர் வரை படித்தோர் தொட்டு பாமரர் வரை அனைவரும் அனுபவித்துக் கொண்டு வருவதைக் காணலாம். இந்த வைரஸ் 2019 டிசம்பரில் சீனாவின் ஹூபே மாகாணத்தின் வூஹானில் முதன்முதலில் கண்டறியப்பட்டது. வௌவால்கள் மூலம் மனிதர்களுக்கு பரவியதாக முதல்கட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன (தேவஹி, 2020)கெரோனா வைரஸ் என்பது வைரஸ்களின் ஒரு பெரிய குடும்பமாகும். இது ஜலதோசத்திலிருந்து ஆரம்பித்து மிகவும் கடுமையான நோய்த் தொற்றுக்களான மூச்சுக்குழல் அழற்சி, நியூமோனியா அல்லது கடுமையான காச நோய்க்குறி போன்ற நோய்களை ஏற்படுத்தும் (Ontario, 2020). மேலும் கூறின், இந்தத் தொற்றின் தாக்கங்களும் விளைவுகளும் தனிநபர், குடும்பம், சமூகம் என்று ஆரம்பித்து கல்வி, கலாசாரம், பொருளாதாரம், மதங்களுக்கிடையிலான உறவு, வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்று நீண்டு அரசியல் வரை பிரதிபலிப்பதைக் காணலாம்.

இதன் விளைவாக, கோவிட் -19 தொற்று மன அழுத்தத்தின் நீண்டகால வெளிப்பாட்டிற்கு வழிவகுத்திருக்கின்றது. மக்களுக்கு உளவியல் ரீதியாக ஆதரவளிக்கும் முகமாக சமூகத்திற்கும் சமுதாயத்தினருக்கும் மத்தியில் அமைதியின்மையினைக் கணக்கெடுப்பதில் ஆராய்ச்சியாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். இந்த அதிகரித்த கவனமானது தற்போதைய நோய்த் தொற்று நிலமையையும் வேறு சாத்தியப்பாடான நோய்த் தொற்றுக்களையம் நிருவாகிக்க உதவும். சமூகத்தின் பங்குதாரிகள் என்றவகையில் நோய்த் தொற்றை முகாமை செய்வதற்கு பின்பற்றப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தனிநபர்களில் வித்தியாசமான விளைவுகளை ஏற்படுத்தின. மக்கள் தொகையில் சில பிரிவுகள் கவலை, மனச்சோர்வு மற்றும் அதிர்ச்சிக்குப் பிந்தைய அறிகுறிகள் போன்றவற்றை அதிகமாக வெளிப்படுவதாகத் தெரிகிறது. ஏனெனில் அவர்கள் மன அழுத்தத்திற்கு அதிக உணர்திறன் கொண்டவர்களாக உள்ளனர் (Valeria, Davide and Vincenzo, 2020).

நோய்த் தொற்றோடு தொடர்புடைய தொற்று தடுப்பு, கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், ஊரடங்கு உத்தரவு, தனிமைப்படுத்தல் நிலையங்கள், சுயதனிமைப்படுத்தல் போன்றவற்றால் சமூகம் முழுவதுதையும் ஆட்கொண்டிருக்கும் உளவியல் ரீதியான நெருக்கடிகளை மிகச் சரியாக அடையாளங் காண்பதும் அதனை முகாமை

செய்யக் கூடிய நெருக்கடி மேலாண்மைகளை (Crisis Management) அடையாளப்படுத்தவதும் தீர்வுகளை முன்மொழிவதும் இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையெனில் அதில் இரு கருத்துக்கிடமில்லை. அந்தவகையில் தான் இவ் ஆய்வானது கொவிட் 19 வைரஸ் தொற்று அபாயத்தால் உண்டாகும் உளவியல் ரீதியான நெருக்கடிகளை எவ்வாறு மேலாண்மை செய்யலாம் என்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது.

### ஆய்வுப்பிரச்சினை

இன்று பரந்தளவில் பரவுவதாகவும், பரப்பப்படுவதாகவும் பேசுபொருளாக மாறியுள்ள கோவிட்-19 வைரஸ் தொற்று தொடர்பான அச்சமும், அபாயமும் நிறைந்த உளநிலைகளுடன் மக்கள் நாட்கடத்துகின்றனர். இவ்வைரஸால் பாதிக்கப்பட்டவர்களையும் தாண்டி பாதிக்கப்படாதவர்கள், நோய் அறிகுறி உள்ளோர், இல்லாதோர் என பலரையும் இவ்வாறான உளநிலைகள் ஆட்கொண்டுள்ளன. அந்தவகையில் இத்தொற்று தொடர்பாக மக்கள் எதிர்நோக்கும் உளவியல் ரீதியான நெருக்கடிகளும் அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களும் அதனை முகாமை செய்வதற்கான முன்னெடுப்புக்களும் அவசியப்படுகின்றன. அந்தவகையில் மக்களின் உளவியல் ரீதியான நெருக்கடி என்பது ஆய்வுக்குட்படுத்த வேண்டிய பிரச்சினையாகும்.

### ஆய்வின் நோக்கம்

கோவிட்-19 வைரஸ் தொற்று அபாயத்தினால் ஏற்படும் உளவியல்ரீதியான நெருக்கடியை மேலாண்மை செய்வதற்கான கோட்பாட்டு ரீதியான வழிமுறைகளைக் கண்டறிதல்.

### ஆய்வு முறையியல்

இது பண்புரீதியாக மேற்கொள்ளப்படும் ஆய்வாகையால் தேவையான தகவல்கள் இரண்டாம் நிலைத் தரவுகளான தலைப்புத் தொடர்பாக ஏற்கனவே வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், நிகழ்நிலைப் பத்திரிகைகள், இணையத்தள வெளியீடுகள் போன்றன மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு பெறப்பட்டன.

### ஆய்வின் பிரதான அம்சங்கள்

கோவிட்-19 நோய்த் தொற்று அச்சுறுத்தலின் காரணமாக மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் அன்புக்குரியவர்களிடமிருந்து பிரிந்திருத்தல், சுதந்திரமற்ற நிலை, நோயின் முன்னேற்றம் குறித்த நிச்சயமற்ற தன்மை மற்றும் உதவியற்ற தன்மை போன்ற நோய்த் தொற்றுடன் தொடர்புடைய அம்சங்கள் உளவியலுக்குப் பங்கமாக அமைகின்றன (Li and Wang, 2020).

இந்த அம்சங்கள் தற்கொலைகளின் எழுச்சி போன்ற வியத்தகு விளைவுகளுக்கு வழிவகுக்கும். தற்கொலை நடத்தைகள் பெரும்பாலும் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த அல்லது வாழக் கூடிய மக்களிடையே மன அழுத்தத்துடன் தொடர்புடைய கோப உணர்வோடு எழக்கூடியது. இந்த விளைவுகளின் வெளிச்சத்தில், உளவியல் அம்சங்களை கவனத்திற் கொண்டு தனிமைப்படுத்தலின் சாத்தியமான நன்மைகளை கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டும் (Valeria, Davide and Vincenzo, 2020). இனி இந்நோய்த் தொற்று தொடர்பான உளச்சுகாதாரப் பிரச்சினைகளை எளிதாக்கக் கூடியதும், சமாளிக்கக் கூடியதுமான நெருக்கடி மேலாண்மைக்கான வழிகாட்டல்களை நோக்கலாம்,

- யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளப் பழகுதல்.

எமது அன்றாட வாழ்க்கையில் விரும்பியோ விரும்பாமலோ பல புதுமையான அனுபவங்கள், கசப்பான சம்பவங்கள், துன்பகர நிகழ்வுகள் போன்றவற்றை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அதன் ஆழம், பாரதூரம், பயங்கர விளைவுகள் பற்றி அச்சப்படுவதனையும் தாண்டி முதலாவதாக அந்த யதார்த்த சூழலை ஏற்றுக்கெள்ள வேண்டும். ஏற்றுக்கொள்ள முடியாதவற்றை மாற்ற முயற்சிக்க வேண்டும். மாற்ற முடியாதவற்றை ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும். இவ்விடயத்தை வாழ்வின் அனைத்து நிலமைகளிலும் கவனத்திற் கொள்ளும்போது நெருக்கீட்டிலும் நிதானம் கிடைக்கும். அந்நிதானத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றி சிந்திக்க முடியும். கோவிட்-19 நோய்த்தொற்று, தனிமைப்படுத்துதல், சமூக இடைவெளி போன்ற பல விடயங்கள் இன்று எமது உடல் மற்றும் உளச்சுகாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இது குறித்து அச்சமோ பயமோ அடைய முதல் இந்நிலமையை மாற்ற முடியுமாயின் மாற்ற முயற்சிக்க வேண்டும். உண்மையில் இத்தொற்று இன்று ஒரு உலகளாவிய பிரச்சினையாக மாறியுள்ளது. இதை மாற்ற எம்மால் முடியாது. எனவே, முடியாதபோது இந்நிலையை யதார்த்தமான, பொதுவான ஒன்று என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் தொடரில் தான் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி சிந்திக்க முடியும்.

- அன்பானவர்கள், உடனிருப்பவர்களுடன் தெடர்புகளை ஏற்படுத்துதல்.

குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் விருப்பத்திற்குரியவர்களுடன் தொடர்பைப் பேணுவது மன ஆரோக்கியத்தை நிர்வகிப்பதற்கும் நேர்மறையாக பேணுவதற்கும் உதவும். இன்றைய சூழலில் சமூக இடைவெளியோடு வாழ்ந்தாலும், தொலைபேசி, வீடியோ அழைப்புகள் போன்ற மாற்றீடான விடயங்களை திட்டமிடுவதன் மூலம் அன்புக்குரியவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க முடியும். இவ்வாறான வழிமுறைகளுடன் இரவு உணவருந்துதல், குடும்ப ஒன்றுகூடல்களை செய்தல், நண்பர்களுடன் விளையாடுதல் போன்றவற்றைத் திட்டமிடலாம்.

அதிகமாக கவலையாக உணரும் போது யாரையாவது அணுக வேண்டியது அவசியம். நாம் நம்பும் ஒருவருடன் கவலைகளை வெளிப்படுத்துவது அமைதியாகவும் பாதுகாப்பாகவும் உணர உதவும். இதையொட்டி, எண்ணங்களை பகுத்தறிவு செய்யக்கூடிய ஒரு நேர்மறையான மனநிலையை பெற்றுக்கொள்ள முடியும் (The Emotion Matters Team, 2020)

• எமது உணர்வுகள் விடயத்தில் எமது உடல் ஆரோக்கியம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதுபோன்ற சமயங்களில், ஆரோக்கியமற்ற நடத்தை முறைகளுக்கு ஆழாவது எளிதானது. ஆரோக்கியமான, சீரான உணவை உண்ண முயற்சிப்பதுடன், போதுமான அளவு தண்ணீர் குடித்தல், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடியது

• மூச்சுப் பயிற்சி மற்றும் தியானம் போன்ற செயற்பாடுகயில் போதிய ஈடுபாடு காட்டுதல்.

மூச்சுப் பயிற்சி மற்றும் தியானம் போன்ற அம்சங்கள் மனதை அமைதிப்படுத்தவும், தூக்கத்தை மேம்படுத்தவும், தேவையற்ற எண்ணங்கள் மேலெழும் தருணங்களில் மனதை சமனிலைப்படுத்தவும் ஒரு சிறந்த வழியாகும். இதற்கு எமது கையடக்கத் தொலைபேசி, கணினி போன்ற சாதனங்களிலேயே பதிவிறக்கம் செய்யக் கூடிய செயலிகள் தகுந்த வழிகாட்டல்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. (உதாரணமாக : Calm, Headspace) இவையல்லாமல் இலவச ஆன்லைன் மூச்சுப் பயிற்சி மற்றும் தியான பாடநெறிகளுக்கு பதிவு செய்யதல், வணக்க வழிபாடுகளில் ஆழமாக ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் அமைதியடையலாம்.

பதகளிப்பாக அல்லது படபடப்பாக, உணர்வுகள் அதிகமாகிவிட்டதாக உணரத் தொடங்கும் போது, மூச்சை உள்ளே அழுத்தி 5 விநாடிகளில் மெதுவாக அதை வெளியே விட வேண்டும். இந்த சுவாசப் பயிற்சி சீரான இரத்த ஓட்டத்திற்கும், நிம்மதியாக உணரவும் உதவும் (The EmotionMatters Team, 2020).

• உடல் ஆரோக்கியத்தை கவனத்திற் கொள்ளல்.

உணவுவகைகள், பானங்களை தவறாமல் உட்கொள்ளுதல் போன்ற பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதுடன், புகைபிடித்தல் அல்லது போதைப்பொருள் பாவனை, ஆரோக்கியமற்றதும் நேரம் தவறியதுமாக உணவுகளை உட்கொள்வதை தவிர்த்துக்கொள்ளவும் வேண்டும்.

சுகாதார வழிகாட்டலுடன் கூடிய அல்லது வீட்டு மாடியில், தோட்டத்தில் நடைபயிற்சி, ஓட்டம், உடற்பயிற்சி போன்றவற்றில் ஈடுபடலாம். உண்மையில் எமது மனநிலையை மேம்படுத்தவும், உள்ளத்தை ஆரோக்கியப்படுத்தவும் இவை பெரிதும் உதவுகின்றன (Every Mind Matters, 2020).

• மனதை மகிழ்விக்கக் கூடிய, விருப்பமான செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

கவலை, பதட்டம் அல்லது மனதளவில் தீர்ந்துவிட்டதான உணர்வு போன்றன நாம் வழக்கமாக உளமாற அனுபவித்து ஈடுபடும் காரியங்களைச் செய்வன் மூலம் தணிக்கப்படும் (Every Mind Matters, 2020). குறிப்பாக தனிமையில் இருத்தல், சமூக இடைவெளியை பேணுதல் போன்ற கட்டங்களில் மனதளவில் பலவீனப்படுதல், ஒதுங்கியிருத்தல், கவலை போன்ற எண்ணங்கள் உருவாகும். இவற்றை சரியான முறையில் சமாளித்து முகங்கொடுக்காவிடின் அவை உளநோய்களுக்கு இட்டுச்செல்லும் வாய்ப்புகள் அதிகம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மனதை மகிழ்விக்கக் கூடிய, விருப்பமான, புதுமையான செயற்பாடுகளில் ஈடுபடுதல் உளத்தை சமநிலைப்படுத்த உதவும்.

வீட்டில் பெழுதுபோக்கு நேரத்தை ஒரு புத்தகத்தைப் படிப்பது, புதிய மொழியைக் கற்றுக்கொள்வது, ஆன்லைன் பாடநெறியில் இணைவது அல்லது புதிய உடற்பயிற்சிகளை முயற்சித்தல் போன்ற புதிய திறமையைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பாக பயன்படுத்த முடியும். இதன்மூலம் மனதை ஒரு கடினமான சூழ்நிலையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

• தூக்கத்தைத் திட்டமிடுதல்.

நல்ல தரமான தூக்கம் நாம் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் எவ்வாறு உணர்கிறோம் என்பதில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே போதுமான அளவு தூங்குவது முக்கியம். பகற்பொழுதினை அதிகமாகத் தூக்கத்தில் கழித்துவிட்டு இரவு வேளைகளில் தூங்க முடியாமல் துன்பப்படுவது, பகற்பொழுதை திட்டமிடாது அலைக்கழித்துவிட்டு இரவில் தூக்கம் துறத்தல், இராப் பொழுதில் முழுக்க முழுக்க வேலை, விளையாட்டு, பொழுதுபோக்கு போன்றவற்றில் ஈடுபட்டுவிட்டு பகலில் தூங்குதல் போன்ற திட்டமிடப்படாத பொருத்தமற்ற செயற்பாடுகளும் அதன் தாக்கங்களும் நெருக்கடிகள், அசாதாரண மனநிலை போன்ற உளவியலைப் பாதிக்கும் அம்சங்களை பெற்றுத்தரும். எனவே தூக்கத்தை சரியாகக் கட்டமைத்துக் கொள்ளவது இன்றியமையாதது.

• நாட்களைத் திட்டமிடுதல்.

இந்தக் காலகட்டத்தில் நாட்களையும் வேலைகளையும் திட்டமிட்டுக் கொள்வது பாரிய நன்மை பயக்கும். நாளைத் தொடங்குவதற்கு முன், அந்த நாளுக்காக ஒரு நோக்கத்தை அமைத்துக் கொள்ளுதல் அவசியம். தினசரி விடயங்களைச் செய்வற்கு சிரமப்படுவதாக உணர்ந்தால் இக்காலகட்டத்தில் அது யதார்த்தமானதே என்பதை முதலில் உணர்ந்துகொண்டு நேரசூசி அடிப்படையில் கொஞ்சம் கொஞ்சமாக செயற்படுகளைத் தொடங்கவும், தினமும் சிறிதளவில் முன்னேற்றங்காணவும் முயற்சிக்க வேண்டும். வீட்டிலிருந்து வேலைசெய்பவராக இருந்தால் கவனச்சிதறல்களைத் தவிர்க்கும் வகையில் ஒரு பிரத்தியேக வேலையிடத்தை உருவாக்குவதும், வேலையை திறம்படச் செய்வதற்கு திட்டமிடல்களை மேற்கொள்வதும் அவசியம்.

• தொடர்புசாதனங்கள், சமூகவலைத்தளங்களுடனான தொடர்புகளை கட்டுப்பாட்டுக்குள் பேணுதல்.

அசாதாரண நோய்த்தொற்று தொடர்பான நம்பகமான மற்றும் துல்லியமான தகவல்களை மாத்திரம் பார்ப்பதுடன் இவ்வாறான தகவல்கள், செய்திகளை அடிக்கடி பார்ப்பதன் மூலம் பயம், பதட்டம் போன்ற அசாதாரண உணர்வுகள் மேலெழுவதாக உணர்ந்தால் அவற்றை ஒரு கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துவது அவசியம். தற்போதைய சூழல் பற்றிய யதார்த்தமான பார்வையை வைத்திருக்கவும் ஆரோக்கியமான மனநிலையை பராமரிக்கவும் உதவும். இன்னும் எதிர்காலத்தை நினைத்து துன்பப்படுவதை விட நிகழ்காலத்தை நிதானமாகக் கடக்கவும் முடியும்.

**முடிவுரை.**

இந்நாட்களில் உலகளாவிய பிரச்சினையாக மாறியிருக்கின்ற கோவிட்-19 நோய்த்தொற்று மற்றும் நோய்பற்றிய அச்சம் பல மட்டங்களிலும் உள்ள மக்களது பல்துறைசார் விடயங்களிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றதை அவதானிக்கலாம். அந்த வகையில் இவ் ஆய்வானது அடிப்படை மட்டத்தில் மக்களுக்கு இந்த நோய்த்தொற்றுப் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான அச்சத்திலிருந்து தானாகவே விடுபடுவதற்கும், அதனை முகாமை செய்வதற்கும், அச்சம் மற்றும் உளவியல்ரீதியான நெருக்கடிகளை மேலாண்மை செய்துகொள்வதற்கும் துணைபுரிகின்ற வழிகாட்டல்களைத் தாங்கி நிற்கின்றது. இவ்வாறான விடயங்களைக் கடைபிடித்தும் உளவியல்ரீதியான நெருக்கடிகளை உணர்வாளர்களாயின் துறைசார் நிபுணர்களான உளவளத்துணையாளர்கள் அல்லது மனநல மருத்துவர்கள் போன்றவர்களை நாடி உதவியினைப் பெற்றுக்கொள்வது மிகச்சிறந் வழிமுறையாகும் என்பதில் சந்தேகமில்லை.

**உசாத்துணைகள்**


01. தேவஹி, (2021). கரோனா வைரஸ்: முழுமையான பார்வை. Retrieved from: pp. https://www.hindutamil.in/news/corona-virus/547568-about-coronavirus-disease-2019-covid-19-2.html. on 2021.01.03

02. Matters, E. M. (2020). 10 tips to help if you are worried about coronavirus. Retrieved from: pp. https://www.nhs.uk/oneyou/every-mind-matters/coronavirus-covid-19-anxiety-tips/. on 2021.01.04

03. Ontario. (2020). 2019 pudhiya Corona Virus. Retrieved from: pp. www.wrh.on.ca/documents/151/moh-coronavirus-info-sheet-tamil-2020-02-18. on 2021.01.03

04. Sana Rehman, Umi Lela. (2020). PSYCHOLOGICAL AID TO COVID-19 PANDEMIC. *Psychiatria Danubina*, Retrieved from: https://pubmed.ncbi.nlm.nih.gov/32796796/. on 2021.01.03

05. Team, T. E. (2020). 10 POSITIVE WAYS TO MANAGE YOUR MENTAL HEALTH DURING COVID-19. Retrieved from: pp. https://emotionmatters.co.uk/2020/04/04/10-positive-ways-to-manage-your -mental-health-during-covid-19/. on 2021.01.04

06. Covid-19: New Perspectives of Well-Being. *Frontiers in Psychology*, Retrieved from: https://www.frontiersin.org/articles/10.3389/fpsyg.2020.577684/full#:~:text=Data%20from%20a%20survey%20on,et%20al.%2C%202020. on 2021.01.04

# கொவிட் 19 தொற்றினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள உளவியல் தாக்கங்கள் பற்றிய மதிப்பீட்டாய்வு


**Rismiya Niyas**
Department of Geography,
University of Colombo.

**Asra Imthiyas**
Department of Education,
University of Colombo.




**1. முன்னுரை**

உலகம் முழுவதும் Covid-19 ன் தாக்கமும் அதன் பரவலும் வியாபித்துக் காணப்படுகின்றது. உலகளவில் சுமார் 221 நாடுகள் கொவிட் 19 ஆல் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நோயினால் 107,100,112 க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 2,338,897 க்கும் மேற்பட்டோர் இறந்துமுள்ளனர். கொவிட் 19 ஆல் அதிகமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஐக்கிய அமெரிக்கா, பிரேசில், ரஷ்யா, ஐக்கிய இராஜ்ஜியம், பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி போன்ற நாடுகள் முன்நிலை வகிக்கின்றன. அதேவேளை கொவிட் 19 ஐத் திறம்பட கையாண்ட நாடுகளின் பட்டியலில் நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளதோடு முறையே வியட்னாம், தாய்வான், தாய்லாந்து, சைப்ரஸ் ஆகிய நாடுகளும் முன்னணியில் காணப்படுகின்றன. இப்பட்டியலில் பத்தாவது இடத்தில் இலங்கை இடம்பெற்றுள்ளது. அந்தவகையில் கொவிட் 19 ன் தாக்கம் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைவாகக் காணப்பட்டாலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற வகையில் கொவிட் 19 ஆல் ஏற்படுகின்ற பல்வேறுபட்ட தாக்கங்கள் இலங்கைக்குப் பாறிய சவாலாகவே அமைந்துள்ளது. அதனடிப்படையில் இலங்கையில் மொத்தமாக கொவிட் 19 ஆல் 70,806 க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 64,141 க்கும் மேற்பட்டோர் இந்நோயிலிருந்து பூரண குணமடைந்துள்ளதோடு 365 க்கும் மேற்பட்டவர்கள் இந்நோயின் காரணமாக இறந்துள்ளனர்.

இவ்வாறு கொவிட் 19 ஆல் பாதிக்கப்பட்டவர்களில் 26512 க்கும் மேற்பட்டோர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். ஏற்பட்ட மொத்த இறப்புக்களிலும் 170 க்கும் மேற்பட்ட இறப்புகள் கொழும்பு மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளது. அதிலும் குறிப்பாக கொவிட் 19 ஆல் கொழும்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்களில் அதிகமானவர்கள் முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். அவ்வாறே கொவிட் 19 ன் தாக்கத்தினால் நாட்டின் ஒட்டு மொத்த அனைத்து சமூகங்களும் பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக, கலாசார ரீதியாக, கல்வி ரீதியாக எனப் பல்வேறு ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை கொழும்பு மாவட்ட முஸ்லிம்களும் அனைத்து துறைகள் சார்ந்தும் இதன் தாக்கங்களை எதிர்கொண்டுள்ளதோடு பல்வேறு துறைகளிலும் பின்னடைவுகளையும் எதிர்நோக்கியுள்ளனர். இதன் பின்னணியில் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகமானது ஏனைய சமூகங்களைக் காட்டிலும் பல்வேறுபட்ட உளவியல் நெருக்கடிகளுக்கு அதிகம் முகங் கொடுத்துள்ளது. அந்த வகையில் இவ்வாய்வானது கொவிட் 19 தொற்றினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் உளவியல் தாக்கங்கள் மற்றும் அதற்கான காரணங்களை ஆராய்ந்து அதனால் ஏற்படும் விளைவுகளையும் இனங்கண்டு அவற்றிலிருந்து மீள்வதற்கான உபாயங்களையும் முன்மொழிகிறது.

**2. ஆய்வுப் பிரச்சனை**

இலங்கையில் கொவிட் 19 தொற்றுப் பரவலின் காரணமாக அனைத்து சமூகத்தினரும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். என்றாலும் இலங்கையில் கொவிட் 19 ஆல் அதிகம் பாதிக்கப்பட்ட சமூகமாக முஸ்லிம் சமூகம் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் கொவிட் 19 ஆல் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதோடு அதிகமான மரணங்களும் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தில் இருந்தே சம்பவித்துள்ளது. இதன் காரணமாக கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகமானது மனச்சோர்வு, விரக்தி ,பயம், நம்பிக்கையின்மை, தூக்கமின்மை, துன்பம், அதிர்ச்சி நிலை எனப் பல்வேறுபட்ட உளவியல் பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளது. இது கொழும்பு மாவட்ட முஸ்லிம்களின் நடத்தை மற்றும் மனப்பாங்கில் பாரிய தாக்கங்களையும் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. எனவே இப் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**3. ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வானது பிரதான நோக்கம், சிறப்பு நோக்கங்கள் என இரண்டு நோக்கங்களை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்படுகின்றது.

**பிரதான நோக்கம்** - Covid-19 தொற்றினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள உளவியல் தாக்கங்களை

சிறப்பு நோக்கங்கள்

1. கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள உளவியல் தாக்கங்களுக்கான காரணங்களைக் கண்டறிதல்.
2. இவ் உளவியல் தாக்கங்களினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தின் நடத்தை மற்றும் மனப்பாங்குகளில் ஏற்பட்டுள்ள எதிர்விளைவுகளை இனங்காணுதல்.
3. கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள உளவியல் தாக்கங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான உபாயங்களை முன்மொழிதல்.

## 4. ஆய்வு முறையியல்

### 4.1. ஆய்வுப் பிரதேசம்

இவ்வாய்விற்காக இலங்கையின் வர்த்தகத் தலைநகரமான மேல் மாகாணத்தில் அமையப்பெற்றுள்ள கொழும்பு மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின் படி கொழும்பு மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 2309199 ஆகும். இவர்களில் 271719 பேர் முஸ்லிம்கள் ஆவர். ஒட்டுமொத்த முஸ்லிம் மக்கள் சனத்தொகையில் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சனத்தொகையானது 12% ஆகக் காணப்படுகின்றது. எனவே முஸ்லிம் சனத்தொகையை அதிகளவு கொண்டதொரு மாவட்டமாகவும் Covid- 19 தொற்றினால் முஸ்லிம்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டமாகவும் கொழும்பு மாவட்டம் காணப்படுவதனால் இவ்வாய்விற்கு மிகவும் பொருத்தமான பிரதேசமாக கொழும்பு மாவட்டம் காணப்படுகின்றது.

### 4.2. தரவு சேகரிப்பு

இவ்வாய்வில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் தரவு சேகரிப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல்நிலைத் தரவுகளானது வினாக்கொத்து விநியோகம் மூலம் பெறப்பட்டது. படை மாதிரியெடுப்பு முறையின் அடிப்படையில் Covid 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட மற்றும் மரணங்கள் சம்பவித்த பல்வேறு தரப்பினர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடம் வினாக்கொத்துக்கள் விநியோகிக்கப்பட்டு அதன் மூலம் தரவுகள், தகவல்கள் பெறப்பட்டது. வினாக்கொத்தானது திறந்த மற்றும் மூடிய வினாக்களை உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டது. மேலும் தொலைபேசி உரையாடல்கள் மூலமான நேர்காணல் மூலமும் முதல் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. அதன்படி மொத்தமாக 81 நபர்கள் ஆய்வில் பங்கெடுத்து தரவுகள் தகவல்களை வழங்கினர்.(அட்டவணை 01 : இது பற்றிய மேலதிகத் தரவுகளை வழங்குகின்றது.)

**அட்டவணை 01**

| ஆய்வில் பங்கெடுத்தவர்கள் | எண்ணிக்கை |
|---|---|
| கோவிட் தொற்று ஏற்பட்டவர்கள் | 09 |
| தனிமைப்படுத்தப்பட்டிருப்பவர்கள் | 28 |
| மரணத்தை எதிர்கொண்டவர்கள் | 17 |
| மரணத்தின் பின் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்கள் | 04 |
| பாதிக்கப்பட்ட சூழலில் வாழும் ஏனையோர் | 23 |

அவ்வாறே ஆய்வில் பயன்படுத்தப்பட்ட இரண்டாம் நிலைத் தரவுகளானது ஆய்வுக்கட்டுரைகள், அறிக்கைகள், சுகாதார அமைச்சின் தரவுகள், பத்திரிகைகள், ஆவணங்கள் மற்றும் இணையத்தள மூலங்களில் இருந்து பெறப்பட்டன.

### 4.3. தரவுப் பகுப்பாய்வு

ஆய்விற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் அளவைசார் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதன் மூலமாகக் கிடைக்கப்பெற்ற முடிவுகளின் அடிப்படையில் பண்புசார் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டது. இப்பகுப்பாய்வுகளுக்காக கணினிப் பகுப்பாய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக Microsoft Excel மற்றும் Microsoft Word ஆகிய மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலமாக அட்டவணைகள், வரைபுகள், படங்கள் வடிவமைக்கப்பட்டன.

## 5. ஆய்வின் பிரதான அம்சங்கள

### 5.1. கொவிட் 19 தொற்றினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள உளவியல் தாக்கங்கள்

ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களுக்கமைவாக கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தினரிடையே கொவிட் 19 இனால் ஏற்பட்ட சமூக, பொருளாதார, சுகாதார மற்றும் கலாசாரத் தாக்கங்களை விட உளவியல் ரீதியான தாக்கங்ளே மிக அதிகமாகவும் ஆபத்தானதாகவும் காணப்படுகின்றது. அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி மூலமான நேர்காணல் மற்றும் வினாக்கொத்து விநியோகத்தினடிப்படையில் பின்வரும் உளவியல் தாக்கங்கள் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தினரிடையே அதிகரித்திருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

1. மன அழுத்தம் (Stress)
2. ஏக்கம் (Anxiety)
3. மனச்சோர்வு (Depression)
4. விரக்தி (Frustration)
5. பயம் (Fear)
6. நம்பிக்கையின்மை (Hopelessness)
7. தூக்கமின்மை (Insomnia)
8. துன்பம் (Distress)
9. அதிர்ச்சி நிலை (Trauma Symptoms)
10. தனிமை (Loneless)




**படம் 1 - கோவிட் 19 தொற்றினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள உளவியல் தாக்கங்கள்**

மூலம் - ஆய்வாளர்களால் வடிவமைக்கப்பட்டது (2021)

ஆய்வின் தரவுப் பகுப்பாய்வின் படி ஆய்வில் பங்கெடுத்தவர்களில் அநேகமானவர்கள் மன அழுத்தம், மனச் சோர்வு, துன்பம் ஆகியவற்றிற்கு ஆளாகியுள்ளனர். அவர்களில் அதிகமானவர்கள் கொவிட் 19 இனால் மரணித்தவர்களின் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் ஆவர். ஆய்வில் பங்கெடுத்தவர்களில் 89 வீதமானவர்கள் மன அழுத்தத்தினாலும் 94 வீதமானவர்கள் மனச்சோர்வினாலும் 79 வீதமானவர்கள் துன்பத்தினாலும் 74 வீதமானவர்கள் விரக்தியினாலும் 64 வீதமானவர்கள் நம்பிக்கையின்மையினாலும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களில் அநேகமானவர்கள் தூக்கமின்மை, பயம், தனிமை ஆகிய உளவியல் பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக 12 வீதமானவர்கள் தூக்கமின்மையாலும் 51 வீதமானவர்கள் பயத்தினாலும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆய்வில் பங்கெடுத்தவர்களிடம் பயத்திற்கான காரணம் பற்றி வினவப்பட்ட போது இந்நோயினால் ஏற்படும் மரணம் என்பதையும் தாண்டி முஸ்லிம்களின் இறந்த உடல்களை மத உரிமைகளை மீறி எரிப்பது அச்சத்திற்கான பிரதான காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஒப்பீட்டளவில் நோக்கும் போது கொவிட் 19 இனால் மரணித்த வயது முதிர்ந்தவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் எதிர்கொண்டுள்ள உளவியல் தாக்கங்களை விட இள வயதினரைப் பறிகொடுத்த குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் எதிர்கொண்டுள்ள உளவியல் தாக்கங்கள் மிக அதிகமானதாகக் காணப்படுகின்றது. இள வயதினரைப் பறிகொடுத்தவர்கள் தூக்கமின்மை, அதிர்ச்சி நிலை, ஏக்கம், விரக்தி ஆகிய உளவியல் பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக இள வயதில் கொவிட் 19 ஆல் மரணித்தவர்களின் குழந்தைகள் மன அழுத்தம், ஏக்கம் மற்றும் அதிர்ச்சி நிலை ஆகிய ஆபத்தான உளவியல் பிரச்சினைகளுக்குள் சிக்கியுள்ளமையும் ஆய்வின் போது கண்டறியப்பட்டது. இவ்வாறாக அதிர்ச்சிநிலை அறிகுறிகளுக்கு 12 வீதமானவர்களும் 37 வீதமானவர்கள் ஏக்கம் (Anxiety) எனும் உளவியல் தாக்கங்களிற்கும் உள்ளாகியுள்ளனர். மேலும் ஆய்வில் பங்கெடுத்தவர்களில் ஒரு குழுவினர் திடீர் மரணங்கள் சம்பவித்ததன் பின்னர் கொவிட் 19 இனால் ஏற்பட்ட மரணமென அடையாளம் காணப்பட்டு மத உரிமைகளுக்கப்பால் உடல் தகனம் செய்யப்பட்டவர்களாவர். இவர்களில் அனைவருமே மனச்சோர்வு, அதிர்ச்சி நிலை அறிகுறிகள் மற்றும் மனவழுத்தங்களுக்குட்பட்டுள்ளனர். நீதி, மனித உரிமைகள், மதச் சுதந்திரம் பற்றிய நம்பிக்கையின்மையையும் இக்குழுவினர் தரவு சேகரிப்பின் போது வெளிப்படுத்தியிருந்தனர்.

### 5.2. கொவிட் 19 தொற்றினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள உளவியல் தாக்கங்களுக்கான காரணங்கள்

கொவிட் 19 னினால் ஏற்பட்ட உளவியல் தாக்கங்கள் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தினரிடையே அதிகரித்திருப்பதற்கான காரணங்களைக் கண்டறிய ஆய்வாளர்கள் ஆய்வினை மேற்கொண்ட போது முதல் நிலைத் தரவுகளினடிப்படையில் பின்வரும் காரணிகள் உளவியல் தாக்கங்களை அதிகரிக்கச் செய்யும் பிரதான

1. வறுமை
2. மரணித்த உடல்களை எறித்தல்
3. இனவாதம்
4. பொருளாதார வீழ்ச்சி
5. தனிமைப்படுத்தல் சட்டம்
6. வேலைவாய்ப்பின்மை
7. அன்றாட வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள்
8. எதிர்காலம் குறித்த அச்சம்
9. நீதி கிடைக்கப்பெறாமை
10. சமூகப் புரிந்துணர்வின்மை

ஆய்வில் பங்கெடுத்தவர்களில் 90 வீதமானவர்கள் தங்களுடைய உளவியல் தாக்கங்களுக்கான காரணியாக மரணித்த உடல்களை எரித்தல் எனும் காரணத்தையே முன்வைத்தனர். அதற்கடுத்ததாக வறுமை, வேலைவாய்ப்பின்மை, பொருளாதார வீழ்ச்சி ஆகிய காரணிகள் அவர்களை அதிகம் உள ரீதியாகப் பாதிக்கச் செய்த காரணிகளாக அடையாளம் காணப்பட்டன. வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மையை 45 வீதமானவர்களும் இனவாதத்தை 42 வீதமானவர்களும் தம் உளவியல் தாக்கங்களிற்கான காரணிகளாக அடையாளப்படுத்தினர். நீதி கிடைக்கப்பெறாமை என்ற காரணியை மரணித்த பின் அனுமதியின்றி உடல்கள் எரிக்கப்பட்டவர்களின் உறவினர்களில் 89 வீதமானவர்கள் அடையாளப்படுத்தியிருந்தனர். தனிமைப்படுத்தல் சட்டம், அன்றாட வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களும் 48 வீதமானவர்களின் உள ரீதியான பாதிப்புக்களில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. ஏனைய காரணிகளான எதிர்காலம் குறித்த அச்சம், சமூகப் புரிந்துணர்வின்மை ஆகிய காரணிகள் ஆய்வில் பங்கெடுத்தவர்களில் 20 வீதத்திற்கும் குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இங்கு தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் உளவியல் தாக்கங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. மரணித்த உடல்களை எரித்தல், வறுமை, நீதி கிடைக்கப்பெறாமை, பொருளாதார வீழ்ச்சி, தனிமைப்படுத்தல் சட்டம் ஆகியன பலரின் உளப் பாதிப்பிலும் தாக்கம் செலுத்திய முதன்மைக் காரணிகளாக ஆய்வின் இறுதியில் கண்டறியப்பட்டுள்ளன.

மேலும் குறிப்பாக சிறுபான்மை இனம் என்ற ரீதியில் தமது மதத்திற்கு முரணாக இடம்பெறும் காரியத்தைத் தடுத்து நிறுத்த முடியாமல் யார் ஒருவரினதும் ஆதரவற்ற நிலைக்கு உள்ளாகியிருத்தல், தாம் முன்வைத்த கருத்துப் புறக்கணிக்கப்பட்டு மனம் நோகடிக்கப்படுதல், இன ரீதியான சக புரிந்துணர்வின்மையினால் ஓர் இனம் இன்னொரு இனத்தின் மீது வீசப்படும் சொல் கற்கள் முஸ்லிம் சமூகத்தினர் மீது தொடர்ச்சியாக வீசப்படுகின்றமை, அவ்வாறே மார்க்கம் பலரது விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டமை, Covid-19 வைரஸ் பரவலின் காரணமாக ஜனாஸாக்கள் எரிக்கப்படுகின்றமை, பர்ளு கிபாயா எனும் முஸ்லிம்களின் சமூகக் கடமையை நிறைவேற்ற பெரும் தடைகள் காணப்படுகின்றமை, சிறுபான்மை இனமாக முடக்கப்பட்டமை போன்ற காரணிகளும் கோவிட் 19 தொற்றினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள உளவியல் தாக்கங்களுக்கான காரணங்களாகக் கண்டறியப்பட்டன.

**5.2. இவ் உளவியல் தாக்கங்களினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தின் நடத்தை மற்றும் மனப்பாங்கில் ஏற்பட்டுள்ள எதிர் விளைவுகள்**

இவ் உளவியல் தாக்கங்களினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தினர் பல்வேறுபட்ட எதிர் விளைவுகளை எதிர்கொண்டுள்ளனர். கொரோனாவினால் மரணித்த முஸ்லிம்களின் உடல்களை எரிப்பதன் காரணமாக ஏற்பட்டுள்ள உளவியல் தாக்கங்களினால் முஸ்லிம்களுக்கும் பிற மதத்தினருக்கும் மத்தியில் மத ரீதியிலான சக புரிந்துணர்வில் விரிசல் ஏற்பட்டு இன முறுவல் தோற்றம் பெற்றுள்ளது. அத்துடன் தொற்றா நோயாளர்களின் நோய்கள் தீவிரம் அடைதல், அதனால் மரணங்கள் சம்பவித்தல், திடீர் மரணங்கள் ஏற்படல். மாரடைப்பு, மயக்கம், சோர்வு நிலை, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை, இளைஞர்களின் அதிருப்தி, நீதித் துறையில் நம்பிக்கையின்மை, நாட்டின் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்வதில் ஈடுபாடின்மை மற்றும் சமூக செயற்பாடுகளில் ஈடுபடுவதில் அதிருப்தி போன்ற எதிர் விளைவுகளும் இவ் உளவியல் தாக்களின் காரணமாக ஏற்பட்டுள்ளன.

**5.3. இவ் உளவியல் தாக்கங்களிலிருந்து கொழும்பு மாவட்ட முஸ்லிம்களை விடுவிப்பதற்கான வழிமுறைகள்**

கொழும்பு மாவட்ட முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இத்தகைய உளவியல் தாக்கங்களை முறையாக இனங்கண்டு அத்தாக்கங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காக அரசாங்கம் கொவிட் 19 ஆல் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை சுகாதார வழிமுறைகளுக்கிணங்க அடக்கம் செய்ய அனுமதிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக கவனம் செலுத்தி அதற்கு உகந்த தீர்வை வழங்க வேண்டும். மேலும் உளவியல் ரீதியில் அதிக தாக்கங்களை கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள நிலையில் முஸ்லிம் சமூகத்தினரது உளவியல் மற்றும் உடலியல் ஆரோக்கியம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தக்க தீர்வாக அவர்களது உளவியல் ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்ப அவர்களுக்குச் சிறந்த மற்றும் இலவச உளவியல் ஆலோசனைகள், வழிகாட்டல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்து அவர்களது உள ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள சமூகத் தலைமைகளும் பொறுப்புதாரிகளும் முன்வர வேண்டும். அதற்காக முஸ்லிம் சமூகம்சார் உளவியல் துறை சார்ந்த நிபுணர்கள், ஆலோசகர்கள், உளவளத் துறை செயற்பாட்டாளர்கள் இணைந்து இது தொடர்பில் அதிக அக்கறை செலுத்தி சமூக நலன் கருதி வினைத்திறனாகச் செயற்பட வேண்டும். அவ்வாறே மரணித்தவர்களின் உடல்கள் பலவந்தமாக எரிக்கப்படும் போது அப்பிரச்சினையை சிறந்த முறையில் அணுகி அதற்கு நடுநிலையான மார்க்கத் தெளிவுகளை மார்க்கத் தலைவர்கள் வழங்குவதோடு மார்க்க ரீதியிலான தைரியப்படுத்தல்களையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும். அத்துடன் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள வறுமை, வேலையில்லாப் பிரச்சினை, பொருளாதாரப் பின்னடைவு தொடர்பில் முஸ்லிம் தனவந்தர்கள் பொறுப்புடன் முன்வந்து கூட்டாகச் செயற்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதும் காலத்தின் தேவையாகும். எனவே இவ்வாறான வழிமுறைகள் மூலம் கொழும்பு மாவட்ட முஸ்லிம்களை இவ்வாறான உளவியல் தாக்கங்களிலிருந்து ஓரளவேனும் விடுவிக்கக் கூடியதாக இருக்கும்.

## முடிவுரை

Covid - 19 உலக வழக்கத்தையே தலை கீழாகப் புரட்டிப் போட்டு விட்டது. சர்வதேச ரீதியில் அனைத்து நாடுகளும் அனைத்து சமூகங்களும் பல்துறை சார்ந்தும் எதிர்மறையான தாக்கங்களையும் எதிர்மறையான விளைவுகளையும் எதிர்நோக்கியுள்ளன. எனவே அதற்கு இலங்கையின் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகமும் விதிவிலக்கானதல்ல. அதனடிப்படையில் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகமானது சமூக பொருளாதார உளவியல் கலாச்சார ரீதியில் பல்வேறு தாக்கங்களை எதிர்கொண்டுள்ளது. Covid- 19 ஆல் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, வறுமை, பட்டினி மற்றும் அதன் தொடர் சங்கிலிகளாக ஏற்பட்ட கடன் நெருக்கடி, சமூக விரோத செயல்களின் அதிகரிப்பு போன்ற எதிர்மறை விளைவுகள் இலங்கையின் ஏனைய சமூகத்தவர்களைப் போலவே கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தையும் பாதித்திருக்கிறது. என்றாலும் Covid- 19 காரணமாக ஏற்பட்ட உளவியல் தாக்கங்கள் என்பது ஒரு சிறுபான்மை சமூகமாக கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தில் அதிகரித்து காணப்படுகின்றது. இவ் உளவியல் தாக்கங்கள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணம் Covid- 19 தொற்றினால் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுகின்ற மரணங்களின் அதிகரிப்பும் இறந்த உடல்களை முஸ்லிம்களின் மத உரிமைகளை மீறித் தகனம் செய்வதும் ஆகும். மேலும் இவ்வாறான உளவியல் தாக்கங்களின் விளைவாக தொற்றா நோயாளர்களின் நோய்கள் தீவிரம் அடைதல், அதனால் மரணங்கள் சம்பவித்தல், திடீர் மரணங்கள் ஏற்படல். மாரடைப்பு, மயக்கம், சோர்வு நிலை, சமூக செயற்பாடுகளில் ஈடுபாடின்மை, இளைஞர் சமுதாயத்தின் அதிருப்தி, நம்பிக்கையின்மை, எதிர்காலம் பற்றிய அச்சம் போன்ற ஆரோக்கியமற்ற நிலைமைகள் கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் தோன்றியுள்ளது. எனவே கொழும்பு மாவட்ட முஸ்லிம் சமூகமானது Covid- 19 னின் தாக்கங்களிலிருந்து மீண்டெழ அச்சமூகம் உளவியல் ரீதியாகப் பலப்படுத்தப்பட வேண்டும். இதற்கான வழிமுறைகள், திட்டங்கள், ஆலோசனைகள் முஸ்லிம் சமூகம் சார்ந்த தலைமைகள் மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டும். இதன் போதே ஒரு நல்லிணக்கம் மிக்க நாடாக இலங்கை தேசமானது வெற்றிகரமாக Covid- 19 ன் தாக்கங்களிலிருந்து விடுபட்டு மீண்டெழலாம்.

### உசாத்துணைகள்


1. Colombo District. (n.d.). Retrieved from WIKIPEDIA.
2. Covid-19 highest cases reported from Colombo District. (2021, Febrauary 7th). Retrieved from SUNDAY OBSERVER.
3. District Secretariats of Sri Lanka. (n.d.). Retrieved from State Ministry of National Security, Home Affairs and Disaster Management Home Affairs Division.
4. Latest COVID-19 Released Guidlines. (n.d.). Retrieved from MINISTRY OF HEALTH Sri Lanka: www.hpb.health.gov.lk
5. Psychological impact of COVID-19. (2020, April 16). Retrieved from COVID-19 resources for psychologists,health-care workers and the public.
6. Sri Lanka: Covid-19 Forced Cremation of Muslims Discriminatory. (2021, January 18). Retrieved from reliefweb.

# கொவிட்-19 அசாதாரண சூழலில் இலங்கை முஸ்லீம்களின் அடிப்படை உரிமை மீறல் : ஓர் பகுப்பாய்வு

**Halideen Fathima Rifasha**
BA (Hons)., M.Phil in Political Science (Reading)
University of Peradeniya




**ஆய்வுச்சுருக்கம்:**

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சர்வதேச, பிராந்திய, தேசிய ரீதியில் பல்வேறு பாதுகாப்புப் பொறிமுறைகள் காணப்படுகின்றன. அத்தகைய ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும் தொடர்ந்தும் சிறுபான்மையோரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுக் கொண்டே உள்ளது எனலாம். 2019 ஆம் ஆண்டு இறுதிக்கட்டத்தில் இருந்து சர்வதேச ரீதியாக கொவிட்-19 நோய்த்தொற்று பாரிய உயிரழிவுகளை ஏற்படுத்தி இருக்கின்றது. ஒப்பீட்டு ரீதியில் கொவிட் மரணங்கள் இலங்கையில் குறைவாக காணப்படினும் இவை அதிகரித்து வருகின்றது. மேலும் சர்வதேச ரீதியில் கொவிட்-19 நோய்த் தொற்றினால் மரணிப்பவர்களது உடல்களை எரித்தல், புதைத்தல் எனும் இரு வழிமுறைகள் பின்பற்றுகின்றன. இருப்பினும் பன்மைத்துவ நாடான இலங்கையில் கொவிட்-19 இனால் மரணிப்பவர்களது உடல்கள் வலுக்கட்டாயமாக எரியூட்டப்படுகின்றன. இத்தகைய செயற்பாடு இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் இலங்கை வாழ் முஸ்லிம்களின் அடிப்படை மத, கலாசார உரிமைகளான 3 வது அத்தியாயம், விதி 10, விதி 14 (1) (உ) மற்றும் 14 (1) (ஊ) போன்றவற்றை மீறுகின்றது. வளர்ச்சியடைந்து வரும் நாடான இலங்கையானது அரசியல், சமூக, பொருளாதார, வர்த்தக, மருத்துவ, தொழிநுட்ப ரீதியில் சர்வதேசத்தினைப் பின்பற்றிய போதிலும் கொவிட்-19 இனால் மரணிக்கும் ஜனாஸாக்களை வலுக்கட்டாயமாக எரிக்கும் விடயத்தில் மாத்திரம் தன்னிச்சையாகச் செயற்படுவது மனித உரிமை மீறலே. குறிப்பாக உலக சுகாதார நிறுவனத்தினது அறிக்கை மற்றும் இலங்கை கொவிட்-19 தொற்று நோய்த் தடுப்பு நிபுணர் குழுவினது அறிக்கை என்பன ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான பரிந்துரைகளை முன்வைத்த போதிலும் இலங்கை அரசாங்கம் அவற்றை புறந்தள்ளுவது இனவாத அரசியல் செயற்பாடே என்பதோடு முஸ்லிம்களின் கட்டாய அடிப்படை உரிமை மற்றும் மத கலாசார ரீதியான உரிமை மீறலே ஆகும்.

**திறவுச் சொற்கள்:** கொவிட்-19, ஜனாஸா, அடிப்படை உரிமை, நல்லடக்கம்

## 1. அறிமுகம்

மனித உரிமை என்பது மனிதனாகப் பிறந்ததன் காரணமாக அவன் இயல்பாக அனுபவித்து வாழவேண்டிய இயற்கையான சுதந்திரங்களும் உரித்துக்களும் ஆகும். இத்தகைய மனித உரிமைகளை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் உலகளாவிய ரீதியில் பல்வேறு பாதுகாப்புப் பொறிமுறைகள் உள்ளன. சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனம், ஐ.நா வின் மனித உரிமைப் பாதுகாப்புப் பொறிமுறை போன்ற பல்வேறு சர்வதேச ஏற்பாடுகள் காணப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையானது தனது யாப்பின், உறுப்புரை 55(உ) இல் "மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பினை சகல நாடுகளுக்கும் தமது ஆட்சிக்கு உட்பட்ட எல்லையில் நடைமுறைப்படுத்த வேண்டும்" என்கிறது. அந்தவகையில் இலங்கையானது 1955 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமையினைக் கொண்டுள்ளதால் இவ் ஏற்பாடுகளுக்கு கட்டுப்படுகின்றது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகள் சர்வதேச ரீதியில் மட்டுமின்றி பிராந்திய ரீதியிலும் உள்ளது. அதாவது சாக் மாநாட்டின் மனித உரிமைப் பாதுகாப்புப் பொறிமுறையினைக் குறிப்பிடாலாம். இதில் இலங்கையும் அங்கத்துவ நாடு என்ற வகையில் இப் பிராந்திய மனித உரிமைப் பாதுகாப்புப் பொறிமுறைக்குக் கட்டுப்படுகின்றது. இத்தகைய சர்வதேச, பிராந்திய ரீதியில் மனித உரிமை பாதுகாப்புப் பொறிமுறைகள் காணப்படினும் இவற்றை அரசுகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கடப்பாடு அரசு, மக்கள் ஆகிய இருதரப்பிற்கும் இருக்க வேண்டும். அப்போதே இவை சாத்தியப்பாடுடையதாய் இருக்கும். இக்கடப்பாடு இல்லையேல் இவை இருந்தும் பயனற்றதாகும். அந்தவகையில் 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பில் அடிப்படை உரிமைகள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது. மேலும் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சீனாவின் வுஹான் நகரில் ஏற்பட்ட கொவிட்-19 நோய்த் தொற்று பூகோளமயமாதல் காரணமாக சர்வதேச ரீதியில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் இலங்கையில் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பின்னர் கொவிட்-19 இனால் மரணங்கள் இடம்பெறத் தொடங்கின. இதுவரை காலமும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் இறந்தால் இஸ்லாமிய கலாசார முறைக்கு அமைவாக நல்லடக்கம் செய்யப்பட்டது. இருப்பினும் கொவிட்-19 அசாதாரண சூழலில் நோய்தொற்றில் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்கள் தொடர்ந்தும் அரசாங்கத்தினால் எரியூட்டப்படுகின்றது.

## 2.ஆய்வு நோக்கங்கள்

- கொவிட்-19 நோய்த் தொற்றினால் இறந்த உடல்கள் தொடர்பான WHO வினதும், சர்வதேசத்தினதும் நிலைப்பாட்டை அறிதல்.
- கலாசார உரிமைகள் தொடர்பாக இரண்டாம் குடியரசு யாப்பில் கூறப்பட்டுள்ள விடயங்களை கண்டறிதல்.
- இஸ்லாம் கூறும் ஜனாஸாக் கடமைகள் தொடர்பாகவும், இலங்கையில் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது இஸ்லாமியர்களது அடிப்படை உரிமை மீறலா என்பதை கண்டறிதல்.

### 2.1 ஆய்வுப் பிரச்சினையும் ஆய்வு வினாக்களும்

கொவிட்-19 நோய்த் தாக்கத்தினால் மரணமடைகின்ற முஸ்லிம்களது ஜனாஸாக்கள் வலுக்கட்டாயமாக எரிக்கப்படுகின்றது. இறந்த உடல்களை மண்ணினுள் சுகாதார முறைப்படி அடக்கம் செய்வதனால் நோய்ப்பரவல் ஏற்படுவதற்கான எத்தகைய விஞ்ஞான ஆய்வு முடிவுகள் இல்லாத நிலையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் இறந்த ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது ஆய்வுப்பிரச்சினையாகும். கொவிட்-19 அசாதாரண சூழலில் ஜனாஸா நல்லடக்கம் நோய்ப்பரவலை ஏற்படுத்துமா? அவை தொடர்பாக WHO நிலைப்பாடு எத்தகையது?, உலக நாடுகள் கொவிட்-19 தாக்கத்தில் இறந்த உடல்கள் தொடர்பாக எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன?, இஸ்லாம் கூறும் ஜனாஸாக் கடமைகள் எவை?, இலங்கையில் கலாசார உரிமைகள் தொடர்பாக இரண்டாம் குடியரசு யாப்பில் கூறப்பட்டுள்ள விடயங்கள் எவை?, ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது முஸ்லிம்களின் அடிப்படை உரிமை மீறலா? போன்ற ஆய்வு வினாக்களுக்கு விடைதேடுகின்றது.

### 2.2. ஆய்வு முறையியல்

ஆய்விற்கு பண்பு ரீதியான தரவுப் பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. சிந்தனைகள் நம்பிக்கைகள், வழக்காறுகள், கருத்துக்கள், சொற்கள், பதங்கள், போன்ற மனித செயற்பாடுகளுடனும், இயற்பண்புகளுடனும் தொடர்புடைய விடயங்கள் பயன்படுத்தப்பட்டு இவ் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காக முதலாம் நிலை தரவான ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பில் இருந்தும் இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்கள் என்பவற்றில் இருந்து தரவுகள் பெறப்பட்டு தொகுத்தறிப் பகுப்பாய்வின் மூலம் முடிவுகள் பெறப்பட்டன.

## 3. சர்வதேச அனுபவம்

கொவிட்-19 இனில் இறந்தவர்களின் உடல்களானது சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக பாதுகாப்பான முறையில் புதைத்தல் அல்லது எரித்தல் என்கின்ற இரு வழிமுறைகளும் சர்வதேச அளவில் பின்பற்றப்படுகின்றன *(World Health Organization, 2020)*. இந்திய சுகாதார மற்றும் நோய்த் தடுப்புத்துறையின் அறிக்கையின்படி, “கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக இறந்தவர்களின் உடல் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தபின்னரே அடக்கம் அல்லது தகனம் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது” என்கிறது *(Simplicity 2020)*. அதாவது “இறந்தவர்களின் உடல்கள் மிகவும் கவனத்துடன் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பாக பிளாஸ்டிக் கவச பையில் வைக்கப்பட்டு வெளிப்புறத்திலும் தேவையான கிருமிநாசிகள் தெளிக்கப்பட்டு இறுக்கமாக மூடப்படுகின்றது. இவ்வாறு மூடப்பட்ட உடல் அடக்கம் அல்லது தகனம் செய்யப்படும் போது அப்பகுதியிலுள்ளவர்களுக்கு எவ்வித நோய்த் தொற்றும் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே இந்திய மக்கள் கொரோனாவினால் இறந்தவர்களின் உடல் புதைப்பது அல்லது தகனம் செய்யப்படுவது குறித்து எவ்வித அச்சமோ பீதியோ அடையத்தேவையில்லை” என கூறுகின்றது *(Simplicity 2020)*.

அமெரிக்காவில் கொரோனாவினால் உயிர் இழந்தவர்களின் இறுதிச் சடங்கில் இரண்டு விடயங்கள் பின்பற்றப்படுகின்றன. ஒன்று உயிரிழந்தவர்களின் உடலுக்கு மரியாதை செலுத்துவதாகும். இதன் போது குடும்ப உறுப்பினர்கள் ஒன்று கூடுவர். இரண்டாவது இறந்தவர்களின் உடலை புதைத்தல், அல்லது தகனம் செய்தலாகும். உயிரிழந்தவர்களின் உடலை புதைப்பதாயின் உடலை வைக்கும் பெட்டி, புதை குழி தோண்டும் பணி மற்றும் நிலத்தின் தன்மைக்கு ஏற்ப 1000 தொடக்கம் 7000 டொலர் செலவு செய்யப்படுகின்றது. உலகின் பிரபலமான ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் தொற்று நோயியல் பிரிவின் தலைமைப் பேராசிரியர் மலிக் பீரிஸ் இன் கருத்துப்படி “வைரஸ்கள் உயிர் வாழ செல்கள் அவசியம் என்றும் ஒருவர் உயிரிழந்ததும் அவரது செல்கள் இறந்துவிடும், ஆகையால் வைரசும் இறந்துவிடும்” என்கிறார் *(Madawala News, 2020)*. எனவேதான் “கொரோனா வைரஸ் தாக்கத்தினால் இறந்தவர்களின் உடல்களை புதைப்பதால் வைரஸ் பரவலாம் என்ற எதிர்வு கூறல் விஞ்ஞானபூர்வமற்றது” என்கிறார் (*Madawala News, 2020)*.

### 3.1. WHO

உலக சுகாதார நிறுவனத்தின் கருத்தின்படி (World Health Organization). “கொவிட்-19 இனால் இறந்தவர்களது உடல்களை சுகாதார முறைப்படி புதைப்பதால் எவ்வித நோய்ப் பரவலும் அதனால் ஏற்படாது” என்கிறது (World Health Organization, 2020). . அத்தோடு கொவிட்-19 இனால் இறந்தவர்களது இறுதிச் சடங்கிற்கு குடும்ப அங்கத்தவர்கள், பாரம்பரிய அடக்க உதவியாளர்கள் உடல்களை அடக்குவதில் அல்லது தகனம் செய்யும் செயற்பாட்டில் கலந்து கொள்ள முடியும் (World Health Organization, 2020). இதன் போது மருத்துவ முகக்கவசம், ஒரு மீற்றர் சமூக இடைவெளியினை சுகாதார முறைப்படி பேணுதல் வேண்டும். உடல்நிலை சரியில்லாதவர்கள்

பங்கேற்க கூடாது, குறிப்பாக இறந்த உடல்களை முத்தமிட அனுமதிக்காமல் இருக்க குடும்ப உறுப்பினர்கள் நண்பர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும் எனக் கூறுகிறது (World Health Organization, 2020).

### 4. கலாசார (மத) உரிமை

1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் 3 வது அத்தியாயமானது அடிப்படை உரிமை தொடர்பாக கூறுகின்றது. இதில் குறிப்பாக 10 தொடக்கம் 17 வரையிலான விதிகள் பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. விதி 10: "ஆள் ஒவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தினை அல்லது விரும்பிய நம்பிக்கையினை உடையவராயிருத்தல், மத அல்லது நம்பிக்கையினை மேற்கொள்வதற்கான சுதந்திரம், மனசாட்சியைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம், மத சுதந்திரம் என்பவற்றிற்கு உரித்துடையவர்" என்கிறது (THE CONSTITUTION OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA, As amended up to 15th May 2015). விதி 14 (1) (உ): "தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாக, மறைமுகமாக தனது மதத்தை அல்லது நம்பிக்கையை வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும், போதனையிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரமுண்டு" என்கிறது (THE CONSTITUTION OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA, As amended up to 15th May 2015). விதி 14 (1) (ஊ): "தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து தனது சொந்தக் கலாசாரத்தை அனுபவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் சுதந்திரமுண்டு" என்கிறது (THE CONSTITUTION OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA, As amended up to 15th May 2015). பன்மைத்துவ சமூகத்தைக் கொண்ட நாடான இலங்கையில் கொவிட்-19 அசாதாரண சூழலுக்கு முன்னர் பௌத்தர்களும், இந்துக்களும் தமது மத ஒழுங்கு முறைகளுக்கு அமைய இறந்த உடல்களை பெரும்பாலும் தகனம் செய்கின்ற கலாசாரத்தினை பின்பற்றினர். கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் நல்லடக்கம் செய்வதையும், இஸ்லாமியர்கள் இறந்த உடல்களை நல்லடக்கம் செய்வதை தமது கட்டாயக் கடமையாக நிறைவு செய்து வந்துள்ளனர். இவை அவர்களது மத, கலாசார மற்றும் அடிப்படை உரிமையாகக் கருதப்படுகின்றது.

### 4.1. ஜனாஸாக் கடமைகள்

இவ் உலகில் படைக்கப்பட்ட ஒவ்வொரு உயிரும் மரணத்தின் சுவையினை நுகர்ந்தே ஆகவேண்டும். அந்தவகையில் முஸ்லிம் ஒருவர் இறந்துவிட்டால் அவ் இறந்த உடலை ஜனாஸா அல்லது மைய்யத்து என்று அழைப்பர். ஒரு முஸ்லிம் மரணித்துவிட்டால் அவரை நல்லடக்கம் செய்யும் வரையிலான அனைத்து அம்சங்களும் முஸ்லிம்கள் அனைவரதும் கட்டாயக் கடமையாகும் (பர்ளு கிபாயா) *(Bayanapp.indiabeeps.com)*. அதாவது அதனை சிலர் மேற்கொண்டாலும் அனைவர்களின் மீதுமுள்ள கடமை நீங்கிவிடும். அதனை எவரும் நிறைவேற்றவில்லையாயின் அல்லாஹ்விடத்தில் அனைவரும் குற்றவாளிகளாகக் கருதப்படுவர். அந்தவகையில் ஜனாஸாவினது பிரதான கடமைகள் 4 ஆகும். அவை, (அ) ஜனாஸாவினை குளிப்பாட்டுதல், (ஆ) ஜனாஸாவினைக் கபனிடல், (இ) ஜனாஸா தொழுகையை நிறைவேற்றல், (ஈ) நல்லடக்கம் செய்தல் என்பனவாகும் *(Abu Saliha, 2006)*. ஜனாஸாவினை குளிப்பாட்டல் என்பது இஸ்லாம் கூறும் ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப நீரினால் சுத்தம் செய்வதை குறிக்கின்றது. இது ஜனாஸாவிற்கு நிறைவேற்றும் முதற் கடமையாகும். ஜனாஸாவினுடைய இரண்டாவது கடமை கபனிடல் ஆகும். இங்கு கபன் என்பது ஜனாஸாவிற்கு அணிவிற்கும் வெள்ளை நிற ஆடை ஆகும். இது சுத்தமான பழைய அல்லது புதிய வெள்ளை நிற துணியாகும். இஸ்லாம் கூறும் ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப இத் துணியினால் ஜனாஸாவினுடைய உடலை முழுமையாக மறைத்தல் கபனிடலாகும். ஜனாஸாவினுடைய மூன்றாவது கடமை ஜனாஸாவிற்குரிய தொழுகையை நிறைவேற்றலாகும். ஜனாஸா தொழுகையின் போது பாத்திஹா சூரா, நபி (ஸல்) அவர்களின் மீது ஸலவாத் மற்றும் ஜனாஸாவிற்கான பாவமன்னிப்பு, பிரார்த்தனைகள், என்பன இடம்பெறும். ஜனாஸாவினுடைய இறுதிக் கடமை நல்லடக்கம் செய்தலாகும் *(Bayanapp.indiabeeps.com)*. இதன் போது மையத்திற்காக வெட்டப்பட்டு இருக்கும் குழியினை கப்ர் என அழைப்பர். இவ் கப்ரில் ஜனாஸாவானது உரிய ஒழுங்கில் வைக்கப்பட்டு மண்ணினால் அக் கப்ர் நிரப்பப்படும். இறுதியில் ஜனாஸாவிற்கான பிரார்த்தனையுடன் ஜனாஸாவினது கடமைகள் நிறைவேறும் *(Abu Saliha, 2006)*.

### 4.2. கொவிட்-19 அசாதாரண நிலை

உலக அளவில் ஏற்பட்ட கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் அதிகளவான மக்கள் உயிரிழக்கின்றனர். இந்நிலையில் கொரோனா தாக்கத்தினால் இலங்கையில் மரணிக்கும் மரணங்களின் அளவு ஒப்பீட்டு ரீதியில் குறைவு. எனினும் அதன் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் முஸ்லிம்கள் இறக்கின்ற போது அவர்களது ஜனாஸா தகனம் செய்யப்படுகின்றது. அதாவது கொரோனா தாக்கத்தினால் மரணித்த முஸ்லிம்களது உடல்கள் அவர்களது உறவினர்களது சம்மதமின்றி எரியூட்டப்படுவது கலாசார மற்றும் அடிப்படை உரிமை மீறலாகும். இவை கடந்த ஒன்பது மாதங்களாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, கொழும்பு 15 ஐச் சேர்ந்த எம்.எஸ்.எம் பாஹிம் என்பவரது 20 நாள் குழந்தை சுகயீனமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது இறப்பதற்கு முன்னர் கொவிட்-19 தொற்று இல்லை என அறியப்பட்டநிலையில் மறுநாள் குழந்தை சுகயீனத்தால் இறந்துள்ளது *(Lanka Sudar, 2020)*. குழந்தை இறந்ததன் பின்னர் PCR (Polymerase chain reaction) அறிக்கையில் கொவிட்-19 தொற்றே காரணம் எனக் கூறி 8.12.2020 அன்று தகனம் செய்யப்பட்டது *(Lanka Sudar, 2020)*. இந்நிலையில் அக்குழந்தையின் பெற்றோருக்கோ, உறவினர்களுக்கோ, அயலவருக்கோ கொவிட்-19 தொற்று இல்லாத நிலையில் அக்குழந்தைக்கு எவ்வாறு கொவிட்-19 நோய்த் தொற்று ஏற்பட்டது? என்ற கேள்வி எழுகின்றது. அத்தோடு அக் குழந்தையின் பெற்றோரின் சம்மதம் இன்றி ஜனாஸா தகனம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இருநூறுக்கு மேற்பட்ட கொவிட்-19 மரணங்கள் இலங்கையில் பதிவாகியுள்ள நிலையில் அவ் அனைத்து ஜனாஸாக்களும் தகனம் செய்யப்பட்டது. இச் செயற்பாடானது இலங்கை அரசியல் யாப்பின் 3 வது அத்தியாயம் விதி 10, விதி 14 (1) (உ), மற்றும் 14 (1) (ஊ) போன்ற அடிப்படை உரிமைகளை மீறுகின்றது எனலாம் (THE CONSTITUTION OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA, As amended up to 15th May 2015). மேலும் கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்பட வேண்டும் என்ற இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு பொது சுகாதார வழிகாட்டுதல்களுக்கு எதிரானது என்பதுடன் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான பாகுபாட்டினை உருவாக்குகின்றது என மனித உரிமை கண்காணிப்பகம் கண்டனம்

தெரிவித்துள்ளது *(Thinakkural,2021).* குறிப்பாக "இலங்கையில் கொவிட்-19 தொற்றில் மரணிக்கும் நபர்களின் சடலங்களை கட்டாய தகனம் செய்வது மனித உரிமை மீறலாகும். அத்தோடு கொவிட்-19 தொடர்பான இறுதி அறிக்கை உறவினர்களால் பரிசோதித்துப் பார்ப்பதற்கு முன்னரே சில சடலங்கள் தகனம் செய்யப்பட்டுகின்றன. இத்தகைய செயற்பாடுகள் மற்றும் கொவிட் சடலங்கள் தகனம் செய்யப்படுதல் போன்ற நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். முஸ்லிம் மக்கள் மற்றும் வேறு சிறுபான்மை மக்கள் குழுவை பிரித்து செயற்படுவது இனவாத வன்முறை நிலைமை ஏற்படுவதற்கும் வர்க்க பேதத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்கும் காரணமாகும் வகையில் தீர்மானங்களுக்கு வருவதை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் விசேட நிபுணர் குழு அறிக்கை கண்டித்துள்ளது" *(Virakesari, 2021).*

## 5. முடிவுரை:

சர்வதேச ரீதியாக உலக நாடுகள் கொவிட்-19 இனை எதிர் கொள்கின்ற நிலையில் வைரஸ் தாக்கத்தினால் இறந்த உடல்களை அடக்கம் அல்லது தகனம் செய்வதால் எவ்வித நோய்ப்பரவலும் ஏற்படாது என்கின்ற உலக சுகாதார முடிவினை இலங்கை அரசாங்கம் ஏற்க மறுக்கின்றது. இலங்கையில் ஜனாஸா எரிப்பு விடயத்திற்கு எதிராக உள்நாட்டு மற்றும் சர்வதேச அளவில் முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத மக்கள் தமது எதிர்ப்பினை தெரிவித்து வருகின்றனர். அரசியல் சமூக பொருளாதார தொழிநுட்ப, விஞ்ஞான ரீதியாக வளர்ச்சியடைந்த வல்லரசு நாடுகளினைப் பின்பற்றும் வளர்ச்சியடைந்து வரும் நாடான இலங்கை ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் விடயத்தில் மாத்திரம் சர்வதேசத்தினுடைய முடிவுகளை புறக்கணிப்பது பாரிய விமர்சனத்திற்குரிய விடயமாகும். இது முஸ்லிம்களின் அடிப்படை உரிமை மீறலுக்கு அரசாங்கம் உடன்படுவதையே எடுத்துக்காட்டுகின்றது. கொரோனா தாக்கத்தினால் இறந்த உடல்களை அடக்கம் செய்வதனால் நோய்ப் பரவல் இடம்பெறுவதற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆதாரம் அல்லது ஆய்வு முடிகள் இலங்கை சுகாதார மற்றும் நோய்த் தொற்று பிரிவிடம் இல்லை. குறிப்பாக கொவிட்-19 இனால் மரணிக்கும் உடல்களால் நோய்ப் பரவல் ஏற்படுத்துமா என்பதை பரிசீலிக்க நிபுணர் குழு இலங்கையில் நியமிக்கப்பட்டது. இக்குழுவின் முடிவானது கொவிட்-19 நோயினால் மரணிக்கும் சடலங்களை புதைப்பதால் நோய் பரவல் ஏற்படாது என அறிக்கை வெளியிடப்பட்டது. இவ் அறிக்கை முடிவுகள் இலங்கை அரசிற்கு கிடைத்தும் தொடர்ந்தும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் வலுக்கட்டாயமாக எரியூட்டப்படுவது பாரதூரமான கலாசார மற்றும் அடிப்படை உரிமை மீறலாகும். அதாவது தற்போதைய அரசாங்கம் முஸ்லீம்களின் அடிப்படை மத உரிமைகளான இலங்கை அரசியல் யாப்பின் 3 வது அத்தியாயம் விதி 10, விதி 14 (1) (உ), மற்றும் 14 (1) (ஊ) போன்ற அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை தடுத்து நிறுத்தாமல் அத்தகைய கலாசார உரிமை மீறல்களுக்கு துணையாக இருப்பது பாரிய இன ஒடுக்குமுறையாகவே விமர்சிக்கப்படுகின்றது. எனவே முஸ்லிம் சமூகமானது இலங்கையில் கொவிட்-19 தாக்கத்தினால் மரணிக்கும் ஜனாஸாக்கள் உலக நாடுகளைப் போல் சுகாதார விதி முறைகளுக்கு அமைவாக ஜனாஸாவினுடைய இறுதி இரண்டு கடமைகளான ஜனாஸா தொழுகை மற்றும் நல்லடக்கம் ஆகிய இரு கடமைகளையாவது நிறைவு செய்ய அனுமதிக்க வேண்டும் என்பதையே இலங்கை அரசிடம் எதிர்பார்க்கின்றது. எனவேதான் இலங்கை முஸ்லிம்களின் அடிப்படை உரிமை மீறலுக்கு இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் செவிசாய்க்க மறுக்கின்ற நிலையில் ஜனாஸா எரிப்பு விவகாரம் சர்வதேச பிரச்சினையாக மாறுகின்ற போதே முஸ்லிம்களின் அடிப்படை உரிமை மீறலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் எனலாம்.

**உசாத்துணைகள்:**


01. Abu Saliha, (2006), ஜனாஸாவின் சட்டங்கள், Available at: http://www.satyamargam.com/islam/islamic-articles/ruling-on-janazah/

02. Bayanapp.indiabeeps.com, ஜனாஸாவின் சட்டங்கள், Available at: http://www.bayanapp.indiabeeps.com/category/u390/page/2/

03. Dinamalar, (2020), இறந்தவர்கள் உடலில் இருந்து வைரஸ் பரவாது, Available at: https://m.dinamalar.com/detail.php?id=2574551

05. Madawala News, (2020), உடல்களைப் புதைப்பதால் வைரஸ் பரவும் ஆபத்துள்ளதா? இலங்கையைச் சேர்ந்த உலகின் பிரபல தொற்று நோயியல் நிபுணர் மறுப்பு, Availabe at: https://www.madawalaenews.com/2020/12/blog-post_103.html

06. Lanka Sudar, (2020), கொரோனா என எரிக்கப்பட்ட 20 நாள் ஆன குழந்தை! தந்தையின் கண்ணீர் வடிக்கும் பகிர்வு- இலங்கை அரசின் ஈனமற்ற செயல், Available at: https://lankasudar.com/93158

07. Simplicity, (2020), நோய்த்தொற்றால் இறந்தவர் உடலை அடக்கம் செய்வதைத் தடுத்தால் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை- தமிழக அரசு எச்சரிக்கை, Available at: https://simplicity.in/coimbatore/english/news/64438/Burials-funerals-of-COVID-19-deceased-cannot-spread-the-disease-bodies-are-fumigated-and-made-safe-before-being-handed-over-Public-Health-Department-and-Department-of-Immunologyt

08. Sustainable Life, (2020), ஜனாஸா நல்லடக்கம், Available at: https://www.facebook.com/103412207984853/posts/205016891157717/

09. ***THE CONSTITUTION OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA***, *As amended up to 15th May 2015*

10. *amended up to 15th May 2015*
Thinakkural, (2021), கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் Available at: https://thinakkural.lk/article/105624

11. Virakesari, (2020), கொரோனா உயிரிழப்புக்களின் போது சடலங்கள் வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்படும் நடவடிக்கைக்கு இடைக்கால தடைவிதிக்கவும், Available at: https://www.virakesari.lk/article/95673

12. Virakesari, (2021), பலவந்தமாக சடலங்கள் தகனம் செய்வதை இலங்கை உடனடியாக நிறுத்த வேண்டும்-ஐ.நா அதிரடி, Available at: https://www.virakesari.lk/article/99198

13. World Health Organization, (2020), **Infection prevention and control for the safe management of a dead body in the context of COVID-19**, Available at: https://www.who.int/publications-detail-redirect/WHO-EVD-Guidance-Burials-14.2


STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
RESOURCE PERSON:
DR. SMM. MAZAHIR
RESEARCH AND ITS IMPORTANCE
AN INTRODUCTORY SESSION THROUGH ZOOM
Only for those who registered
DATE: 14.06.2020 (SUNDAY)
TIME: 10:30 - 11:30 AM
srfseusl@gmail.com
https://m.facebook.com
http://www.seu.ac.lk/fia/srf/
https://mobile.twitter.com


BASIC GUIDANCE FOR PUBLISHING IN INDEXED JOURNALS
JAN 16,2021
(Saturday)
11.00 a.m - 01.00 p.m
(Sri Lankan Time)
DR.MOHAMMAD ISMATH RAMZY (PhD)
VIA
STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
srfseusl@gmail.com
SRFSEUSL
SRFSEUSL
http://www.seuac.lk/fia/srf/


STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
எனது மொழிபெயர்ப்பு அனுபவங்கள்
முனைவர் அ. ஜாகிர் ஹுஸைன்
அரபுத்துறைப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம்.
10.00AM TO 12.00PM
January 24 2021
srfseusl@gmail.com
SRFSEUSL
SRFSEUSL
http://www.seuac.lk/fia/srf/


HOW TO KEEP YOUR PERSONAL INFORMATION SAFE ON SOCIAL MEDIA ?
FEBRUARY 13 2021
10:30 AM
(Saturday)
DR. UZZAL SHARMA
Assistant Professor (Senior)
Department of Computer Applications,
School of Technology
Assam Don Bosco University,
Guwahati, India.
MODERATOR & TRANSLATOR
MR. FHA. SHIBLY
STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA.
srfseusl@gmail.com
SRFSEUSL
SRFSEUSL
http://www.seuac.lk/fia/srf/


Resource Person:
MR.MUFIZAL ABOOBUCKER
Senior Lecturer in philosophy,
Department of philosophy,
University of peradeniya
The importance of historical research in the Sri Lankan context
இலங்கை சூழலில் வரலாற்று ஆய்வின் முக்கியத்துவம்
11 th of July 2020
10:00 am - 11:45 am
zoom


MR. ACM. NAFREES
Instructor Gr.II in ComputerTechnology
Dept. of Office of the Dean
Faculty of Islamic Studies & Arabic Language
How to create a QUESTIONNAIRE ?
GOOGLE FORM
DATA COLLECTION
SAMPLE
7th SESSION
VIA
2020.11.22
SUNDAY
10.00 AM TO 12.00 PM
STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES - 2020
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
srfseusl@gmail.com
https://m.facebook.com
https://mobile.twitter.com
https://www.seuac.lk/fia/srf/


VIA
TRANSLATION METHODOLOGY
Translate
DR. PM. MOHAMED IRFAN
PhD, Head- Institute of Arabic Language & Senior Lecturer,
Jamiah Naleemiah- Beruwala.
10 AM to 12 PM
SUN, NOV 29
STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES - 2020
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
https://m.facebook.com
https://www.seuac.lk/fia/srf/
srfseusl@gmail.com
https://mobile.twitter.com


Sociological Impect of Covid 19 Pandemic on Sri Lankan Society
இலங்கை சமுகத்தில் கொரோனா வைரசின் தாக்கம்
A GOLDEN OPPUTUNITY FOR EVERYONE
RESOURCE PERSON:
Dr. Rameez Aboobackar
Senior Lecrurer in Sociology
Dean: Faculty of Arts & Culture
South Eastern University of Sri Lanka
11 th of July 2020
10:00 Am - 12:00 Pm
@ FIA Auditorium
Organized by:
Students' Research Forum for Social Researches
South Eastern University of Sri Lanka